# மஞ்சரி

மார்ச், 1958
ஹேவிளம்பி - பங்குனி
40 நயா பைசா

திரையிலே வானக்காட்சி

மரணத்தைச் சந்தித்தேன்

புத்திசாலி
(பிரெஞ்சுக் கதை)

பாடசாலை நோய்கள்
(தமிழ்ப் புத்தகம்)

## வரவேற்போம்

உலகிலுள்ள எல்லா மூலைகளிலிருந்தும் உயர்ந்த கருத்துக்கள் நம்மிடம் வந்து சேரட்டும்.

—ரிக்வேதம், 1-89-


## மஞ்சரி

**ஆசிரியர், பதிப்பாளர் :**

என். ராமரத்தினம்

**நிர்வாக ஆசிரியர் :**

தி. ஜ. ரங்கநாதன்

**பாஷை ஆசிரியர்கள்:**

கி. வா. ஜகந்நாதன்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேனுபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
கௌரி அம்மாள்
கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்
கி. தாமோதரன்

**ஓவியர்கள் :**

ஸாமி, மகான், சுசி, சுப்பு

மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை-4. பிரதி ஆங்கில மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 40 நயா பைசா (6½ அணு). வருஷ சந்தா ரூ. 4/75 (ரூ. 4-12-0). சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புங்கள். விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள். 'மஞ்சரி'யிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 11] ஸ்தாபிதம்: நவம்பர் '47 :: மார்ச் 1958 [இதழ் 3

மஞ்சரி
மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

# ஊரும் உலகமும்

★

மௌலானா ஆஜாத்: பழுத்த தலைவர் ஆஜாத் காலமானார். இது நாட்டுக்கே பெரிய நஷ்டம். இந்தியா சுதந்தரம் பெற நெடுங்காலமாய்ப் போராடிய-அதன் மறுமலர்ச்சியில் பெரும் பங்கு கொண்ட - உத்தமத் தலைவர்களில் ஒருவர் ஆஜாத். சாந்தமும் உறுதியும் தேசபத்தியும் தீரமும் வாய்ந்தவர். காங்கிரஸுக்குப் பெரும் பலமாகக் கடைசி நாள் வரையிலும் அதைத் தாங்கி நின்றவர். காந்திஜிக்கு வலது கரமாய் இருந்தவர். நேருஜிக்குப் பக்கபலமாய் விளங்கியவர். நாட்டுக்கு என்றென்றும் நலமே புரிந்தவர். அவருடைய மரணம் நேருவுக்கும் காங்கிரஸுக்கும் தேசத்துக்குமே ஈடு செய்ய முடியாத நஷ்டம். அவரை-அவருடைய நினைவை-என்றென்றும் போற்றி வருவோம்.

* * *

முந்த்ரா விவகாரம்: ''டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் கட்டாயம் போகவேண்டியதுதான்; போய்விட்டார்'' என்றார் கம்யூனிஸ்ட் தலைவர் டாங்கே. ''கவலைப்படாதேயும்; திரும்பி வந்துவிடுவார்'' என்றார் ஆசாரிய கிருபலானி. முந்த்ரா விவகார முடிவைப் பார்க்கும்போது, இந்தக் கேலி பலித்தாலும் பலிக்கும் என்றே தோன்றுகிறது. அது எப்படியானாலும் சரி; சர்க்காருக்கு முக்கியமான கடமை ஒன்று இப்போது இருக்கிறது. இதைப் பற்றி யாருமே பிரஸ்தாபிக்காதது தான் ஆச்சரியமாயிருக்கிறது. முந்த்ராவின் பங்குகளை, ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் வாங்கியதால், கார்ப்பொரேஷனுக்கு ஏதாவது நஷ்டம் ஏற்படுமா? எவ்வளவு? அதைச் சரிக்கட்டச் சர்க்கார் என்ன நடவடிக்கைகள் எடுக்கப் போகிறார்கள்? பாலிஸிதார்களுக்கு - பொதுமக்களுக்குங் கூடத்தான் - நம்பிக்கை ஊட்டச் சர்க்கார் உடனடியாகக் கைக்கொள்ளவேண்டிய முக்கியமான காரியம் இது. சக்ளா அறிக்கையின் சிபார்சுமீது கொள்ளும் பிற நடவடிக்கைகளோடு இதையும் யூனியன் சர்க்கார் மேற்கொள்ளும் என்று நம்புகிறோம்.

* * *

சினகுரி விபத்து: மேற்கு வங்காளத்தில் அஸன்ஸால் பகுதியில் குல்தியில் சினகுரி நிலக்கரிச் சுரங்கம் வெடித்து, 180 பேருக்குமேல் உயிர் துறந்தார்கள். இது பெரிதும் துக்கப்பட வேண்டிய செய்தி. விபத்துக்களை அடியோடு தவிர்க்க முடியாது. ஆயினும், முடிந்த முன்னெச்சரிக்கைகளையெல்லாம் எடுத்துக்கொண்டால், விபத்து விகிதத்தைப் பெரிதும் குறைத்துவிடலாம் என்பது நிபுணர்கள் கருத்து. 1935-இல் லயோபாதில் 208 பேர் உயிரிழந்தார்கள். 1956-இல் பர்ரா தேமோ விபத்தில் 42-பேர் மாண்டார்கள். இவை தவிரச்

சிறுசிறு விபத்துக்கள் அவ்வப்போது நிகழ்கின்றன. பதினாயிரம் தொழிலாளருக்கு 1956-இல் 53 பேரும், அதற்கு முந்திய ஐந்து வருஷங்களில் சராசரி 67 பேரும், 1957-இல் 40 பேரும் விபத்துக்கு ஆளாகியிருக்கிறார்கள். இந்த விகிதத்தை இன்னமும் குறைக்கச் சர்க்காரும் நிலக்கரிச் சுரங்கக் கம்பெனிகளும் முயற்சி எடுக்க வேண்டும். மூன்றாவது ஐந்து வருஷத் திட்டப்படி 1960-61-இல் ஆறு கோடியே இருபது லட்சம் டன்னும் அதற்குப்பின் வருஷம் ஒன்றுக்கு 10-கோடி டன்னும் நிலக்கரி எடுத்தாக வேண்டும். இப்படி விரிவு செய்யும் தொழிலில் விபத்தைக் குறைக்கவும் விரிவான முன்னெச்சரிக்கைகள் முக்கியம். அஸன்ஸால் விபத்தில் தலைவனை இழந்தும் கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாகியும் துயருற்ற குடும்பங்களுக்குச் சர்க்காரும் கம்பெனியாரும் கணிசமான நஷ்டஈடு தர ஏற்பாடு செய்வது அவசியம்.

## முக்கால் கலியாணம்

**ஒருவன்:** அந்த அம்மாளுக்குக் கலியாணமே ஆகவில்லையா?

**மற்றவன்:** ஒரு சமயம் அவளுக்கு முக்கால் கலியாணம் ஆகிவிட்டது. மணப் பந்தலுக்கு அவள் வந்துவிட்டாள்; உற்றார் உறவினர் வந்துவிட்டார்கள்; புரோகிதர் வந்துவிட்டார்; மணமகன்தான் வரவில்லை.

—'தி அவுட் ஸ்பான்', தென் ஆப்பிரிக்கா.

---


**Statement about ownership and other particulars about newspaper MANJARI**

FORM IV


| | | |
|---|---|---|
| 1. Place of Publication | ... | **Madras** |
| 2. Periodicity of Publication | .. | **Monthly** |
| 3. Printer's Name | .. | **N. Ramaratnam, Managing Director, M.L.J. Press Private Ltd.** |
| Nationality | .. | **Indian** |
| Address | .. | **55/56, Mundakanni Amman Koil St., Mylapore, Madras** |
| 4. Publisher's Name | .. | **N. Ramaratnam** |
| Nationality | .. | **Indian** |
| Address | .. | **4, Warren Road, Mylapore, Madras** |
| 5. Editor's Name | ... | **N. Ramaratnam** |
| Nationality | .. | **Indian** |
| Address | ... | **4, Warren Road, Mylapore, Madras** |
| 6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent. of the total capital | ... | **N. Ramaratnam, Sole Proprietor** |

I, **N. Ramaratnam,** hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated 26—2—1958

**N. Ramaratnam**
Signature of Publisher

# மௌலானா ஆஜாத்



★

தேசம் இழந்த உத்தமப் புதல்வர் ஆஜாத். அவருடைய இந்த வரலாறு 'புகழ்ச் செல்வர்' (எழுதியவர்: தி. ஜ. ர. வெளியிட்டவர்: கார்த்திகேயினி பிரசுரம், ராமச்சந்திரபுரம், புதுக்கோட்டை) என்ற நூலிலிருந்து எடுத்தது. பிந்திய விவரங்கள் சிலவற்றை மட்டும் இங்கே சேர்த்திருக்கிறோம்.

இந்தியாவில் மட்டுமல்ல; எங்கெங்கே அரபு பாஷையும், பெர்ஷிய பாஷையும் பேசுகிறார்களோ அங்கெல்லாம் கீர்த்தியும் செல்வாக்கும் பெற்றவர் மௌலானா அபுல்கலாம் ஆஜாத். "எப்போதாவது உலக மதங்கள், நாகரிகங்கள் இவற்றின் மகாநாடு, ஆக்ராவில் உள்ள அக்பர் மசூதியின் பெரிய ஹால் ஒன்றிலே கூடுமானால், அதிலே நான் கலந்து கொண்டால், அந்த மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க மௌலானா அபுல்கலாம் ஆஜாதைத்தான் பிரேரிப்பேன்" என்று ராஜாஜி ஒரு சமயம் அவரைப் புகழ்ந்தார். அவ்வளவு அரிய பண்டிதர் மௌலானா ஆஜாத். அவருடைய தந்தை, பாட்டனார் போன்ற முன்னோர்கள் எல்லாருமே பல தலைமுறைகளாக இஸ்லாமிய மத நூல்களில் சிறந்த பண்டிதர்கள்.

மௌலானா ஆஜாதின் தந்தை முகம்மது கைருத்தீன், சமயநூல் அறிஞரும் சூஃபியுமாக டில்லியில் வாழ்ந்தார். டில்லியில் மட்டுமன்றி, குஜராத், காட்டியாவாடு, பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களிலெல்லாம் அவருக்கு ஆயிரக்கணக்கான சிஷ்யர்கள் இருந்தார்கள்; முஸ்லிம்களையன்றிப் பல ஹிந்துக்களும் அவருடைய சிஷ்யர்களாயிருந்தார்கள். 1857-ஆம் வருஷம் 'சிப்பாய்க் கலக' காலத்தில் பிரிட்டிஷ் ஸோல்ஜர்கள் புரிந்த அட்டூழியங்களைச் சகியாமல், முகம்மது நபியின் அவதார ஸ்தலமான மெக்காவுக்குக் கைருத்தீன் போய்விட்டார். மெக்காவில்தான் மௌலானா ஆஜாத் 1888-ஆம் வருஷம் பிறந்தார். அரபுதான் உண்மையிலே ஆஜாதின் தாய் மொழி. ஏனென்றால், அவருடைய தாய்க்கு வேறே எந்தப் பாஷையும் தெரியாது. தந்தையிடமிருந்தே ஆஜாத் உருது பாஷை கற்றார்.

இந்தியாவில் இருந்த சிஷ்யர்கள் வேண்டிக்கொண்டதால், ஆஜாதின் தந்தை கைருத்தீன், 1899-ஆம் வருஷம் மீண்டும் கல்கத்தாவில் வந்து குடியேறினார். ஆஜாதுக்குச் சிறு வயசில் அஹம்மது என்று பெயர். பிரோஸ் பக்த் என்றும் அவரைத் தந்தை அழைப்பார். பிள்ளைக்கு ஆங்கிலக் கல்வி கூடாதென்று கைருத்தீன் தீர்மானித்தார். கெய்ரோவில் உள்ள 'அல்-அஷார்' என்ற சர்வ கலாசாலைக்கு ஆஜாதை அனுப்பினார். அங்கே தேர்ச்சி பெற்று ஆஜாத் திரும்பி வந்தார். பதினாலு வயசிலேயே அவரை ஒரு பெரிய மேதை என்று எல்லாரும் கொண்டாடத் தொடங்கினார்கள். அதே வயசில் ஆஜாத் ஒரு வாத்தியார் ஆகிவிட்டார்.

அவரிடம் பாடம் கேட்ட மாணவர்களில், வயசு முதிர்ந்த ஒரு பட்டாணியர் இருந்தார். தர்க்க சாஸ்திரம் சம்பந்தமான 'காயாஸ்', 'இஸ்தாக்ரா' என்ற இரண்டு வார்த்தைகளுக்கும் ஆஜாத் அர்த்தம் சொல்லிக் கொடுத்தார். "காயாஸ் என்றால் பொதுவிலிருந்து சிறப்புக்கு; அதாவது மேலிருந்து கீழே. இஸ்தாக்ரா

என்றால், சிறப்பிலிருந்து பொதுவுக்கு; அதாவது கீழிருந்து மேலே'' என்று ஆஜாத் பன்னிப்பன்னிச் சொல்லி யிருந்தார். என்றாலும், அடுத்த நாள் அந்தப் பாடத்தில் கேள்வி கேட்டபோது, பட்டாணியர் அத்தனையையும் தலைகீழாய் மாற்றிச் சொன்னார். ஆஜாத் ஆத்திரங்கொண்டு, ''உமக்குப் படிப்பு வராது; வீட்டுக்குப் போய்ப் புல்லைத் தின்னும்'' என்று திட்டி விட்டார். பட்டாணியர் ஒருநாள் முழுவதும் உணவு கொள்ளவில்லை. இதைக் கேள்வியுற்ற கைருத்தீன் பெருங் கோபத்தோடு பிள்ளையிடம் வந்தார். ''உன் செயல் உனக்கு வெட்கமாக இல்லையா? அவருக்கு உன் தகப்பனைப் போல் வயசாயிற்றே. போய் அவரிடம் மன்னிப்புக் கேள்; சாப்பிடும்படி அவரை வேண்டிக்கொள்'' என்றார். ஆஜாத் அப்படியே செய்தார். பட்டாணியரோ, ''நீங்கள் என் வாத்தியார். என்னைத் தண்டிக்க உங்களுக்கு உரிமையுண்டு. என்னிடம் நீங்கள் மன்னிப்புக் கேட்க அவசியமில்லையே'' என்று சொன்னார். ஆஜாத் மனம் உருகிவிட்டார். பட்டாணியர் உணவுகொள்ளும் வரையில், அவரை விட்டு ஆஜாத் நகரவே யில்லை.

ஆஜாத் பதினைந்து வயசில் 'லிஸானஸ் ஸித்திக்' (உண்மையின் குரல்) என்ற பெயருடன் ஓர் இலக்கியப் பத்திரிகை நடத்தினார். அதன் புகழ் பரவியது. லாகூரில் 'அஞ்சுமானி ஹிமாயதி இஸ்லாம்' என்று ஒரு சங்கம் உண்டு. அதில் இவரை 1904-ஆம் வருஷம் ஒரு பிரசங்கத்துக்குக் கூப்பிட்டார்கள். பிரபல கவிஞர் ஹாலி, உன்னதமான உர்தூ எழுத்தாளர் நாஜிர் அஹ்மது, கீர்த்தி மிக்க கவிஞர் முகம்மது இக்பால் இப்படிப் பல பிரமுகர்கள் இந்தப் பிரசங்கத்தைக் கேட்க வந்தார்கள். கவிஞர் ஹாலியின் ஒரு புஸ்தகத்தைப்பற்றி ஏற்கனவே ஆஜாது தமது பத்திரிகையில் மிக விரிவாகவும் அருமையாகவும் ஒரு மதிப்புரை எழுதியிருந்தார். அந்தப் பொருட்செறிவுள்ள மதிப்புரையை எழுதிய ஆசிரியரைப் பார்க்கவேண்டுமென்று கவிஞருக்கு ஆசை. அவருக்கு ஆஜாதை ஒருவர் அறிமுகம் செய்வித்தபோது, இந்தச் சிறு பையனை ஆஜாத் என்று அவர் எண்ணவில்லை; ஆஜாதின் மகன் என்று நினைத்தார். இவரே ஆஜாத் என்று அறிந்ததும், அவர் எல்லையில்லா ஆச்சரியம் அடைந்தார். பிரசங்கம் நடந்தபோதோ, அறிஞர் அனைவருமே மேலும் பிரமித்து விட்டார்கள்.

ஆஜாத் சிறு வயசிலே கவிகளும் எழுதுவார். காலிப் என்ற மகா கவியின் சிஷ்யரான நாதிர்க்கான் என்பவருக்கு இதில் நம்பிக்கை யில்லை. ஆஜாத் எவையோ பழங் கவிதைகளின் அடிகளைத் திருடிக் கோத்துப் பாட்டுப் பண்ணிவிடுகிறார் என்று அவர் எண்ணினார். ஒரு நாள் ஒரு புஸ்தகக் கடையின் எதிரே, ஆஜாதை நாதிர்க்கான் சந்தித்தார்.

''நீ என்னவோ பாட்டுமேல் பாட்டாய்க் கட்டித் தள்ளுகிறாயாமே. எல்லாம் நீயே கட்டுகிறாயா? எங்கேயாவது திருடுகிறாயோ?'' என்று கேட்டார்.

''நான்தான் கட்டுகிறேன்'' என்றார் ஆஜாத். ''அப்படியானால், இதோ ஒரு தாரா இருக்கிறது: யத்நஹோ ஷத்நஹோ, அபத்நஹோ - இதை வைத்துக்கொண்டு பாட்டுக் கட்டு, பார்க்கலாம்'' என்றார் நாதிர்க்கான்.

மழை மேகம்போல் ஆஜாத் பல அடிகளைக் கவனம் செய்து சொரிந்துவிட்டார்.

நாதிர்க்கானின் பரவசம் சொல்லி முடியாது. ''ஸுபான் அல்லா, ஸுபான் அல்லா!'' என்று கூச்சலிட்டுக்கொண்டு பகிரங்க பஜாரில் கடை வாசலில் குதிக்கத் தொடங்கிவிட்டார்.

ஆஜாத் அந்தக் காலத்தில்தான் 'ஆஜாத்' என்ற புனை பெயருடனே பாட்டுக்கள் கட்டிவந்தார். அதுவே இன்றும் நிலைத்துவிட்டது.

பல விஷயங்களையும் அறிந்து கொள்ளவேண்டும் என்ற ஆவல் சிறு வயசிலேயே ஆஜாதுக்கு மிக அதிகம். இதனால் ஈராக், எகிப்து, ஸிரியா, துருக்கி, பிரான்ஸ்

போன்ற நாடுகளுக்குச் சென்றார். சொந்தப் படிப்பின் மூலம் பல ஐரோப்பிய மொழிகளைக் கற்றார்; அவற்றின் இலக்கியங்களை அறிந்தார். இந்தப் புலமையை யெல்லாம் அவர் வெளியில் காட்டுவதேயில்லை. காரணம், அவர் அடக்கம் நிறைந்தவர்.

*1908*-ஆம் வருஷம் ஆஜாதின் தந்தை காலமானார். அதன் பின்பு, ஒரு நண்பர் சொன்ன யோசனையின்பேரில், ஆஜாத் ஆங்கில இலக்கணப் புஸ்தகமும் அகராதியும் வைத்துக்கொண்டு ஆங்கிலம் கற்றார். அந்தக் காலத்தில் வங்காளப் பலாத்காரப் புரட்சிக்காரர் பலரிடம் ஆஜாத் நேசம் கொண்டார். ஆனால், அவர்களின் இயக்கத்தில், எவ்வளவு தூரம் இவர் சம்பந்தம் கொண்டார் என்று திட்டமாய்ச் சொல்வது சாத்தியமில்லை. அப்போதுதான் தேசீய இயக்கம் வலுத்தது. பிரித்தாளும் தந்திரத்தை, சர்க்கார் தீவிரமாய்க் கையாண்டார்கள். முஸ்லிம்கள் தேசீயத்தை விட்டு விலகியிருந்தது, ஆஜாதுக்கு அளவிறந்த துயரம் தந்தது. அவர்களைத் தேசீயத்துக்குத் தூண்ட 'ஆல் ஹிலால்' (பிறை) என்ற பத்திரிகையை *1912*-ஆம் வருஷம் ஆரம்பித்தார். அதன் வருஷச் சந்தா ரூபாய் பன்னிரண்டு. அந்தக் காலத்தில் இது பெரிய தொகையாகும். அப்படியிருந்தும் ஆறே மாதத்தில், அதன் சந்தாதாரின் எண்ணிக்கை பதினோராயிரமாக உயர்ந்துவிட்டது. சந்தாதாரில் மிகப் பெரும்பான்மையோர் முஸல்மான்கள். ஆஜாதின் எழுத்து, குத்தலும் விறுவிறுப்பும் இலக்கிய நயமும் செறிந்து விளங்கியது. சென்ற மகா யுத்த காலத்தில் அதன் சந்தாதார் தொகை இருபத்தையாயிரம் ஆயிற்று. அந்த இருபத்தையாயிரம் பிரதிகளில் ஒவ்வொரு பிரதியையும், பல பேர் கூடிக்கொண்டு வாசிப்பார்கள். நாட்டின் பல பாகங்களில் ஆஜாதின் பத்திரிகைக்குச் செல்வாக்கு ஏற்பட்டது. அலாஹாபாத் ஆங்கிலோ-இந்தியப் பத்திரிகையான 'பயனீர்', ஆஜாதின் பத்திரிகையைப் பிரமாதமாய்த் தாக்கியது. ஆஜாதின் பத்திரிகையை ஏன் அடக்கவில்லை என்று பார்லிமெண்டிலும் பலர் கேள்வி கேட்டார்கள். இந்திய சர்க்கார் சீறி எழுந்தார்கள். ஆஜாதின் பத்திரிகை முதலில் கட்டிய ஜாமீனைப் பறிமுதல் செய்தார்கள். புதிதாய்ப் பதினாயிரம் ரூபாய் ஜாமீன் கேட்டார்கள். ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம், டில்லி, பஞ்சாப், பம்பாய் ஆகியவற்றில் எல்லாம் அது நுழையக்கூடாது என்று தடையுத்தரவும் போட்டார்கள். ஆஜாதையும் வங்காள மாகாணத்தை விட்டு வெளியேற்றினார்கள். 'ஆல் ஹிலால்' நின்றுவிட்டது. *1916*-ஆம் வருஷம் பிஹாரைச் சேர்ந்த ராஞ்சியில், ஆஜாதைப் பந்தோபஸ்துக் கைதியாகவும் சர்க்கார் சிறைப்படுத்திவிட்டார்கள். *1919*-ஆம் வருஷந்தான் அவர் விடுதலை அடைந்தார்.

*1921*-ஆம் வருஷம் விண்ட்ஸர் கோமகனான வேல்ஸ் இளவரசர் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்தார். கோமகனைப் பகிஷ்கரிப்பதில், ஆஜாதும் தேசபந்து தாஸும் முக்கியமான பங்கு எடுத்துக் கொண்டார்கள். *1922*-ஆம் வருஷம் முஸ்லிம் லீக், அகில இந்தியக் கிலாபத் கமிட்டி இரண்டுக்கும் மௌலானா ஆஜாதுதான் தலைவராயிருந்தார். *1923*-ஆம் வருஷம் நடந்த காங்கிரஸுக்கு அவரைத் தலைவராய்த் தேர்ந்தெடுத்தார்கள். அப்போது அவருக்கு வயசு 35. இவ்வளவு சிறிய வயதில் காங்கிரஸ் தலைமைப் பதவி வகித்தவர் யாருமே இல்லை. காந்திஜி அப்போது சிறையில் இருந்தார். தேசபந்து தாஸின் தலைமையில், சுயராஜ்யக் கட்சி தோன்றி, சட்டசபைப் பிரவேசத்தை வற்புறுத்தியது. ராஜாஜியின் தலைமையில் மாறுதல் வேண்டாதார் கட்சி, அதை எதிர்த்தது. இரு கட்சிகளுக்கும் சமரசமாக ஒரு தீர்மானத்தை ஆஜாதுதான் தயாரித்து நிறைவேற்றச் செய்தார். 'சட்டசபையில் நம்பிக்கையுள்ளவர் அதற்குள் செல்லட்டும்; அதில் நம்பிக்கையிராதவர்

நிர்மாணத் திட்டங்களில் ஈடுபடட்டும்' என்பதுதான் அந்தச் சமரசம்.

பின்னால் நடந்த ஒவ்வொரு சட்ட மறுப்பு இயக்கத்திலும் சம்பந்தப்பட்டு, ஆஜாத் சிறை சென்றார். 1937-ஆம் வருஷம் பல மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரிசபைகள் ஏற்பட்டபோது, காங்கிரஸின் அகில இந்தியப் பார்லிமெண்டரி சப் - கமிட்டி அங்கத்தினர் மூவரில் அபுல்கலாம் ஆஜாதும் ஒருவர். ராஜன் பாபுவும், சர்தார் படேலும் மற்ற இருவர். 1940-ஆம் வருஷம் 183 வோட்டுக்கு எதிரே 1,854 வோட்டுகள் பெற்று, மீண்டும் ஆஜாத் ராஷ்டிரபதியானார். 1946-ஆம் வருஷம் வரையில் அதை வகித்து, அந்த வருஷ மத்தியில் ராஷ்டிரபதி பதவியைப் பண்டித ஜவாஹர்லால் நேருவிடம் ஒப்படைத்தார்.

இடையில், 1942-ஆகஸ்டில் 'இந்தியாவை விட்டு வெளியேறு' (க்விட் இண்டியா) இயக்கம் காரணமாகச் சிறைப்பட்டு, 1945 ஜூன் மாதம் விடுதலையடைந்தார். 1942-இல் க்ரிப்ஸ் மிஷன் வந்த போதும், மீண்டும் 1946-இல் பிரிட்டிஷ் மந்திரி சபை மிஷன் வந்த போதும் ஆஜாதே காங்கிரஸ் தலைவராகப் பேச்சு வார்த்தை நடத்தினர்.

1947-ஜனவரியில் நேருவின் இடைக்கால மந்திரி சபையில் கல்வி மந்திரியாக ஆஜாத் பதவி ஏற்றார். அதே வருஷம் ஆகஸ்டில், பாகிஸ்தான் பிரிந்தபோதும், அவரே இந்தியாவின் கல்வி மந்திரியானார். 1952-இல் நடந்த முதல் பொதுத் தேர்தலில் ஜயித்து மீண்டும் கல்வி மந்திரியானார். 1957-இல் நடந்த தேர்தலில் குர்காம் தொகுதியில் வென்று மறுபடியும் லோக் சபை உறுப்பினராகி, தொடர்ந்து கல்வி மந்திரியானார்.

கல்வி மந்திரி என்ற முறையில் பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்விட்ஜர்லாந்து போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்தார். 1948-49-ஆம் வருஷம் யூனிவர்ஸிட்டி கல்விக் கமிஷன் மூன்று வால்யம் கொண்ட ஓர் அறிக்கையைத் தயாரித்தது. இதற்குப் பொறுப்பாளி அவரே. 1952-இல் இந்தியத் தத்துவ சாஸ்திரம் (ஃபிலாஸஃபி) பற்றிய இரண்டு வால்யம் சரித்திரத்தைத் தயாரிக்கச் செய்து வெளியிட்டவரும் ஆஜாதுதான்.

சில நாட்களாகப் பாரிச 'நோய்க்கு ஆளாகி 21-2-'58 இரவு 2-10 மணிக்கு ஆஜாது காலமாகிவிட்டார். நேரு, ராஜேன் பாபு, ராதாகிருஷ்ணன் போன்ற தலைவரெல்லாம் கடைசி நேரத்தில் அடிக்கடி அவரைப் பார்த்து வந்தார்கள். பிரக்ஞை இருந்த கடைசி நேரத்தில் ஆஜாத், ''இனி என்னை அல்லாவிடம் ஒப்படைத்து விடுங்கள்'' என்றாராம். கடைசியாக நண்பர்களிடமும் தேசத்திடமும் அவர் பெற்ற விடை இது.

ஆஜாதின் தியாகம் அளவிட முடியாதது. ஒரு சமயம் முஸ்லிம் மத அதிகாரிகள் பலரும் லாகூரில் விசேஷ மகாநாடு ஒன்று கூட்டி, அகில இந்தியாவுக்கும் இஸ்லாம் மதத் தலைவராக 'இமாம்' என்ற பதவியை ஆஜாதுக்கு அளிக்க முன் வந்தார்கள். அவர் மறுத்துவிட்டார். சில நாளில் அவர் சிறை சென்று 1923-ஆம் வருஷம் விடுதலை அடைந்தபோது மீண்டும் 'இமாம்' பதவியை அவருக்கு அளிக்க, ஜமையத்-உல்-உலேமா சபையார் முன் வந்தார்கள். அப்போதும், அவர் அதை மறுத்து விட்டார்.

மௌலானா ஆஜாத், நேர்த்தியான உர்தூவில்தான் பேசுவார். ஆங்கிலத்தில் அதிகமாய்ப் பேச மாட்டார். ஆயினும், பல ஆங்கிலக் கவிதைகளையும் நவீன இலக்கியங்களையும் ஏராளமாய்ப் படித்திருக்கிறார். காந்திஜியிடமும் காங்கிரஸ் காரியக் கமிட்டியிடமும் அவருக்கு எப்போதும் அபரிமிதமான செல்வாக்கு. அவருடைய சம்பாஷணை பொருள் செறிந்திருக்கும். அவர் புத்திக்கூர்மை வாய்ந்தவர். இதனால்தான், ''ஆஜாத் காங்கிரஸின் மூளை; ராஜேன் பாபு அதன் இதயம்; படேல் அதன் நிர்த்தாட்சிண்யமான முஷ்டி'' என்று ஜான் கந்தர் வர்ணித்திருக்கிறார். ஆஜாத் இந்தியாவின் உத்தம புத்திரர்களில் ஒருவர்,

**உணவுக்கு மணம் தந்து, உடம்புக்குக் குணம் தரும் இந்தப் பொருள்கள் நாட்டுக்குப் பணமும் தருகின்றன.**

# வாசனைப் பொருள்கள்

**வி. சீனிவாசமூர்த்தி**

நம் நாட்டில் வாழ்க்கைக்கு ஏலக்காய், சுக்கு, மஞ்சள், கிராம்பு, ஜாதிக்காய் முதலிய வாசனைப் பொருள்கள் இன்றியமையாதவை. இவை வாசனை மதிப்பில் உயர்ந்திருப்பதோடு பொருளாதார ரீதியாகவும் உயர்ந்த நிலையைப் பெற்றிருக்கின்றன.

**ஏலக்காய்:** வாசனைப் பொருள்களுள் ஏலக்காய் முதன்மையான ஸ்தானம் பெற்றிருப்பது. இதைப் பயிராக்குவதால் ஏராளமான லாபம் கிடைக்கிறது. இது பெரும்பாலும் மேற்குக் கரை நாடுகளில் பயிராகிறது.

சுமார் லட்சத்து இருபதினாயிரம் ஏக்கர் விஸ்தீர்ணம் உள்ள நிலத்தில் 2250 டன்கள் ஏலக்காயைப் பயிராக்கலாம். மைசூர், கேரளம், சென்னைப் பிரதேசங்களில் ஏலக்காய் பயிராகிறது. 1954-55-இல் ஒரு கோடியே ஐம்பத்து மூன்று லட்சத்து எழுபத்தையாயிரத்து இருநூற்றிருபது ரூபாய் மதிப்புள்ள 894 டன் ஏலக்காய் ஏற்றுமதியாகி இருக்கிறது.

இதன் தேவை மேலும் மேலும் அதிகரித்துக்கொண் டிருக்கிறது. ஏலம் பயிராக்குவதும் வியாபாரம் செய்வதும் பாரதத்தின் ஏகபோக உரிமையாய் இருந்து வருகின்றன.

கேரளத்திலும் மைசூர் ராஜ்யத்திலும் ஏலக்காய் ஆராய்ச்சிச் சாலைகளைச் சமீப காலத்தில் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஏலக்காயை அதிக அளவில் பயிராக்குவதும் உயர்ந்த ரகமானவற்றைப் பயிராக்குவதும் எப்படி என்பதை இந்தச் சாலைகளில் ஆராய்கிறார்கள்.

அதோடு, தென்னிந்திய ஏலக்காயை அஸ்ஸாம் மாகாணத்தில் விளைவிக்கக்கூடிய ஒரு திட்டமும் வகுத்திருக்கிறார்கள். காஸி, ஜயந்தியா என்னும் மலைப்பிரதேசங்களைச் சார்ந்த 'நான்ஃபோ'வில் ஏலக்காயைப் பரீட்சார்த்தமாக விதைத்திருக்கிறார்கள்.

**இஞ்சி** (சுக்கு): 1955-56-இல் முப்பத்தையாயிரத்து நானூறு டன் இஞ்சி விளைந்திருக்கிறது. 1948-இல் இரண்டாயிரம் டன் அளவுக்குச் சுக்கு ஏற்றுமதியாகியிருக்கிறது. 1955-இல் ஏற்றுமதியின் அளவு இரண்டாயிரத் தெண்ணூறு டன்னுக்கு ஏறிவிட்டது.

இஞ்சிப் பயிரை விருத்தியாக்குவதென்றால், அதிக அளவு விளைவிப்பதும் நார் இல்லாத இஞ்சியைப் பயிராக்கும் வழிகளை மேற்கொள்ளுவதுமே. மலையாளத்தைச் சேர்ந்த வய நாட்டில் அம்பலவலயத்தில் இருக்கும் விவசாய ஆராய்ச்சிச் சாலையில் சென்ற ஐந்து வருஷ காலமாக இஞ்சியைப்பற்றிய ஆராய்ச்சி நடத்தி வருகிறார்கள். இதைச் சாகுபடி செய்யும் முறைகள், சேகரிப்பது, இதைப் பற்றக்கூடிய நோய்கள் இந்த மாதிரி பிரச்னைகளை அங்கே பரிசீலனை செய்கிறார்கள்.

அஸ்ஸாமைச் சேர்ந்த காஸி, ஜயந்தியா மலைப்பகுதிகளில் இருக்கும் 'நயா பங்களா'வில் ஆராய்ச்சிச்சாலை ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மூன்றாவதாகக் கேரளத்தில் ஓர் ஆராய்ச்சிச் சாலையை நிறுவப் போகிறார்கள்.

**மஞ்சள்:** நாட்டில் மஞ்சளைப் பயிராக்கும் பிரதேசத்தின் பரப்பு

மூலம்: ஜனப்ரகதி (கன்னடம்: 6-1-'58), பங்களூர்.

லட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து நானூற்று ஐம்பத்தைந்து ஏக்கர் ஆகும். இந்தப் பரப்பில் லட்சத்து இருபத்தோராயிரத்து இருநூற்றுப் பத்து டன் மஞ்சள் தயாராகிறது.

ஆந்திர ராஜ்யத்துள், குண்டூர் ஜில்லாவில், பெத்தபாளையத்தில் மஞ்சளைப் பயிராக்கும் விஷயத்தில் ஆராய்ச்சி நடத்த ஏற்பாடாகி இருக்கிறது. இந்தச் சாலையில் மஞ்சள் பயிராக்குவதற்கு வேண்டிய பல முறைகளை ஆராய்ச்சி செய்வார்கள்.

**கிராம்பு:** மரத்தில் தோன்றும் வாசனைப் பொருள்களுள் கிராம்புக்குச் சிறந்த ஸ்தானம் உண்டு. நம் நாட்டில் இதைச் சாகுபடி செய்வது மிகக் குறைவு. கட்டாயமாக இதை அபிவிருத்திக்குக் கொண்டுவர வேண்டியது அவசியம்.

**ஜாதிக்காய்:** இதுவும் அபிவிருத்தியில் கிராம்பின் நிலைமையில்தான் இருக்கிறது.

ஜாதிக்காயும் கிராம்பும் பயிராக்க, நிலமும் சீதோஷ்ண நிலையும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டியிருக்கிறது. தென்னிந்தியாவில் சற்று நீர்ப்பசையுள்ள இடங்களில் இவை நன்ருகப் பயிராகின்றன. கடல் மட்டத்திலிருந்து மூவாயிரம் அடி உயரம் உள்ள பகுதிகளிலும் வருஷத்தில் 60 முதல் 100 அங்குலம் மழை பெய்யும் பகுதிகளிலும் இவை செழித்து வளர்கின்றன. நம் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் மேற்சொன்ன சீதோஷ்ண நிலையும் சௌகரியமும் கொண்ட பிரதேசங்களில் இவற்றைப் பயிராக்கலாம் என்று தெளிவாகத் தெரிகிறது.

சென்னை ராஜ்யத்தைச் சேர்ந்த நீலமலைத் தொடரில், 'பரலியாறு', 'கல்லாறு' பகுதிகளில் வாசனைப் பொருள்கள், பழங்கள் இவை பற்றிய ஆராய்ச்சிக்காக ஏற்பட்டுள்ள சாலைகளில் கிராம்பு, ஜாதிக்காய், கொக்கோ இவைகளைப்பற்றிய ஆராய்ச்சி நடந்து வருகிறது.

## புராதன தெய்வ தத்துவம்

வேத காலத்துக்குப் பின்னல் அதற்கு நெருங்கிய காலத்தில், கிரீஸ் நாட்டுப் புராதன தேவதைகளில் அபோலோ என்ற சூரியதேவன், காவியத் திறமையையும் எதிர்கால ஞானத்தையும் அளிக்கவல்ல தெய்வமாய் விளங்குகிருன். அதீனே (உஷாதேவி) விவேகமும், பலமும், பரிசுத்தமும் வாய்ந்த அறிவு அல்லது ஞானதேவதையாக விளங்குகிருள்.

நம் உபநிஷத்துக்களிலும், புராணங்களிலும் வேத கால தேவதைகள் மாறு ரூபம் பெற்றிருக்கிருர்கள். வேதத்தின் 'சரஸ்வதி' என்ற நதி, அறிவுத் தெய்வமாக மாறியிருக்கிருள். வேதத்தின் விஷ்ணுவும், ருத்திரனும், பிரம்மணஸ்பதியும் ஆக்கல், அழித்தல், படைத்தல் செய்யும் மும்மூர்த்திகளாய் மாறியிருக்கிருர்கள். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அந்தணர்கள் தினசரி உபாசித்து வரும் 'காயத்திரி' மந்திரம், 'ரிக்' வேதத்தின் ரிஷி விசுவாமித்திரர் அருளிய ஒரு சூக்தம். இதன் அதிஷ்டான தேவதையான சூரியன், பரம சத்திய நிலையை அடைவதற்கான ஞானத்தைத் தோற்றுவிக்கும் தெய்வமாக விளங்குகிருன். அக்கினி தேவனும் பாவத்தை அழித்து, ஆத்மாவைத் தெய்விக ஆனந்த நிலைக்கு அழைத்துச் செல்லும் தேவஞக விளங்குகிருன். வேதத்தின் சோம லதை, மதுரசம் பிழியப்பெறும் கொடியாக இல்லாமல், நிலவுத் தேவதையாக மாறி, மனிதனின் மன நிலையை ஆளும் சக்தி வாய்ந்த தெய்வமாகிவிட்டது.

—யோகி அரவிந்தர்

வானத்து நட்சத்திரங்களும் கிரகங்களும் எப்படியெல்லாமோ இயங்கும் விந்தைகளைக் காட்டும் புதிய கருவி!

# திரையிலே வானக் காட்சி

## ஹான்ஸ் ஜி. பெக்


வானத்தைப் பல நூற்றுண்டுகளாய் ஆராய்ந்து வரும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. முதலில் ஜோசியத்துக்காகவே இப்படி ஆராய்ந்து வந்தார்கள். பின்னுல், பதினெட்டாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் ஜய்புர், டில்லி, (வட)மதுரா, காசி, உஜ்ஜயினி இந்த இடங்களில் வான ஆராய்ச்சிக் கருவிகளைக் கல்லிலே மகாராஜா ஜய்சிங் கட்டினுர்.

வான ஆராய்ச்சியில் ஏராளமான இந்திய மக்களுக்கு இன்றும் மிகுந்த ஆர்வம் இருக்கிறது. பிர்லா கல்வி ட்ரஸ்ட் நிர்வாகிகள் இப்போது முதல் தரமான வான ஆராய்ச்சிக் கல்வி ஸெண்டர் ஒன்றைக் கல்கத்தாவில் அமைக்கத் தீர்மானித்திருப்பது, அந்த மக்களுக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியளித்திருக்கிறது. இந்த வான ஆராய்ச்சிக் கல்வி ஸெண்டருக்கு ஜெர்மன் ஜீஸ் கம்பெனியாரின் ப்ளானிட்டேரியம் (வான மண்டலக் காட்சிக் கருவி) ஒன்றை ஸப்ளை செய்யப்போகிருர்கள். 1955-இல் புது டில்லியில் நடந்த கைத்தொழில் சந்தையில் சிறிய ப்ளானிட்டேரியம் ஒன்று வைத்திருந்தார்கள். அது பள்ளிக்கூடங்களுக்கு உரியது. அதைக் காண்பதற்கே 50,000 மக்கள் ஆவலோடு வந்தார்கள்.

ஜீஸ் ஜெனு வொர்க்ஸ் என்ற ஜெர்மன் தொழிற்சாலையார் இது மாதிரி ப்ளானிட்டேரியம் முப்பத்து மூன்றைப் பல நிலையங்களுக்கு இதுவரையில் ஸப்ளை செய்திருக்கிருர்கள். கல்கத்தாவுக்கு ஸப்ளை செய்யப்போவது முப்பத்து நான்காவது. இது மிக அபிவிருத்தி அடைந்த சமீப வகையைச் சேர்ந்தது. இதற்கென்று பிரத்தியேகமாய் 'டோம்' உருவில் கட்டிய மண்டபத்தில் இதை வைக்கப் போகிருர்கள். 'ப்ரொஜெக்ஷன் ஹால்' என்ற காட்சி மண்டபத்தின் குறுக்களவு 23 மீட்டர் (சுமார் 75 அடி). 600 பேர் உட்கார்ந்து, வான மண்டலத்தின் தத்ரூபமான படக் காட்சியைக் காணலாம். செயற்கை வெளிச்சமோ, மேகமோ, மழையோ குறுக்கிட்டு இடையூறு செய்யாது. 'ப்ரொஜெக்டர்' அற்புதமாய் அமைந்த ஒரு விஞ்ஞான யந்திரம். ஆப்டிக்கல் ப்ரொஜெக்ஷன் டிவைஸ் என்ற ஒளியியல் கருவிகள் 120, பல மின்சார மோட்டார்கள், நுணுக்கமான 'கீயரிங்'குகள் எல்லாம் அந்த ப்ரொஜெக்டர் யந்திரத்தில் பொருந்தியிருக்கின்றன. ஜெர்மன் ஒளியியல் விஞ்ஞான எஞ்சினீர்கள் செய்தது அந்த யந்திரம்.

சென்ற காலத்திலோ, இன்றே, வருங்காலத்திலோ பூமியில் எந்த இடத்தில் இருந்துகொண்டு பார்த்தவர் அல்லது பார்க்கிறவருக்கும் தெரியக்கூடிய வானக் காட்சியை, அந்த யந்திரத்தைக் கொண்டு ப்ரொஜெக்ட் செய்யலாம். பல ஆண்டுகளிலோ, பல நூற்ருண்டுகளிலோ, பல ஆயிரம் ஆண்டுகளிலோ நிகழும் வான மண்டல மாறுதல்களை யெல்லாம் சில நிமிஷ நேரத்துக்குள் காட்சியாகக் காட்டிவிடலாம். மேலே விதானம் போல் அமைத்திருக்கும் மண்டபமே காட்சித் திரை. அதன் குறுக்களவு 25 மீட்டர்

மூலம்: இன்ஃபர்மேஷன் புல்லட்டின் (ஆங்கிலம்: நவம்பர் '57), ட்ரேட் ரெப்ரஸெண்டேஷன் அவ் தி ஜெர்மன் டெமாக்ரடிக் ரிப்பப்ளிக், 23, கர்ஸான் ரோடு, புது டில்லி.



ஜெனுவில் உள்ள ப்ளானிட்டேரியம் ஹவுஸ்

(சுமார் 81 அடி). யந்திரத்தை ஸ்விட்சுகள் மூலம் இயக்கி, வான மண்டலத்தின் எத்தனையோ நிலைகளை அந்த மண்டபத்தில் காட்சியாக விழச் செய்யலாம்.


யந்திரம் பிரம்மாண்டமான டம்-பெல்ஸ் மாதிரி உருவம் பெற்றிருக்கிறது. இடம் மாருது நிலையாய் இருக்கும் நட்சத்திரங்கள் (ஃபிக்ஸ்ட் ஸ்டார்ஸ்) உள்ள இரண்டு கோளங்களும், சூரியன், சந்திரன், கிரகங்கள் இவற்றைத் தாங்கும் அமைப்புக்களும், எல்லா ஸ்விட்சுகளையும் இயக்கக்கூடிய தலைமையான கியரிங்குகளும் அந்த யந்திரத்தில் அடங்கியிருக்கின்றன.

நிலையான நட்சத்திரங்கள் உள்ள இரண்டு கோளங்களிலும் (ஸ்ஃபியர்ஸ்) 16-ப்ரொஜெக்டர்கள் இருக்கின்றன. காட்சியைத் திரையிடுவதற்காக டெஸ்ஸார் லென்ஸ் அவற்றில் அமைத்திருக்கிருர்கள். இயற்கையிலே வானத்தில் காணக்கூடிய 8,900 நட்சத்திரங்களை - வெகு தூரத்தில் மிக மங்கலாக (6.5 மாக்னிட்யூடு) உள்ள நட்சத்திரங்கள் வரைக்கும் - அவற்றைக் கொண்டு திரையிடலாம். இயற்கையிலே நட்சத்திரங்களின் ஒளி ஒன்றுக்கொன்று எப்படி வேறுபட்டிருக்கிறதோ அப்படியே தத்ரூபமாய்க் காட்டலாம்.

நிலையான நட்சத்திரங்களுக்கு அப்பால் தெரியும் ஆகாச கங்கை (மில்கி வே) என்ற எண்ணற்ற நட்சத்திரக் கூட்டம், ஒளி மாறும் நட்சத்திரங்கள் (வேரியபிள் ஸ்டார்ஸ்), 1858-ஆம் ஆண்டின் நான்காவது வால் நட்சத்திரமான டொனுட்டி. காமெட் இவற்றைக் காட்டும் கோளங்களும் யந்திரத்தில் இருக்கின்றன. நிலையான நட்சத்திரங்களின் வெளிக் கோடியில் இரண்டு சிறு கோளங்கள் இருக்கின்றன. அவற்றில் நட்சத்திர கணங்களின் (கான்ஸ்டலேஷன்ஸ்) பெயர்களைத் திரையிட ஒவ்வொன்றிலும் 15 ப்ரொஜெக்டர்கள் இருக்கின்றன. வானத்திலேயே மிகப் பிரகாசமாய்த் தெரியும் நிலையான நட்சத்திரம் ஸிரியஸ் (நாய் நட்சத்திரம்). இதை மிகப் பெரிது படுத்திக் காட்டப் பிரத்தியேகமான ஒரு ப்ரொஜெக்டரும் இருக்கிறது. நம் பூமி ஓடிக்கொண்டே இருப்பதால், நாய் நட்சத்திரத்திலிருந்து வரும் ஒளி வேகம் மாறுபட்டு அது உள்ள இடத்தை விட்டு வேறு இடத்தில் தோன்றுவதை 'அபெர்ரேஷனல் மோஷன்' என்பார்கள். இதே போல் நம் பூமி காலத்துக்குக் காலம் இடம் மாறுவதால் அந்த நட்சத்திரமே வான நட்சத்திரங்களுக்கு இடையிலே இடம் மாறியது போல் தோன்றும். இதைப் 'பாரல்லாக்டிக் மோஷன்' என்பார்கள். அதன் இந்த இரு வகை இடமாற்றங்களையும் திரையிட்டுக் காட்ட அந்தப் பிரத்தியேகமான ப்ரொஜெக்டரில் வசதி உண்டு.

கிரகங்களின் சிக்கலான இயக்கங்கள், சந்திரனின் இயக்கம், ராசிக்கு ராசி சூரியன் மாறுவது (மைக்ரேஷன்) இவற்றையெல்லாம் துளியும் பிசகாமல் மிகக் கணக்காகக் காட்டும் ப்ரொஜெக்டர்கள் இருக்கின்றன. சில கிரகங்கள் பின்வாங்கி அந்தரடிப்பது போல் தோற்றம் அளிப்பது (ரிட்ரொகிரேட் மோஷன்), சந்திரனின் பிறைகள் இவற்றை யெல்லாம் அவை காட்டுவதை மக்கள் மிக ஆவலோடு பார்ப்பது வழக்கம்.

வான மண்டலம் ஒவ்வொரு நாளிலும் இயங்குவது, ஒரு வருஷத்தில் இயங்குவது, பூமியின் அச்சுச் சாய்வினால் ஏற்படும் அயன மாறுதல் இயக்கம் (ப்ரிஸிஷெனல் மோஷன்) இவற்றையெல்லாம் இந்த யந்திரத்தில் காட்டலாம். யுத்தத்துக்குப் பிந்தி இந்த யந்திரத்தில் மிகுந்த அபிவிருத்தி செய்திருக்கிறார்கள். இதனால் நாள் இயக்கம் (டையர்னல் மோஷன்), வருஷ இயக்கம் (அன்னுவல் மோஷன்) இரண்டையும் சில விநாடியில் அல்லது பல விநாடியில் மிக மெதுவாகவோ அதிவேகமாகவோ காட்ட முடிகிறது. பூமத்திய ரேகைக்கு வடக்கே அல்லது தெற்கே எந்த அட்ச ரேகையில் (லாடிட்யூட்) உள்ளவருக்கு வேண்டுமானாலும் பொருத்தமாய்த் தெரியும்படி துருவ இயக்கத்தை மாற்றவும் இந்த யந்திரத்தில் வசதி இருக்கிறது.



ப்ளானிட்டேரியம் ப்ரொஜெக்டர்

தீர்க்கரேகை (மெரிடியன்) பூமத்திய ரேகை (ஈக்வேட்டர்), நீள வட்டம் (இக்லிப்டிக்), செங்குத்துக் கோடு (வெர்ட்டிக்கல் லைன்) இப்படிப் பல கணிதக்கோடுகளையும், அடிவானம் (ஹொரைஸன்), துருவம் (போல்) இவற்றை ஒளி செய்து காட்டும் அடையாளங்களையும் திரையிட இந்த யந்திரத்தில் வசதி இருக்கிறது. குதிரை லாடம் போன்ற உருவில் அரைவட்ட மேஜை ஒன்றுக்குப்பின் நின்றுகொண்டு பிரசங்கம் செய்கிறவரும் யந்திரத்தை இயக்குகிறவரும் செயலாற்றுவார்கள். ஒலி பரப்பும் கருவி ஒன்றும், விண்வீழ் கொள்ளி (ஷூட்டிங் ஸ்டார்), சூரியனும் கிரகங்களும் இயங்கும் விதம், சூரிய சந்திர கிரகணங்கள், அளவு காட்டும் கருவி (மினியச்சர்-ஸ்லைடு) இவற்றையெல்லாம் திரையிடும் ப்ரொஜெக்டர்களும் யந்திரத்தில் இருக்கின்றன.

முக்கியமான எந்த அம்சத்தையாவது திரையில் பிரசங்கி சுட்டிக் காட்டுவதற்காகப் பிரகாசமான அம்புக்குறி ஒன்றைத் திரைமீது விழச் செய்ய யந்திரத்தில் வசதி இருக்கிறது.

இரும்புச் சட்டங்களின்மீது மெல்லிய அலுமினியம் தகடுகளைத் திருகாணி போட்டு இணைத்து அரை உருண்டை வடிவில் அமைத்திருக்கிறார்கள். இதுதான் காட்சித் திரை. இந்தத் திரையைக் காட்சிக்கும் ஒலி செல்வதற்கும் வசதியாக அமைத்திருக்கிறார்கள். காட்சி நன்றாய் விழுவதற்காக வெண்மையான பெயிண்ட் அடித்திருக்கிறார்கள். எதிரொலி ஏற்படாதிருப்பதற்காக ஏராளமான துவாரங்கள் போட்டிருக்கிறார்கள். இந்தத் துவாரங்களின் வழியாக ஒலி சென்றுவிடும். இப்படிச் செல்லும் ஒலி அலைகளை, அலுமினியம் தகட்டுக்குப் பின் உள்ள கம்பளி விழுங்கிவிடும். இந்த உட்புற டோமுக்குப் பின்னால் அரை மீட்டர் தூரத்தில் வெளி 'டோம்' ஒன்று அமைத்திருக்கிறார்கள். இரும்புக் கம்பிச் சட்டம் கொடுத்த காங்கிரீட்

கொண்டு அது அமைந்திருக்கிறது. உள் டோமில் ஈரம் படாமலும், வெளி உஷ்ணம் அதிகமாக உள்ளே தாக்காமலும், வெளிச் சந்தடி உள்ளே வராமலும் வெளி டோம் பாதுகாக்கிறது.

இதுவரைக்கும் இந்த யந்திரத்தை ஸப்ளை செய்த இடங்கள் மிதமான சீதோஷ்ணம் உடையவை. கல்கத்தா நகரம் அப்படி அல்ல. எனவே, கல்கத்தாவில் உள்ள கட்டிடத்தை ஏர்-கண்டிஷனிங் செய்து, உள்ளே இருக்கும் காற்றைக் குளிர்ச்சியாகவும் ஈரமில்லாதும் வைத்திருக்கிறார்கள்; அதோடு புதிய காற்று உள்ளே வந்துகொண்டிருக்கும்படியும் செய்திருக்கிறார்கள். இது காட்சி பார்க்கிறவர்களுக்கும் சௌகரியமாயிருக்கும்; யந்திரக் கருவிகளுக்கும் பாதுகாப்பாயிருக்கும்.

கல்கத்தாவில் வைக்கப்போகிற இந்த ஜீஸ் ப்ளானிட்டேரியம் மிக நவீன அபிவிருத்திகள் கொண்டது; ஜெனு ஜீஸ் வொர்க்ஸ் நிலையத்தில் செய்தது. வான சாஸ்திரத்தையும் வான சாஸ்திர அறிவையும் காட்சி மூலம் மக்களிடம் பரப்ப மிகச் சிறந்த சாதனமாக இது விளங்கப் போகிறது.

## அட்டையும் ஆத்மாவும்

அநேகம் ஆண்கள் பத்திரிகை அட்டை மாதிரி அலங்காரமான பெண்ணைப் பார்த்து மணந்துகொள்ளுகிறார்கள்; பிறகு பைபிள் கருத்து மாதிரி ஆத்ம சுத்தியுடன் அவள் நடந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்!

—'லேடீஸ் ஹோம் ஜர்னல்'

## வெண்ணெயும் வதந்தியும்

ரொட்டியிலே தடவிய வெண்ணெயை வழித்தெடுக்க முடியாது; ஊரிலே பரப்பிவிட்ட வதந்தியை வாபஸ் பெற முடியாது.

—'தி இங்கிலீஷ் டைஜெஸ்ட்'

## முக்கியமான செய்தி

வியாபாரச் சங்கம் ஒன்றின் பத்திரிகையில் இப்படி ஒரு செய்தி இருந்தது: ''சென்ற மாத இதழில் ஒரு படத்தைப் போட்டு அதன் கீழே 'ஹெர்ப் ப்ரெஸ்மான்' என்ற பெயரைக் குறித்திருந்தோம். இது தவறு என்றும் படத்தில் உள்ளவர் பாப் ஃபெர்ஞன்ட் என்பவர் என்றும் ஒருவர் கடிதம் எழுதியிருக்கிறார். ஆனால் எட் மாக்டொனல்டு என்பவரைப்பற்றிய கட்டுரையில் அந்தப் படத்தைப் போட்டிருக்கிறோம். ஆகவே, இந்த விஷயத்தையே சட்டை செய்யவேண்டாம் என்று கடிதக்காரரைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.''

—'க்வோட்'

## டாக்டர் சொன்ன யோசனை

''என் டாக்டர் என்னை இனிமேல் கோல்ஃப் பந்து ஆடவேண்டாம் என்று சொல்லி விட்டார்.''

''ஏன்? உன் இதயத்தை அவர் பரிசோதித்துப் பார்த்தாரா என்ன?''

''இல்லை! என் ஸ்கோர் கார்டுகளைப் பார்த்தார்.''

—'கோல்ஃபிங்'

# ரத்தத்தில் எழுதிய சித்திரம்

★

வியட்நாம் சுதந்தரத்துக்குப் போராடிய தலைவர் ஹோ சி மின் இன்று வடக்கு (கம்யூனிஸ்ட்) வியட்நாம் (வியட்மின்) ஜனாதிபதியாக இருக்கிறார். இவர் சமீபத்தில் நம் நாட்டுக்கு விஜயம் செய்து திரும்பினார். இப்போது தெற்கு வியட்நாமுக்கு ஜனாதிபதி தியம் என்பவர்; அவரும் முன்னே இங்கே வந்து சென்றார். 1947 - இல் தெற்கு வியட்நாம் மக்களுக்கு ஹோ சி மின்னிடம் இருந்த அன்பைக் காட்டுகிறது இந்த நிகழ்ச்சி.

ஜனாதிபதி ஹோ சி மின் மக்களிடம் பேரன்பு கொண்டவர். மக்களும் அதே மாதிரி அவரிடம் அன்பு பூண்டிருக்கிறார்கள். கீழ்க் கண்ட கடிதத்தை எழுதியவர் தெற்கு வியட்நாமைச் சேர்ந்த பிரபல ஓவியரான தியேப் மின் செள. இவர் தம் விரலை வெட்டிக்கொண்டு இளமை துள்ளும் தம் ரத்தத்தைக் கொண்டு ஜனாதிபதி ஹோ சி மின்னின் சித்திரத்தை வரைந்திருக்கிறார். நாட்டுக்கே அருமைத் தந்தையாக விளங்கும் ஹோ சி மின்னிடம் தெற்கு வியட்நாம் மக்களுக்கு எவ்வளவு அன்பு உண்டு என்பதை உயிரோவியமாக இதில் காண்கிறோம்:

அருமைத் தந்தையே,

இரண்டு ஆண்டுகளாகத் தங்களையே நம்பி, தங்கள் ஆணைக்குக் கீழ்ப்படிந்து தேசீயப் பாதுகாப்புப் படையின் 7-ஆம் பிரிவில் சேர்ந்து கலைத் தொண்டு ஆற்றி வருகிறேன். தாங்கள் தலைமை தாங்கி நடத்திய ஆகஸ்ட் புரட்சி என் கலைக்கும் விடுதலை அளித்தது. இன்று நாம்போவில் (தெற்கு வியட்நாம்) சுதந்தர தினத்தைச் சிறப்பாகக் கொண்



மூலம்: டெமாக்ரடிக் ரிப்பப்ளிக் அவ் வியட்நாம் (ஆங்கிலம்: பிப்ரவரி '58), புது டில்லி.

டாடும் இந்த நேரத்தில், உணர்ச்சியும் வலிமையும் ஊட்டும் தங்கள் வேண்டுகோளையும், தென் வியட்நாம் முன்னணி வீரர்கள், 'நீடூழி வாழ்க ஹோ சி மின்' என்று பாடுவதையும் கேட்டு உருகினேன்; கதறியழுதேன். அப்போது என் விரலை வெட்டிக் கொண்டு அதிலிருந்து இளமை பொங்கும் என் ரத்தத்தை எடுத்து, ஜூலை 1947-இல் நடந்த கே கியாங் போரில் எதிரிகள் விட்டுச் சென்ற ஒரு பட்டுத் துண்டில் தங்கள் படத்தை வரைந்திருக்கிறேன். இதில் வியட்நாம் வடக்கு, தெற்கு, மத்தியப் பகுதிகளைக் குறிப்பிடும் மூன்று இளஞ் சகோதரர்கள் தங்களுடைய தாடியின்கீழ் அண்டியிருப்பதைக் காணலாம்.

என் விரலிலிருந்து ரத்தம் வழிந்தோடுவதைக் கண்டு அருகில் இருந்தவர்கள் எல்லாரும் திகிலுற்றுக் கவலைப்பட்டார்கள். ஆனால் நான் சொல்வது இதுதான்:

'என் ரத்தம் தாங்கள் கொடுத்ததே; அது மக்களின் ரத்தம். அதை நான் வீணாக்குவதா? என் உயிரும் உடலும் தங்களுக்கே அர்ப்பணம். முதிய தந்தையே! என் கலை விடுதலை பெற்றதற்கு நன்றியறிதலாகவும், என் உயிரும் உடலும் வெற்றியடைந்ததையும், மக்களின் புரட்சி இயக்கம் எதிர்த்துச் சமாளிக்கும் சக்தி பெற்றிருப்பதையும் நிரூபிப்பதற்காகவும் இதோ என் ரத்தத்தில் தோய்த்து வரைந்த இந்தச் சித்திரத்தைத் தங்களுக்குக் காணிக்கையாக அளிக்கிறேன்.'

## என்ன சூப்?

"இந்தாப்பா, இது என்ன சூப்? எலுமிச்சம் பழமா, தக்காளியா?"

"சுவைத்துப் பார்த்தீர்களே, ஸார்; தெரியவில்லையா?"

"இல்லை."

"அப்படியானால், அது எதுவாயிருந்தால் உங்களுக்கென்ன?"

—'ஆஸ்திரேலியன் ஜர்னல்.'

## முன்னேற்றம்

கழுத்தை வெளியே நீட்டாத வரையில் ஆமை முன்னேறுவதில்லை. இதை ஞாபகம் வையுங்கள்.

—'வொர்ல்ட் டைஜெஸ்ட்'

## அபிப்பிராய பேதம்

என் மனைவிக்கும் எனக்கும் அடிக்கடி அபிப்பிராய பேதம் ஏற்படும். ஆனால், அதை நான் அவளுக்குச் சொல்வதில்லை.

—'ஹெட்லைன்ஸ்'

## அறிஞன் யார்?

சொந்த அநுபவத்தால் அறிவு பெறுகிறவன் அறிஞன். 'அடுத்த வீட்டுக்காரா, பாம்பைப் பிடி பார்ப்போம்' என்கிறவன் இன்னும் பெரிய அறிஞன்.

—ஜே. பில்லிங்ஸ்

புலி வாயிலிருந்து மீண்டவர் அனுபவம்:

# மரணத்தைச் சந்தித்தேன்

**சி. பி. கருணாகர மேனோன்**

நீங்கள் நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி; இதோ சொல்வது உண்மையில் நடந்த ஒரு நிகழ்ச்சி.

1917-இல் கோடைக்காலம். அப்போது சென்னை ஸால்ட் ஆப்காரி அண்டு கஸ்டம்ஸ் டிபார்ட்மெண்டில் நான் ஓர் ஆபீசராக இருந்தேன். கோயமுத்தூர் ஜில்லாவைச் சேர்ந்த கொள்ளேகாலம் தாலூகாவில் சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டிருந்தேன். ஒருநாள் என் முகாமிலிருந்து இருபத்தொரு கல் தூரத்தில் இருந்த ஒரு குக்கிராமத்தில் கள்ளுக்கடை ஒன்றைச் சோதிப்பதற்காகப் போய்க்கொண்டிருந்தேன். போகும் வழி முழுவதும் நெருக்கமான காடுகளும் பெரிய பெரிய பாறைகளும் நிறைந்திருந்தன. ஆகவே, எந்த வண்டியும் போவதற்கு வசதியில்லை. முழுவதும் கால்நடையாகத்தான் போக வேண்டியிருந்தது.

அந்தப் பெருங் காட்டுக்குள் இதற்குமுன் மூன்று நான்கு தடவை நடந்த பழக்கம் எனக்கு இருந்தது. வழியில் ஓர் அடி மட்டுந்தான் வைப்பதற்கு இடம் இருந்தது. இருபுறமும் யாத்திரிகரை மூடிப் புதைத்து வைக்கும் காடுகள்! ஆயுதம் தாங்கிய ஏழுபேர் எனக்கு மெய்காப்பாளராகப் பின்னால் வந்தார்கள். ஐந்து குண்டுகளைக் கெட்டித்து வைத்த ஒரு ரிவால்வர் என் இடைவாரில் தொங்கிக்கொண்டிருந்தது. 'ப்ரீச் லோடர்' என்ற குண்டு நிறைத்த மற்றும் ஒரு துப்பாக்கி முதுகில் தொங்கிக்கொண்டிருந்தது. அந்தக் காலத்தில் இந்தமாதிரி ஆபீஸர் அணியும் உடுப்புடன்தான் நான் புறப்படுவேன், தலையில் ஹாட், உடம்பில் காக்கிச் சட்டை, இடையில் காக்கி ட்ரவுஸர், கணைக்கால் முதல் முழங்கால் வரையில் கனமான ரப்பர் உறை, காலில் பூட்ஸ் இவற்றைத் தவிர உடலைக் காப்பதற்கு எனக்கு வேறு என்ன வேண்டும்?



இருபத்தொரு கல் நடந்து சென்று கள்ளுக்கடையைப் பரிசோதித்துவிட்டு முகாம் நோக்கித் திரும்பி வந்துகொண்டிருந்தேன். மாலையில் சுமார் ஐந்து மணி இருக்கும். இன்னும் முகாமுக்கு ஏழு கல் செல்லவேண்டியிருந்தது. பெரும்பாலும் வறண்டு கிடக்கும் ஒரு சிறு நீர் ஓடையின் கரையை அடைந்தேன். அழகாக வளைந்து நெளிந்து செல்லும் அந்த ஓடையின் அழகைக் கண்டு மகிழ்ந்துகொண்டே மெதுவாகக் கீழே இறங்கினேன். ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தேன். என் மெய்காவலர் என்னை விட்டு அகன்று சற்றுப் பின்னால் வருகிறார்கள் என்பதைக்கூட நான் உணரவில்லை.

எந்தவிதமான சந்தேகமோ பயமோ இல்லாமல் யோசனையில் ஆழ்ந்தபடி மெதுவாக ஓடையில் இறங்கினேன். அவ்வளவுதான்; என் முன்னே தவிட்டு நிறமான

காப்பிரைட்: மாத்ருபூமி (மலையாளம், 26-1-'58), கோழிக்கோடு.

ஒரு 'பொருள்' இருப்பதைக் கண்டேன். மூன்றடி தூரத்தில் என் முன்னே இருந்த அந்தப் பொருள் பாறைதானோ என்று சந்தேகப் பட்டேன். பாறையாக இருப்பதற்கில்லை என்று திடீரென்று தோன்றியது. கண்ணைத் துடைத்துக்கொண்டு கவனித்துப் பார்த்த போது, நான் நடுங்கிவிட்டேன். அந்தத் தவிட்டு நிறப் பாறைக்கு ஒரு புறம் தலையும், மறு புறம் நீண்ட வாலும், நடுவே இரண்டு மூன்று அங்குல நீளமுள்ள கருங்கோடுகளும் தென்பட்டன. பதுங்கியிருக்கும் மரணத்தை நினைவூட்டும் பயங்கரப் புலியே அது!

இந்த எண்ணம் என் மனத்தில் தோன்றியதும், உணர்வற்றுப் போனேன். வயிறு புடைக்கத் தின்றுவிட்டு ஒரு புறம் சாய்ந்து கவலையற்றுத் தூங்கிக்கொண்டிருந்தது அந்தப் பிராணி. ஒரு நொடியில் அது விழித்துக்கொண்டது. நான் நிற்பதை அறிந்துகொண்டது. சாய்ந்தபடியே கண்களைத் திறந்து என்னைப் பார்த்தது. தலையை மட்டும் தூக்கிக்கொண்டு என் பக்கம் திரும்பியது. சிறிதும் பதற்றம் இல்லாமல் முன்னங்கால்களை உயர்த்தி என் பூட்ஸின் நுனியில் வைத்தது. பிறகு நிதானமாக வாயை நன்றாகத் திறந்தது. நாக்கை வெளியே நீட்டியது. கண்களை என் மேல் பதித்தது.

இடது கையை உயர்த்தித் துப்பாக்கியை எடுக்க முயன்றேன். ஆனால் கை உயரவில்லை. கை மட்டுமல்ல; உடம்பு முழுவதுமே அசையவில்லை. நகம் முதல் தலைவரையில் உடல் தளர்ந்துவிட்டது. என் வாழ்க்கை முடிவுற்றது என்று தீர்மானித்தேன். மெய்காவலரில் எவராவது அருகில் வந்திருக்கிறாரோ என்று திரும்பிப் பார்த்தேன்; எவரும் இல்லை. என் கண்கள் மூடின. தாய் தந்தையரிடம் மனத்தால் விடை பெற்றேன். ஏதாவது கஷ்டம் வந்தால், பகவதியைத் தியானம் செய்வது இளமையிலிருந்து என் வழக்கம். 'சித்தூர்ப் பகவதியே' என்று வாய்விட்டு மெதுவாகத் தளர்ந்த குரலில் நான் கூப்பிட்டது எனக்கு நினைவு இருக்கிறது.

எவ்வளவு நேரந்தான் நினைவு இல்லாமல் இருந்தேனோ, எனக்குத் தெரியாது. பத்தோ பதினைந்தோ நிமிஷ நேரம் சென்றிருக்கலாம். கண்ணைத் திறந்தேன். அப்போது நான் ஓடைக் கரையில்தான் இருந்தேன். துப்பாக்கி என் மடியில் கிடந்தது. முதலில் படுத்திருந்த இடத்தில்தான் புலி இன்னமும் இருந்தது. என்னைப் பார்த்து அது சிரிப்பது போல் தோன்றியது. நான் திரும்பிப் பார்த்தேன். என் மெய்காவலர் வருவதைக் கண்டேன். அவர்களைக் கூவி அழைத்தேன். புலியைப் பார்த்தவுடன் அவர்கள், "புலி! புலி!" என்று கத்தினார்கள். ஆனால் அந்தப் புலி தான் படுத்திருந்த இடத்தை விட்டுச் சிறிதும் நகரவில்லை. கூட்டத்தில் இருந்த ஒருவன் ஒரு கல்லை எடுத்து அதன்மேல் குறி வைத்து எறிந்தான். கல் அதன் தலையிலேயே பட்டது. அப்போதும் அது அசையவில்லை. இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு பதற்றம் இல்லாமல் கம்பீரமாக மெதுவாகப் புலி எழுந்தது. எங்களைத் திரும்பி ஒரு பார்வை பார்த்தது. ஒருமுறை உரக்க உறுமியது. நாங்கள் போக வேண்டிய வழியிலேயே அதுவும் மெல்ல மெல்ல நடந்தது.

அளவு கடந்த பயத்துடன் முகாமுக்கு வந்தோம். பிறகு துப்பாக்கியை என் ஆட்களிடம் கொடுத்தேன். நினைவிழந்து கீழே விழுந்தேன். மூன்று நாட்களுக்கு அப்புறந்தான் சுயநினைவு வந்தது.

கூரிய நகங்கள் என் பூட்ஸ்களில் பாய்ந்திருந்தன. அப்போது, 'தொட்டாற்போல் முன்புறம் நின்றபோதும் ஏன் புலி என்னை ஒன்றும் செய்யவில்லை?', 'புலியின் நகங்கள் என் பூட்ஸ்களின் நுனியில் பதிந்தபோதுதான் நான் நினைவிழந்தேன்; பிறகு நான் எப்படி ஓடையின் கரைக்கு வந்தேன்?' என்ற கேள்விகள் என் உள்ளத்தில் எழுந்தன. இன்றளவும் இந்த இரண்டு கேள்விகளுக்கும் என்னால் பதில் காண முடியவில்லை.

# அற்புதப் பெண்

**வான் வைக் ப்ருக்ஸ்**

பிறந்த சில மாதங்களிலே இவள் - ஹெலன் கெல்லர் - குருடும் செவிடும் ஊமையுமானாள். இந்த நிலையில் கல்லூரிப் படிப்பு வரையில் படித்துத் தேறினாள். உலகத்துப் பெரியோர்களை யெல்லாம் சந்தித்தாள்; எத்தனையோ நாடுகளில் சுற்றி, உலகத்து ஊமை, குருடர், செவிடர்களுக்கெல்லாம், பணி புரிந்து வருகிறாள். மகாத்மாவிடமும் நேருவிடமும் இவளுக்குப் பெரு மதிப்பு. இந்தியாவிடம் அலாதி அன்பு. சுய சரிதமும் வேறு பல நூல்களும் இவள் எழுதியிருக்கிறாள். இவளுடைய சுய சரிதம் 1902-ஆம் ஆண்டுடன் முடிகிறது. அதன் சுருக்கத்தைச் சென்ற அக்டோபர் 'மஞ்சரி'யில் வெளியிட்டோம். இவளுடைய முழு வரலாற்று விவரங்களை இன்று வரைக்கும் திரட்டி எழுதியிருக்கிறார் இந்த ஆசிரியர். அதைப் படிக்கும்போது, இந்தப் பெண்ணின் சாதனைகள் நம்மைப் பிரமிக்கச் செய்கின்றன. 'அற்புதப் பெண்' என்ற தலைப்புடன் தமிழில் வெளிவந்துள்ள புஸ்தகத்திலிருந்து ஒரு பகுதியை இங்கே தந்திருக்கிறோம்.

**1908**-இல் 'நான் வாழும் உலகம்' என்ற நூலை ஹெலன் எழுதினாள். ஸ்பர்ச உணர்ச்சியாலும் அதற்கு அடுத்த படியாக மோப்பம், சுவை இந்த உணர்ச்சிகளாலுமே அவளுடைய உலகம் பெரும்பாலும் உருவாகியிருந்தது. இதை அவள் வர்ணித்திருக்கிறாள். இந்தப் புஸ்தகத்திலும் 'இருளுக்கு வெளியே' என்ற புஸ்தகத்திலும் கையைப் பற்றி அவள் மிக விரிவாக எழுதியிருக்கிறாள். கண்ணும் காதும் மற்றவருக்கு எப்படி உபயோகப்படுகின்றனவோ அப்படி யெல்லாம் கை அவளுக்கு உபயோகப்பட்டது. தன்னைச் சந்தித்தவர்களின் முகபாவங்களையும் கை ஜாடைகளையும் தன் கையைக் கொண்டே ஞான திருஷ்டி பெற்றவளைப் போல் அவள் கண்டு கொண்டாள். எவர் குரலையும் அவள் கேட்டதே யில்லை. அப்படியிருந்தும், பேசுவோரின் தொண்டையிலே இரண்டு மூன்று இடங்களை விரல்களால் தொட்டுப் பார்ப்பாள்; வெட்டி வெட்டிப் பேசும் வட அமெரிக்கரா, இழுத்து இழுத்துப் பேசும் தென் அமெரிக்கரா என்று இதிலிருந்து கண்டு பிடித்து விடுவாள். மற்றவருடைய முக ஜாடைகளைக் கொண்டு நாம் அறிவதைவிட அதிகமாகவே, அவர்களுடைய கைகளைக் கொண்டு அவர்களின் குணதிசய ரகஸ்யங்களை அவள்

காப்பிரைட்: அற்புதப் பெண் (தமிழ்ப் புஸ்தகம்). மொழிபெயர்த்தவர்: தி. ஜ. ர. வெளியிட்டோர்: உமாதேவன் கம்பெனி, சென்னை - 18. விலை: ரூ. 1-50.

அறிந்துகொள்வாள். ஒரு பிஷப்பின் குஷியான கை, ஒரு விகட கவியின் உணர்ச்சியற்ற மந்தமான 'ஈயக்'கை, வீண் ஜம்பம் பேசும் ஒருவனின் கோழைக் கை, அமைதியும் கூச்சமும் கொண்ட ஒருவனுடைய அழுத்தமான இரும்புக் கை, பல வெண்ணெய் வெட்டிச் சிப்பாய்களின் கை இவற்றை யெல்லாம் தொட்டுப்பார்த்தே அவள் சொல்லி விட்டாள். தீண்டின வுடனே கொன்று விடுமோ என்று எண்ணத் தோன்றிய சில கைகளை அவள் குலுக்கியிருக்கிறாள். 'துர்க்குறிக் கைகள்' என்று அவற்றை அவள் வர்ணிக்கிறாள். சிலருடைய கைகள் மிருதுவாய் வழவழப்பாக உருண்டு திரண் டிருந்தன. உழைத்தே அறியாத செல்வரின் கைகள் இவை. வளர்ந்து பக்குவப்படாத ஒரு குழப்பந்தான் இவற்றிலே தென்பட்டது. சிலருடைய விரல் நுனிகளைத் தொடுவதற்கு முன்னே அவை பின்வாங்கிவிடும். இவர்கள் மிகவும் மரியாதையுள்ள கனவான்கள் என்று அவள் உணர்ந்துகொண்டாள். ஃபிலிப்ஸ் ப்ருக்ஸ் என்பவரின் பெரிய கைகளை அவளுக்கு ஞாபகம் இருக்கிறது. 'கருணை ததும்பிய கைகள்; பலவானின் ஆனந்தம் நிறைந்தவை' என்று அவற்றை அவள் குறிப்பிடுகிறாள். மார்க் ட்வேனின் கைகள் க்ஷணச் சித்தமும் க்ஷணப் பித்தமுமான போக்கைக் காட்டுமாம்; குறும்புத்தனம் நிறைந்திருக்குமாம். அவற்றைப் பிடித்து விட்டாலோ, அநுதாபமும் ஆதரவும் காட்டத் தொடங்கிவிடுமாம்.

நிச்சப்தமான இருளிலே ஹெலன் வாழ்ந்தாள். ஆயினும், தன் சொந்தக் கையைக் கொண்டே அழகையும் வலிமையையும் பலவீனத்தையும் விநோதத்தையும் அவள் உணர்ந்து கொள்ள முடிந்தது. அவள் கையே அவளுடைய உலகத்தை மற்றவருடைய உலகத்தோடு ஒட்ட வைத்தது. 'கை' என்ற சொல்லிலேதான் எவ்வளவு சரித்திரம் அடங்கி யிருக்கிறது!—இதைத் தன் புஸ்தகங்களிலே ஆராய்வதில் அவளுக்கு ஓர் ஆவல். கை நூற்கிறது; நெய்கிறது; உழுகிறது; அறுக்கிறது; களிமண்ணைச் சுவராக எழுப்பி விடுகிறது; காட்டு மரங்களைக் கூரையாக ஏற்றி விடுகிறது. கைக்குறிப்பு, கைத்தொழில், கையாளுதல், கைவேலைப்பாடு, கைவிடல், கைவிலங்கு இப்படி எத்தனை விஷயங்களில் கை இணைகிறது! பைபிளிலே சகல விஷயங்களும் கடவுளின் திருக்கரத்தாலோ மோஸஸின் கையாலோதான் நடக்கின்றன; ஆசியும் சாபமும் அடியும் திருமணமும் அழிவும் ஆலய ஆக்கமும் பலிபீட அமைப்பும் மண்ணுலக உருவும் தெய்வத் திருக்கரத்தின் காரியமே. நீராவி எஞ்சினின் விசைப் பிடியைப் பிடித்திருக்கும் டிரைவரின் கையை நம்பி அதனிடம் தங்கள் உயிரை யெல்லாம் ஒப்படைத்து விட்டுத் தினந்தோறும் எத்தனை எத்தனை மக்கள் பிரயாணம் செய்கிறார்கள்! - இதைப்பற்றி ஹெலன் சிந்தித்தாள். ''கை என்ற சொல்லின் பொருள் என் அகராதியிலே எட்டுப் பக்கங்களை நிறைத்திருக்கிறது'' என்று அவள் சொன்னாள். இதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. கையைப்பற்றி நாம் ஆராய்ந்து பார்த்தோமானால், நமக்கே தெரியும். மனிதனின் உண்மையான சித்திரத்தையும் மனிதனின் வளர்ச்சி வரலாற்றையும் அதிலே நாம் காண்போம்.

இதெல்லாம் போகட்டும். அவளுடைய கை, 'காணும் கை'. அது அவளுக்குக் கண்ணாகவும் காதாகவும் உதவியது. அதன் மூலமே தன் நண்பர்களைக் கண்டு கொண்டாள். அது மட்டும் அல்ல; அவர்கள் சந்தோஷமாயிருக்கிறார்களா, வருத்தமாயிருக்கிறார்களா என்பதையும் அறிந்து கொண்டாள். மலர்களைத் தொடுவாள்; 'இந்த லிலாக் பூக்கள் எவ்வளவு எழிலாயிருக்கின்றன!' என்பாள். அதன் நரம்போட்ட வேற்றுமையைக் கொண்டே அது ஊதா நிற லிலாக்கா வேறு நிறமா என்று உணர்ந்து விடுவாள். ரோஜாவிலே வெள்ளை எது, சிவப்பு

எது என்றும் பான்ஸி மலரிலே ஊதா எது, வெள்ளை எது என்றும் பிரித்துச் சொல்லி விடுவாள். இந்த இரண்டு வகையிலும் வர்ண மலர்களைவிட வெள்ளை மலர்களின் இதழ்கள் மெலிந்திருப்பது அவளுக்குத் தெரியும்.

இங்கே இன்னொரு விஷயம். ஒரு சமயம் அவளே எழுதினாள்: ''என் உடம்பில் உள்ள ஒவ்வோர் அணுவும் ஒரு வைப்ராஸ்கோப் (அதிர்ச்சி உணரும் கருவி).'' இதற்கு ஒரு ருசுவே போல, அவளுடைய கை மாதிரியே காலும் ஒலிகளை அறிந்தது. ஓர் ஆர்க்கிஸ்ட்ரா கோஷ்டி வாசித்துக் கொண்டிருந்தால், தரையிலே வரும் அந்தச் சங்கீத அலை அதிர்ச்சிகளைப் பாதத்தால் அவள் உணர்ந்து கொள்வாள்; அதன் தாள கதிக்கு இசைய நாட்டியமும் ஆடிவிடுவாள். இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பிறகு, ஆஸ்பத்திரியில் குருட்டு ஸோல்ஜர்களுடன் சேர்ந்து இப்படித்தான் அவள் நாட்டியம் ஆடினாள். ஆனால் சில சமயம் வாய்ப்பாட்டுக் குரலுக்கும் வயலின் இசை ஒலிக்கும் வித்தியாசம் தெரியாமல் அவள் மயங்குவதுண்டு. ஆயினும் இசைக்கும் வாத்தியம் ஒன்றா பலவா என்று சொல்லிவிடுவாள். ரேடியோவில் சங்கீதக் கச்சேரி நிகழும்போது, அதன் மரப் பெட்டியை விரல்களால் தொட்டுப் பார்ப்பாள். ஓபோ, பியானோ, ஹார்ப் இந்த ஒவ்வொரு வாத்தியத்தின் தனி இசையையும் இவை எல்லாம் சேர்த்து வாசிக்கும் பேரிசையையும் அதிர்ச்சி மூலமே வேறு பிரித்துக் கண்டு விடுவாள். கூர்ந்து கேட்பாளானால், பீதோவன் என்ற ஜெர்மன் சாகித்திய மேதையின் 'ஸிம்ஃபனி' என்ற ஸ்வர கீதங்களில் ஒன்றை மட்டும் அவள் கண்டுபிடித்து விடுவாள். அவருடைய பிற கீதங்கள் அவ்வளவு நிச்சயமாகத் தனக்குத் தெரிவதில்லை என்று அவள் சொல்லுகிறாள். தேவாலயங்களில் முழங்கும் வாத்திய இசை அவளைக் கப்பலை மோதும் கடலலைகளைப் போல் தாக்குமாம். 'ஜாஸ்' என்ற கோலாகல சங்கீதத்தை மட்டும் அவளால் சகிக்க முடிவதில்லை. அதன் அதிர்ச்சி கைப்படும்போது அவளுக்கு இங்கிதமாயிருப்பதில்லை. அப்போது ஏதோ ஒரு மூர்க்க விலங்கு எதிரே வந்து தன்னை விழுங்க வாய் பிளந்து நிற்பது போல்தான் அவளுக்குத் தோன்றுமாம்; தப்பி ஓடிவிட வேண்டும் போல் ஒரு கிலியும் உண்டாகுமாம். இதை அவளே ஒரு பேட்டியில் சொல்லியிருக்கிறாள். இன்னமும் பேச வழி தெரியாமல் காட்டிலே தவிக்கும் வாயில்லா விலங்குகள் போடும் கூச்சலின் நிழல் உருவங்களே, 'ஜாஸ்' இசைக்கும்போது அவள் நினைவில் எழுந்தன.

இவ்வளவுதானா? மிருகக் காட்சிச் சாலைக்கு ஹெலன் செல்வாள். அங்கே மிருகங்களின் கூண்டுக் கம்பிகளைத் தொட்டுப் பார்ப்பாள். கூண்டுக்குள்ளே இருக்கும் மிருகங்களின் குரலை இதிலிருந்தே இன்னதென்று கண்டுபிடித்துச் சொல்லிவிடுவாள். வரிப்புலியிலிருந்து சிறுத்தையையும் நரியிலிருந்து ஓநாயையும் வேறு பிரித்துக் காண்பாள். நீரின் சலசலப்பையும், குளித்த குருவியின் சிறகடிப்பையும், அண்டை அயல் மர இலைகளின் அசைவையும், வண்டின் ரீங்காரத்தையும் அவள் கண்டு கொள்வாள். குதிரை கனைத்தாலும் நாய் குரைத்தாலும் குறித்து விடுவாள். மனிதர் நடக்கும் அடியோசை அதிர்ச்சியைக் கொண்டே அவருடைய குணதிசயத்தை உணர்ந்து விடுவாள். ஓட்டலின் சாப்பாட்டுக் கூடத்தில் உட்கார்ந்து கொள்வாள். தன்னைக் கடந்து செல்வோரின் காலடி அதிர்ச்சியைத் தரையிலே உணர்வாள். அவர்களுடைய பல வகை மனநிலைகளையும் - உறுதி, சஞ்சலம், சோர்வு, கோபம், தாபம் இவற்றையெல்லாம் - சொல்லி விடுவாள்; அவர்கள் சுறுசுறுப்பாயிருக்கிறார்களா, அசட்டையாய் நடக்கிறார்களா, நிதானமாய்ச் செல்கிறார்களா, ஆத்திரப்படுகிறார்களா என்றெல்லாம் கவனித்து விடுவாள். கருமான் அடிமேல்

அடி அடிக்கும் சம்மட்டி அடியை, அதில் எழும் ஒலியைக் கொண்டு அறிவாள்; அவன் வாளைச் சாய்த்து மேலும் கீழும் அறுப்பதை, அதன் பல் கரகரக்கும் ஒலியைக் கொண்டு புரிந்து கொள்வாள்.

இப்படி மெய் உணர்ச்சி மட்டும் அல்ல; சுவை உணர்ச்சியும் அவளுக்கு ஆக்கம் கொடுத்தது. இரண்டும் சேர்ந்து, 'உயிர் துடித்த ஆரோக்கியம் வாய்ந்த திருப்தியான' ஓர் உலகத்தைப் படைத்துத் தந்தன. மோப்பப் புலனை 'அது தனக்கு ஒரு காலத்தில் இருந்த உன்னத ஸ்தானத்தை இழந்துவிட்ட துர்ப்பாக்கியசாலி' என்று அவளே ஒரு தடவை வர்ணித்திருக்கிறாள். பச்சைச் செடி கொடிகள் உள்ள தோட்டத்துக்குள்ளே நுழைந்தவுடனே அவள் முகம் மலரும். மணத்தை மோந்தே பல மலர்களின் பெயரைச் சொல்லிவிடுவாள்; சிலவற்றின் பெயரைத் தொட்டுப் பார்த்துச் சொல்வாள். ஒரு சமயம் ''இது கிளிப்பூண்டு'' (பாரட்ப்ளாண்ட்) என்று அவள் கூச்சலிட்டாள். தோட்டத்தின் சொந்தக்காரருக்கு இது ஆச்சரியமாய்ப் போய்விட்டது. ஏனென்றால், அவருக்கே இந்தச் செடியின் பெயர் தெரியாது. வேறு மணங்களையும் செடிகள் அவளுக்கு வீசின. சந்தனக் கட்டையும் தேவதாருவும் போல் கட்டைகளும் லவங்கப்பட்டை போல் பட்டைகளும் விதைகளும் இலைகளும் கிழங்குகளும் விதம் விதமாக அவளுக்கு மணம் வீசின. சுவையூட்டும் புலன்களுக்குள்ளே மூக்குத்தான் மிக முக்கியமானது என்று அவள் கருதினாள். பால் ஸாக் என்ற பிரெஞ்சுக் கதாசிரியர் பாரிஸ் நகரில் தம் வீட்டுப் பரண்மீது உட்கார்ந்து எழுதிக் கொண்டே யிருப்பாராம். அப்போது வீசிய வாசனைகளுக்கெல்லாம் ஒவ்வோர் அர்த்தம் செய்து கொண்டாராம். இதைக் கேட்க ஹெலனுக்கு வேடிக்கையாயிருந்தது. பின் வருஷங்களில் அவளே பாரிஸ் நகருக்குச் சென்றாள். அந்த நகருக்கென்று பிரத்தியேகமான ஒரு வாசனை வீசியதாம். அதில் ஸெண்ட், வாசனைப் பவுடர், ஒயின், புகையிலை இந்த நான்கின் மணமும் கலந்திருந்தனவாம். நகரத் தெருக்களில் கார்களின் புகை, பழக்கடைகள், பார வண்டிக் குதிரைகள் இவற்றிலிருந்தெல்லாம் எழும் மணம் அவளுக்கு ஆனந்தம் அளித்தது. 'சதா மாறிக்கொண்டே யிருக்கும் ஜனத்திரளை'க் கொண்ட பஸ்கள், குறுக்குச் சந்துக்கள் இவற்றிலெல்லாம் இந்த மணம் காரணமாக அவளுக்கு ஆர்வம் விழுந்தது. அந்த ஜனத்திரளோடு அவள் கலந்து உறவாடினாள். இதனால் பல மக்கள் அவளுக்குப் பரிசயமானார்கள். ஸோப், பட்டு, கையுறை இவற்றில் புதிய நறுமணங்களை அவள் உணர்வாள். பிறருடைய உடைகளில் ஒட்டிய வர்ணம், அவர்களின் காரியாலயத்து வாசனை இவற்றைக் கொண்டு, அவர்களுடைய வேலையின் இயல்பை அவள் சொல்லிவிடுவாள். தன் சகோதர மக்களிடமிருந்து வெளியாகும் இந்த நெருங்கிய தகவல்களை யெல்லாம் அறிவதென்றால் அவளுக்கு ஓர் ஆசை.

நாட்டின் நடுவே ஹெலன் எப்போது பிரயாணம் செய்தாலும் சரிதான்; எண்ணெய்க் கிணறுகளை ரெயில் வண்டி நெருங்குவதை அறிந்துகொள்வாள். ஸெயிண்ட் லூயி, டுலூத் இந்த இரண்டு நகரங்களிலும் தொழிற்சாலைகளில் காய்ச்சும் பீர் வாசனையைப் பல மைல் தூரத்துக்கு அப்பால் வரும் போதே அவள் உணர்ந்துவிடுவாள். பியோரியா நகரில் காய்ச்சும் விஸ்கி அடுப்புப் புகை வாசனையை, அந்த நகருக்கு வெகு தூரத்தில் செல்லும்போதே அறிந்துவிடுவாள். தேவாலயத்துக்குப் பக்கத்திலே நடக்கும்போது, 'இது கத்தோலிக்கத் தேவாலயமா, ப்ராடெஸ்டண்ட் தேவாலயமா' என்று கண்டு பிடித்துவிடுவாள். ஸலாமி என்ற கறி, உள்ளிப்பூண்டு இந்த இரண்டின் மணத்தையும் கொண்டே ஒரு சமயம் 'இது இத்தாலியர் வாழும் இடம்'

என்று அவள் கண்டு பிடித்துவிட்டாள். தான் ஒரு நகரத்தின் எந்தப் பகுதியில் இருக்கிறாள் என்பதை மணங்களைக் கொண்டே சகஜமாகச் சொல்லிவிடுவாள். ''தத்துவதர்சனங்கள் எத்தனை விதம் உண்டோ அத்தனை வித வாசனைகளும் உண்டு'' என்பது அவள் வாக்கு. 'நியூ யார்க் நகரில் ஐந்தாம் அவென்யூ என்ற தெரு மணம் நிரம்பியது' என்று அவள் கூறினாள். விலை மதிப்புள்ள ஸெண்ட், வாசனைப் பவுடர், க்ரீம், அருமையான மலர்கள், இனிய உண்டிகள் இவையெல்லாம் அங்குள்ள வீடுகளிலிருந்து அவளுக்கு வாசனை வீசின. ஒரு வீட்டுக் கதவைத் திறந்தால் போதும்; உள்ளே என்ன வாசனைப் பொருள்களை உபயோகிக்கிறார்கள், அங்கே காபிக் கொட்டை வறுப்பதுண்டா, மெழுகுத் திரி எரிப்பதுண்டா என்றெல்லாம் அவள் கண்டுபிடித்து விடுவாள். வீட்டைப் புதிதாக அலங்கரித் திருக்கிறார்களா? அந்தக் குடும்பத்தார் மிருதுவான நிலக்கரியை எரிக்கிறார்களா, விறகை எரிக்கிறார்களா? - இவை யெல்லாம் அவளுக்குத் தெரிந்துவிடும். பின் நாளில் லண்டன் நகருக்குச் சென்றபோது, புதுமணம் வீசும் ரொட்டியையும் ஒயின் கடைகளையும் தெருவிலே போகும் பஸ்களையும் வாசனை மூலமே அவள் கண்டு பிடித்து விட்டாள். ஒரு பார்க்கில் நுழையும்போதே, பசும் புல்லின் நறுமணத்தையும் இலைகள் எரியும் வாசனையையும் கொண்டே அதை அறிந்துவிடுவாள்.

அவளுக்குக் கற்பனு சக்தி மட்டும் இராதிருந்தால், அவளுடைய உலகம் அற்பமாகத்தான் இருந்திருக்கும். இதை அவளே ஒரு முறை கூறியிருக்கிறாள். அவளுக்குக் கற்பனு சக்தி இருக்கிறது. இதனால், சம்மட்டியும் ரம்பமும் வேறு பல ஆயுதமும் இல்லாமலே தன் மனத்தில் ஒரு கோயிலை அவள் கட்டி விட்டாள். எருசேலம் நகரில் ஸாலமன் மன்னன் கட்டிய பெருங் கோபுரம் போல் அது எழுந்து நின்றது. ஒரு கல்லுக்கு மேல் மறு கல்லாக அவளுடைய கற்பனு சக்தி அடுக்கிக் கொண்டே போய் அந்தக் கோபுரத்தை உருவாக்கிவிட்டது.

''வெறும் பதுமையா யிருந்த அவள், கிரேக்க புராணத்தில் வரும் காலட்டீ என்ற சிலையைப் போல உயிர் பெற்றுவிட்டாள்'' என்று ஒரு பிரெஞ்சு எழுத்தாளர் கூறினார். இதிலிருந்து அவருக்கு ஒரு பெரிய சந்தேகம் ஏற்பட்டு விட்டது. ''மனிதன் அடையக் கூடிய வளர்ச்சிக்கும் ஓர் எல்லையுண்டா? எதிர்த்து நிற்கும் இயற்கையை எவ்வளவு தூரந்தான் தன் சித்த உறுதியால் அவன் வெல்ல முடியுமோ?'' என்று அவள் முன்னிலையில் அவர் தம்மைத் தாமே கேட்டுக்கொண்டார். அவர் எழுதியிருப்பது இது: ''பைபிள் புஸ்தகத்தின் ஆதியாகமந்தான் இங்கே எனக்கு ஞாபகம் வருகிறது. சூன்யத்திலிருந்தே எல்லாம் உருவானதாக - ஆம்னியா எக்ஸ் நிஹிலோ என்று - அதில் சொல்லி யிருக்கிறது. நாம் அடையக் கூடிய வளர்ச்சிக்கு எல்லையே இல்லை. ஏனென்றால், இவள் மனிதருக்குள்ளே ஒரு சூன்யமா யிருந்தாள்; அப்படிப் பட்டவள் இவ்வளவு ஏராளமான அறிவும் உணர்ச்சியும் ஜீவனும் பெற்று விட்டாளே!''

ஹெலனுக்கே ஒரு நம்பிக்கை உண்டு; 'இழுத்த இழுப்புக்கெல்லாம் வரக்கூடிய மெழுகைப் போன்ற ஒரு சக்தி மனிதர்களுக்கு உண்டு; அவர்களுடைய ஆற்றல்களின் எல்லையை இதுவரைக்கும் கண்டவ ரில்லை' என்று அவள் நம்பினாள். இதில் என்ன ஆச்சரியம்! அவள் எழுதினாள்: ''சிந்தனையாளர்களுக் கெல்லாம் நாம் ஒரு சவால் விடுப்போம்: மனித இயல்பில் புதைந்து கிடக்கும் மூல ஆற்றல்களைக் கண்டுபிடியுங்கள்; வருங் காலத்தில் அதைக் கொண்டு என்ன விந்தைகளை யெல்லாம் சாதிக்க முடியும் என்று காட்டுங்கள்!''




# பக்தியிலே ஆறு விதம்

**சுவாமி ராம்தாஸ்**

பக்தி இலக்கியத்தில் ஆறு வகையான பக்தியைப்பற்றிய வர்ணனைகள் காண்கின்றன.

இறைவனை ஆண்டவனாக எண்ணி, அவனுடைய உருவத்தை வழிபடும்போது உள்ளத்தில் அன்பு உணர்ச்சியும் ஆனந்த அநுபவமும் ஏற்படுகின்றன. திருமாலிடம் அம்பரீஷன் கொண்ட பக்தி இந்த வகையைச் சார்ந்தது. இதற்குச் சாந்த பக்தி என்று பெயர்.



இரண்டாவது வகை, தாஸ்ய பக்தி என்பது. அநுமன் தன் எசமானனான ராமனுக்கு வாழ்நாள் முழுவதும் தொண்டாற்றி அதில் இன்பம் கண்டவன். இத்தகைய தொண்டே ஆனந்தமாம்.

கடவுளைத் தோழனாகக் கொள்ளும் ஸக்கிய பக்தி என்பது மூன்றாவது வகை. கண்ணனிடம் அர்ஜுனன் பழகியதுபோல, இத்தகைய பக்தன் இறைவனைத் தனக்குச் சமமாக மதித்து அவனோடு பேசிப் பழகுகிறான். இந்த உறவு கொண்ட பக்தன் இறைவனோடு அமர்ந்து உண்பான்; பேசுவான்; நடப்பான்.




நான்காவது, வாத்ஸல்ய பக்தி. யசோதை கண்ணனைப் பாராட்டியதுபோல, கடவுளைக் குழந்தையாகக் கொண்டாடும் வகை இது. இத்தகைய பக்தன் இறைவனுக்கு உணவூட்டி, அழகுபடுத்தி, அன்னையைப்போலக் கவனித்துக் கொள்வான்.


ஐந்தாவது வகை, மதுர பக்தி என்பது. பக்தனும் கடவுளும்

மூலம்: பவன்ஸ் ஜர்னல் (ஆங்கிலம்: 26-1-'58), பம்பாய்-7.


பகவானிடமே ஒருவன் பிரேமை முழுவதையும் செலுத்துவதைப் பக்தியோகம் என்பார்கள். கர்ம, பக்தி, ஞான, ராஜ யோகங்களிலே பக்தி யோகமே மிகச் சுலபமானது. தாய், தந்தை, சகோதரர், தாரம் இவரிடமெல்லாம் அன்பு செலுத்துவது யாருக்கும் இயல்பு. அன்பு செய்ய யாரும் கற்கத் தேவையில்லை. எனவே தான் பக்தியோகம் எளிதாயிருக்கிறது. ஐரோப்பாவில் ஜெனிவா நகரில் சுவாமி செய்த ஒரு பிரசங்கத்தை ஆதாரமாக கொண்டது இந்தக் கட்டுரை.



இனிமையும் அன்பும் கொண்டு ஒருமை பாராட்டி, ஆனந்த அநுபவத்துக்காக மட்டும் தம்மை வெவ்வேருகக் கலந்து பழகும் முறை இது. பேதத்தில் அபேதமும், அபேதத்தில் பேதமும் இங்கு உண்டு. ராதைக்கும் கண்ணனுக்குமுள்ள உறவு இது. இதைப் பிரேம பக்தி என்றும் கூறுவர்.



கோபியரின் பக்தியான ஸகி பக்தி என்பது, கடைசியான ஆருவது வகையாம். பக்தியின் உன்னதமான நிலை இது. நீண்ட பிரிவுக்குப் பின்பு கோபியரின் முயற்சியினால் ராதையும் கண்ணனும் கூடும்போது, கோபியர் தம்மையே ராதையாகவும் கண்ணனாகவும் பாவித்து, அழகிய இணையைக் கண்ட மாத்திரத்தில் பேரின்பம் எய்தினார்கள்; ராதை கண்ட இன்பத்தையும் கண்ணன் கண்ட இன்பத்தையும் அவர்கள் ஒருங்கே அடைந்தார்கள். ஆன்மாவை உயர்நிலைக்குக் கொண்டு செல்லும் உன்னதமான பக்தியின் வகை இது.



நடையிலே பலவிதம்; தலை கீழாய் நடப்பதுகூட ஓர் உடற்பயிற்சியே!

# எப்படி நடப்பது?

**எம். எம். பாம்பரா**

ஒருவகை உடற்பயிற்சியோ ஒரே உடற்பயிற்சியோதான் சிறந்தது என்று சொல்வதற்கில்லை. நடப்பது உடலுக்கு ஆரோக்கிய மூட்டச் சிறந்த வழி. இருந்தாலும், நடப்பவர்கள் எல்லாருமே அதனால் முழுப்பயனும் அடைந்துவிட முடியாது. எப்படி நடப்பது என்று தெரிந்திருக்க வேண்டும். விநோதத்திலும் விநோதம் என்னவென்றால், பிராணிகளில் மனிதன் ஒருவன்தான் சரியானபடி நடக்கவோ, நிற்கவோ, உட்காரவோ, மூச்சு விடவோ பழகிக்கொள்ளவில்லை.

நடப்பது என்றால், இடைவிடாமல் மாறி மாறிப் பாதம் தரையில் பதிவதுதான். இதற்கு மாறாக, ஓடும்போது சில கணநேரம் தரையோடு பாதம் பதியாமல் இருக்க நேருகிறது. சரியானபடி நடக்கும்போது முன் நோக்கி வைக்கும் பாதம் முதலில் தரையில் ஊன்றுகிறது. பிறகு பின்னங்கால் பாதத்திலிருந்து முன்னங்கால் பாதத்தின் மேல் உடலின் பாரம் அழுந்துகிறது. அப்போது ஒரு பாதம் முழுவதும் தரையில் பதிந்து நிற்கிறது. கடைசியில் பின்னங்கால் பாதம் தரையை விட்டு எழும்பும்போது முன்னங்கால் பிந்திக்கொள்கிறது. இப்படித்தான் நடை பழகுகிறோம். ஓடும்போது கால்விரல் நுனியும் முன் பாதமுமே தரையில் பதிகின்றன. குதிகால் எப்போதும் தரையில் படாமல் இருக்கிறது.


நடப்பதென்றால் மெல்ல மெல்ல உடம்பை இழுத்துத் தள்ளிக்கொண்டு போவதோ, ஓர் இடத்திலேயே வட்டமிட்டுக்கொண்டிருப்பதோ, ராஜநடை போடுவதோ, விளையாட்டுத்தனமாக நடந்து செல்வதோ அல்ல. சற்று நேரம் மூச்சு விடாமல் இருப்பதாலும் ஆரோக்கிய மூட்டும் ஒருவிதச் சோர்வு காரணமாகவும் உடலுக்கு நன்மை விளைகிறது; ஆகவே, நடப்பதற்காகவே நடை பழக வேண்டும்; சற்று விரைவாகவும் நடக்க வேண்டும். ஒவ்வோர் அடி வைக்கும்போதும், அது வலிவோடு இருக்க வேண்டும். ஆழ்ந்தும் நிதானமாகவும் மூச்சு விடவேண்டும். தோள் சற்றுப் பின்னுக்குச் சாய்ந்தாற்போல் தலை நிமிர்ந்து நடக்க வேண்டும்; யாரோடாவது சேர்ந்து உலாவும்போது பேசாமல் நடந்து செல்ல வேண்டும். பேசினால் நடைப்பயிற்சியில் ஊக்கம் செலுத்த முடியாது; இதனால் நடந்தும் பலன் இல்லாமல் போய்விடும்.

உடற்பயிற்சிக் கழகங்களில் செய்யும் பயிற்சி வகைகளோடு - யோகாசனங்களோ, கருவிகளைக் கொண்டு செய்யும் உடற்பயிற்சியோ, பிற உடற்பயிற்சியோ எதுவாக இருந்தாலும் அதோடுகூட - நடை பழகுவது, ஓடுவது, விளையாடுவது இப்படி ஏதாவது ஒன்று சேர்ந்திருப்பதுதான் பொருத்தம்; ஆனால் அப்படி இராததுதான் அதிசயமாக இருக்கிறது! கோல்ஃப் என்ற பந்தாட்டத்தைத் தொடங்கியதற்குக் காரணம், உடற்பயிற்சி என்று தெரிவிக்காமல் 'பெரிய மனிதர்' கோஷ்டியை நெடுந்தூரம் நடக்க வைப்பதுதான்!

ஜார்ஜ் கம்மிங், ஜார்ஜ் ப்ரௌன், எட்வர்டு பெர்ரி வெஸ்டன் ஆகியோர் வேறு நாடுகளில் செய்ததுபோல், விநோபா பாவேயும் அவருடைய உயர்ந்த லட்சியங்களைக் கடைப்பிடிப்பவர்களும் 'பாத யாத்திரை' செய்து நடை


மூலம்: தி லைஃப் நாச்சுரல் (ஆங்கிலம்: பிப்ரவரி '58),
கணேஷ் நகர், புதுக்கோட்டை.

பழகுவதால் என்ன நன்மைகள் ஏற்படும் என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் ஒன்று: விநோபா போன்றவர்கள் நடப்பதால் ஆரோக்கியம் ஏற்படும் என்பதைவிட எளிய வாழ்வும் உயர்ந்த சிந்தனையுமே முக்கியம் என்பதை அதிகமாக வலியுறுத்துகிறார்கள். எட்வர்டு பெர்ரி 85 ஆண்டுகள் வாழ்ந்தவர்; இவர் தம் வாழ் நாளில் லட்சக்கணக்கான மைல் நடந்திருக்கிறாராம். 70-ஆம் வயசில் ஜேம்ஸ் ஹாக்கிங் 14 மணி நேரத்தில் 60 மைல் நடந்தார் என்றால் பாருங்கள்! நடைப் போட்டியில் கலந்துகொள்பவர்களும், தமாஷுக்கு நடப்பவர்களும் நோய்நொடி வராமல் பொதுவாக வெகுநாள் வாழ்கிறார்கள்.



சலிப்பு ஏற்படாதிருக்க வேண்டிச் சகஜமாக நடந்து செல்லும் முறையைத் தவிர, வெவ்வேறு விதமாகவும் நடை பழகலாம். ஆரோக்கியத்தோடு இருக்கும் வாலிபர்கள் மாறி மாறி நடந்தும் ஓடியும் பழகலாம். அதாவது, சற்று நேரம் நடக்க வேண்டும்; சற்று நேரம் ஓடவேண்டும்; மறுபடி அதேமாதிரி குறிப்பிட்ட நேரம் அல்லது தூரத்துக்கு மாறி மாறிச் செய்ய வேண்டும். நோய் நொடியுற்றவர்களும் பலவீனமானவர்களும் இந்த மாதிரி நடையும் ஓட்டமும் பழகுவது அரு மருந்து போல் குணம் தரும். கார் பின்னுக்கு நகருவது போல், தமாஷுக்காகப் பின்நோக்கி நடக்கலாம். நாலுகால் பிராணிகளைப் போல், அதாவது கைகளைத் தரையில் ஊன்றி நடக்கலாம். சில பேர் தலைகீழாக இருந்துகொண்டு எப்படியோ சமாளித்துக் கையாலேயே நடக்கிறார்கள். இது உடற்பயிற்சித் திறமையைக் காட்டும்; இதற்கு மிகுந்த பொறுமையும் பழக்கமும் தேவை. இதனால் உடலின் கீழ்ப் பாகத்தைவிடக் கைக்கு வலிமை மிகுதியாகும். இப்படிப் பழகி இதில் தேர்ந்துவிட்டால் படிகளில் கூடத் தலைகீழாக ஏறி இறங்கலாம்.





கையிலிருந்து கால் விஷயத்துக்கு வருவோம். நடை பழகுவது துடைக்கும் ஆடுசதைக்கும் மட்டுந்

தான் பயிற்சி என்று எண்ண வேண்டாம்; அடிவயிற்றுத் தசைகளுக்கு இது உணர்வு ஊட்டி அவற்றை இயங்க வைக்கிறது; முதுகுப்புறத்தின் அடிப்பாகத்துக்கும் இது பயிற்சி அளிக்கிறது; அதே சமயம், ஆழ்ந்து மூச்சை இழுத்துவிடுவது விலாப்பகுதி இயங்க வழி செய்யும். சைக்கிளிலேயே போய்ப் பழகியவர்கள் நடக்க வேண்டியது அவசியமாகும். நடக்கும் சமயம் கைகளும் சேர்ந்து அசைவதுபோல், சைக்கிளில் போகும்போது கைக்கு வேலை இல்லை; ஆகவே, மார்புப் பகுதியில் அசைவே இல்லை. மோட்டார், டிராம், எலெக்டிரிக் டிரெயின் ஓட்டுபவர்களின் நிலையும் இதே மாதிரிதான். மலச்சிக்கல், அது சம்பந்தமான நோய்கள், உடல் பருத்துப் போவது, குடல் அநுபந்தம் எல்லாவற்றுக்கும் சரியான மாற்று நடப்பதுதான்.

வெறுங்காலோடு நடப்பதுதான் நல்லது. பாதை கல்லும் கரடுமாக இருந்து அப்படி அவசியம் காலில் ஏதாவது போட்டுக்கொண்டுதான் நடக்க வேண்டும் என்றால் தளர்த்தியாய் முன்பாகம் அகன்ற செருப்பையே போட்டுக்கொள்ள வேண்டும். பசும்புல் தரை, மேய்ச்சல் நிலம் முதலிய இடங்களில் நடப்பது நல்லது. புல்லுக்கும் நம் காலுக்கும் என்ன சம்பந்தமோ யாருக்கும் தெரியாது "புல்மேலோ ஈர மண்மேலோ வெறுங்காலுடன் நடக்கும்போது ஒருவிதக் காந்த சக்தி நம் உடலில் பாய்கிறது" என்பது பெர்னர் மக்ஃபட்டன் கருத்து. அது உண்மையோ இல்லையோ, மேய்ச்சல் நிலத்தில் வெறுங்காலுடன் நடந்தால் நரம்புகளுக்கு நல்லது; கண்ணுக்கும் நல்லதே. உச்சி வெயிலில் நடப்பதைவிட அன்றாடம் விடியற்காலையிலும் அந்தி வேளையிலும் நடப்பது நல்லது. கடும் வெயிலில் நடப்பதென்றால் சிரமம்; அதோடு பாரியும் வெயிலில் நெடுந்தூரம் நடந்தால், உடம்புக்குத் தீங்குதான் நேரும்.

சமயம் அறிந்து உலாவி வந்தால், உடம்புககு ஒரு கெடுதலும் நேராது. இருதய நோய், வாதம், ஜீர்ணப் பையில் கோளாறு காரணமாக ஏற்படும் ரணம்-இப்படி எதுவாக இருந்தாலும், நடப்பது எளிது; மொத்தத்தில் அது எல்லாருக்கும் பயன் அளிக்கும் நல்ல உடற்பயிற்சி. எல்லாரும் நடந்து பழகுவோம், வாருங்கள்!

## லட்சுமி தேவியின் விரதம்

லட்சுமிதேவிக்குச் சுயம்வரம் நடந்தது. தேவர், அசுரர் எல்லாரும் பேராவலுடன் வந்திருந்தார்கள். லட்சுமி தேவி, தான் ஏற்றிருந்த விரதத்தை முதலில் வெளியிடவில்லை. அவள் சுயவர மண்டபத்தில் வந்து, "என்னிடம் விருப்பம் இல்லாதவருக்கே மாலை சூட்டுவேன்" என்றாள். அவர்கள் எல்லாருந்தான் ஆசை பிடித்தவர்களாயிற்றே! ஆகவே, லட்சுமி தேவி ஆசையற்ற வரனைத் தேடத் தொடங்கினாள். இதற்குள் சேஷநாகத்தின்மீது அமைதியாய்ப் பள்ளிகொண்டிருக்கும் விஷ்ணுபகவானின உருவம் அவள் கண்முன் தோன்றிற்று. அவருடைய கழுத்தில் மாலையை அணிவித்துவிட்டு இன்று வரைக்கும் அவருக்குப் பாதசேவை புரிந்தபடியே வீற்றிருக்கிறாள்.

தன்னை விரும்பாதவருக்கே செல்வம் அடிமை ஆகிறது என்பதை இது காட்டுகிறது.

—விநோபா, 'கீதைப் பேருரைகள்.'

# என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

**வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்றமட்டும் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிறார். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்த பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர் நோயுள்ளவரின் தனித்தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர, வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது**

**டி. டி. ராஜ், கோவை.**

கேள்வி: என் வயசு 16. கல்லூரியில் படிக்கிறேன். சென்ற ஆண்டு கை ஒடிந்ததால், அதிலிருந்து விளையாடுவதில்லை. ஆனால் நாள்தோறும் படிக்கிறேன். இதன் காரணமாகவோ என்னவோ, என் தலை நாளுக்கு நாள் பெரிதாகிக் கொண்டே வந்தது. பத்தொன்பது வயசான வாலிபனின் தலைபோல் ஆகிவிட்டது. ஆனால் உடம்பு மட்டும் 16 அல்லது 17 வயசுக்காரனின் உடம்பு போலவே இருக்கிறது. என் அம்மாவோ, "நீ இளைத்துப் போய்விட்டாய்; அதிகமாய்ச் சாப்பிட வேண்டும்' என்று சண்டை பிடிக்கிறாள். அதிகமாய்ச் சாப்பிட்டால், என் தலைதான் இன்னும் பெரிதாகிவிடும் போல் இருக்கிறது. இதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?

விடை: தலைக்குக் கர்வம் ஏறிக் கனத்திருப்பதாய்க் கேலி செய்வதுண்டு. பிறக்கும்போது தலை பருத்திருந்தால் மூளை குறைவு என்றும், பிறந்த பிறகு தலை பருத்து வந்தால் மூளை அதிகம் என்றும் சொல்வதுண்டு. நண்பர் ராஜுவுக்குப் பிறந்த பிறகுதான் தலை பருத்து வருகிறது. இது மூளை வளர்வதன் குறியென்று சொல்லலாம். இதற்கு அச்சப்பட வேண்டாம்.



பெற்ற தாய்க்குப் பிள்ளை இளைத்துப் போவதாக எப்போதுமே தோன்றும். அதிகமாய்ச் சாப்பிடத்தான் சொல்லுவாள். ஆனால் அப்படி அதிகமாய்ச் சாப்பிட்டால், தலை பருககாது; உடம்புதான் பருக்கும்.

தலைக்குக் கர்வம் ஏறாமல் மட்டும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**ஏ. பி. கே.**

கே: என் தம்பிக்குப் பல்லில் அதிகக் கறை பிடித்திருக்கிறது. பல் துலக்குவதற்கு எந்தப் பல்பொடி ஏற்றது? இரவில் எச்சிலிலிருந்து ரத்தம் கசிகிறது. இதைத் தடுத்து நிறுத்த வழி உண்டா

வி: தம்பி சிறுபையன் என்று நினைக்கிறேன். பல்லில் கறை சேர்வதற்குக் காரணம், நன்றாயத்

தேய்க்காதது அல்ல; பல்லுக்கு வலிமை கொடுக்கும் சத்துக்கள் உடம்பில் இல்லாததே. இதே காரணத்தால் ஈற்றிலிருந்து ரத்தம் சுரந்து சாளைவாய் நீரில் கலந்து வழிகிறது. வி - வைட்டமின் குறை, கால்சியம் குறை இரண்டும் இதற்குக் காரணமாயிருக்கும். பச்சைக் காய்கறிகளை உணவோடு சேர்க்க வேண்டும். உணவுக்குப் பிறகு மீனெண்ணெயும் சாப்பிட வேண்டும். பாலும் அதிகமாய்ச் சேர்க்கலாம்.

**கே. எஸ். நாராயணன், தஞ்சை.**


**கே:** இடது விதையில் வீக்கம் இருக்கிறது. இதை ஹைட்ரசீல் என்கிறார்கள். இதற்கு ஆப்பரேஷன் தான் செய்துகொள்ள வேண்டுமா? ஆப்பரேஷன் ஆன பிறகு எவ்வளவு நாள் தாம்பத்திய உறவு இல்லாமல் இருக்கவேண்டும்?

**வி:** ஹைட்ரசீல் நோய்க்கு ஆப்பரேஷன்தான் தக்க பரிகாரம். புண் நன்றாய் ஆறிய பிறகு தாம்பத்திய உறவு கொள்ளலாம்.

**வே. சு. பாலசுப்பிரமணியன், கோவை.**

**கே:** சந்தன எண்ணெயைத் தினசரி பாலில் 2 சொட்டுக் கலந்து சாப்பிடுவதால் உடலுக்கு ஏதாவது நன்மை உண்டா?

**வி:** அதன் வாசனையால் இன்ப



மான உணர்ச்சி உண்டாகும். வேறு விதத்தில் குணம் இருப்பதாக நான் அறியேன்.

**கே. பழனி, வேலானந்தல்.**

**கே:** என் வயசு 20. எடை 120 பவுண்டு. நான் சாதாரண உடல் கட்டு உடையவன்தான். ஆனால் என் கண்கள் எப்போதும் குழி விழுந்திருக்கின்றன. பத்து நாள் பட்டினி கிடந்தவன்போல் தோற்றம் அளிக்கிறேன். பார்ப்பவரெல்லாம் கேலி செய்கிறார்கள். காலையில் தூங்கி எழுந்தவுடன், சுமாராக இருக்கிறது. 10 மணிக்கு மேலேயும் ஏதாவது வேலை செய்துகொண்டேயிருக்கும்போதும் அதிகமாகிவிடுகிறது. இப்படி இருக்கக் காரணம் என்ன? பரிகாரம் என்ன?

**வி:** இயற்கையாகக் கண்களை அபாயத்திலிருந்து காப்பதற்காகவே கண்களுக்கு எலும்புக் குகைகள் அமைந்திருக்கின்றன. நண்பர்விஷயத்தில் இந்தக் குகைகள் சற்று அதிக ஆழமாகிவிட்டன. இது ஒரு நன்மையென்றே கருதிக் கொள்ளலாம். கேட்கிறவர்களுக்குப் பதில் சொல்லி முடியாது போனால், பவரில்லாத கண்ணாடி போட்டுக் கண்களை மறைத்துக் கொள்ளலாம். ஆனால் இது நல்லதல்ல; அபாயத்துக்கு ஏதுவாகும்.

**வீரமணி, சிதம்பரம்.**

**கே:** ஊறுகாயை எவ்வளவு பத்திரமாகக் காத்து வந்தாலும் அதில் புழு தோன்றுவதேன்? உயிருள்ள பொருள் அந்த உயிரில்லாப் பொருளிலிருந்து எப்படித் தோன்றுகிறது?

**வி:** ஆராய்ச்சியில் தீவிரமாகப் புகுந்து, 'ஜடப் பொருளிலிருந்து உயிரினம் தோன்றாது; உயிரினத்திலிருந்தே உயிரினம் தோன்றும்' என்று நிரூபித்துக் காட்டியவர் லூயி பாஸ்டூர். சென்ற இருநூறு ஆண்டுகளாக இது அசைவற்ற உண்மையாகவே இருந்து வருகிறது.

ஊறுகாயில் தோன்றிய புழுக்கள் கொசுக்களுடைய குஞ்சுகளே. ஊறுகாய் மூடியைத் திறந்த சமயம் பார்த்துக் கொசுக்கள் முட்டையிட்டுச் செல்லும். முட்டைகள் நுண்ணியவை. கண்ணுக்கு எளிதில் புலனாவதில்லை. முட்டைகள் பொரிந்து புழுக்களாகின்றன. மேலும், நேரம் கிடைத்தால்,

அவை கொசுவாகவே மாறிப் பறந்து போகும். ஊறுகாய்ப் பரணியை இரவில் திறக்கக்கூடாது. இரவு நேரத்தில்தான் கொசுக்கள் வந்து ஆடிப் பாடி முட்டையிடும்.

இதேபோல்தான், சிரங்கு, காயம் போன்றவற்றை நன்றாகக் காத்துக்கொள்ளாமல் போனால், தூசி பறந்து விழும்போது அதோடு அணுக்கிருமி விதைகளும் விழுந்து சீழ்ச் சன்னியை எழுப்பும்.

**எஸ். கிருஷ்ணன், சிதம்பரம்.**


**கே:** வயசு 17. எடை 96 பவுண்டு. உயரம் 5 அடி 2 அங்குலம். மிகவும் ஒல்லியாயிருக்கிறேன். கன்னம் கிழடுபோல் ஒட்டியிருக்கிறது. சதை வைக்க வேண்டும். தினம் உடற்பயிற்சி செய்கிறேன். நன்றாகச் சாப்பிடுகிறேன். இருந்தும் பருக்கவில்லை. வழி என்ன?

**வி:** இந்த வயசில் பெரும்பாலான ஆண்பிள்ளைகள் ஒல்லியாயிருப்பார்கள். சில பிள்ளைகள் (மிகச் சிலரே) மிகவும் பருமனாயிருப்பார்கள். இது இயற்கையின் செயல். இதை மாற்றிக்கொள்ள முயல்வது வீண். ஆண்களுக்கு இந்த வயசில் வேலை செய்யும் திறமைதான் வேண்டும். ஒல்லியாயிருந்தும் தேகப்பயிற்சி செய்துகொண்டுதான் இருப்பார்கள். நன்றாய்ச் சாப்பிடவும் வேண்டும். நாம் லட்சணமாயிருக்கிறோமா இல்லையா என்று நிர்ணயிப்பவர் பிறரே; நாம் அல்ல.

**ஜி கிருஷ்ணன், சிதம்பரம்.**

**கே:** நான் மிகவும் கறுப்பாக இருக்கிறேன். வயசு 17. உயர்ந்த விலையுள்ள பவுடர், சோப்பு முதலியவற்றை உபயோகிக்கிறேன்; பயனில்லை. ஏதாவது ஓரளவு வெளுப்பதற்கு வழிகள் கூற வேண்டும். மிக மிகத் தாழ்மையுடன் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்.

**வி:** நான் மிக மிக அநுதாபத்துடன் சொல்லுகிறேன்: அன்பர் தேடும் பரிகாரம் கடவுளால்தான் தரச் சாத்தியம். ஆனால் ஒரு சமாதானம் மட்டும்




நான் சொல்லலாம். கிருஷ்ண பகவான் நீலமேக சியாமளர். உலகம் முழுதும் அவரை மகிழ்ந்து கொண்டாடியது என்று புராணங்கள் கூறுகின்றன. இன்றும் நம் மக்களில் பெரும்பாலோர் கிருஷ்ண பகவானுடைய நாமத்தைச் சொல்லியே உள்ளம் குளிர்கிறார்கள். நீயும் உலகம் புகழும்படி நடந்துகொள்ளலாம். இந்த நிறம் அதற்குக் குறுக்கே நில்லாது.

**என். நவநீதம், திருவல்லிக்கேணி.**

**கே:** வயசு 30. மாதவிடாய் சரிவர வருகிறது. சிற்றுண்டியோ, சாப்பாடோ உட்கொண்டவுடன் மேல் வயிற்றில் உப்புசம் உண்டாகிறது; மூச்சு வாங்குகிறது. தவிர, விருந்தினரிடம் மரியாதைக்காக நின்று பேசினாலும் நாழிகையாகிவிட்டதே என்று ஓடியாடிச் சமையலில் ஈடுபட்டாலும், கருப்பையில் வலி எடுக்கிறது. சிகிச்சை என்ன?

**வி:** குழந்தைகள் எத்தனை? கருப்பை தவிரப் பிற உறுப்புக்களின் நிலை என்ன? இவற்றை ஆராய வேண்டும். வைத்தியரை நேரில் கண்டு உடம்பை முழுதும் பரிசீலனை செய்துகொள்வது அவசியம்.

**வி. எஸ். சங்கரன், கோவை.**

**கே:** தினம் இருபது தடவை சிறுநீர் கழிக்கிறேன். தண்ணீர், காபி, மோர் எது சாப்பிட்டாலும் அரைமணி நேரமான பிறகு சிறுநீர் 2 அல்லது 3 தடவை கழிக்கிறேன்; ஒவ்வொரு தடவையும் நிறையக் கழிக்கிறேன். சிறுநீரில் சர்க்கரையும் இல்லை; வேறு எந்தவிதக் குற்ற

மும் இல்லை. ஆயினும், என் ஆரோக்கியம் குலைந்து போகிறது. ஆனால் நன்றாய்ச் சாப்பிடுகிறேன். வயசு 26 நாற்பது வயசாகும் போது இது நீரிழிவு நோயாக மாறிவிடும் என்கிறார்கள். இது உண்மையா?

**வி**: நண்பர் இரவில் நன்றாய்த் தூங்குகிறாரா? தினம் கழியும் நீர் எத்தனை அவுன்சு? எடை குறைந்து கொண்டு வருகிறதா? - இவற்றை யெல்லாம் ஆராய வேண்டும். இவற்றை ஆராயாது, நண்பருக்குத் தோன்றியிருப்பது நோயா, நோய் இல்லையா என்று சொல்ல இயலாது.

**இராமநெல்லியான், இராமநாதபுரம்.**

**கே-1**: 23 வயசு. 5 அடி 5½ அங்குல உயரம். மார்பளவு 32 அங்குலம். நான் எத்தனை பவுண்டு நிறை இருக்கவேண்டும்?

**வி**: 120 முதல் 130 பவுண்டு வரைக்கும் இருக்கலாம்.

**கே-2**: பயில்வான்களுக்கும், யோகாசனப் பயிற்சியை விடாமல் செய்கிறவர்களுக்கும் ஆயுள் குறைவென்று என் நண்பர் ஒருவர் கூறுகிறார். சரியா? நான் இதை நம்பவில்லை.

**வி**: பயில்வான்களின் இதயம் பருத்திருக்கும் மிதமிஞ்சி உணவுண்டு, மிதமிஞ்சித் தேகப்பயிற்சி செய்வதால் இவர்களுடைய நிறை சராசரி அளவுக்குமேல் மிக அதிகமாயிருக்கும். சுமார் 40 வயசு வரைக்கும் இவர்கள் பயில்வான்களாக இருந்த பிறகு தேகப் பயிற்சி குறையும்; ஆனால் ஊட்டம் குறையாது இந்த நிலையில் இதயம் தளரலாம்; வேறு உறுப்புக்களும் தளரலாம். இதனால் இவர்களுடைய ஆயுள் காலம் குறைந்துவிடுகிறது. யோகாசனம் செய்பவர்கள் ஆயுள் முழுவதும் ஆசனங்களை மிதமாகவே செய்துகொண்டிருக்கலாம். இதனால் ஆயுளுக்குக் குறை ஏற்படாது.

**திருநாவுக்கரசு, திருச்செந்தூர்.**

**கே**: என் கன்னம் ஒட்டிப்போய் அழகைப் பாதிக்கிறது. வயசு 22. இதை மாற்ற என்ன வழி?

**வி**: எடை, உயரம் இரண்டும் வயசுக்குத் தக்கபடி இருந்தால், நண்பரின் கன்னம் ஒட்டியிருப்பதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். அழகுக் குறையைத் தீர்க்கத் தினம் உழக்குப் பாலாவது சாப்பிட்டால், கன்னம் நிறையலாம். பாலை ஒரு நாள் சாப்பிட்டுவிட்டு உடனே கண்ணாடியில் பார்த்துக்கொண்டால் பயனில்லை. இரண்டு மூன்று மாதமாவது சாப்பிடவேண்டும்.

**ராஜலட்சுமி, பழனி.**

**கே**: என் ஐந்து வயசு மகனின் வயிற்றில் கிருமிப் பூச்சி இருக்கிறது. அதனால் இளைத்திருக்கிறான். சிறுநீர் அதிகமாகவே கழிக்கிறான்: இரவில் படுக்கையில், அறியாமல் சிறுநீர் கழித்து விடுகிறான். ஒரு வயசில் கட்டி நோய் ஏற்பட்டுக் குணமாகிவிட்டது.

**வி**: இந்தக் குழந்தை ஒரு வயசிலிருந்தே ஆரோக்கியமாயில்லை. கட்டி நோய் என்று நினைத்தது கணை நோயாக இருந்திருக்கவேண்டும் இதனாலேயே இன்னமும் மெலிந்தவனாயிருக்கிறான்; சிறுநீர் அதிகம் கழிக்கிறான்; இரவில் படுக்கையை நனைக்கிறான். பூச்சிக்கு மருந்து கொடுத்தபிறகு, டி வைட்டமின் நிறைந்த எண்ணெய் வாங்கிக் கொடுக்கலாம். இரவில் தூங்கிய பிறகு ஒரு தரம் அல்லது இரண்டு தரம் எழுப்பிச் சிறுநீர் கழிக்கச் செய்யவேண்டும். பிறகு சரியான பழக்கம் ஏற்பட்டுவிடும்.

## ஆயிரம் பவுன்

ஆயிரம் பவுனில் ஒரே ஒரு காசை எடுத்து விடு; இனி அது ஆயிரம் பவுனாக இராது.

—இங்கிலீஷ் பழமொழி


கேட்டதெல்லாம் விரைவில் கொடுக்கும்
திறமை வாய்ந்த இலாக்கா.

# ரெயில்வேயின் களஞ்சியம்

**ஒப்ரேல்**

ரெயில்வே பிரயாணி ஒரு பிளாட்பாரத்தில் உட்கார்ந்து, வண்டிக்காகக் காத்திருக்கிறார். அவர் உட்கார்ந்திருப்பது ஒரு சிமெண்ட் பெஞ்சி; அல்லது இரும்புச் சட்டத்தின்மீது மழமழப்பான மரப்பலகை போட்ட பெஞ்சியாயும் இருக்கலாம். அவருடைய தலைக்குமேல் வளைவு வளைவான இரும்புத் தகடு அல்லது ஆஸ்பெஸ்டோஸ் துண்டு தைத்த கொட்டகை கவிந்திருக்கிறது. இரும்புத் தூண்கள் அதைத் தாங்கிக்கொண்டிருக்கின்றன. எண்ணற்ற திருகாணிகள், நட்டுகள், ரிவெட்டுகள் இவையெல்லாம் அந்தக் கொட்டகை முழுவதையும் இறுக்கிப் பிணைத்திருக்கின்றன. இதோ பத்துப் பன்னிரண்டு கோச்சுகளை இழுத்துக்கொண்டு மகா சக்தி வாய்ந்த எஞ்சின் ஒன்று பிளாட்பாரத்துக்குள் வந்துவிட்டது.

பிரயாணி ஒரு பெட்டியிலே ஏறி உட்காருகிறார். அவர் மட்டும் சற்றுக் கவனித்தால், அந்தப் பெட்டிக்குள்ளே எத்தனையோ இணைப்புக்கள் நடந்தேறியிருப்பதைக் காண்பார். இத்தனை சாமான்கள், இணைப்புக்கள், பகுதிகள், திருகாணிகள், ஆணிகள், இரும்பு எல்லாம் சம்பந்தப்பட்ட ரெயில்வேயின் ஸ்டோர்ஸ் டிப்போக்களுள் ஒன்றிலிருந்தே வந்தவை. ரெயில்வேக்கு ஸ்டோர்ஸ் டிபார்ட்மெண்ட் என்று பிரம்மாண்டமான ஓர் இலாக்கா இருக்கிறது. அந்த இலாக்காவின் ஒரு பகுதியாகும் இந்த டிப்போக்கள். ரெயில்வே ஒழுங்காய் நடப்பதற்குத் தேவையான பண்டங்களையெல்லாம் ஸப்ளை செய்வது இந்த இலாக்காவின் பொறுப்பு.



இந்த இலாக்காவின் தலைமை நிர்வாகிக்குக் கண்ட்ரோலர் அவ் ஸ்டோர்ஸ் என்று பெயர். ரெயில்வேயின் தலைமைக் காரியாலயத்தில் இருந்துகொண்டு அவர் செயலாற்றுவார். அவருக்குக் கீழே டெபுடி கண்ட்ரோலர் ஒருவரோ பலரோ இருப்பார்கள். ஸீனியர் ஜூனியர் ஸ்டோர்ஸ் அதிகாரிகள், மேற்பார்வை பார்க்கும் உத்தியோகஸ்தர்கள், கிளார்க்குகள் இவரெல்லாம் பலர் இருப்பார்கள். ரெயில்வேயின் பல இடங்களில் ஸ்டோர்ஸ் டிப்போக்கள் இருக்கும். ஒவ்வொரு டிப்போவுக்கும் டிஸ்டிரிக்ட் கண்ட்ரோலர் ஒருவர் இருப்பார். அவருக்குக் கீழேயும் உதவி அதிகாரிகளும் கிளார்க்குகளும் தேவையான பேர் இருப்பார்கள்.

ரெயில்வேக்கு என்ன சாமான்களும் பண்டங்களும் வேண்டும் என்பதை மிகத் திறமையாகவும் சிக்கனமாகவும் விரைவாகவும் அறிந்துகொள்ளவேண்டும்; அவற்றை வரவழைத்துச் சரி பார்த்துப் பல டிப்போவுக்கும் அனுப்ப வேண்டும்;

*மூலம்: ஸவுத்ரெயில் ந்யூஸ் (ஆங்கிலம்: செப்டம்பர் '57), சென்னை-1.*

டிப்போவில் இருக்கும்போது அவற்றைப் பத்திரமாய்ப் பாதுகாக்க வேண்டும்; ரெயில்வேயின் வெவ்வேறு இலாக்காவும் தேவை என்று கேட்டுக்கொண்டதும் அதற்கு அவற்றை அனுப்பவேண்டும். பொதுவாக இவையெல்லாந்தான் கண்ட்ரோலர் அவ் ஸ்டோர்ஸ் கடமை.

'இவ்வளவுதானே! இது சுலபமாச்சே' என்றுதான் தோன்றும். ஆனால், ஸ்டோர்ஸ் டிபார்ட்மெண்ட் கோடு என்ற சட்டப் புத்தகத்தைப் பார்த்தால் தெரியும், இது எவ்வளவு சிக்கலான, முக்கியமான வேலை என்பது. அந்தப் புத்தகத்தில் 30 அத்தியாயங்கள் இருக்கின்றன! 500 பக்கங்கள் இருக்கின்றன!

ரெயில்வேயில் வெவ்வேறு இடங்களில் டிப்போக்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்கள் இவை: (1) எஞ்சின் வொர்க்ஷாப்புக்கு அருகே லோகொமொடிவ் ஸ்டோர்ஸ் டிப்போ இருக்கும்; (2) காரியேஜ், வாகன் வொர்க்ஷாப் அருகே காரியேஜ், வாகன் ஸ்டோர்ஸ் டிப்போ இருக்கும்; (3) ஸிக்னல் ஷாப் அருகே ஸிக்னல் ஸ்டோர்ஸ் இருக்கும்; (4) பாதைக்கு வேண்டிய தண்டவாளம் முதலிய சாமான்களைப் பெர்மனன்ட் வே மெட்டீரியல் டிப்போ ஒன்றிலோ பலவற்றிலோ வைத்திருப்பார்கள்; (5) எஞ்சினீரிங் ஸ்டோர்ஸ் போக மீதிச் சாமான்களை ஜெனரல் ஸ்டோர்ஸ் டிப்போ அல்லது டிப்போக்களில் வைத்திருப்பார்கள்; (6) ஓட்டை உடைசலாய்ப் போன பழைய சாமான்களை (ஸ்க்ராப்) டிப்போக்கள் அல்லது யார்டுகளில் வைத்திருப்பார்கள். அந்தப் பழைய சாமான்களை விற்பதற்குச் சிறந்த மார்க்கெட் உள்ள இடங்களிலேயே இந்தக் கடைசி டிப்போக்கள் அல்லது யார்டுகளை அமைத்திருப்பார்கள்.

தலைமைக் காரியாலயத்தினர் ஒவ்வொரு சாமானின் பெயரையும் விலையையும் குறித்த கிரய ஜாபிதாவைத் தயாரித்து அனுப்புவார்கள். பல டிப்போக்களில் ஸ்டாக்கில் இருக்கும் அத்தனை சாமான் இனங்களும் இந்த ஜாபிதாவில் இடம் பெற்றிருக்கும். ஒவ்வோர் ஐட்டத்துக்கும் ஒரு நம்பர் கொடுத்திருப்பார்கள். அங்கங்கே உள்ளவர் தங்களுக்குத் தேவையான சாமானைக் கேட்கும்போதும், இவர்கள் அந்தச் சாமானை அனுப்பும்போதும், அவர்கள் அதைப் பெறும்போதும் எழுதும் நமூனாக்களில் இந்த நம்பரையும் சாமானின் வர்ணனையையும் குறிக்கவேண்டும். இந்தக் கிரய ஜாபிதாவை அடிக்கடி சரிபார்த்துப் புதுப்பித்து இன்றைய நிலவரத்தைக் காட்டும் நிலையில் வைத்து வரவேண்டும். ஏனென்றால், மார்க்கட் நிலவரத்தை அனுசரித்துச் சகல சாமான்களின் விலைகளும் ஓயாமல் மாறிக்கொண்டேயிருக்கும். சுமார் 60 ஆயிரம் ஐட்டங்களுக்குமேல் பெயரும் விலையும் இந்தக் கிரய ஜாபிதாவில் குறிக்கிறார்கள் என்றால், இந்த ஓர் அம்சத்தில்மட்டும் ஸ்டோர்ஸ் இலாக்காதார் எவ்வளவு வேலை செய்யவேண்டியிருக்கிறது என்பதை நாம் ஊகித்துக் கொள்ளலாம்.

ரெயில்வே நிர்வாகத்துக்குத் தேவையான சாமான்களை இரண்டு வகையில் பெறலாம். ஒன்று, ரெயில்வேயின் பல தொழிற்சாலைகளிலிருந்தும் பெறுவது; இரண்டு, பகிரங்க மார்க்கட்டில் பெறுவது. ரெயில்வே தொழிற்சாலைகள் உருவான சாமான்களைச் (ஃபினிஷ்டு ஆர்ட்டிக்கிள்ஸ்) செய்து தந்தாலும், அவற்றுக்கு வேண்டிய கச்சாப் பொருள்களையும் (ரா மெட்டீரியல்ஸ்) பகிரங்க மார்க்கட்டில்தான் வாங்க வேண்டியிருக்கிறது. எனவே, மார்க்கட்டில் எவ்வளவு பொருள்களை வாங்க வேண்டும், ரெயில்வே தொழிற்சாலைகளில் எவ்வளவு சாமான்களை உருவாக்க வேண்டும் என்பதுபற்றியெல்லாம் ஒவ்வொரு வருஷமும் மிக முன்கூட்டியே கண்ட்ரோலர் அவ் ஸ்டோர்ஸ் என்ற அதிகாரி மிகவும் கணக்காய்த் திட்டங்கள் தயாரிக்கவேண்டும்.

வெளியே மார்க்கட்டில் பொருள்களை வாங்கும்போது, சிக்கனமாக

வும் உயர்ந்த தரமாகவும் உள்ள பொருள்களாகப் பார்த்து வாங்க வேண்டும். மலிவாகவும் மட்டமாகவும் உள்ள சாமான்களை வாங்கிஞல், நீண்டகாலத்துக் கணக்கைப் பார்க்கும்போது நஷ்டமே உண்டாகும். தவிர, ரெயில்வேயில் அபாயமான பரீட்சைகள் செய்து கொண்டிருக்கக்கூடாது. அதிலும், ஓடும் வண்டிகளுக்குத் தேவையான சாமான்கள் பத்திரமானவையாக இருக்கவேண்டும். வாங்குவதில் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கை (பர்ச்சேஸ் பாலிஸி), ஒப்பந்த விதிகள் (கண்ட்ராக்ட் ரூல்ஸ்) இரண்டையும் நிர்ணயித்து வைத்துக்கொண்டு, அவற்றின் படியே வெளியில் சாமான்களை வாங்குகிருர்கள். இந்திய சர்க்காரின் ஸ்டோர்ஸ் இலாக்கா (இண்டியன் ஸ்டோர்ஸ் டிபார்ட்மெண்ட்) மூலமே சில சாமான்களை ரெயில்வேக்களுக்கு வாங்கவேண்டியிருக்கிறது. இந்த மாதிரி வியாபாரத்தில் சர்க்கார் இலாக்காவுடன் ரெயில்வே இலாக்கா மிக நெருங்கி ஒத்துழைக்க வேண்டும். ஆனல், எப்போதும், ரெயில்வே நிர்வாகத்தின் நன்மையில் கண்ணுங் கருத்துமாக இருக்க வேண்டும்.

ரெயில்வே ஓட்டை உடைசல் (ஸ்க்ராப்) டிப்போவை ஒரு முறை போய்ப் பார்த்தீர்களானல், ஆச்சரியப்பட்டுப் போவீர்கள். உடைந்ததும் தேய்ந்ததும் உபயோகம் இழந்ததுமான சாமான்கள் ஏராளமாய் அங்கே குவிந்து கிடக்கும். ஆனல், மழையிலும் வெயிலிலும் கிடந்து துருப் பிடித்துப் பாழாகும்படி டிப்போவில் அவற்றை வெகு நாள் போட்டு வைக்க மாட்டார்கள். ஓட்டை உடைசலாலும் பணம் கிடைக்கும். எனவே, சில நாளைக்கு ஒரு தடவை அவற்றை மேற்பார்வை பார்த்து ஸர்வே (ஆராய்ச்சி) செய்ய ஒரு கமிட்டி இருக்கிறது. அதில் ஸ்டோர்ஸ் அதிகாரிகள் சிலரும் தொழில் நுணுக்க (டெக்னிக்கல்) அதிகாரிகள் சிலரும் அங்கம் வகிப்பார்கள். இந்த ஓட்டை உடைசல்களில் எவற்றை மீண்டும் சரி செய்து மேலும் உபயோகிக்கலாம் என்பதை அந்தக் கமிட்டியார் தீர்மானிப்பார்கள். இனிப் பயன்பட மாட்டா என்று கண்ட பொருள்களை விரிவாய் விளம்பரம் செய்து பகிரங்க ஏலத்தில் விற்று விடுவார்கள்.

பழுதான ஓர் எஞ்சின், ஸ்பேர் பார்ட்டுகளை எதிர்பார்த்துக் கொண்டு, ரன்னிங் ஷெட் ஒன்றில் சோம்பேறியாய் நின்றுகொண்டிருக்கிறது; ஒரு கோச் அல்லது வாகன், ஏதோ விபத்து நேர்ந்ததால் பஃபர் கீயர் சேதமாகிப் புதிய கீயருக்குக் காத்துக்கொண்டிருக்கிறது; ஸ்டேஷன் வெயிட்டிங் ரூமுக்கு அல்லது புக்கிங் ஆபீஸுக்குப் புதிய நாற்காலி மேஜைகளோ மின்சார விளக்குகளோ வேண்டியிருக்கின்றன; ஸ்டேஷன் யார்டில் உள்ள சகல ஸிக்னல்களையும் பாயிண்டுகளையும் இயக்கக் கூடிய புதிய ஸிக்னல் காபின் ஒன்றைக் கட்டி வருகிருர்கள்; பிளாட்ஃபாரத்துக்கு முற்றும் புதிதாகத் தளவரிசை போடக் கல், சிமெண்ட், சுண்ணும்பு எல்லாம் தேவைப்படுகின்றன; ஸிக்னல் விளக்குகளின் லென்ஸ் விரிசல் கண்டோ உடைந்தோ போனதனல் புதிய லென்ஸ் வேண்டியிருக்கிறது; மிகப் பல ரெயில்வே சிப்பந்திகளுக்குப் புதிய யூனிஃபாரம் தேவையாயிருக்கிறது. இத்தனை பொருள்களும் எங்கேயிருந்து வருகின்றன? ஸ்டோர்ஸ் டிபார்ட்மெண்ட் என்ற அந்த அற்புத ரெயில்வே களஞ்சியத்திலிருந்துதான் வருகின்றன. ரெயில் வண்டிச் 'சக்கரங்கள் ஓடிக் கொண்டே யிருக்கும்படி' செய்யும் பணியில் அதுவுந்தான் பெரும்பங்கு கொள்கிறது.


### வியாபாரம்

வாங்குகிறவனுக்கு நூறு கண் வேண்டும்; விற்கிறவனுக்கு ஒரு கண்கூடத் தேவையில்லை.

—'கஹானியா'

# துரியோதனனின் பொருமை

★



ராஜசூயம் முடிந்த பிறகு துரியோதனன் கொஞ்ச நாள் இந்திரப்பிரஸ்தத்திலேயே வாழ்ந்திருந்தான். ஒரு நாள் சகுனியோடு தர்மரின் சபையைப் பார்க்கச் சென்முன். அங்கே அஸ்தினுபுரத்தில் காணுத பல ஆச்சரியக் காட்சிகளைக் கண்டான். ஒருபுறத்தில் பளிங்கு போன்ற நீருடைய தாமரை ஓடை இருந்தது. அதில் பளிங்குத் தாமரைகள் மலர்ந்திருந்தன. அதைத் துரியோதனன் நீர் ஓடையென்று கருதவில்லை. பளிங்குத் தாமரைச் சிற்ப வேலைப்பாடு என்றே நினைத்து நேரே நடந்தான். நீரில் விழுந்தான். அவனுடைய ஆடைகள் நனைந்தன. அதைக் கண்டு வேலையாட்கள் நகைத்தார்கள். தர்மர் அவனுக்கு வேறு ஆடைகள் கொடுக்கும்படி உத்தரவிட்டார். திரௌபதியும், பீமனும், அர்ஜுனனும், நகுல சகதேவர்களும் துரியோதனனைப் பார்த்துச் சிரித்தார்கள்.


மற்ருேர் இடத்தில் துரியோதனன் பளிங்குத் தரையைப் பார்த்து நீர் என்று கருதி ஆடையைத் தூக்கிக்கொண்டு நடந்தான். அப்பொழுதும் பாண்டவர்கள் அவனைக் கண்டு நகைத்தார்கள். வேறு ஓர் இடத்தில் கொடுங்கை நீட்டிக்கொண்டிருப்பது கண்ணுக்குத் தெரியாமல் இருந்ததால் நெற்றியில் முட்டிக்கொண்டான். திறந்திருக்கும் வாயிலை மூடியிருப்பதாக எண்ணிப் போகாமல் திரும்பினுன். மீண்டும் நீர் இல்லாத ஓர் இடத்தில் நீர் இருப்பதாகக் கருதி ஆடையைத் தூக்கிக்கொண்டான். இவற்றையெல்லாம் பார்த்துப் பணியாட்கள் நகைத்தார்கள். இப்படிப் பலவிதமாக ஏமாற்றம் அடைந்த துரியோதனன் பாண்டவர்களிடம் விடை பெற்று அஸ்தினுபுரம் சென்ருன்.

மகாபாரதத்தில் வரும் உபாக்கியானங்களும் சரி, பாத்திரங்களும் சரி பலவகை. ஒவ்வொரு கதையிலும் ஒரு பேருண்மையைக் கண்டறியலாம்; ஒவ்வொரு பாத்திர வர்ணனையும் தனித் தனிக் குணசித்திர மாகும்.

துரியோதனன் பாண்டவரின் யாகத்துக்குச் சென்றதால் மகிழ்ச்சி அடையவில்லை. மன வருத்தமுற்றவனாகத் தனிமையை நாடி அரண்மனைக்குள் இருந்தான். யாகத்தில் பாண்டவரின் செல்வச் செழிப்பைப் பார்த்து அவனுக்குக் கெட்ட எண்ணங்கள் தோன்றலாயின. பாண்டவரின் மகிழ்ச்சியையும் அரசர்கள் அவர்களுக்கு வசப்பட்டிருப்பதையும் மக்கள் அவர்களிடம் அன்பு கொண்டிருப்பதையும் பார்த்து அவன் மனம் வெதும்பியது. அருகில் இருக்கும் சகுனியிடங்கூடப் பேசவில்லை. அவன் பல தடவை கூப்பிட்டுப் பேசியும் வருத்தத்தால் துரியோதனன் மௌனம் சாதித்தான். ''துரியோதனா, ஏன் இப்படிப் பேசாமல் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறாய்? இதற்குக் காரணம் என்ன?'' என்றான் சகுனி.

உடனே துரியோதனன் கூறுவான்:

''மாமா, இந்தப் பூலோகம் முழுவதும் தர்மனுக்கு வசப்பட்டுக் கிடக்கிறது. தேவர்களும், முனிவர்களும், யட்சர்களும், கந்தர்வர்களும் நாள்தோறும் அவனிடந்தான் வருகிறார்கள். நம் மேல் கெட்ட எண்ணம் கொண்ட கிருஷ்ணன் அவர்களுக்குச் செல்வம் பெருகும்படி செய்கிறான். யானை, கோவேறு கழுதை, ஒட்டகம், குதிரை, ஆடு, வாள் இவற்றை விற்கும் வியாபாரிகள் எல்லாரும் தர்மனிடந்தான் போகிறார்கள். இந்திரப்பிரஸ்தத்தின் வாயிலில் எப்பொழுதும் தேர், யானை, குதிரை இவை குழுமியிருக்கின்றன. அவன் செய்த யாகத்தைத்தான் என்னவென்பது! தேவேந்திரன் செய்யும் யாகம் போல் அல்லவோ இருந்தது! இவைகளையெல்லாம் பார்த்துப் பார்த்து என் உள்ளத்தில்



பொறுமை பொங்குகிறது. வெயிலில் இருக்கும் நீர்போல் உள்ளம் வறண்டு போகிறது.

''மாமா, சேதி மன்னனான சிசுபாலனைக் கிருஷ்ணன் கொன்றுவிட்டானே! அங்கே சிசுபாலனுக்கு ஒருவன் கூட உதவி செய்யவில்லையே! பாண்டவர் என்னும் நெருப்பு எரித்துவிடுமோ என்று எல்லாரும் அஞ்சினார்கள். கிருஷ்ணன் செய்த இந்த அநீதியை யார் பொறுப்பது? அரசர்கள் எல்லாரும் ரத்தினங்களை எடுத்துக்கொண்டு தர்மனை அல்லவோ பணிந்து சேவிக்கிறார்கள்! பாண்டவர்களின் செல்வ வளத்தைப் பார்த்து எனக்கு இல்லையே என்று என் உள்ளம் பற்றித்தான் எரிகிறது. நான் உயிர் வாழமாட்டேன். தீயில் குதித்துவிடட்டுமா? விஷத்தை உண்ணலாமா? இல்லாவிட்டால் நீரில் மூழ்கிவிடுகிறேன். பகைவர் செழிப்புற்று வாழ்வதையும் தான் கீழ் நிலைமைக்குப் போவதையும் பார்த்துக்கொண்டு எந்தப் புருஷன்தான் சும்மா இருக்கமுடியும்? அப்பேர்ப்பட்ட அரசபோகத்தையும், ஒப்பற்ற செல்வத்தையும் நிகரற்ற அந்த யாகத்தையும் பார்த்துவிட்டு என் போன்றவன் எவ்வாறு வருந்தாமல் இருக்கமுடியும்? அவர்களிடமிருந்து அந்தச் செல்வத்தை நான் ஒருவன் மட்டுமே கவர்ந்துவிட முடியாது. எனக்கோ உதவி இல்லை. அதனால்தான் இறப்பது மேல் என்று எண்ணினேன். வீரத்தைவிட விதியே வலிமை உள்ளது. வீரத்தால் பாண்டவரின் செல்வச் செருக்கை அகற்ற முடியவில்லையே! நான் அவர்களுடைய செல்வத்தை அழிக்க எவ்வளவோ பாடுபட்டேன். அவ்வளவும் வீணானதோடு தாமரை வளர நீர் உதவுவது போல் வளரவே அது காரணமாயிற்று. திருதராஷ்டிரரின் மக்கள் தாழ்மையுற்று வருவதையும், குந்தியின் மக்கள் உயர்வுற்று வருவதையும் பார்த்து விதியே வலியது என்று தீர்மானிக்கிறேன். அவர்களுடைய செல்வத்தையும் அத்தகைய சபையையும் பணியாட்களின் ஏளனத்தையும் பார்க்கும் என் மனம் நெருப்பில் விழுந்ததுபோல் பற்றி எரிகிறது. ஆகவே, மாமா, என் நிலையைத் தந்தையிடம் தெரிவியுங்கள்.''

அப்போது சகுனி சொல்வான்:

''உனக்குப் பொறுமை எதற்கு? பாண்டவர்கள் அவர்களுடைய அதிருஷ்டத்தின் பயனை அநுபவிக்கிறார்கள். நீ அவர்களைப் பல வழிகளில் துன்புறுத்த முயன்றாய். அவர்களுடைய பாக்கியத்தால் அவர்கள் தப்பித்துக்கொண்டார்கள். திரௌபதி அவர்களுக்கு மனைவியாக வாய்த்தாள். துருபதன், அவன் மைந்தர்கள், மற்ற அரசர்கள், தேவர்களும் அசுரர்களும் எதிர்க்க முடியாத வாசுதேவன் அனைவரும் பாண்டவருக்கு உதவுகிறார்கள். அதைக் கண்டு நீ ஏன் வருந்தவேண்டும்? அர்ஜுனன் அக்கினியைத் திருப்தி செய்தான். காண்டீவம் என்ற வில், அழியா அம்புகள் நிறைந்த இரண்டு அம்பறாத் தூணிகள், கொடிய அஸ்திரங்கள் அனைத்தையும் பெற்றான். பல மன்னர்களை மடக்கி வசமாக்கினான். இதை எண்ணி நீ வருத்தம் அடைவதில் பயன் என்ன? காண்டவம் எரியும்பொழுது மயனை அர்ஜுனன் காப்பாற்றினான். அவனைக் கொண்டு சபையைக் கட்டச் செய்தான். அந்த மயனே அந்தச் சபையைக் காக்கும் அரக்கர்களைப் பணியாட்களாகக் கொடுத்தான். இதை உணர்ந்து நீ உருகுவது சரியா?

''துரியோதனா, நீ உதவியற்றவன் என்று உன்னைக் கூறிக்கொண்டாய்; அது சரியல்ல. மகாரதர்களான சகோதரர் - பாண்டவர் - உனக்கு உதவியாக இல்லையா? புகழ் பெற்ற வில்லாளி துரோணர் தம் மகனோடு உனக்கு உதவக் காத்திருக்கிறார். மகாரதனும் உனக்கு உற்ற நண்பனுமான கர்ணன் ஒருவனே பாண்டவரையும் அவரைச் சார்ந்தவர்களையும் சேர்ந்தாற்போல் போரில் வெல்வான். புருஷர்களில் சிறந்த பீஷ்மரும், துரோணரும், ஜயத்திரதனும், என் சகோதரர்களுடன் நானும், சோமதத்தன் முதலியோரும் உனக்கு உதவியாக இருக்கிறோம்.

இந்த உதவியைக் கொண்டு நீ பூமி முழுவதையுமே வெல்லலாமே! இவர்களின் உதவிகொண்டு நானே ஒரே நாளில் பூமியை வென்று உனக்கு வெற்றி மாலை சூட்டு வேனே! உன் அநுமதிதான் வேண்டும். பிறகு இந்தப் பூமியும் அரசர்களும் தர்மனின் சபையும் உனக்கே சொந்தம்.

''மேலும், பாண்டவரையும் கிருஷ்ணனையும் துருபதனையும், வானோர் அனைவரும் திரண்டு வந்தாலும் வெல்ல முடியாது. ஆனால், தர்மனை வெல்லும் வழி ஒன்று எனக்குத் தெரியும். நான் கூறுகிறேன், கேள்: தர்மனுக்குச் சூதாட்டத்தில் அதிகப் பிரியம். ஆனால் அவனுக்கு அந்த ஆட்டம் நன்றாகத் தெரியாது. அழைத்தால் மறுக்கமாட்டான். நானோ சூதில் தேர்ச்சி பெற்றவன் மூன்று உலகிலும் எனக்கு நிகர் இல்லை. நீ தர்மனைச் சூதாட்டத்துக்கு அழை. நான் அவன் ராஜ்யத்தையும் செல்வத்தையும் பிடுங்கி உனக்குக் கொடுக்கிறேன். உன் தந்தையிடம் இந்த விவரத்தைக் கூறி அவரை அநுமதிக்கச் செய். நான் வென்று செல்வத்தைத் தேடித் தருகிறேன்; இது நிச்சயம்.''

இதைக் கேட்டுத் துரியோதனன், ''மாமா, தாங்களே திருதராஷ்டிரரிடம் கூறுங்கள். நான் சொல்ல விரும்பவில்லை'' என்றான்.

சகுனி திருதராஷ்டிரனிடம் சென்று, ''துரியோதனன் கவலை கொண்டு இளைத்து நிறம் மாறி வெளுத்திருப்பதைக் கவனிக்கவில்லையா நீங்கள்? முதல் மகனை இப்படி இருக்கும்படி விடுவது முறையா?'' என்றான்.

உடனே திருதராஷ்டிரன் மகனை அழைத்து வரச் சொன்னான். அவனுடைய வருத்தத்தின் காரணத்தைக் கேட்டான். அதற்குத் துரியோதனன் சொல்வான்:

''என் பகைவன் தர்மன் ஓங்கி வளர்வதைக் காண என் மனம் பொறுக்கவில்லை. எண்பதினாயிரம் இல்லறத்தார் - ஒவ்வொருவரிடமும் முப்பது வேலையாட்கள் - அவனிடம் உண்டு வாழ்ந்து வருகிறார்கள். பத்தாயிரம் துறவிகள் நாள்தோறும் யுதிஷ்டிரனுடைய அரண்மனையில் தங்கப் பாத்திரத்தில் அருந்துகிறார்கள். அரசர்கள் பதினாயிரக்கணக்கில் ஒட்டகங்களில் சுமையாக ஏற்றி ரத்தினங்களைத் தர்மனுக்குக் கொடுக்கிறார்கள். யாகத்தில் தர்மனுக்கு வந்த அளவு செல்வத்தை நான் இதுவரையில் பார்த்தது மில்லை; கேட்டது மில்லை. அரண்மனையில் ஆயிரக்கணக்கில் தங்கக் குடங்களை உபயோகிக்கிறார்கள். அரக்கர்கள் தங்கக் குடங்களில் பல திசையும் சென்று நீர் கொண்டுவருகிறார்கள்.

''அந்தச் சபையில் ரத்தினத்தினால் நீரோடைபோல் அமைத்திருந்தது. அது உண்மை ஓடை என்று கருதிக் கடந்து செல்ல நான் ஆடையைத் தூக்கிக்கொண்டேன். அதைக் கண்டு வேலையாட்களும் பீமனும்-ஏன்? திரௌபதியும் கூடத்தான் - நகைத்தார்கள். உங்களையும் தாயையும் எண்ணி உயிரை விடாமல் இருந்தேன். சபையில் தூண்கள் இருப்பது தெரியாததால் முட்டிக்கொண்டேன். வாசல் இல்லாத இடத்தில் வாசல் போலவும் வாசல் இருக்கும் இடத்தில் இல்லாததுபோலவும் இருந்தது. அங்கேதான் நெற்றியில் முட்டிக் கொண்டேன். இதைக் கண்டு பெண்களும் சிரித்தார்கள்.

''மேலும், அந்தச் சபையில் மற்றொரு விசேஷம்: லட்சம் அந்தணர் போஜனசாலையில் சாப்பிட்டால் ஒரு தரம் சங்கு ஊதும். இப்படிப் பல தடவை சங்கு ஊதுவதைக் கேட்டேன். என் மயிர் சிலிர்த்தது. தேவேந்திரனுக்கும் யமனுக்கும் வருணனுக்கும் குபேரனுக்கும் விஷ்ணுவுக்குங்கூட இவ்வளவு செல்வக் கொழிப்பில்லையே! அதை நான் அடையாமல் என் மனம் அமைதி அடையாது. நான் போரில் மடியவும் துணிந்திருக்கிறேன். எனக்கு உயிர் வேண்டாம்.''

திருதராஷ்டிரன் மகனைத் திருப்தி செய்யச் சகுனியின் யோசனைப்படி சூதாட்டத்துக்கு இணங்கினான். சூதாடும் சபையை நிர்மாணிக்க உத்தரவிட்டான். தர்மரை அழைத்துவர விதுரரை அனுப்பினான்.

# வர்ணக் கைப்பை

ஸ்ரீமதி என். ராமகிருஷ்ண




இதோ இந்தப் பைதான்


ஆவர்ச்சியான கைப் பைகளை உல்லன் நூல், ஒரு ஜதை ஸ்வெட்டர் ஊசிகள் இவற்றைக் கொண்டு வீட்டிலேயே செய்து விடலாம். இரண்டு அவுன்ஸ் உல்லன் நூல் போதும். ஒரு வார காலம் ஓய்ந்த வேளையில் வேலை செய்தால், பையைத் தயாரித்து விடலாம். மொத்தச் செலவு மூன்று ரூபாய்க்குமேல் பிடிக்காது.

பை வட்ட வடிவமாக இருக்கும். அந்த வட்டத்தை 12-பகுதிகளாகப் (ஸெக்டர்) பிரித்துக் கொண்டு, நூலைப் போட வேண்டும். வேலை செய்யும் விதம் எப்படி என்பதற்கு ஸாம்பிளாக ஒரு பகுதியை இங்கே காட்டியிருக்கிறேன்.


பைக்கு இரண்டு பக்கங்கள் உண்டு. ஒவ்வொரு பக்கத்தையும் தனித்தனியே தயார் செய்ய வேண்டும். வேலை பூர்த்தியானதும், இரண்டு பக்கங்களையும் ஒன்ருய் இணைக்க வேண்டும்.



ஸெக்டரின அடியை எடுத்துக் கொண்டு முதல் ஊசியில் 20 'நாட்' சுற்றவேண்டும்



லூப் போடும் விதம்




லூப், ரிங் இரண்டையும் ஒன்றின் மீது ஒன்று போடும் முறை

காப்பிரைட்: ஸ்போர்ட் அண்ட் பாஸ்டைம் (ஆங்கிலம்: 10-8-'57), சென்னை.


**தினுசு தினுசான பைகளைக் கடையிலே வாங்குகிறார்கள் இப் பெண்கள். பிளாஸ் டிக் பை, அது இது என்று எத் தனையோ விதம். இதோ இந் தப் பையை அவர்களாகவே தயாரித்துப் பார்க்கலாமே.**

வெளிப் பக்கம் புசுபுசு என்று புதர்போல் இருக்கும். உல்லன் நூல் சுழி சுழியாய்த் தொங்கும். 'கார்டு போர்டு' அட்டையை வட்டமாகக் கத்தரித்து உள் பக்கத்தில் வைக்க வேண்டும். இதற்குமேல் சுத்தமான மருந்துக் கடைப் பஞ்சைப் பட்டையாகப் பரப்ப வேண்டும். அதற்கு மேலே நேர்த்தியான ஸாட்டின் துணியை விரித்து, சுற்றிலும் விளிம்பிலே தைத்துவிட வேண்டும். ஒவ் வொரு பக்கத்தையும் இதே போலத் தயார் செய்து, பிறகு இரண்டையும் பொருத்தி ஓரத் திலே தைத்து விடவேண்டும். தைக்கும்போது, வாய்க்கு இடம் விடவேண்டும். வாயில் 'ஜிப்' மூடியை வைத்துத் தைக்கலாம்.


சுமார் எட்டங்குல நீளமும் ஓர் அங்குல அகலமும் உள்ள மெல்லிய 'ஸீடர்ஸ்' பட்டைக்




ஸெக்டர் அமைகிற விதம்




12 ஸெக்டர்களும் பூர்த்தியான வட் டத்தின் வெளித்தோற்றம்




ஊ.பயின் உட்பக்கம் அமைகிற தோற்றம்



ஓரம் விட்டுச் செலுத்திய வட்டமான அட்டை



மருந்துக்கடைப் பஞ்சை அட்டையில் பட்டையாக வைக்கும் விதம்



பூர்த்தியான பை

கைப்பிடியை இணைத்து விட வேண்டும். அதை முழுவதும் 'ஸீடா'வாகவே தயாரிக்க வேண்டும்.

பையின் நடு மத்தியில் ஏதாவது 'பூ' டிஸைன் இணைத்துத் தைக்கலாம். அதைக் கலரில் தயார் செய்ய வேண்டும். அந்தப் பூவின் கலருக்கு 'மாட்சு' ஆகும் கலரில் பட்டன் ஒன்றைப் பூவின் நடுவில் தைக்க வேண்டும்.

பை முழுவதும் ஒரே கலராக இருந்தாலும் இருக்கலாம். இல்லை, 'ஸைடு'கள் மட்டும் வேறு கலராக இருந்தாலும் இருக்கலாம்.

முதல் ஸ்வெட்டர் ஊசியில் இருபது முடிச்சுகள் (நாட்) சுற்ற வேண்டும். பிறகு இரண்டாவது ஊசியைக் கொண்டு, அதில் சுழிகளைப் (லூப்) போடவேண்டும். இதோ இந்தக் கணக்கில் சுழிகளை அமைத்து வரிசை முடிவில் விட்டு விட வேண்டும்:

| | ஸீடா | ரிங் | ஸீடா | ரிங் |
|---|---|---|---|---|
| முதல் வரிசை | 2 | 8 | 8 | 2 |
| 2-ஆம் ,, | 2 | 8 | 6 | 4 |
| 3 ,, ,, | 2 | 8 | 4 | 6 |
| 4 ,, ,, | 2 | 8 | 2 | 8 |
| 5 ,, ,, | 2 | 8 | 0 | 10 |
| 6 ,, ,, | 2 | 6 | 0 | 12 |
| 7 ,, ,, | 2 | 4 | 0 | 14 |
| 8 ,, ,, | 2 | 2 | 0 | 16 |
| 9 ,, ,, | 2 | 0 | 0 | 18 |

இதற்குப் பிறகு இரண்டு வரிசைகளை முழுவதும் ஸீடாவாகவே போட்டுப் பூர்த்தி செய்ய வேண்டும். ஒரு பகுதிக்கு (ஸெக்டர்) 11-வரிசை. இதேபோல் 12-பகுதிகளையும் போட்டால், வட்டம் பூர்த்தியாகும்.

## இன்பத்துக்கு வழி

ஒரு நாள் இன்பமாயிருக்க, க்ஷவரக் கடைக்குப் போ; ஒரு வாரம் இன்பமாயிருக்க ஒரு பெண்ணை மணந்துகொள்; ஒரு மாதம் இன்பமாயிருக்க ஒரு குதிரையை வாங்கு; ஒரு வருஷம் இன்பமாயிருக்க ஒரு புது வீடு கட்டு; வாழ்நாள் முழுவதும் இன்பமாயிருக்க, நாணயமாய் நட.

—இத்தாலியப் பழமொழி

## மணமும் பிரம்மசரியமும்

மணம் புரிந்து வாழ்வதிலே பல துன்பங்கள் இருக்கின்றன. ஆனால், பிரம்மசரியத்திலே இன்பமே இல்லை.

—ஜான்ஸன்

# நவீன யுடோப்பியா

## எச். ஜி. வெல்ஸ்: வாழ்வும் நூலும்

'யுடோப்பியா' என்றாலே கற்பனை உலகம் என்ற பொருள் இப்போது ஆங்கிலத்தில் நிலை பெற்றுவிட்டது. ஸர் தாமஸ் மோர் என்பவர் எழுதிய கற்பனைக்கதையில் உள்ள ஒரு ராஜ்யத்தின் பெயர் யுடோப்பியா. ஆனால், 'நவீன யுடோப்பியா' என்று இந்த நூற்றாண்டில் எச்.ஜி. வெல்ஸ் (*1866-1944*) எழுதிய நூலால்தான் இந்தப் பெயர் உலகெங்கும் பரவியது. பேரறிஞர் வெல்ஸின் கருத்துக்களை இந்தக் கட்டுரை வரிசையில் இங்கு விளக்குகிறார் அன்பர் **ரா.ஸ்ரீ. தேசிகன்.**

டாயின்பி (Toynbee) என்ற சரித்திர நிபுணர் தம்முடைய சிறந்த சரித்திர நூலில் மனிதனுடைய முன்னேற்றத்தை மிக நுணுக்கமாய் ஆராய்ந்திருக்கிறார். உன்னதமான மலைகள், செறிந்த காடுகள், விரிந்த பாலைவனங்கள், அளப்பரும் கடல்கள் - இவை யாவும் அவன் சஞ்சரிக்கும் பாதைகளில் இடையூறுகளாய் நின்றன. ஆனால் அவன் தன் பௌதிக அறிவைக் கொண்டு இயற்கைமீது ஆணை செலுத்தத் தொடங்கிவிட்டான். குதிரைகள், ஒட்டகங்கள் இவைகளைக் கொண்டு நீண்ட வழிகளைக் கடந்தான். கடல்களைக் கடக்கும் கலங்கள் தோன்றின. இடறு கட்டையாய்க் காட்சி அளித்த சமுத்திரத்தை அவன் வென்றுவிட்டான். ஆரவாரம் செய்த ஆர்கலி அவன் வசம் ஆயிற்று. இப்பொழுது அவன் விண்ணையும் ஆகாய விமானங்கள் மூலம் ஏவல் கொண்டுவிட்டான். காலமும் இடமும் அவன் அறிவுக்குமுன் குறுகிவிட்டன. பரவை ஒரு குட்டையாகிவிட்டது. விண்ணோ தட்டுத் தடங்கலின்றி மனிதன் திரியும் பாதையாகி விட்டது. மனிதன் கடலுக்கடியில் போகிறான்; விண்ணில் அலைகிறான்; அணுவின் சக்திகளைக் கண்டுவிட்டான். ஒரு நொடிப் பொழுதில் உலகத்தை ஒரு பிடி சாம்பலாய் மாற்ற ஆற்றல் படைத்துவிட்டான். அணுக்குண்டுகளை ஆகாய விமானங்களிலிருந்து எறிய வேண்டும் என்பதுகூட இல்லை; இருந்த இடத்திலிருந்தே தன் காரியத்தை முடித்துக்கொள்ளும் அறிவைப் பெற்றிருக்கிறான். போர்களின் முறைகளும் முற்றும் மாறிவிட்டன. எவருக்கும் வெற்றியுமில்லை; தோல்வியுமில்லை. அவன் படைத்த மாபெரும் பூதம் அவனையே விழுங்கக் காத்திருக்கிறது. இத்தகைய நிலையில் மனிதன் என்ன செய்யக்கூடும்? அன்பு நெறியை வகுத்துத் தரும் சமயந்தான் நமக்குப் புகலிடம் என்று டாயின்பி இடையறாது உபதேசம் செய்கிறார்.

அறிவுதான் ஆற்றலுடையது என்ற உண்மை நிலை பெற்றுவிட்டது. விஞ்ஞான அறிவால் விளையக் கூடியவைகளை எச். ஜி. வெல்ஸ் தம் செறிந்த கற்பனையைக் கொண்டு பல கதைகள் மூலமாகக் காட்டியுள்ளார். இவர் கண்ட கனவுகளெல்லாம் ஒவ்வொன்றாக உருவாகிக் கொண்டு வருகின்றன. செவ்வாய்க்கும் நம்

முடைய உலகத்துக்கும் போர் நிகழலாம் (The War of the Worlds) என்ற கனவு இவருடைய கற்பனையில் பிறந்தது. விஞ்ஞானம் போகிற போக்கைப் பார்த்தால், அதுவும் உண்மையாகிவிடலாம் போலத் தோன்றுகிறது. பண்டைய போர்கள் மாதிரி இப்பொழுது நடக்கும் போர்கள் இல்லை. இவைகளை அகற்ற ஒரு புதிய உலக அமைப்பை 'நிறுவ வேண்டும்', 'நிறுவ வேண்டும்' என்பதுதான் இவர் எழுதிய நூல்களின் நீண்ட பல்லவி ஆகும். அந்தத் துறையில் இறங்கி அரும்பாடு பட்ட இவருடைய பெரிய முயற்சிகளுக்கு நாம் வணக்கம் செய்ய வேண்டும்.

1934-ஆம் ஆண்டில் வெளிவந்துள்ள சுய சரித சோதனை (Experiment in Auto-biography) என்ற நூலை, வெல்ஸ் எழுதிய எண்ணற்ற நூல்களாம் அறிவுப் பொக்கிஷத்துக்கு ஒரு திறவு கோலாகக் கருதலாம். இவருடைய வாழ்க்கையின் நுணுக்கங்கள் அதில் சிறை செய்யப் பெற்றிருக்கின்றன. இவருடைய பேருழைப்புக்கள், இவர் கண்ட கனவுகள், இவர் பேணி வளர்த்த நம்பிக்கைகள் எல்லாம் நம் முன் விரிகின்றன. இவர் வறுமைச் சேற்றில் உழன்ருர். உடல் எலும்பெல்லாம் வெளியிலே தோன்றும்படியான நிலை வந்துவிட்டது. சோறுகூடச் சில சமயத்தில் இவருக்குக் கிடைக்கவில்லை. இத்தகைய நிகழ்ச்சிகளைச் சிந்திக்கும் பொழுது, நாம் கண்ணீர் விடாமல் இருக்க முடியாது.

இளமையில் இவர் வாழ்ந்த இடம் துர்நாற்றம் நிரம்பிய ஒரு சந்து. பல இன்னல்களை அடைந்த இவர், இன்னல்கள் அற்ற ஒரு வையகத்தைபற்றிக் கனவு காண்பது இயல்புதானே! ''எழுதுவதற்கும் சிந்திப்பதற்கும் நல்ல காற்ருேட்டமுள்ள ஓர் அறை எனக்கு வேண்டும். அதில் இன்பமாய் விளக்குகள் எரிய வேண்டும். நன்ருய்ப் படுத்துத் தூங்கத் தேவையான படுக்கை அறையைப்பற்றி நான் கூறத் தேவையில்லை. சந்தடி இல்லாம லிருந்தால் மிகவும் நலம். ஒரு செயலாளர் பக்கத்தில் இருக்க வேண்டும். டைப் அடிக்கிறவன் வேண்டும்பொழுது எனக்கு ஏவல் செய்வதை நான் விரும்புகிறேன்.''

இந்தச் சுருதியில் இவர் சிந்திப்பதற்குக் காரணம், இவர் இளம் பிராயத்தில் பல துயர்களையும் இன்னல்களையும் அடைந்ததே என்று தயக்கமின்றிச் சாற்றலாம். ''என் மூளை அதிசயமான மூளையன்று. மூளைப் பொருட்காட்சியில் என் மூளையை வைத்தால் அதற்கு மூன்ரும் பரிசு கூடக் கிடைக்காது. லாயிட் ஜார்ஜ், ஷா, ஜூலியன் ஹக்ஸ்லி, என் மூத்த மைந்தன் இவர்களுக்கு இருக்கிற மூளை எனக்கில்லை. இத்தனை புத்தகங்கள் நான் எழுதிய காரணத்தால் 'இடையருத உழைப்பின் சிலை' என்று என்னைக் கூறுவார்கள். எனக்குப் பொழுது போகவில்லை. ஏதோ எழுதினேன். இதுதான் உண்மை'' என்று கூறுகிருர். இது அவையடக்கத்தைத் தவிர வேறில்லை என்று எனக்குத் தோன்றுகிறது.

கெண்ட் (Kent) வட்டத்தில் பிராம்லி (Bromley) என்ற ஊரில் 1866-ஆம் ஆண்டு வெல்ஸ் பிறந்தார். தகப்பனுே ஒரு தோட்டக்காரன்; ஒரு சிறிய கடை வியாபாரி. கிரிக்கெட் விளையாடி அதில் வரும் ஊதியத்தைக் கொண்டு ஜீவனம் நடத்தினுன். தாயோ பெரிய இடத்துச் சீமாட்டிகளுக்கு உடை அணிவித்து அலங்காரம் செய்துவிடும் தொழிலில் இறங்கினுள். ''என் தாய்க்குச் சமையல்கூடச் சரிவரச் செய்யத் தெரியாது'' என்று நகைச் சுவை படத் தம் சுய சரிதத்தில் இவர் கூறுகிருர்.

வாழ்ந்த வீடோ இருளடைந்த ஒரு பழைய வீடு; சகிக்க முடியாத துர்நாற்றச் சந்தில் இருந்தது. இந்தச் சூழ்நிலையில் வெல்ஸ் வளர்ந்தார். ஒரு ஜவுளிக் கடையில் வேலை பார்த்தார். இந்தச் சம்பவத்தை அதிருஷ்ட சக்கரங்கள் (The Wheels of Chance) என்ற நாவலில் சித்திரிக்கிருர். டோனுே

பங்கே (Tono-Bungay) என்ற விருந்தில் - நவீனத்தில் - தாம் ரசாயன சாஸ்திரி ஒருவரிடம் வேலை கற்றுக் கொண்டதைப்பற்றிக் கூறுகிறார். உபாத்தியாயராகவும் இருந்திருக்கிறார். *1890*-ஆம் ஆண்டில் லண்டனில் பி. எஸ்ஸி., பரீட்சையில் சிறப்பாய்த் தேறிப் பட்டம் பெற்றார். கால யந்திரம் (The Time Machine), உலகங்களின் போர் (The War of the Worlds) முதலிய விஞ்ஞானக் கதைகள் (பௌதிக ரொமான்சுகள்) எழுதினார். கிப்ஸ் (Kipps), பால்லியின் வரலாறு (The History of Mr. Polly) முதலிய நாவல்களும் வெளிவந்தன. இவருடைய 'சரித்திர ரூபரேகை' (Outline of History) இவருடைய பேர் உழைப்பையும், எதையும் நுணுக்கமாய் ஆராயும் சிறந்த அறிவையும் நன்கு காட்டுகிறது. *1905*-ஆம் ஆண்டு இவருடைய 'நவீன யுடோப்பியா' (Modern Utopia) பிரசுரமாயிற்று. பிளேட்டோவின் கருத்து இவருடைய சிந்தையைக் கவர்ந்தது என்பதில் யாதோர் ஐயமுமில்லை.

இவர் காதல் நோயால் மிகவும் வருந்தினவர். ஆண் பெண் விஷயத்தில் ஒரு விதமான சுதந்தரம் வேண்டுமென்ற கருத்தை உடையவர். காதல் நோய் இவரை ஆட்டி வைத்துவிட்டது. புதிய மாக்கியவெல்லி (The New Machiavelli), காதலும் லெவிஷாமும் (Love and Mr. Levisham) என்ற இரு நாவல்களும் ஆண் பெண் உறவை அலசிப் பார்க்கின்றன.

*1900*-ஆம் ஆண்டு பிறந்த 'எதிர்பார்ப்பு' (Anticipations) என்ற நூல்தான் தம்முடைய அகில உலக அரசியல் கொள்கைக்கு அஸ்திவாரக் கல் என்று வெல்ஸ் மொழிகிறார்.

போர்களை ஒழிக்க ஓர் அகில உலக அரசியலில் எல்லா நாட்டுப் படைகளையும் விட ஒரு பெரிய படை இருக்க வேண்டும்; கப்பற்படைகளும், விமானப் படைகளும், போர்க்கருவிகளும் மிகுதியாய் அங்கே திகழவேண்டும். சர்வதேசச் சங்கம் தன் அலுவலை ஆற்றாத காரணத்தை நாம் நன்கு அறிவோம். தன் தீர்மானத்தை நிறைவேற்றக் கூடிய சக்தி அதனிடம் இல்லை. தீர்மானத்தை நிறைவேற்றக்கூடிய ஆற்றல் இருந்தால்தான், எங்கும் அமைதி நிலவும். தேசங்களுக்கிடையே சச்சரவுகள் நிகழுமானால், அந்தச் சண்டை சச்சரவுகளைத் தீர்த்துவைக்கக் கூடிய ஒரு பெரும் படை அங்கே நிறுவப் பெறவேண்டும். ஒரு யானையைக் கைத் துப்பாக்கியைக் கொண்டு கொல்ல முடியாதன்றோ?

வெல்ஸ் தமக்கு முந்தி எழுதப் பெற்ற யுடோப்பியா நூல்களையும் நன்கு சிந்தித்துப் படித்திருக்கிறார். இந்த உண்மை அவருடைய சுயசரிதத்தைப் படிப்போர்க்கு நன்கு புலனாகும். நவீன யுடோப்பியா என்று இதற்குப் பெயர் இட்டிருந்தாலும், பண்டைய யுடோப்பியாக்களுக்கு இந்த நூல் மிகவும் கடமைப்பட்டிருக்கிறது. இந்த நவீன யுடோப்பியாவில் பண்டைய மரபை இவர் பின்பற்றவில்லை என்று ஒரு விதத்தில் மொழியலாம். பண்டைய கற்பனை உலகங்கள் பூர்ணத்துவத்தைச் சித்திரிக்கின்றன. ஆனால் தம்முடைய கற்பனை உலகில் பூர்ணமான நிலை ஒரு போதும் இருக்க முடியாது என்று இவர் கருதுகிறார். முரண்பாடு, போராட்டம், சேதம் எல்லாம் எந்தக் காலத்தும் காட்சி அளிக்கும். ஆனால் நம்முடைய உலகத்தைவிடச் சற்றுக் குறைவாக இவைகள் அங்கே தோன்றும்.

இவர் கண்ட கற்பனை உலகம் ஒரு தேசத்தைச் சார்ந்ததன்று. அகில பிரபஞ்சமே ஓர் அரசாங்கமாக அதில் திகழ்கிறது. இதற்கு எல்லைகள் இல்லை; தடங்கள் இல்லை. எந்த இடத்திலும், எந்தப் பொழுதிலும் மக்கள் சுதந்தரமாய்த் திரியலாம். மக்களெல்லாம் பேசுகிற மொழி ஒன்றே. கற்பனைச் சிறகுகள்மீது பறக்கிற நமக்கு, நம் உலகத்தில் காண்கிற ஆறு, ஏரி, மலை யாவும் யுடோப்பியாவிலும் தோன்றும். அங்குள்ள அரசியல் அமைப்பு நம் அரசியலைக் காட்டிலும் சாலச் சிறந்ததாகப் பொலிந்து நிற்கும்.

''என்னுடைய யுடோப்பியாவுக்கும் பண்டைய யுடோப்பியாவுக்கும் வித்தியாசம் உண்டு. நாங்கள் நிலையுள்ள கோட்டைகளைக் கட்டவில்லை. அரசியல் கப்பல்களை அமைக்கிறோம். அந்தக் கப்பல்கள் வருகிற வெள்ளங்களுக்குத் தக்கபடி அமையும்; அவற்றின்மீது மிதக்கும். நிகழ்ச்சி வெள்ளங்களை நாங்கள் எதிர்க்கவில்லை; அவற்றின் மீது ஊர்ந்து செல்லுகிறோம். என்னுடைய யுடோப்பியா ஸிரியஸ் (Sirius) என்ற நட்சத்திர மண்டலத்தில் அமைக்கப்பெற்றிருக்கிறது. இந்த மண் உலகில் காணும் கண்டங்கள், தீவுகள், மகா சமுத்திரங்கள், கடல்கள் எல்லாம் அதிலும் தோன்றும். இங்கே இருக்கிற கொடி செடிகள் அங்கேயும் வளரும். ஆனால் இதைவிடச் சிறந்ததாக அது காட்சி அளிக்கும்'' என்கிறார் வெல்ஸ்.

பல்வேறு பாஷைகளின் குழப்பம் அங்கே இல்லை. நாம் திராவிட நாட்டில் மோதி அடித்துக்கொள்ளும் நிலை அங்கே இல்லை. பொதுவான ஒரே பாஷைதான் அங்கே அரசு செலுத்துகிறது. எல்லாப் பாஷைகளின் சிறப்புக்களையும் தன்னிடத்தில் கொண்ட ஆங்கிலந்தான் தகுதியான பாஷையாக அங்கே கருதப்பெறும். மொழி ஒன்றாய்ப் போய்விட்டால், உள்ளக் கிடக்கைகளை ஒருவருக்கொருவர் மிகச் சுலபமாய் விண்டு காட்டக்கூடும்.

இந்த யுடோப்பியாவில் வெள்ளை, கறுப்பு, பழுப்பு, சிவப்பு, மஞ்சள் எல்லாச் சாதியார்களும் இன்பமாய் உறைவார்கள். ஒரே வார்ப்பில் வார்த்த ஜனங்களில்லை. ஆனால் மனப்பண்போ உயர்ந்ததாகத் திகழும். அங்கே இனச் சண்டை இல்லை. இனம் என்பது வெறுங் கற்பனையே. இரண்டாவது அத்தியாயத்தில், சுதந்தரத்தின் இயல்பை இவர் துருவி ஆராய்கிறார். பண்டைய யுடோப்பியர்கள் சுதந்தரத்தைப் பொருட்படுத்தவில்லை. அறமும் இன்பமும் இருந்தால் போதுமென்று எண்ணினார்கள். சுதந்தரத்திலிருந்து இவை இரண்டையும் பிரித்து வாழ்க்கையை நோக்கினார்கள். சுதந்தரம் இல்லாமல் அறமும் இன்பமும் நிற்குமோ? நவீன யுடோப்பியாவில் தனித்த மனிதன் வாழ்க்கையைப் பற்றித்தான் மிகுந்த கவலை எடுத்துக்கொள்ளுகிறார்கள். தனித்த மனிதனும் அரசியலும் என்ற பொருளைச் சிந்தித்துப் பார்த்தோமானால், தனித்த மனிதனுடைய நன்மையை நாடியே அரசியல் அமைக்கப்பெற்றிருக்கிறது என்ற முடிவுக்கு வருவோம். ஆனால் மனிதனுடைய சுதந்தரம் சட்ட திட்டத்துக்குப் புறம்பானதன்று. சட்ட திட்டங்கள் நிறைவேறுகிற நிலையில்தான், சுதந்தரப் பயிர் தழைத்தோங்கும். தனி மனிதன் தன்னுடைய உரிமைகளால் பிறரைக் கட்டுப்படுத்துகிறான்; பிறருடைய உரிமைகளால் அவனும் கட்டுப்படுகிறான். ஆடவர்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி அறைகள் அங்கே அமைந்திருக்கும். ஏகாந்தத்தை இந்த யுடோப்பியா துறக்கவில்லை.

பழுதற்ற பாதைகளில் தட்டுத் தடங்க லின்றி இந்த யுடோப்பியாவில் திரியலாம். உலகமே ஓர் அரசியலாக அமைந்த காரணத்தாலும், ஒரே மொழிதான் பேசுவதாலும், உலகத்திலுள்ள அத்தனை மக்களும் இஷ்டப்படி பிரயாணம் செய்யலாம் என்பது சொல்லாமலே விளங்கும். கலை என்பது தனித்தில்லை; வாழ்க்கையே கலையாகும்.

யுடோப்பியாவின் பொருளாதார நிலை தகுதியில்லாமல் போனால், எங்கும் நற்பழக்கங்கள் நடமாடுதல், எல்லோருக்கும் கல்வி அளித்தல், அகில புவனத்துக்கும் ஒரே மொழியை அமைத்தல், சுதந்தர முறையில் எங்கும் கொடுப்பன கொள்வன முறையைச் சமைத்தல், எங்கும் மனித சஞ்சாரத்துக்கு வேண்டிய முயற்சிகளை வகுத்தல் - இவை யாவும் வெறுங் கனவுகளாய்ப் போய்விடும் என்று வெல்ஸ் கருதுகிறார்.

மூன்றாவது அத்தியாயத்தில் நவீன யுடோப்பியாவின் பொருளாதாரத்தை ஆசிரியர் ஆராய்

கிருர். அகில பிரபஞ்சத்தின் நிலங்கள் யாவும் அகில அரசியலுக்குச் சொந்தமாகும். மூலதனம் இதற்கு உரியதா யிருந்தாலும், தனித்த மனிதனுக்குச் சொத்துரிமை உண்டு. சொத்தில்லாமல் போனல் மனிதனுக்குச் சுதந்தரம் அற்றுப்போய்விடும் என்று இவர் எண்ணுகிருர். ஆனல் ஒருவனுடைய சொத்து மற்றெருவனுடைய சுதந்தரத்தைப் பாதிக்குமானல், மனிதனுடைய சொத்துக்கு அரசாங்கம் வரம்பை எழுப்பிவிடும். பணங்கூட மனிதனுடைய சுதந்தரத்துக்கு வேராயிருக்கிறது. பண்டைய யுடோப்பியாக்களில் எல்லா நாசத்துக்கும் மூலகாரணம் பணம் என்று கருதப் பெறுகிறது. இந்தக் கொள்கைக்கு முரணன கொள்கையை உடையவர் வெல்ஸ் என்பது, இவர் தந்த நூலை ஆராய்வோர்க்கு விளங்கும். நாணயமும் ஒரே வித நாணயந்தான். இதனல் பிறக்கிற நன்மைகள் அளவிறந்தன என்பதை நாம் கூறவேண்டியதில்லை. எல்லாரும் வேலை செய்ய வேண்டும். ஆனல் சில பேர்களுடைய ஓய்வு அரசியலுக்கு நன்மை பயக்குமாயின், அவர்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளலாம்.

இந்த மண் உலகத்தில் நிகழ்வதைவிட நவீன யுடோப்பியாவில் நமக்கு இஷ்டமான தொழில்களைப் பெறக்கூடிய வசதிகள் இருக்கின்றன. தொழில் இல்லை என்பது இல்லை. வேலை செய்ய வேண்டிய நேரங்களைக் குறைத்துவிட்டால், அநேகம் பேர்களை வேலைக்குப் பயன்படுத்திக் கொள்ளலாமல்லவா?..எல்லாம் யந்திரத்தின் அலுவல்களாய்ப் போய்விட்டதால், வேலையாட்கள் மிகுதியாய்ப் போய்விட நேரிடும். ஆனல் ஜனத்தொகையின் விரிவைத் தடுத்துவிட்டால், வேலையில்லா நிலை மாறிவிடும். உலகத்தில் உள்ள மக்கள் அனைவர் தொகையையும் காட்டக் கூடிய ஜாப்தா ஒன்று அங்கே தயாரிக்கப்பெறும். அதில் தனித்த ஒவ்வொரு மனிதனுடைய புகைப்படம், விரலின் சுவடுகள், அவனுடைய பிறப்பு, வளர்ப்பு, கல்யாணம், அவனுக்குள்ள நோய் நொடிகள் அனைத்தும் பதிவு செய்யப்பெற்றிருக்கும்.

மக்கள் கண்டபடி பிரஜா உற்பத்தி செய்யக்கூடாது. அவர்களுக்கு அதிகமான பொறுப்புணர்ச்சி வேண்டும். சம்பாதிப்பதற்கு வேண்டிய தகுதி, உடல் நலம், வியாதியின்மை இவை இருந்தால் மணத்துக்கு அரசாங்கம் அநுமதி தரும். பெண்களுக்கு வயசு இருபத்தொன்றும் ஆடவர்களுக்கு இருபத்தாறு அல்லது இருபத்தேழும் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் மணத்துக்கு வேண்டிய உத்தரவு பிறக்கும். தாய்மையை அது மிகவும் போற்றுகிறது. குழந்தை ஈன்ற அன்னைக்குப் பணம் கொடுத்து உதவுகிறது. அரசியல் திட்டத்துக்குச் சற்றுக் குறைவான நிலையில் குழந்தை இருக்குமானல், பணங் கொடுப்பதை நிறுத்திவிடுவார்கள். நவீன யுடோப்பியாவில் முட்டாள்கள், அறிவிலிகள், பைத்தியங்கள், குடிகாரர்கள், பரம்பரையாய் வியாதியை இனிவரும் மாந்தர்களுக்கு அளிக்கும் இயல்புடையவர்கள், திருடர்கள், ஏமாற்றுகிறவர்கள், குற்றவாளிகள் - இவர்களுக்கு இடமில்லை. ஆனல் இவர்களைக் கொன்றுவிட மாட்டார்கள். ஆண்களையும் பெண்களையும் பிரித்துத் தீவுகளில் உள்ள பிரம்மசாரி மடங்களுக்கும், கன்னி மாடங்களுக்கும் கப்பல்களில் ஏற்றி அனுப்பிவிடுவார்கள்.

யுடோப்பியாவில் மரண தண்டனை இல்லை; சிறைச்சாலைகளும் இல்லை.

தேர்தலால் அடையக் கூடிய நன்மைகளைவிட, அரசாங்கத்தில் சான்றேர்கள் புரிகிற சேவைகள் அங்கே சாலச் சிறந்தவை. பிளேட்டோ நிறுவிய குடியரசில் ஜனங்களைக் காப்பாற்றுகிற சான்றேர்களைப் பார்க்கிறேம். சாமுரே (Samurai) என்ற நகர்க்காவலர்கள் சிறந்த அலுவலைப் புரிந்துவருகிருர்கள். இவர்கள் தேர்தல்களினலும், பரம்பரையினலும் இந்த நிலைக்கு வந்தவர்கள் அல்ல. தம் இச்சையாகவே நாட்டுக்குச் சேவை செய்

யக் கங்கணங் கட்டிக்கொண்டு வந்தவர்கள். இருபத்தைந்து வயசுக்கு மேற்பட்ட எந்த அறிவாளிகளும் இந்தச் சான்ருேர்களின் சபையில் சேர்ந்துகொள்ளலாம்.

இவர்கள் சட்டத்தை (The Rule) அநுசரிக்கவேண்டும். மனிதனுடைய உணர்ச்சிகளேயும் மன ஓட்டங்களேயும் ஒழுங்குபடுத்த இந்தச் சட்டம் நிறுவப்பெற்றது. சட்டம் மூன்று பாகங்கள் கொண்டது. தகுதிகளேச் சட்டம் வகுக்கிறது. முக்கியமாக இந்தச் சான்ருேர் சபையில் உள்ள எவரும் கல்லூரிப் பரீட்சைகளில் நன்கு தேறியிருக்க வேண்டும். சிற்றின்பங்களில் காலங் கழிக்கக் கூடாது. ஆகார நியமத்தோடு அவர் நிற்க வேண்டும். புகையிலேயையோ போதையைத் தரக்கூடிய பிறபொருளேயோ அருந்தக் கூடாது. வியாபாரத் தொழிலில் இறங்கக்கூடாது; ஆடல் பாடல்களில் கலந்து கொள்ளக்கூடாது; கூலி வேலே செய்யக்கூடாது; வேலேயாட்களேயும் வைத்துக்கொள்ளக் கூடாது. மிகத் தூய்மை உள்ளவராக இருக்க வேண்டும்; பிரம்மசாரியா யிருக்க வேண்டும் என்ற நிபந்தனே இல்லே. இந்தக் குழுவுக்குள் அவர் மணந்து கொள்ளலாம். இப்படி மணந்து கொள்ளுவது நாட்டின் சேவையாகும். குழுவுக்குப் புறம்பாயுள்ள ஒரு பெண்ணேக் காதலித்தால், அந்தக் குழுவை விட்டுவிட வேண்டும்; அல்லது அவளே இந்தக் குழுவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். நிதம் பத்து நிமிஷங்களாவது இந்தச் சட்ட திட்டப் புத்தகத்தை அவர் பாராயணம் செய்ய வேண்டும்; இயற்கை அன்னே எழிலோடு தாண்டவமாடும் காடுகள், மலேகள் இவைகளிடையே ஒவ்வொரு வருஷமும் அவர் தனியே திரிய வேண்டும். பேனு, பேப்பர், பணம், புத்தகம் இவைகளுள் ஒன்றையும் உடன் எடுத்துச் செல்லக் கூடாது. அப்போழுது தான் அவர் உள்ளம் தூய்மை அடையும். இந்தச் சுருதியில் வெல்ஸ் மொழிகிருர்.

அநேகம் கற்பனே உலகங்கள் தோன்றும். ஒவ்வொன்றும் ஒவ்வொன்றைச் சாதிக்கும். தொத்து நோய்கள் அங்கே இடம் பெற மாட்டா. நாய், பூனே, எலி முதலிய பிராணிகளால் நோய்கள் பரவுகிற காரணத்தால், இவை அங்கே இருக்கமாட்டா. வீடுகள் அப்படி அமைந்திருக்கும். குதிரைகளோ ஆடு மாடுகளோ பாதைகளே அசுத்தம் செய்யமாட்டா. எல்லாம் யந்திரங்களால் நடைபெறும். பல கற்பனே உலகங்கள் தோன்றி இறுதியில் எல்லாம் ஓர் அகில பிரபஞ்ச அரசியல் நிலேக்கு வழிகாட்டி விடும்.

வெல்ஸின் இந்தக் கனவு நிறைவேறுமானுல், இது யுடோப்பியாவாகக் காட்சி அளிக்காது. உலகத்தில் இல்லாத ஒன்றைத்தானே கனவு காண்கிருேம். நம் நற் கனவுகளெல்லாம் நனவாய்ப் போகுமானுல், இனிக் கனவு காண்பதற்குப் பொருள் தோன்ருது அல்லவா?

## மனிதரில் இரண்டே இனம்

எனக்குத் தெரிந்தமட்டும் மனிதரில் திட்டமாக இரண்டு இனங்கள் உண்டு: கடன் வாங்குவதையே தொழிலாகக் கொண்டவர் ஓர் இனம்; கடன் கொடுப்பதையே தொழிலாகக் கொண்டவர் மற்ருேர் இனம்.

—சார்லஸ் லாம்ப்

## அரக்க பலம் வேண்டும்

அரக்கனின் பலத்தைப் பெறுவது மிக நல்லதாகும். ஆனுல், அரக்கனேப் போல் அதை உபயோகிப்பது அநியாயம்.

—ஷேக்ஸ்பியர்



# பௌத்தமும் கிறிஸ்தவமும்



## புரொபஸர் கே. ஸி. சக்கரவர்த்தி

கிறிஸ்தவத்துக்கு ஆதி காலத்தில் பௌத்தம் பெரிதும் உதவியிருக்கிறது என்பதற்கு இவர் மிகவும் ரசமான பல சான்றுகள் கூறுகிறார்.

பாலஸ்தீனத்தில் ஒரு வகைச் சூழ்நிலையில் கிறிஸ்தவம் உதித்தது; பாரத நாட்டில் வேறொரு சூழ்நிலையில் பௌத்தம் பிறந்தது. யூதர்களின் முக்கியமான கொள்கைகள் கிறிஸ்தவத்திலும், ஹிந்துக்களின் முக்கியக் கொள்கைகள் பௌத்தத்திலும் புகுந்தன. தத்துவங்களைப் பொறுத்தவரையில் இந்த இரண்டு சமயங்களுக்குள்ளும் அடிப்படையான வேற்றுமை உண்டு; ஆயினும் சடங்குகள், பிற்காலத்துப் புராணங்கள், வரலாறுகள், பொது நீதிகள் ஆகியவை விஷயத்தில் இவை இரண்டும் பல வகைகளில் ஒத்திருப்பது விந்தையாகத்தான் இருக்கிறது. சாமியார்களின் மட நிர்வாக விஷயத்திலும் மிகுந்த ஒற்றுமை இருக்கிறது.

கடவுள் ஒருவனே என்ற யூதக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது கிறிஸ்தவம். கடவுளின் திருத்தூதர் இங்கு வருகிறார் என்ற யூத நம்பிக்கையினின்றும் அது பிறந்தது. யூதர்களைப் போலவே ஆன்மாவையும், நரகம் சொர்க்கம் ஆகியவற்றையும், சாத்தான், தேவதூதர்கள் முதலியவர்களையும் அந்தச் சமயம் நம்புகிறது. புனர்ஜன்மம், தர்மம், பல தெய்வக் கொள்கை ஆகிய ஹிந்து மதக் கோட்பாடுகளைப் பௌத்தம் ஒப்புக்கொள்கிறது. அது ஆன்மவாதத்தைப் புறக்கணிக்கிறது; கடவுளைப்பற்றி மௌனம் சாதிக்கிறது; ஆனால், ஹிந்து மதத்தினின்றும் அறவே மாறுபட்ட ஒரு புதிய சமயத்தைப் பரப்புகிறது. ஏசு கிறிஸ்துவும் முற்றும் புதிய தத்துவத்தையே போதிக்கிறார். இரண்டு தீர்க்க தரிசிகளின் வாழ்வும் அநுபவமும் மாறுபட்டவை. ஏசு கிறிஸ்து, எளிய குடும்பம் ஒன்றில் பிறந்து, பல இடுக்கண்களையும் ஹிம்சைகளையும் அநுபவித்தவர். புத்தர் அரச குமாரராகப் பிறந்தவர்; எவ்வகை ஹிம்சைக்கும் ஆளாகவில்லை; தமது சமயம் முன்னேறி விளங்கியதைப் பார்க்க அவர் நெடுங் காலம் வாழ்ந்திருந்தார்.

புத்தருடைய பிறப்புக்குப் பிறகு பல நூற்றாண்டுகளில் கற்பனை வரலாறுகள் வளரலாயின. அவருடைய சமயக் கொள்கைகள் மாற்றம் கண்டன. அந்தப் புதிய மதத்தில் ஏராளமான மக்கள் சேர்ந்தார்கள். ஒழுங்கான மத ஸ்தாபனமாக அது உருவெடுத்தது. புத்தர் தவத்தை உபதேசித்தார். தவசிகளான அவருடைய சீடர்கள் பௌத்த சங்கத்தை ஸ்தாபித்தார்கள். சடங்குகளும் சட்டங்களும், பழக்க வழக்கங்களும் குருட்டு நம்பிக்கைகளும் வளரலாயின. கிறிஸ்தவ மதமும் இதே வகையில்தான் நாளடைவில் வளர்ந்தது. இம்மாதிரி விஷயங்களில் இந்த இரண்டு சமயங்களுக்கும் நெருங்கிய ஒற்றுமை இருப்பதைக் காண்கிறோம்.

காப்பிரைட்: இந்தியன் ரெவ்யூ (ஆங்கிலம்: ஜனவரி '58), சென்னை-1.

புத்தருடைய பிறப்பைப்பற்றிய கற்பனை வரலாறுகள், ஏசு கிறிஸ்துவின் பிறப்பைப்பற்றிய செய்திகளைப்போலவே இருக்கின்றன. இருவர் விஷயத்திலும், அவர்களின் பெற்றோர்களுக்குத் தெய்விக அறிவிப்புகள் தோன்றின; இரண்டு குழந்தைகளும் அற்புதமான முறையில், கன்னிகளின் வயிற்றில் பிறந்தன. ''அரசனுடைய உத்தரவின்படி, முப்பத்திரண்டு மாதகாலம், ராணி ஒரு கன்னிகைக்கு உரிய வாழ்வைக் கடைப்பிடித்தாள்'' என்கிறது லலித விஸ்தரம்.

நட்சத்திரம் வழிகாட்ட, கீழ்த் திசை அறிவாளிகள் பெத்லஹேமுக்கு வந்து, ரட்சகரான சிசுவைப் போற்றினார்கள். நட்சத்திரம் வழிகாட்ட (இதைப் புஷ்யம் என்கிறார் கோல்புரூக்), அஸிதர் கபிலவஸ்துவுக்கு வந்து, வருங்காலத்தில் புத்தராகப் போகும் தெய்விகக் குழந்தையைப் பாராட்டினார். புத்தர் பிறந்தபோது, 'அவருடைய எழிலைப் பருக ஆர்வங்கொண்டாற்போல்' குருடர்கள் கண்ணைப் பெற்றார்கள்; செவிடர்கள் இன்னிசையைக் கேட்டார்கள்; ஊமைகள் தமக்குள் பேசிக்கொண்டார்கள்; கூனர்கள் நேராக நிமிர்ந்து நின்றார்கள்; நொண்டிகள் நடந்தார்கள்; கைதிகள் யாவரும் சிறையிலிருந்து விடுபட்டார்கள். ஏசு கிறிஸ்து பிறந்தபோதும் இத்தகைய அசாதாரணச் சம்பவங்கள் நிகழ்ந்தன. இருவரும் அற்புதங்கள் செய்து காண்பித்தார்கள்; இருவருக்கும் பன்னிரண்டு சீடர்கள் இருந்தார்கள். இருவரையும் ஆசைகளால் மயக்க முயன்றதாகக் கதைகள் இருக்கின்றன. இவை யாவும் பிற்காலத்தில் தோன்றிய கதைகளாதலால் இவற்றை நாம் புறக்கணித்து விடலாம். எல்லாச் சமயத்தாருமே தங்கள் குருமாரைப்பற்றி இத்தகைய வரலாறுகளைக் கூறிக்கொள்வதுண்டு.

கௌதமரும் ஏசு கிறிஸ்துவும் மக்களுக்குக் கூறிய போதனைகள் சமமாகவே இருக்கின்றன. 'உனக்குத் தீங்கிழைப்பவர்களுக்கு நன்மை செய். உன்னைப் பகைத்து உனக்கு ஹிம்சை செய்பவர்களிடம் அன்பு செலுத்து; அறநெறியில் செல்ல, உலகைத் துறந்துவிடு.' - கிறிஸ்தவம், பௌத்தம் ஆகிய சமயங்களின் சாரமான கொள்கைகள் இவை. சமயப் பிரசார ஊக்கம் பௌத்தர்களிடத்தும் கிறிஸ்தவர்களிடத்தும் தீவிரமாக இருந்தது. எவ்வகைக் கட்டுப்பாடுமின்றி, யாவருக்கும் புது உண்மையைப் போதிக்கவேண்டும் என்ற ஆவல், அவர்கள் இருவருக்கும் இருந்தது. அவர்களுடைய மொழியும் ஒன்றுபோலவே இருக்கிறது. ''இஸ்ரேல் வீட்டுக் கடைசி ஆடு வரைக்கும் போ. போகும்போது, சொர்க்க அரசு கையில் இருக்கிறது என்று சொல்லி உபதேசம் செய்'' என்கிறார் ஏசு கிறிஸ்து. கௌதமர், ''ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசையில் செல்லுங்கள்; ஒரே வழியில் இருவர் செல்ல வேண்டாம். எவ்விதக் கட்டுப்பாடுமின்றி எல்லாருக்கும் தர்மத்தை உபதேசியுங்கள்'' என்கிறார். உலகில் பெரிய மேதாவிகள் ஒரே மாதிரியாகச் சிந்திக்கிறார்கள்; எனவே, இது அத்தகைய ஒற்றுமையாகவும் இருக்கலாம்.

ஏசு கிறிஸ்து தாம் கூறிய நீதிகளை உதாரணக் கதைகள் வாயிலாக விளக்கியிருக்கிறார். கௌதமரும் ஜாதகக் கதைகளில் உதாரண வரலாறுகளைக் கூறியே, தம் சீடர்களுக்கு நீதியும் அறிவும் புகட்டியிருக்கிறார். உதாரணக் கதை கூறுவதற்கு உதவியாக யூத மதத்திலிருந்து எவ்வகைக் கருவியும் ஏசு கிறிஸ்துவுக்குக் கிடைக்கவில்லை. ஆனால் பௌத்த நூல்களில், கிறிஸ்தவ வேதத்திலுள்ள உவமைக் கதைகளைப் போன்ற அதே கருத்தும் பண்புமுள்ள கதைகள் கிடைக்கின்றன. இந்த ஜாதகக் கதைகள் ஸிரியாவுக்கும் அரேபியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் சென்று, ஐரோப்பிய மக்களின் நாடோடி இலக்கியமாகவும் கட்டுக்கதைகளாகவும் உருவாயின என்பதற்கு வேண்டிய சான்றுகள் இன்று உள்ளன.

புத்தருக்குப் பின்பு ஆயிரம் ஆண்டுகள் கழித்து வளர்ந்த ரோமன் கத்தோலிக்க மதத்தை வைத்துக்கொண்டு ஆராயும் போது, கிறிஸ்தவத்துக்கும் பௌத்தத்துக்கும் உள்ள ஒற்றுமை பின்னும் உறுதிப்படுகிறது. கிறிஸ்தவர்களின் சடங்குகள், மடத்துக் கட்டுப்பாடுகள், ஆலய ஸ்தாபனம், அவ்வளவேன், சர்ச்சுக் கட்டிடங்கள்கூட, பௌத்த மதத்தோடு ஒற்றுமை கொண்டிருக்கின்றன.

கிறிஸ்தவர்களின் ஞானஸ்நானம் பௌத்தர்களின் அபிஷேகத்துக்கு இணையானது. கிறிஸ்தவன் ஞானஸ்நானத்தின்போது பரமபிதா, தேவகுமாரர், பரிசுத்த ஆவி ஆகிய மூன்றையும் ஒப்புக்கொள்வதுபோலவே, பௌத்தன் புத்தர், தருமம், சங்கம் ஆகிய மூன்றையும் ஒப்புக்கொள்கிறான்.

கிறிஸ்தவச் சாமியார் தலையைச் சிரைத்துக்கொண்டு, தொளதொளவென்ற மேலங்கியும், உயர்ந்த தொப்பியும் அணிந்து கையில் கோல் பிடித்திருப்பார். பௌத்தத் துறவியும் இதுபோலவே இருப்பார். ரோமன் கத்தோலிக்கர்களுடைய கோயில் வழிபாட்டின் போது, பாடகர்கள் பாடுவார்கள், முன்னால் சிலர் செய்யுட்களைப் பாடிச் செல்லப் பின்னால் வருபவர்கள் அவற்றைத் திருப்பிச் சொல்வார்கள்; கையில் ஜபமாலை வைத்துக்கொண்டு பிரார்த்தனைகளை எண்ணுவதும், சங்கீதம் பாடுவதும் அவர்கள் வழக்கம். பௌத்தர்களிடமும் இந்த வழக்கங்கள் யாவும் உண்டு. கிறிஸ்தவச் சாமியார்கள் மணம் செய்து கொள்வதில்லை; புனித நாமங்களைச் சொல்லிப் பேய் பிசாசுகளை ஓட்டுவார்கள்: பாவ மன்னிப்புக் கோருவார்கள்; நோன்பு நோற்பார்கள்; தவம் புரிவார்கள்; மகான்களை வழிபடுவார்கள்; கோயில்களிலும் பலிபீடங்களிலும் மலர்களையும் தீபங்களையும் விக்கிரகங்களையும் பயன்படுத்துவார்கள். பௌத்தர்களும் இதே மாதிரி செய்வார்கள். ஏசு கிறிஸ்துவின் முகமண்டலத்தைச் சுற்றி ஒளிவட்டம் உண்டு; அது போலவே புத்தருக்கும் உண்டு. ரோமன் கத்தோலிக்கர் தாயத்து அணிவார்கள்; கோயில்களில் சமூகப் பிரார்த்தனை நிகழ்த்துவார்கள்; இறந்தவர்களுக்காகப் பிரார்த்தனை செய்வார்கள். இவை யாவும் பௌத்தர்களுக்கும் உண்டு.

கோயில் கட்டிடக் கலையிலும் பௌத்தர்களுக்கும் ரோமன் கத்தோலிக்கருக்கும் மிகுந்த ஒற்றுமை இருக்கிறது. புனாவுக்கு அருகிலுள்ள கார்லே குகைக் கோயில், பழமையான கிறிஸ்தவச் சர்ச்சுகளின் அமைப்பை நினைவூட்டுவதாகப் பர்க்குஸன் குறிப்பிட்டிருக்கிறார்.

திபேத்துக்கும் சீனாவுக்கும் முதல்முதலில் யாத்திரை செய்த ரோமன் கத்தோலிக்க மிஷனரிகள் இந்த ஒற்றுமையைக் கண்டு வியந்து, தங்கள் கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த ஒற்றுமை எவ்வாறு ஏற்பட்டது என்பது சரித்திர ஆராய்ச்சிக்கு உரிய விஷயம். பௌத்த மதத்திலுள்ள பல விஷயங்களைக் கிறிஸ்தவம் எடுத்துக்கொண்டது போலவே, கிறிஸ்தவத்திலுள்ள சில சிறப்புக்களைப் பிற்காலத்துப் பௌத்தமும் எடுத்துக்கொண்டிருக்கக் கூடும். இதைப்பற்றிய விரிவான ஆராய்ச்சி மிகவும் சுவையுள்ளதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

## பையன்கள் நினைவு

சில பையன்கள் எந்நேரமும் பெண்களைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருப்பதில்லை. ஆனால், அவர்கள் சிந்திக்க ஆரம்பித்தால், அது பெண்களைப்பற்றியே செல்கிறது.

—'ரீ- ஸா'

பெண்கள் நோன்பெடுத்து விரதம் இருப்பதிலே சில பயன் உண்டு; பாக்கியம் உண்டு.

# வாழ உதவும் நோன்பு

கொத்தபல்லி ரவிவர்மா

பழங்காலத்திலும் இடைக்காலத்திலும், பெண்கள் மாமியார் வீட்டில் முறையான வாழ்க்கை நடத்தக் கற்றுக்கொள்ளவும் மாங்கல்யத்துக்குக் காவலாகவும் பல விரதங்களும் நோன்புகளும் ஏற்பட்டிருந்தன. இந்தக் காலத்தில் மேல்நாட்டு நாகரிகமும் நாஸ்திகக் கொள்கையும் இவற்றை எள்ளி நகையாடலாம். ஆனால் இந்த விரதங்களும் நோன்புகளும் அந்தக் காலத்துப் பெண் சமூகத்துக்கு எவ்வளவோ சாதகமாய் இருந்திருக்கின்றன. இவற்றால் அவர்களுடைய அறிவு விசாலம் அடைந்தது. இப்போது நம் ஆந்திரப் பெண்மணிகளுக்கு மிக நன்றாய்த் தெரிந்தவையும் வழக்கத்தில் இருப்பவையுமான சில நோன்புகளை மட்டும் பார்ப்போம்.

**பதகம்ம பண்டுக:** சாந்திரமான ஐப்பசி மாதம் சுக்கிலப் பிரதமை முதல் மகா நவமி வரையில் (நவராத்திரி காலம்) பெண்கள் 'பதகம்மா'வைப் பூஜிப்பார்கள். இந்த உற்சவத்துக்கு முன்பு, ஒன்பது நாள் 'பொட்டம்மா'வின் பண்டிகை நடக்கும். அது மாளய அமாவாசையோடு முடியும். இவற்றுள், ஒரு நாள் வருஷ ருதுவின் முடிவையும், மற்றொரு நாள் சரத் ருதுவின் தொடக்கத்தையும் காண்பிக்கின்றன. 'பொட்டம்மா' பண்டிகை கொண்டாடும் நாளில் சிறுமிகள் ஒரு மணையின்மேல் மண்ணால் சுவர் அமைத்து, நாலு ஓரங்களிலும் பூக்களைச் செருகி, கலசம் வைத்து விளையாட்டாகவே பூஜையை முடிப்பார்கள். இந்தக் காலத்தில் பூக்கள் ஏராளமாய்க் கிடைக்கும். அதனால் பூவாலேயே பதகம்மாவை உயரமாக அடுக்குவார்கள். பூஜையில் சிறுமிகள் எல்லாரும் பாடி ஆடுவார்கள். ஒன்பதாம் நாள் எல்லோருமாக அவரவர் அம்மனைக் குளத்திலோ ஆற்றிலோ விடுவார்கள். உல்லாசமான பண்டிகை இது.

**நாக சதுர்த்தி:** இதை இன்றைக்கும் சாதாரணமாக எல்லோரும் கொண்டாடுவதால், இதைப்பற்றி அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. கார்த்திகைச் சுக்கில சதுர்த்தியன்று கொண்டாடுவார்கள். பாம்பின் பூஜை விசேஷம்.

**நித்திய சிருங்காரம்:** இதுவும் விளையாட்டான நோன்பு. ஆனால் பரம்பரை வழக்கத்தையும் மரியாதையையும் பழக்கும் ஒன்று. இதைத் தொடங்கிய சிறுமிகள், தினந்தோறும் மாலை நேரத்தில் ஒரு சுமங்கலியின் காலுக்கு மஞ்சள் பூசி நலங்கிட்டு, தாம்பூலம் கொடுத்து, சீப்பால் வகிடு எடுத்துக் கண்ணாடி காட்டவேண்டும். பேதைப் பருவம் தாண்டிப் பெதும்பைப் பருவத்தில் கால் வைக்கும் சிறுமிக்கு, இது அழகு செய்துகொள்ளும் முறையைப் பழக்கும் நோன்பு.

**ஊமை நோன்பு:** தீபாவளியன்று தொடங்கிக் கார்த்திகைப் பூர்ணிமை வரையில் சிறுமிகள் இந்த நோன்பை நடத்துவார்கள். தினந்தோறும் மாலை நேரத்தில் நாலு மணிக்குச் சாப்பிட்டுவிட்டு அலங்காரம் செய்துகொண்டு, கௌரி தேவியைப் பூஜித்து ஊரில் இருக்கும் சுமங்கலிகளுக்குக் குங்குமம் இட்டுவிட்டு வரவேண்டும். பிறகு நட்சத்திரங்களை எண்ணவேண்டும். நட்சத்திரங்கள் தெரியாவிட்டால் விளக்கருகே சல்லடையைப் பிடித்துக்கொண்டு, அதன் துளைகளை எண்ணவேண்டும். இப்படி எண்ணி முடியும் வரையில்

மூலம்: ஆந்திர மகிளா (தெலுங்கு: பிப்ரவரி '58), சென்னை.

மௌனமாய் இருக்கவேண்டும். இதை மூன்று வருஷ காலம் தொடர்ந்து செய்வார்கள். பேச்சை அளவாய் உபயோகிக்க இது வழிகாட்டி.

**பொம்மை நோன்பு:** இந்த நோன்பில் சாவித்திரி, கௌரி, பிராம்மணர் இந்த மூவர் பொம்மைகளும் முக்கியமாய் இருக்கவேண்டியவை. ஒன்பது நாட்கள் வரையில் தினந்தோறும் வேறு வேறுவிதமான பட்சணங்களைச் செய்து நிவேதனம் செய்வார்கள். இது ஒன்பது வருஷம் அநுஷ்டிக்கும் நோன்பு. தினந்தோறும் பூஜையோடு பிரார்த்தனையாய்ச் சில வாக்கியங்களைப் பாட்டாகப் பாடுவார்கள்.

அரிசியில் கையை விட்டு அளைந்து கொண்டே, ''தாயாரின் தண்டனை, தகப்பனாரின் தண்டனை, மாமியாரின் தண்டனை, மாமனாரின் தண்டனை, புருஷனுடைய தண்டனை, ராஜ தண்டனை, யமதண்டனை இவை எல்லாம் எந்தக் காலத்திலும் வேண்டாம்! சகோதர தண்டனை நிறைய வேண்டும். சொர்க்கத்துக்குப் போனாலும் சக்களத்தி போர் வேண்டாம். மாடிக்குப் போனாலும் மாற்றாந் தாய் வேண்டாம். சாவித்திரி கௌரி தேவியே, உன் தண்டனை என்றைக்கும் கிடைக்க வேண்டும்'' என்று வேண்டிக் கொள்வார்கள்.

விளக்கைத் தண்ணீரில் நிழலாடச் செய்துகொண்டே, ''பார்த்தேன், பார்த்தேன்.-என்ன பார்த்தாய்?-தேவியையும் தேவரையும் பார்த்தேன்.-தேவியும் தேவரும் என்ன செய்கிறார்கள்? - முத்தாலும் ரத்தினத்தாலும் சூதாடுகிறார்கள். - யார் ஜயித்து யார் தோற்றார்கள்? - இருவரும் ஒரே சமந்தான்.-அதற்கு யார் சாட்சி? - நந்தி சாட்சி, நாகமையா சாட்சி; கோட்டை சாட்சி; கொம்பனையாள் சாட்சி; கோட்டைக்குள் இருக்கும் பஞ்சாங்கப் பிராம்மணன் சாட்சி; இடப்புறத் திருக்கும் எல்லம்மா சாட்சி; வலப்புறத் திருக்கும் கங்கம்மா சாட்சி; சாவித்திரி கௌரி தேவம்மா, உனக்கு நான் சாட்சி; எனக்கு நீ சாட்சி!'' என்பார்கள்.

தலைமேல் தீர்த்தத்தைப் புரோட்சித்துக்கொண்டு, ''கண்டேன், கண்டேன்; எல்லாங் கண்டேன். கீழே வீடு கண்டேன். மேலே படிகளைக் கண்டேன். சாவித்திரி கௌரியைக் கண்டேன். ஆசைப்படாத பிள்ளைகளைக் கண்டேன். குறையாத சௌபாக்கியம் பெற்றேனே. பிரியாமல் ஸ்ரீ கௌரி பாதங்களைக் கண்டேன்'' என்று முடிப்பார்கள்.

**கன்னித் துளசி நோன்பு:** மற்ற நோன்புகளைக் கலியாணமான சிறுமிகள் செய்வார்கள். இதையோ கலியாணம் ஆகாத கன்னிப் பெண்களே செய்வார்கள். விடியற் காலையில் எழுந்திருந்து குளித்துச் சுத்தமாய்த் துளசி மாடத்தின் கீழ் அம்மனை உத்தேசித்து ஐந்து பத்மங்களால் கோலம் இடுவார்கள். ஐந்து திரிகளைச் சேர்த்து விளக்கேற்றிப் பூஜிப்பார்கள். இதை ஒரு சிவராத்திரி யன்று தொடங்கி ஒரு வருஷ காலம் முடியச் செய்வார்கள்.

**அட்லதத்தி** (தோசை நோன்பு): ஐப்பசித் திரிதியை யன்று ரோகிணியுடன் சேர்ந்திருக்கும் சந்திரனைச் சிறுமிகள் பூஜிப்பார்கள். சந்திரனைப் போன்ற கணவனை அடைவதே இதன் நோக்கம். விடியற்காலையில் தயிரன்னம் சாப்பிட்டுக் காலை வரையில் விளையாடுவார்கள். பகல் முழுவதும் உபவாசம் இருந்து சந்திரோதயம் ஆனபின் பூஜை செய்து சாப்பிடுவார்கள். இதைப் பத்து வருஷ காலம் தடை நேராமல் செய்ய வேண்டும். விரதத்தில் குற்றம் நேர்ந்தால், தண்டனை கிழவனை மணப்பது.

**உதய குங்குமம்:** இந்த நோன்பு நோற்கும் பெண்கள் சூரியோதயத்துக்குமுன் கண்விழித்து, சுமங்கலிக்குக் குங்குமம் இட்டுத் தாமும் அலங்காரம் செய்து கொள்ள வேண்டும்.

**வயல் அமாவாசை:** வயசு வந்த பெண்கள் குழந்தைகளின் நலனுக்காகச் செய்யும் விரதம் இது. முண்டும் முடிச்சுகளும் நிறைந்த கருணைக்கிழங்குக்கு மஞ்சள் பூசிக் குங்குமம் இட்டு வணங்குவார்கள்.

தோரணங்களாக மஞ்சள் கொம்பு களைக் கட்டி அந்த மாலையைக் கழுத்தில் அணிவார்கள். கடைசியில், ''சக்தி தவறினாலும் பக்தி தவறக் கூடாது; வாக்குத் தவறினாலும் வரம் தவறக் கூடாது; எழுத்துத் தவறினாலும் சுமங்கலித் தனம் தவறக் கூடாது'' என்று வேண்டிக்கொள்வார்கள்.

**தம்பதி தாம்பூலம்:** இதைத் தொடங்கிய பெண்கள் தினந்தோறும் யாராவது தம்பதிகளுக்குத் தாம்பூலம் கொடுத்து வணங்கி அவர்கள் அட்சதை போட ஆசி பெறுவார்கள். தம்பதிகளின் ஆசீர்வாத பலத்தால் நோன்பு எடுத்த பெண்ணும் கணவனுடன் அன்பும் ஒற்றுமையும் பெற்று வாழ்வாள் என்பது இதன் கருத்து.

**சிட்டி பொட்டு:** கலியாணம் ஆன பெண்கள் தினந்தோறும் ஐந்து சுமங்கலிகளுக்கு மஞ்சள், குங்குமம், சந்தனம், அட்சதை இவற்றைப் பொழுது விடியும்போதே நெற்றியில் இட்டு வணங்குவார்கள். மங்கலச் சின்னமான மஞ்சள் குங்குமங்களில் சிறுமிகள் அக்கறை கொள்வதற்காகவே இந்த நோன்பு ஏற்பட்டது.

இப்படி இன்னும் பல நோன்புகள் இருந்தாலும் அவை இப்பொழுது ஒவ்வொன்ருய் மறைந்து வருகின்றன.

## டன்னல் இருட்டில்

''கண்ணே, அந்த டன்னல் இவ்வளவு நீளமாயிருக்கும் என்று தெரிந்திருந்தால், உன்னை முத்தமிட்டிருப்பேனே.''

''அட ஆண்டவனே! அப்படியானல் அது நீங்கள் இல்லையா?''

—'க்விப்ஸ் அண்ட் க்விஸஸ்'

## பகைவனைப் படைக்கலாம்

உனக்கு ஒரு பகைவனைப் படைத்துக்கொள்ள விருப்பமா? அப்படியென்ருல், ஒரு மனிதனுக்குக் கொஞ்சம் பணத்தைக் கடன் கொடு; பிறகு அதைக் கேள்.

—போர்ச்சுகீஸ் பழமொழி

## யாரைப் போற்றுகிரேம்?

நாம் யாரைப் போற்றுகிரேம்? இதற்கு விடை சொல்வது மிகச் சுலபம். மகாகவி ஷேக்ஸ்பியர், பௌதிக நிபுணர் நியூட்டன், பரிணும விஞ்ஞான நிபுணர் டார்வின் இவர்களுடைய சிலைகளின் உயரத்தோடு, பிரபல தளபதி நெல்ஸன் சிலை உயரத்தை ஒப்பிட்டுப் பாருங்கள். இந்த உயர விகிதாசாரப்படிதான் அவர்களை மதிக்கிரேம். மனித குலம் முழுவதற்கும் செய்யும் சேவையைவிட எதிரிகளை அழித்தொழிக்கும் வீரமே அதிக முக்கியம் என்று நாம் கருதுகிரேம்.

அறிவே பலம். ஆனல், அந்தப் பலம் நல்லது செய்யவும் உபயோகப்படுகிறது; தீயது செய்யவும் உபயோகப்படுகிறது. விஞ்ஞான அறிவு வளர வளர, நல்லது செய்யவும் தீயது செய்யவும் சம அளவில் மனிதனுடைய பலம் அதிகரிக்கிறது.

நவீன யந்திரக்கலை அபிவிருத்தியைப் பார்க்கும்போது உண்மையிலே முக்கியமான ஒரு கேள்விதான் எழுகிறது. ''மற்றக் கிரகங்களில் போய் மனிதன் குடியேற முடியுமா?'' என்பதல்ல அந்தக் கேள்வி; ''நம் சொந்தமான இந்தக் கிரகத்திலே அவன் வாழ முடியுமா?'' என்பதே அது.

—பெர்ட்ராண்ட் ரஸ்ஸல், 'தி ஸாட்டர்டே டைம்ஸ்'.

ஜாதி வெறி கூடாது; இதற்காக அந்த முறையையே வெறியுடன் தாக்குவது சரியா?

# ஜாதியால் நன்மையே

**டி. வி. ராமராவ்**

ஹிந்து மதம் பெரும்பாலும் சம்பிரதாயம், சதாசாரம்-அதாவது, பழைய வழக்கம் நல்லொழுக்கம் - இவைகளை அனுசரித்து வரும் தர்ம மார்க்கமாகும். ஆனாலும், அது அப்படிக் கட்டுப்பாடான சமய ஸ்தாபனங்களுக்கு உட்பட்டது அன்று. பழைய பழக்க வழக்கங்களே ஜாதிப் பாகுபாட்டுக்கு ஆக்கம் அளித்தன. அதனால்தான், ஜாதியை ஒழிக்கப் பார்த்த சீர்திருத்த இயக்கங்களெல்லாம் பின்னும் பல ஜாதிப் பிரிவுகளுக்குக் காரணமாயின. அப்படியும் ஹிந்து தர்மத்தின் அடிப்படையான போக்குத் தடைப்படவில்லை.

ஆயிரக் கணக்கான ஜாதியும் அவற்றின் உட்பிரிவும் காரணமாக, ஹிந்து சமூகம் பிளவு பட்டுவிட்டது என்று சிலர் சொல்கிறார்கள். பெரும்பாலான ஜாதிப் பெயர்கள், ஒரே ஜாதிக்கு அந்த அந்தப் பிரதேசத்தில் மாறி வழங்கும் பெயர்களாகவே இருக்கின்றன. ஆனால், இப்போதெல்லாம் யாரும் - அதிலும் தென்னிந்தியப் பிராம்மணர்கள் - உட்பிரிவைப் பாராட்டுவதில்லை. பத்திரிகைகளில் வரும் விளம்பரங்களைப் பார்த்தால் இது தெரியும். இந்த உட்பிரிவுகளையெல்லாம் வர வர ஒழித்துக் கட்டித்தான் வருகிறார்கள். தாவர உணவுக்காரர், மாமிச உணவுக்காரர் என்ற வேற்றுமையை மட்டும் அனுசரித்துச் சமபந்தி போஜனம் செய்வது சகஜமாகிவிட்டது; மற்றப்படி வேறுபாடெல்லாம் மெல்ல மெல்ல மறைந்து வருகின்றன. அடியோடு ஜாதியை ஒழிப்பது என்பது அவ்வளவு விரைவில் முடிகிற காரியமல்ல; அப்படி ஜாதி ஒழிந்தாலும் அதனால் ஒரேயடியாக நன்மை ஏற்பட்டுவிடும் என்றும் சொல்லிவிடுவதற்கில்லை.

ஜாதி அடிப்படையில் எந்த விதமான அரசாங்கச் சட்டமும் இராததால் இனிச் சமூகத்தில் ஜாதி காரணமாகப் பிளவு ஏற்பட வழி இல்லை. ஜாதிக் கட்டுக்கோப்புக் காரணமாகச் சில சமூகத்தினர் எப்போதும் ஒரே தொழிலைச் செய்து கொண்டிருக்கவேண்டியிருக்கிறது என்று சிலர் சொல்கிறார்கள். கல்வித் துறையிலும் உத்தியோகத் துறையிலும் எல்லாரும் சரி சமானமாக (ஏன், சிலருக்கு அதை விட அதிகமாகக்கூட வசதி கிட்டுகிறது) முன்னுக்கு வர இன்று வாய்ப்பு இருப்பதால், ஒரே தொழிலைச் செய்துகொண்டிருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அதோடு, முக்கியமான ஒரு விஷயத்தையும் கவனிக்க வேண்டும். தொழில் முறையை அடிப்படையாகக் கொண்ட ஜாதிப் பாகுபாட்டைப் பொறுத்த மட்டில் இன்ன இன்னாருக்கு இன்ன இன்ன தொழில் என்று வரையறுத்து இருப்பதால், நிச்சயமாக ஒரு ஜீவன வசதி இருக்கிறதென்று ஆகிறது. பாரம்பரியமாக வந்த தொழில் திறமையும் அதோடு சேர்ந்தால் கேட்பானேன்! படித்துவிட்டு உத்தியோகம் இல்லாமல் திண்டாடும் பேர்வழிகளைப் பார்த்தால், உண்மை நிலைமை புரியும். ஒரு குடும்பத்தைச் சேர்ந்த எல்லாருமே, குலத்தொழிலில் நல்ல ஊதியம் கிடைப்பதாக இருந்தால், அதையே செய்யலாம்; இவர்களில் சிலர் தங்களுக்கு ஏற்ற வேறு ஏதாவது நல்ல வேலையில் சேர்ந்தாலும், 'எப்படியும் நம் குலத் தொழில், சமயத்தில் கைகொடுக்கும்' என்று நிம்மதியோடு இருக்க

மூலம்: தாட் (ஆங்கிலம்: 4-1-'58), 35, ஃபைஸ் பஜார், டில்லி.

லாம். இப்படி ஒரு நிச்சயம் ஏற்படுவதோடு ஹிந்து சமூகம் நிலை குலையாதபடி ஜாதிமுறை பாதுகாக்கிறது. இதோடு, 'இன்ன ஜாதியைச் சேர்ந்தவர்கள் நாம்' என்று மனசில் ஒரு திருப்தி ஏற்பட்டு, அதனால் மனவுறுதியும் ஆரோக்கியமும் உண்டாகும். ஜாதி வேற்றுமை பாராட்டுவதில்லை என்று சொல்லிக்கொண்டு மேல் வாரியாக நவ நாகரிகப் போக்கில் ஈடுபட்டு, 'எந்த வகையைச் சேர்ந்தவர்கள் நாம்' என்று புரியாமல் கிடக்கும் பேர்வழிகளின் நிலைமையைவிட, இது எவ்வளவோ மேல் அல்லவா?

''ஒரு ஜாதியாரே (க்ஷத்திரியர்) ஆயுதம் பயிலலாம் என்று கட்டுப்படுத்தியதால், ஹிந்துக்களில் மற்ற ஜாதியார் பலவீனமாகி விட்டார்கள்'' என்று சிலர் சொல்கிறார்கள். அது பொருத்தமாகப் படவில்லை. மகாபாரத காலத்திலிருந்தே எல்லா ஜாதியிலுமே அநேகம் பேர் ஆயுதப் பயிற்சி செய்து வந்திருக்கிறார்கள்; அதிலும், பிராம்மணர்கள் அஸ்திர சஸ்திர வித்தை கற்பித்து வந்தார்கள்! ஆதி நாளிலிருந்தேகூட விவசாயமும் ஆயுதம் பயில்வதும் இன்ன இன்ன ஜாதிக்குத்தான் உரியவை என்று வரையறுக்கவில்லை.

ஜாதியை வெறுக்கும் நவநாகரிகப் பேர்வழிகளுங்கூடச் சமூகத்தில் ஏற்றத்தாழ்வு பாராட்டத்தான் பாராட்டுகிறார்கள். இன்னும் கேட்கப் போனால், இந்த நவநாகரிகப் பேர்வழிகள் ஒரே ஜாதியில் சம அந்தஸ்தில் இருப்பவர்களோடுதான் சம்பந்தம் செய்து கொள்கிறார்கள். தவறிக் கலப்பு மணம் செய்துகொள்பவர்களுடைய சந்ததிகளும் தனி ஜாதியினராகவே மாறிவிடுகிறார்கள். இது நல்லதா? வெவ்வேறு மதம், கோஷ்டி, வகுப்பு இவைகளைச் சேர்ந்தவர்கள் இணைந்து பழக முடியும் என்றால், வெவ்வேறு ஜாதியைச் சேர்ந்தவர்களும் ஏன் பழக முடியாது?

ஜாதி வேற்றுமை என்ற பகை சமீப காலத்தில் ஏற்பட்டது. அதுவும் 'பிராம்மணரல்லாதார்' என்று சொல்லிக்கொண்டு சில அரசியல்வாதிகள் கடைப்பிடித்த தவறான கொள்கை காரணமாகவே இது மூண்டது; 'காங்கிரஸல்லாதார்' என்றால் என்ன அர்த்தம்? அது போலத்தான் இதுவும். மனசில் குழப்பம் ஏற்பட்டதன் விளைவாகத்தான் பிராம்மண எதிர்ப்பு இயக்கம் போன்ற துவேஷ இயக்கங்கள் ஏற்பட்டன. 'அமைதி, சால்பு, அறிவு முதலிய அருமையான பண்புகளைக் கொண்ட தென்னிந்தியாவிலா இப்படி ஓர் இயக்கம்!' என்று தென்னாட்டின்மேல் அபிமானம் கொண்டவர்கள் திகைக்கிறார்கள்.

ஜாதிச் சின்னங்கள் என்று சிலவற்றைச் சொல்வதும் சுத்த அபத்தமே! ஹிந்துக்களில் எல்லா ஜாதியாருமே குடுமி வைத்திருக்கிறார்கள்; சந்தனம், நாமம், திலகம், விபூதி இப்படி அவரவர் கோட்பாட்டுக்கு ஏற்றபடி நெற்றிக்கு இட்டுக் கொள்கிறார்கள். ஹிந்துப் பெண்மணிகளில் சுமங்கலிகள் எல்லாருமே குங்குமம் அல்லது சிந்தூரம் இட்டுக் கொள்கிறார்கள். இப்படி இடக்கூடாது என்பவர்கள், இறுகப் பிடிக்கும் 'சுடிதார் பாய்ஜாமா'வும் அணியக்கூடாது என்று சொல்வதற் கென்ன? இப்போது சர்க்கார் உத்தியோக வேட்டையில் ஈடுபட்டிருப்பவரின் 'ஜாதிச் சின்னம்' இதுதான்!


தேர்தல் முதலியவற்றில் ஜாதிப் பாகுபாடு பார்ப்பது ஜனநாயகத்துக்கு ஊனந்தான்; இன்ன கோஷ்டி, இன்ன வகுப்பு என்று பார்ப்பதும் அதேமாதிரிதான். அங்கங்கே உள்ள ஊர்களில் வக்கீல்களும் தையற்காரர்களும் டாக்டர்களும், அபேட்சகர் திறமைசாலியா இல்லையா என்று பார்க்காமல் தம் தம் தொழில்துறையில் ஈடுபட்டவர்களுக்கே வாக்களிப்பதைப் பார்க்கிறோம். 'அரசியலில் நமக்கு அநுபவம் போதாது. விஷயம் என்னவென்றே நமக்கு விளங்கவில்லை' என்பதைத்தான் இவையெல்லாம் காட்டுகின்றன.

ராமகதையால் இமயம் முதல் குமரிவரையில் தோன்றிய உற்சவங்களில் ஒன்று இது:

# ராம லீலா

## பரிமளசந்திர முகர்ஜி

முன் காலத்தில் அரசர்கள் இலையுதிர் காலத்தில் திக்விஜயம் செய்யவும், வியாபாரிகள் வாணிகம் செய்யவும் புறப்படுவது வழக்கம். காலம் மாற மாறப் பழக்கவழக்கங்களும் மாறிவருகின்றன. இன்று அரசர்களோ வியாபாரிகளோ இலையுதிர் காலம் வரும்வரையில் காத்திருப்பதில்லை. ஆனால் முன்போலவேதான் அந்தப் பருவத்தில் வெண்மேகங்கள் குருகுகளைப் போல் சிறகு விரித்து வானத்தில் பறந்து செல்கின்றன; கருநொச்சி மலர்களும் இயற்கையன்னையின் திருவடிகளுக்கு அணி செய்கின்றன. அந்த மணத்தால் மனித உள்ளத்தில் இன்பம் மூள்கிறது. மழை நாள் ஓய்ந்துவிட்டதால் மக்கள் வெளியே தம் விருப்பம்போல் சுற்றுகிறார்கள். வங்காளிகள் எட்டுக் கரங்கொண்ட துர்க்கையை வழிபடுகிறார்கள். தென்னிந்தியர் நவராத்திரி விழாக் கொண்டாடுகிறார்கள். மகாராஷ்டிரரின் உள்ளத்தில் மகாசக்தி புது வலிமை ஊட்டுகிறாள்; வட நாட்டில் பெரும்பாலான இடங்களில் அதே சமயம் 'ராம லீலா' விழா நடைபெறும். ஆதி கவி வால்மீகியின் காவியம் புத்துயிர் பெற்று வந்ததுபோல் இருக்கும், மக்கள் எங்கும் 'ராமநாடகம்' போட்டுக் களிக்கும் காட்சி.



ராவணனாகப் பாவித்துக் கட்டிய இந்த உருவத்தை ராம லீலாவில் எரிப்பார்கள்

நவராத்திரியில், கோயில்களிலும் தனி இடங்களிலும் துர்க்கையின் பிரதிமையை மண்ணில் செய்து வழிபடுகிறார்கள். ஆனால் 'ராம லீலா'வைப் பரந்த வெளியில்தான் நடத்துவார்கள். பல பேர் பல வேஷத்தில் வரக் குறுகிய இடம் போதுமா? திறந்த வெளியில் ஜப்பல்பூர், தேராதூன் முதலிய இடங்களில் இப்படி நாடகம் நடைபெறும். ராமர், சீதை, தசரதன், ராவணன் இப்படி முக்கியமான பாத்திரங்களுக்கு மட்டுமே ஆசனங்கள் உண்டு. மற்றவர்கள் நின்றுகொண்டேதான் நடிப்பார்கள். சில சமயம் பேசாமல் அபிநயம் மட்டும் செய்வார்கள் - அதாவது, சற்றுநேரம் நின்றுவிட்டு மேடையிலிருந்து போய் விடுவார்கள். மக்கள் மனத்தில் பதியும்படி சில சமயம் நாடக ரீதியில் பேசியும் பாடியும் காட்டுவார்கள்.

மொத்தம் பத்து நாள் இந்த விழா நடக்கும்; பல இடங்களில் ஒன்றரை மாசம் வரைக்குங்கூட இந்த நாடகங்கள் நடக்கும். பணம் சேரும் அளவைப் பொறுத்து விழா சிறப்பாகவோ சுமாராகவோ இருக்கும்.

இந்த 'ராம லீலா' நாடகத்தில் வேஷம் போடுகிறவர்கள் அந்தப் பத்து நாளும் மிகவும் தூய்மையாக இருந்து வரவேண்டும். அதற்கு

காப்பிரைட்: ப்ரபாஸி (வங்காளி: அக்டோபர் '57), கல்கத்தா.

ஏற்றபடி நாடகம் பார்ப்போரும் அவர்களிடம் மதிப்பு வைத்தே நடந்துகொள்வார்கள்; ஏன், நாடகம் என்பதையும் மறந்து, முக்கியமாக ராம சீதா லட்சுமணர்களைப் பக்தியுடன் வணங்கித் தங்களால் ஆன காணிக்கையை அளிப்பார்கள். கொஞ்ச நேரமாவது உலகக் கவலைகளையும் காமக் குரோதங்களையும் மறந்து இருப்பார்கள். பொதுமக்களும் ஒத்துழைப்பதால் தான் இந்த விழா சிறப்பாக நடக்கிறது. 'சீதா கல்யாண'த்தன்று அக்கம் பக்கம் இருக்கும் வீட்டாருடைய உற்சாகம் கட்டுக்கடங்காது. சீதை, ராமன் வேஷம் போட்டிருப்பவர்களைத் தேரில் ஏற்றி ஊர்வலமாக அழைத்துப் போவார்கள். இப்படி வடக்கே ஒவ்வோர் ஊரிலும் அன்று கொண்டாட்டமாக இருக்கும். எங்கும் நாகசுரத்தின் இன்னிசை கேட்கும். அன்புக் கடவுள் தம் சக்தியுடன் இணையும் நாள் அது.

விஜயதசமி அன்றுதான் 'ராவண வதம்' நடக்கும். அன்றோடு 'ராம லீலா' விழா முடியும். அன்று திறந்தவெளியில் வானத்தை முட்டுவதுபோல் மூங்கில், சவுக்கு இவற்றால் ஓர் உருவம் செய்து அதன்மேல் காகிதம் ஒட்டிக் கை கால்களுக்கு ஆலமரக் கிளைகளைக் கட்டியிருப்பார்கள். அதன் வயிற்றில் தின்பண்டங்களை வைப்பார்கள். இருட்டியதும் மக்கள் திரண்டு விடுவார்கள். அந்த வெளியில் உருவத்தைக் கொளுத்துவார்கள். ராவணனுடைய உருவத்தின் தொங்கும் நாக்கருகில் தீக்கொழுந்து எட்டும்போது ஒரே ஆரவாரமாக இருக்கும். ராவணன் வயிற்றில் வைத்த தின்பண்டத்தை எல்லாருக்கும் விநியோகம் செய்யும்போது, கூடவே ராமாயணக் காட்சிகள் அடங்கிய படங்களையும் கொடுப்பார்கள். மெல்ல மெல்லக் கூட்டம் கலையும். ராமனாகவும் சீதையாகவும் நடித்தவர்களைப் பற்றி எல்லாரும் புகழ்ந்து பேசிக்கொண்டே வீடு திரும்புவார்கள்.

இந்த உற்சவ சமயத்தில் செலவாகும் பணம் வீணாகிறது என்று சொல்லி விடுவதற்கில்லை. நாடகத்தில் கலந்துகொண்டு மக்களை மகிழ்விக்கும் நடிகர், மேளகாரர், உடை தயாரிப்போர், மேடை அலங்காரம் செய்வோர் ஆகியவர்களுக்கு வருஷத்தில் ஒரு நாளாவது ஊர் அறியத் தங்கள் திறமையை வெளிக் காட்டுகிறோம் என்ற திருப்தி ஏற்படுகிறது; மக்களின் மனமும் ஒரு நல்ல விஷயத்தில் ஈடுபட்டோம் என்று மகிழ்ச்சி கொள்கிறது.

## கோடீசுவரனானால்—

''பிள்ளைகளே, நீங்கள் ஒரு கோடீசுவரனாவதாக வைத்துக்கொள்ளுங்கள். அப்போது என்ன செய்வீர்கள் என்பதைக் கற்பனை செய்யுங்கள். அதை ஒரு கட்டுரையாக எழுதுங்கள்'' என்றார் வாத்தியார்.

எல்லாப் பையன்களும் ஆவலுடன் நோட்டுப் புஸ்தகத்தைப் பிரித்து விர்விர் என்று எழுதத் தொடங்கினார்கள்.

ஒரே ஒரு சிறுவன் மட்டும் தலைப்பைப் போட்டுவிட்டு, மிக்க சலிப்போடு பராக்குப் பார்த்துக்கொண்டிருந்தான்.

அவனை நோக்கி, ''ஏனடா நீ மட்டும் சும்மா உட்கார்ந்திருக்கிறாய்?'' என்று கேட்டார் வாத்தியார்.

''நான் கோடீசுவரனானால் இப்படித்தான் இருப்பேன்; வேலை செய்ய மாட்டேன்'' என்றான் சிறுவன்.

—'க்விக்,' மூனிக்.

கேட்கப் பீதி தரும்; பார்க்கப் பயங்கரம்; ஆனல் அதுவுமே பயங்கொள்ளி - இப்படி ஒரு கடல் பிராணி!

# எட்டுக்கை ராட்சசன்

## பீட்டர் மிட்செல்

ஆழ்கடலில் (எட்டுக் கை கொண்ட) ஆக்டோபஸ் என்ற பிராணியைப் போல் அவ்வளவு பயங்கரமான - அச்சமூட்டும் -ஜந்து வேறு ஒன்றுமே இல்லை என்று சொல்லலாம். விக்டர் ஹ்யூகோ, ஜூல்ஸ் வெர்ன் போன்ற பிரபல பிரெஞ்சு நாவலாசிரியர்கள் எழுதியிருப்பவற்றிலிருந்தும், குழந்தைகளுக்கான வேடிக்கைப் படங்களிலிருந்தும், எலும்பு இல்லாமல் மெத்து மெத்தென்று தோன்றி, குறிப்பிட்ட நேரத்துக்கு ஒரு தரம் உப்பியும் அடங்கியும் காணும் இந்தப் பிராணியையும், பயங்கரமாக ஆடி அலையும் இதன் கைகளையும், அவற்றில் உள்ள உறிஞ்சும் தட்டுக்களையும், இமையில்லாத இதன் கண்களையும், பயங்கரமான மூக்கையும் பார்த்தால் மகா தைரியசாலியின் ரத்தங்கூடச் சில்லிட்டு உறைந்துவிடும்!

ஆனல் புரொபஸர் பெர்கென் ஈவான்ஸ் போன்றவர்கள் வேறு விதமாக அபிப்பிராயப் படுகிருர்கள். தம்முடைய நூல் ஒன்றில் இவர், ''மனிதர்களைப் பொறுத்தவரையில் ஆக்டோபஸ் ஒரு தீங்கும் இழைப்பதில்லை'' என்று குறிப்பிட் டிருக்கிருர். லண்டன் மிருகக்காட்சிசாலையில் பல ஆண்டுகள் நீர்வாழும் பிராணிகளின் பகுதியைக் கவனித்து வந்த ஈ. ஜி. பூலங்கர் என்ற அதிகாரி, ''நமக்கு உள்ளூற அதைக் கண்டால் ஒரு கிலி. இதுதான் காரணமே ஒழிய ஆக்டோபஸ் நம்மை ஒன்றும் செய்து விடாது. ஆக்டோபஸ் பிடித்துக்கொண்டால் மீற முடியாது என்று எண்ணுவது சுத்த அபத்தம். அப்படி அது பிடிக்கும் பட்சத்தில் அதன் தலையையும் உடம்பையும் கெட்டியாகப் பற்றி அமுத்துங்கள். எவ்வளவு பெரிய ஆக்டோபஸாக இருந்தாலும் சரி, உடனே தன் பிடியைத் தளர்த்தி விடும்.

ஒஹியோவிலுள்ள மியாமி யூனிவர்சிட்டியில் இருக்கும் புரொபஸர் ஸ்டீஃபன் வில்லியம்ஸ் என்ற பிராணி நூல் நிபுணர், ''கழனியில் வேலை செய்யும் குடியானவனுக்குப் பூசனிக்காயால் ஏதாவது ஆபத்து நேர்ந்தாலும் நேரலாம்; கடலில் நீந்தும்போது



காப்பிரைட்: அமிர்த பஜார் பத்திரிகை (ஆங்கிலம்: 21-7-57), கல்கத்தா.

ஆக்டோபஸினுல் ஆபத்து நேருவதென்பது அதைவிட அபூர்வம் என்ருல் பார்த்துக்கொள்ளுங்களேன்'' என்ருர்.

இந்த நிபுணர்கள் சொல்வது இருக்கட்டும். கடல் நீரில் மூழ்கும் தொழிலில் அநுபவப்பட்டவர்கள் சொல்வதோ இதற்கு மாருக இருக்கிறது. இவர்கள் அதிகக் கற்பனையில் ஈடுபட்டு ஏதோ கயிறு திரிக்கிருர்கள் என்று சொல்வதா? கடலிலே அநுபவப்பட்டவர்கள் விஷயம் தெரியாமலா பேசுவார்கள்? தாங்கள் நேரில் கண்டதைத் தானே சொல்வார்கள்? பஸிபிக் மகா சமுத்திரத்தில் பல ஆண்டுகளாக நீரில் மூழ்கிமூழ்கிப் பழக்கப்பட்ட ஜாக் ஹல் என்பவருடைய அநுபவத்தைக் கேளுங்கள்.

சில ஆண்டுகளுக்கு முன் நடந்தது இது. நியூகினியில் பபால் என்ற இடத்துக்கு அருகில் ஜப்பானியச் சாமான் கப்பல் ஒன்று ஒன்பது ஆண்டுகளாக மூழ்கிச் சிதைந்து கிடந்தது. ஹல் தன்னந்தனியாக அதிலுள்ள சாமான்களை எடுத்துக்கொண் டிருந்தார். அவருடைய கூட்டாளிக்கு அப்போது உடம்பு சரியாக இல்லை. கப்பல் தலைவன் இருந்த அறைக்குள் சோதிக்கும்போது, வெடி மருந்து இருந்தால்தான் அதன் கதவைத் திறக்க முடியும் என்று தெரிந்தது. மேலே ஓர் ஆள் படகில் துணைக்கு இருப்பது வழக்கம். அந்த ஆளிடம், ''வெடி மருந்து கொஞ்சம் அனுப்பு'' என்று கீழிருந்தபடி தெரிவித்தார் ஹல். பிறகு கப்பல் தலைவனுடைய காபின் அறையிலிருந்து கிளம்பினுர். இடை வழியில் கால் எடுத்து வைத்தார். அப்போது அங்கே இன்னும் ஓர் அறையிலிருந்து கைபோல் பெரிய வஸ்து ஒன்று மெல்ல அவருக்கு நேர் எதிரே நீண்டது. உடனே அவர் டார்ச் - விளக்கைப் போட்டுப் பார்த்தார். அதே சமயம் பின்னும் இரண்டு நீண்ட கைகள் தெரிந்தன. அவைகளின் பின்னே பெரிய தலை, உடல் இவைகளோடு பிரம்மாண்டமான ஆக்டோபஸ் ஒன்று தெரிந்தது.

கப்பல் தலைவனுடைய அறைக்கும் மேல் தளத்துக்கும் இடை வழியில் இருந்தது அந்த ஆக்டோபஸ். வெளியே வருவதென்ருல் அதைத் தாண்டியாக வேண்டும். அதன் கை ஒன்று அவர் தொங்கிக்கொண் டிருக்கும் கயிற்றைச் சுற்றிக்கொள்ள வளைவது தெரிந்தது; குறுகிய அந்த இடை வழியில் ஆக்டோபஸ் மெல்ல நகர்ந்தது. ஹல் டார்ச் விளக்கைத் தம் தோல் பெல்ட்டில் மாட்டிக்கொண்டார். இடுப்பிலிருந்து, பத்து அங்குல நீளமுள்ள தம் கூர்மையான கத்தியை உருவினுர். ஆக்டோபஸின் மேல் பாய்வதா, அது விலகும் வரையில் காத்திருப்பதா என்று சற்று நேரம் யோசித்தார்.

ஆனுல் அதிக நேரம் அவர் காக்கவேண்டி யிருக்கவில்லை. வரவர அவர் முகக் கவசத்துக்குள் காற்றினுல் கனம் மிகுதியாகி விட்டது போல் ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. தெளிவாகத் தெரியும்படி கண்களின் முன் இருந்த இடைவெளியைப் பெரிதாக்கிக்கொண்டு பார்த்தார்; ஆக்டோபஸ் அப்போது இடை வழியை மறைத்துக் கொண்டிருந்தது. அவர் தொங்கிக் கொண்டிருக்கும் கயிற்றையும் சுற்றி வளைத்துக்கொண் டிருந்தது அதன் ஒரு கை. ஹல் கத்தியைத் தூக்கி வெகு உஷாராக முன்னே நகர்ந்து வந்தார்; தாம் தொங்கும் கயிற்றை ஆக்டோபஸின் பிடியிலிருந்து நீக்க அதன் கையில் வெட்டென்று கத்தியைப் பாய்ச்சினுர்.

அப்போது அவருடைய இடது தோளில் ஏதோ சுற்றி வளைத்துப் பிடித்துக்கொண்டது; திமிறிப் பார்த்தார். மூழ்குவதற்காக உடுத்த உடையின் கனத்தாலும் நீரின் அழுத்தத்தாலும் ஒரு தரம் சுழன்று வந்தார். ஆக்டோபஸின் பிடியிலிருந்து மீள அதன் கையில் கத்தியால் ஓங்கி ஒரு போடு போட முயன்ருர். ஆனுல் எவ்வளவு ஓங்கியும் அடி பலமாக விழவில்லை. அதே சமயம் இன்னெரு கையும் அவரைச் சுற்றி வளைத்துக்கொண்டது; அவர் திமிறிக்கொள்ள முடியாதபடி

அவரைத் தன் பயங்கரமான கண்ணுக்கும் மூக்குக்கும் அருகில் இழுத்தது. அப்போது அவர் கத்தியைத் தம்மால் முடிந்த வரையில் உயர்த்தி எட்டுக் கைக்கு நடுவில் இருக்கும் அதன் கண்ணிலும் மூக்கிலும் பாய்ச்சினுர்.

இதற்குள் முகக் கவசத்துக்குள் பிராண வாயு போதாமல் ஹல்லுக்குத் தலை சுற்றி மயக்கம் வரும் போல் இருந்தது. ஆக்டோபஸ் பிராண வாயுக் குழாயை இறுகப் பிடித்துக் கொண்டதுதான் காரணம். இருந்தாலும், ஹல் திரும்பத் திரும்ப ஆக்டோபஸின் முகத்தில் கத்தியைப் பாய்ச்சினுர். ஹல்லுக்குக் கலவரம் உண்டாகும் படி ஆக்டோபஸ் கறுப்பு மசி போல் ஒரு திரவத்தைப் பீச்சியது. இதனுல் அவரைச் சுற்றி ஒரே இருட்டாகி விட்டது. வர வர அவருக்குச் சோர்வு ஏற்பட்டது. கால்கள் தளர்வடைந்து தொங்கலிட்டன. பிரக்ஞை தவறும் போல் இருந்தது. இனி மேல் கத்தியை உயர்த்திப் பாய்ச்ச முடியாது என்ற நிலையில் இருந்தார்; அவ்வளவு பலவீனம். அதே சமயம் அவர் கையிலிருந்த கத்தி எதையோ அறுப்பது போல் உணர்ந்தார்: 'சரி; ஆக்டோபஸின் ஒரு கையை வெட்டியாகிவிட்டது' என்று ஊகித்துக்கொண்டார். ஓர் உலுக்கு உலுக்கிப் போட்டது; அப்படியே தொங்கிக் கனத்து அடிமட்ட நீருக்குள் அவரோடு இறங்கியது ஆக்டோபஸ்.

பிறகு அவர் அந்த இருளில் திமிறிக்கொண்டு, தமக்குப் பிராண வாயு வரும் குழாயைப் பிடித்திருக்கும் ஆக்டோபஸ் கை எங்கே இருக்கிறது என்று தேடினுர். தற்செயலாக அதைக் கண்டு பிடித்துத் தம் கத்தியால் கடைசிப் பட்சமாக ஒரு கை பார்த்து விடுவதென்று அதை அறுத்து எறிந்தார். அந்தக் கை துண்டாகத் தனியே போனதும், பிராண வாயுக் குழாயைப் பிடித்திருந்த அதன் பிடி தளர்ந்தது. 'அப்பாடா!' என்று அவர் சொஸ்தமாக மூச்சு இழுத்தார். இப்படி ஒருவாறு சமாளித்ததும், உடம்பில் சற்று வலு வந்தது. தம்மை வளைத்திருக்கும் ஆக்டோபஸின் மீதிக் கைகளையும் வெட்டி எறிந்தார். தட்டித் தடுமாறிக் கொண்டு இடை வழியில் போய், மேலே இருப்பவர் தம்மைத் தூக்கி விடவேண்டும் என்பதற்கு அறிகுறியாகத் தம்மைப் பிணைத்திருந்த கயிற்றை மூன்று முறை இழுத்து விட்டார்.

நீர் மூழ்கும் தொழிலில் பழக்கமுள்ளவர் அநுபவம் இது; இன்னும் நூற்றுக்கணக்கானவர்களும் இப்படித்தான் சொல்லியிருக்கிறுர்கள்; இவை ஏறக் குறைய உண்மை அநுபவங்களே.

அப்படி ஆக்டோபஸின் பயங்கரமான வாயில் மெல்ல மெல்லச் சிக்கிக் கோரமாகச் சாக நேரிடும் என்ற ஒரு கிலி உங்களுக்கு இருந்தால் திகில்படாதீர்கள்; ஒன்று செய்யுங்கள்: ஒரு சின்னப் புட்டி நிறைய உப்புக் கரைத்த நீரை எடுத்துத் தலைமாட்டில் வைத்துக் கொண்டு படுத்துக்கொள்ளுங்கள்! நிம்மதியாகத் தூங்கலாம். ஓடிஸ் பார்ட்டன் என்பவர் தாம் எழுதிய ஒரு நூலில், நீரில் மூழ்கும் இடோ என்ற ஆள் ஒருவனைப்பற்றிக் குறிப்பிட்டு, இந்த மாதிரி உப்பு நீர் ஆக்டோபஸைச் சமாளிக்கப் பயன்படும் என்று சொல்லியிருக்கிறுர்.

'ஆக்டோபஸின் மூஞ்சியில் இந்த உப்பு நீரைக் கொட்ட வேண்டியதுதான்; அது சாதாரணப் பயந்தாங்கொள்ளி மீனைப் போல் ஓட்டம் பிடித்துவிடும்' என்கிறுன் இடோ. ஒரு சமயம் இடோவை ஆக்டோபஸ் ஒன்று தாக்கியது. ஒரு பவளத் திட்டுக்கு அருகில் இடோ தங்கினபோது அவனருகில் அது இருந்ததை முதலில் அவன் கவனிக்கவில்லையாம். திடீரென்று அது அவனைத் தன் கையால் பிடித்துக்கொண்டதாம். அதில் இருக்கும் உறிஞ்சும் கிண்ணங்கள் அதன் பயங்கரமான வாயருகில் இடோவை இழுத்துக் கொண்டன. ஆக்டோபஸின் மண்டைமேல் கன்றிக் கறுத்து வருவதைப் பார்த்ததும் அது

வெறியோடு இருக்கிறது என்று கண்டுகொண்டான் இடோ.

அதிகமாக விழுங்கிய நீரைக் கக்கி உறிஞ்சினுல் அதற்குக் கோபம் என்பதும் இடோவுக்குத் தெரியும். ஆகவே, அது நீரைக் கக்கும் சமயம் பார்த்து உப்புக் கரைத்த புட்டியைத் திறந்து வைத்துக்கொண்டான்; அது கக்கி முடிக்கும் வரை காத்திருந்து நீரை மீண்டும் உறிஞ்சத் தொடங்கியதும் உப்பு நீரை அதன் வாய்க்குள் ஊற்றிவிட்டான்.

உடனே அது பச்சைப் பசேல் என்று நிறம் மாறிப் பூனே விழி போன்ற தன் விழிகள் கோண, ஒரு துள்ளுத் துள்ளித் தாண்டவமாடியது கடலில்.

ஓடிஸ் பார்ட்டன் இப்படி இடோ சொன்னதை முதலில் நம்பவேயில்லையாம். ஆனுல் பெர்முடா கடற்கரையில் பார்ட்டன் நேரில் இதைப் பரிசோதித்துப் பார்த்து, உண்மைதான் என்று தெரிந்துகொண்டார். ஒரு பாறையின் இடுக்கில் கெட்டியாகப் பாறையைக் கவ்விப் பிடித்துக்கொண்டிருந்தது ஆக்டோபஸ் குட்டி ஒன்று. அதை இழுத்து எடுக்க முடியவில்லே. எரிச்சலால் அதன் நிறம் மாறியது; நீரைக் கக்க ஆரம்பித்தது. அது முடிந்ததும் மறுபடியும் உறிஞ்சுகிற சமயம் பார்த்து டேபிள் சால்ட் (சுத்த உப்பு) ஒரு கை நிறைய எடுத்து அதற்குக் கொடுத்துவிட்டார். உடனே ஆக்டோபஸ் குட்டி, பாறையை விட்டுவிட்டு மேலே ஏறி வந்து பார்ட்டனின் தோளேத் தன் எட்டுக் கையாலும் பிடித்துக்கொண்டதாம். ஆனுல் நல்ல வேளேயாக, அது குட்டியானதால் எளிதில் அதன் பிடியிலிருந்தும் சமாளித்துக்கொண்டார். இடோ சொன்ன யுக்தி சரி என்று தெரிந்துவிட்டது.

ஆக்டோபஸைச் சீந்தினுல் கறுப்பு மசிபோல் ஒரு திரவத்தை அது பீச்சுகிறது என்று பல பேர் எழுதியிருக்கிறுர்கள். இப்படி ஏன் பீச்சுகிறது என்ற விஷயம் இப்போதுதான் தெரிந்தது. யாராவது தன்னே நெருங்கினுல் மசியைப் பீச்சி அதன் மறைவில் தான் தப்பி ஒளியப் பார்க்கிறது என்று தான் பொதுவாக எல்லாரும் எண்ணிக்கொண் டிருந்தார்கள்; ஆக்டோபஸ் அதோடு கறுப்பாகவும் வெளுப்பாகவும் நிறம் மாறும் என்றும் சொல்வார்கள். சமீபத்தில் இந்த இரண்டு கருத்தும் தவறு என்று நிரூபித்துக் காட்டினுர் பிராணி நூல் நிபுணர் ஒருவர். ஒரு நாள் சின்ன ஆக்டோபஸ் ஒன்றைப் பிடிக்க அவர் மெதுவாகக் கையை அதன் அருகில் கொண்டு போனுராம். அதைப் பிடித்து விட்டோம் என்று கையை அழுத்தியதும், அது கறுத்து மசியைப் பீச்சித் தப்பிவிட்டதாம். கடைசியில் அவர் கையில் மிஞ்சியது மசிதான்! ஆக்டோபஸ் கண்ணுக்குத் தெரியாதபடி அவ்வளவு வெளுத்து, அது தங்கியிருந்த குட்டையின் எதிர்ப்பக்கம் போய்விட்டதாம்; மறுபடியும் மறுபடியும் அவர் அதைப் பிடிக்க முயன்றும் பழையபடி கையில் மசிதான் மிஞ்சியது.

கடைசியில் ஒன்று தெரிந்தது. இப்படிப் பீச்சும் மசி மொத்தத்தில் ஆக்டோபஸ் போலவே இருந்ததாம். இதனுல்தான் அது தப்ப முடிந்தது; வெளுத்து மங்குவதும் இது தப்பி ஒளிவதில் முக்கியமான அம்சந்தான். அதாவது, ஆக்டோபஸ் கோபத்தால் கறுக்கவில்லே; சாமர்த்தியமாக மறையும் போது மசியை அந்த உருவில் பீச்சிவிட்டுப் போய்விடுகிறது; விஷயம் இதுதான்!

**பகவான் அவதரித்தால்—**

''பெருவெள்ளம் வரும்போது சிறிய ஓடைகளும், பள்ளங்களும் ஒருவித வருத்தமுமின்றி நிறைகின்றன. அதுபோல் பகவானுடைய அவதாரம் உலகில் தோன்றும்பொழுது ஒவ்வொரு பிராணியும் இயல்பாகவே சாத்துவிகத்தை அடைகிறது'' என்று பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அருளினுர்.

—ஸ்வாமி விவேகானந்தர்

# புத்திசாலி

**வால்டேர்**

நவீனச் சிறுகதை இலக்கியத்தில் உலகத்துக்கே வழிகாட்டியவை பிரெஞ்சு நாட்டுச் சிறுகதைகள் என்று சொல்லலாம். அந்தக் கதைகளை எழுதிய ஆசிரியர்களிலும் சிலர் அழியாப் புகழ் பெற்றவர். ஐந்து பேருடைய கதைகள் சிலவற்றை டி. என். ராமச்சந்திரன் தமிழாக்கி, 'வால்டையர் முதல் மாப்பசான் வரை' என்ற புத்தகத்தில் அளித்திருக்கிறார். அத்தனையும் அருமையான கதைகள்; அந்தப் புத்தகத்தில் உள்ள முதல் கதையைப் பிரசுரகர்த்தர்களின் அனுமதியுடன் இங்கே தருகிறோம்.

ஒரு நாள் மெம்னன் என்பவன், தான் மகாபுத்திசாலியாக நடந்துகொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான்.

''நல்ல புத்திசாலித்தனமாக நான் நடந்துகொள்ள வேண்டும்; அதனால் மிக மகிழ்ச்சியோடு காலங் கழிக்கலாம். இதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? சற்றே ஆசையை அடக்கிக் கொள்ள வேண்டும்; அவ்வளவுதான். இது சுலபமில்லையா? இருந்தாலும் முதலாவதாக நான் செய்ய வேண்டியது என்ன? எந்த ஒரு பெண்ணையும் காதல் செய்யக் கூடாது. ஒரு பெண்ணைப் பார்த்தால், அப்போது நான் எனக்குள்ளே என்ன சொல்லிக்கொள்ள வேண்டும்? 'சிவந்த அவள் கன்னங்கள் ஒரு நாள் வறண்டு உலர்ந்துவிடும்; பருத்த மார்பு தட்டையும் சப்பையுமாகிவிடும்; கறுத்தடர்ந்த கூந்தல் உதிர்ந்து தலை வழுக்கையாகிவிடும்' - இப்படியெல்லாம் நான் நினைத்துவிட்டால் அந்தப் பெண் எப்பேர்ப்பட்ட அழகியாகத்தான் இருக்கட்டுமே, அவள் என் மனத்தை அசைக்கவும் முடியாது. இரண்டாவதாக, நான் எப்போதுமே ஒரு நோன்பைக் கைக்கொண்டிருக்க வேண்டும். வீண் கௌரவத்துக்காகப் பெருமைப்படுவது, அழகான பண்டங்களையும், பான வகைகளையும் பார்த்து ஆசைப்படுவது, பாட்டுக்காரர்களைப் பார்த்து மதிமயங்குவது இந்த மாதிரி காரியங்களில் ஈடுபட்டால் விளையும் பலன் என்ன? தலைவலி, அசதி, உடலுக்குக் கேடு, உயிருக்கு ஊறு; காலத்தையும் பாழாக்கி அறிவையும் கெடுத்துக்கொள்கிறோம். ஆகவே, நாம் உண்பது உயிர் வாழ்வதற்கு மட்டும் என்றிருக்க வேண்டும். இப்படி இருந்தால் நம் எண்ணங்கள் உயர்ந்திருக்கும்; நம் உடலும் பொன்போல் இருக்கும். ஆஹாஹா! இவையெல்லாம் மிகச் சுலபமான விஷயங்கள். இவற்றைச் சாதிக்க எந்தத் திறமையும் தேவையில்லையே! கடைசியாக என் செல்வ நிலை

காப்பிரைட்: வால்டையர் முதல் மாப்பசான் வரை (தமிழ் மொழி பெயர்ப்பு நூல்). வெளியிட்டவர்: இமயப் பதிப்பகம், நாகப்பட்டினம். விலை ரூ. 2-0-0.

யைக் கவனித்துக்கொள்ள வேண்டும். என் தேவை சாதாரணமானது. என் பணம் நினேவாவின் ரிசீவர் ஜெனரலிடம் பத்திரமாக இருக்கிறது. நான் சுதந்தரமாக வாழப் பூர்ண வாய்ப்பு இருக்கிறது. எனக்குக் கிடைத்துள்ள பேறுகளில் எல்லாம் இந்தப் பேறு மிகச் சிறந்தது. நான் எவருடைய தயவுக்காகவும் கெஞ்சவேண்டியதில்லை. நான் யாரைக் கண்டும் பொருமைப்பட வேண்டியதில்லை. யாரும் என்னைக் கண்டு பொருமைப்படுவதற்கில்லை. எனக்கு நண்பர்கள் இருக்கிறார்கள். நான் அவர்களுடைய சிநேகத்தை இழக்க வேண்டியதில்லை. அவர்கள் யாரும் என்னிடம் குறைபட்டுக்கொள்வதற்கு எதுவுமில்லை. எனக்குத்தான் என்ன; அவர்கள்மீது எனக்கு எந்தக் குறைபாடும் கிடையாது.''

மெம்னான் இதுமாதிரி அதி புத்திசாலித்தனமான சிந்தனைகளைச் சிந்தித்தவனாக, தன் படுக்கை அறையை விட்டு எழுந்து, வெளி உலகத்தை ஜன்னல் மூலமாக எட்டிப் பார்த்தான். அப்போது இரண்டு பெண்கள் அவன் வீட்டின் எதிர்ப்புறமாக இருந்த மரங்களின் ஓரமாகப் போய்க்கொண்டிருந்தார்கள்.

ஒருத்தி வயசானவள். அவள் எந்தவிதச் சிந்தனையுமற்றவளாகச் சென்றுகொண்டிருந்தாள். மற்றொருத்தி யுவதி; அழகி. அவள் ஏதோ சிந்தனை குடிகொண்டவளாகத் தோன்றினாள். அவளுடைய முகத்தில் துயரம் தாண்டவமாடியது; கண்ணில் நீர் ததும்பிக்கொண்டிருந்தது. அந்தச் சோக நிலையிலும் அவள் பொலிவுடன் தென்பட்டாள். நம் தத்துவ ஞானி மெம்னான் உடனே அவள் வசப்பட்டான். அவள் அழகைக் கண்டு மயங்கவில்லை. அவன் என்ன அவ்வளவு புத்தியில்லாதவனா, அவள் அழகைக் கண்டுமயங்கிவிடுவதற்கு!

பாவம்! அவளுடைய வேதனையும் துயரமும் அவனை மனமிளகும்படி செய்தன. அவன் உடனே கீழே இறங்கினான். நினேவாவின் யுவதிக்கு, அவன் தன் புத்திசாலித்தனத்தால் ஆறுதல் சொல்லலாம் என்று நினைத்தான்.

அந்த அழகி தனக்குற்ற துன்பங்களையெல்லாம் மிக உருக்கமாகச் சொல்லலானாள். அவளுடைய (கற்பனை) மாமா அவளுக்கிழைத்த கேடுகள்; அவளுடைய சொத்துக்கள் அவளுக்கு இல்லாமல் துர்விநியோகம் ஆகிற அநியாயம்; அவளை மாமன் அவனுடைய கேவல ஆசை வலையில் விழ வற்புறுத்தும் அயோக்கியத்தனம் - இவற்றையெல்லாம் விவரித்தாள். மேலும் அவள், ''உங்களைப் பார்த்தாலே மிக நல்லவராகத் தெரிகிறது; பரோபகார சிந்தனையும் நல்ல உள்ளமும் படைத்தவராகத் தோன்றுகிறீர்கள். நீங்கள்மட்டும் ஒரு முறை என் வீட்டுக்கு வந்து எங்கள் கஷ்டங்களையெல்லாம் நேரில் பார்த்துவிடுவீர்களேயானால், என் கஷ்டமான குழப்ப வாழ்விலிருந்து எனக்கு விடுதலை அளித்த புண்ணிய மூர்த்தி ஆவீர்கள்'' என்று கொஞ்சும் மொழியில் கெஞ்சினாள்.

அவள் சொன்னதுதான் தாமதம். அவளுடைய கஷ்ட நிலைமைக்குத் தன் புத்திசாலித்தனத்தால் தக்க யோசனை சொல்லலாமென்று நினைத்து, அவளை மெம்னான் பின் தொடர்ந்தான்.

'வேதனையால் வாடிய' அந்தப் பெண், அவனைத் தன் வீட்டின் அறைக்கு அழைத்துச் சென்று, வாசம் கமகம என்று வீசிக்கொண்டிருந்த ஓர் அழகிய சோபாவில் தன்னோடு அமரும்படி மிகப் பணிவாய் வேண்டினாள். அவர்கள் இருவரும் அடக்கமாக விலகி உட்கார்ந்தார்கள். அவள் குனிந்த தலையோடு, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கண்ணீரை உகுத்தவளாய் வேதனையோடு உள்ளம் குமுறிக்கொண்டிருந்தாள். தலையைத் தூக்கி நிமிர்ந்து பார்க்கும்போதெல்லாம், அவள் கண்கள் புத்திசாலியான மெம்னானையே ஆழமாக உற்று நோக்கின. அவர்களுடைய கண்கள் சந்திக்கிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவளுடைய பேச்சு, உணர்ச்சி, பாவத்தால் தடுமாறித் தடுமாறிச் சிதறினாலும், பேச்சின் எழுச்சி மேலோங்கி

யது. மெம்னுனுக்கு வர வர அவள் மீது பரிவும் பாசமும் ஏற்பட்டன.

'அபாக்கியவதியும் குணவதியு மான இவளுக்குத் துன்பங்களும் துயரங்களும் வந்து சூழ்ந்தனவே' என்று நினைத்து நினைத்து, அவற்றைப் போக்க ஏதாவது செய்தே தீருவது என்ற உணர்ச்சி வேகம் அவனை உந்தித் தள்ளியது. சம்பாஷணையின் போக்கில், அவர்கள் வர வரக் கொஞ்சம் கொஞ்சமாகப் பக்கத்தில் நெருங்கிவிட்டார்கள். கடைசியாக, மெம்னுனின் அன்பு ததும்பிய யோசனைகளால் அவர்கள் மிக மிக ஒன்றுபட்டுக் கடைசியில் என்ன பேசுவதென்றே தெரியாமல் பேச்சின் தொடர்பை அறவே மறந்தவர்களானுர்கள்.

அப்போது அந்தப் பொல்லாத 'மாமா' அங்கே வந்து தோன்றி விட்டான். தலை முதல் கால் வரையில் ஆயுதபாணியாக இருந்தான். அவன் எடுத்ததுமே மெம்னுனையும் தன் மருமகளையும் ஒரே போடாகப் போட்டுக் கொன்று தீர்த்துவிடப் போவதாக வீர சபதம் செய்தான்; ஆனுலும், மெம்னுன் அபராதமாக ஒரு பெருந்தொகை கொடுத்தால் அதை ஏற்றுக்கொண்டு அவர்களை மன்னித்துவிடுவதாக மாமா சொன்னுன். மெம்னுன் அந்த நேரத்திலேயே தன் ஆஸ்திபாஸ்திகளையெல்லாம் கொடுத்துவிட ஒப்பினுன்.

அவதிக்கும் அவமானத்துக்கும் ஆளான மெம்னுன் வீடு வந்து சேர்ந்தான். அவனுடைய நெருங்கிய நண்பர்கள், அவனைப் பகல் விருந்துக்கு அழைத்திருந்த அழைப்பிதழ் அங்கே கிடந்தது. 'நான் வீட்டிலேயே தனியாய்த் தங்கியிருந்தால், என் மனம் இன்றைக் காலைச் சம்பவங்களைக் குறித்துச் சிந்தித்துச் சிந்தித்துக் குழம்பிக்கொண்டே இருக்கும். அதனுல் பசியற்றுப் போகும்; அதோடு உடல்நலமும் கெட்டுப் போகும். ஆகவே, என் நெருங்கிய நண்பர்களுடன் உணவருந்தப் போவது நல்லதே' என்று அவன் எண்ணி விருந்துக்குச் சென்றுன்.

அவன் கவலையில் ஆழ்ந்திருப்பதாக நண்பர்கள் கருதினுர்கள். அவனுடைய கவலையைப் போக்கிக்கொள்ள அவனைக் குடிக்கச் செய்தார்கள். விருந்துக்குப் பின் அவனைச் சொக்கட்டான் ஆட அழைத்தார்கள். சிநேகிதர்களோடு சேர்ந்து விளையாடுவது நல்ல பொழுது போக்குத்தானே? அவனும் விளையாடினுன். அதில் அவன் கையில் இருந்த பணத்தை எல்லாம் இழந்தான். மேலே கடனுக்கும் ஆடினுன். விளையாட்டோடு சேர்ந்து வம்பும் வந்தது. அந்த வம்பின் காரணமாக அவர்களுக்குள் ஆத்திரம் ஏற்பட்டது. ஆத்திரத்தின் விளைவால் அவர்களில் ஒருவன் ஒரு சொக்கட்டான் காயை எடுத்து மெம்னுன் மீது வீசி எறிந்தான். அது அவன் கண்ணில் பட்டுக் காயப்படுத்தியது. விவேகியான மெம்னுன் கையில் காசு அற்றவனுக, குடிகாரனுக, கடனுளியாக ஒரு கண் இழந்தவனுக வீடு வந்து சேர்ந்தான்.

கவலை தீரும் வரையில் படுத்துக் கிடந்தான். மனநிலை கொஞ்சம் சரிப்பட்டதும், தன் வேலைக்காரனை அழைத்து நினேவாவின் ரிசீவர் ஜெனரலிடமிருந்து பணம் வாங்கிவர அனுப்பினுன். பட்ட கடனைத் தீர்க்கவேண்டுமே, அதற்காக. ஆனுல் அவனுடைய பாங்கர், ஏதோ மோசடி செய்ததால், அன்று காலையில்தான் அந்தப் பாங்கு 'திவால்' ஆனதாகவும், அந்தத் 'திவா'லின் பயனுக நூற்றுக்கணக்கான பேர் 'பாப்பராகி' நிர்க்கதியான நிலைக்கு ஆளாகியிருப்பதாகவும் தெரிந்தது. மெம்னுன் ஒரு கண்ணைக் கட்டிக் கொண்டு, ஒரு கையில் புகார் மனுவை ஏந்திக்கொண்டு புறப்பட்டான்; பாங்கரால் ஏற்பட்ட நஷ்டத்துக்குப் பரிகாரம் தேடும் பொருட்டு, மிக்க வேதனையான உள்ளத்தோடும் சற்று ஆத்திரத்தோடும் நீதி ஸ்தலத்துக்கு விரைந்து சென்றுன்.

நீதி ஸ்தலத்துக்கு உள்ளே பாரிஸ் அழகிகள் பலர் விதம் விதமான ஆடை அணிந்து அலங்காரம் செய்துகொண்டு, இருபத்து நான்கு அடி சுற்றளவுள்ளவர்களாகக் 'கம்' என்று வாசனை

கமழத் தென்பட்டார்கள். அரை குறையாகத் தெரிந்த ஒருத்தி அவனை ஓரக்கண்ணால் பார்த்து, ''இது என்ன கோலம்?'' என்று சொல்லிக்கொண்டு சென்றாள். அவனை நன்றாக அறிந்த இன்னொருத்தி, ''மிஸ்டர் மெம்னான், வணக்கம். தங்களைப் பார்க்க மிக மகிழ்ச்சி. அடேடே! தங்களுக்கு என்ன ஒரு கண் பழுதாகி விட்டதா? என்ன காரணம்?'' என்ற கேள்வியைக் கேட்டுவிட்டுப் பதிலை எதிர்பாராமலே போய் விட்டாள்.

மெம்னான் ஒதுக்குப்புறமான ஓர் இடமாகப் பார்த்துப் போய் உட்கார்ந்திருந்தான். அரசனைக் கண்டு அவருடைய அடிகளை வணங்கித் தனக்குற்ற குறையைத் தீர்க்க வேண்டி விண்ணப்பித்துக் கொள்ளக் காத்திருந்தான். அவனுக்கு உரிய நேரமும் வந்தது. அவன் மும்முறை தரையை முத்தமிட்டான். அதன்பின் விண்ணப்பத்தை அரசரிடம் சமர்ப்பித்தான்.

மேன்மை தங்கிய மன்னரும், அவனிடமிருந்து பேரன்போடு மனுவைப் பெற்றுத் தம் 'சத்ரபதி' களில் ஒருவரிடம் கொடுத்து மனுவைப் பரிசீலனை செய்யச் சொன்னார். சத்ரபதி தனியே மெம்னானை அழைத்து, ''நீ என்னப்பா ஒரு கண் இல்லாத விநோத மனிதனாக இருக்கிறாய்! என்னிடம் வந்து முறையிட்டுக்கொள்ளாமல் நேரே மன்னரிடம் போய்விட்டாயே: நன்றாயிருக்கிறது. நீ யார்மீது குற்றம் சாட்டுகிறாயோ அந்தப் பாங்கர், அரசியின் அந்தப்புரத்தில் இருக்கும் பணிப் பெண்களில் ஒருத்தியின் கொழுநன் ஆவானே! அவன் எவ்வளவு நாணயமானவன்! அவனைக் காப்பாற்ற நான் கடமைப்பட் டிருக்கிறேன். அவனைப் போன்ற சிறந்த நாணயஸ்தன்மீது புகார் சொல்லத் துணிகிறாயே! புகார் மட்டுமா—புகாருக்குமேல் பரிகாரம் வேறே கேட்கிறாயே! நீ மரியாதையாக வெளியேறு, உன்னுடைய மற்றொரு கண்ணை நீ காப்பாற்றிக் கொள்ள விரும்பினால்! நீ யாரிடமும் எதுவும் சொல்லாமல் வெளியேறிவிட வேண்டியது தான். தெரிகிறதா? இந்த விஷயத்தை இதோடு விட்டுவிடு'' என்று விரட்டிவிட்டார்.

மெம்னான் காலையில்தான், 'பெண்களை ஏறிட்டுப் பார்க்கக் கூடாது; சண்டை செய்யக் கூடாது; சூதாடக் கூடாது; எந்த விவகாரத்துக்கும் போகக்கூடாது' என்றெல்லாம் தீர்மானம் செய்து கொண்டான். ஆனால், மாலைப் பொழுதுக்குள், அவனை ஒருத்தி ஏமாற்றினாள்; ஒருவன் கவர்ந்தான்; அவன் குடியனானான்; சூதாடியானான்; வம்புக்காளானான்; கண் இழந்தான்; அவமானப்பட்டான்; கோர்ட்டுக்கும் போனான்; அநியாயத்துக்கு ஆளானான்.

குழப்பத்துக்கு மேல் குழப்பமான இடிந்த மன நிலையோடு மெம்னான் வீடடைந்தான். வீட்டுக்குள் நுழைந்ததுதான் தாமதம்; அவனுடைய கடன்காரர்கள் அவன் வீட்டுச் சாமான்களை யெல்லாம் அமீனா மூலம் அப்புறப்படுத்திக் கொண் டிருந்ததைப் பார்த்தான். அப்படியே சோர்ந்து போனான்; எதிரே இருந்த பனை மரத்தின் கீழே அயர்ந்து உட்கார்ந்தான்.

அன்று காலையில் அவன் கண்ட யுவதி, அப்போது தன் அருமை 'மாம'னோடு அந்தப் பக்கம் போய்க்கொண்டிருந்தாள். 'பிளாஸ்டர்' தடவிய மெம்னானின் கண்ணைப் பார்த்ததும், அவனை நோக்கி அவள் கலகல என்று ஒரு கொம்மாளச் சிரிப்புச் சிரித்தாள்.

பின்பு இரவும் வந்தது. தன் வீட்டுச் சுவரண்டையில் கிடந்த வைக்கோலை இழுத்துப் போட்டு அதில் அவன் படுத்தான். அவனுக்கு ஜுரம் வந்துவிட்டது. அந்த ஜுரத்தின் கடுமையில், தன்னை அறியாமலே மெய் மறந்தான். அந்த அயர்வில் ஒரு கனாக் கண்டான். அந்தக் கனவில் ஒரு தேவதை தோன்றியது.

தேவதை ஒரே பிரகாசமாயிருந்தது. அதற்குத் தலையும் இல்லை; காலும் இல்லை; வாலும் இல்லை. அது பூலோகத்திலுள்ள எதுமாதிரி

யும் இல்லை. ஆனால் அதற்கு ஆறு அழகிய இறக்கைகள் இருந்தன.

மெம்னான், ''நீ யார்?'' என்று அதைக் கேட்டான்.

''நானே உன் குலதேவதை'' என்று பதில் வந்தது.

''அப்படியானால் எனக்கு என் கண்ணைக் கொடு; என் சுகத்தைக் கொடு; என் சொத்தைக் கொடு; என் புத்தியையும் கொடு'' என்று அவன் கேட்டான். அதோடு, ஒரே நாளில் அத்தனையையும் இழந்த தன் சோக வரலாற்றையும் சொன்னான்.

''நாங்கள் வசிக்கிற உலகத்தில் இது மாதிரி விபரீதங்கள் நிகழ்வதில்லை'' என்றது தேவதை.

''அப்படியானால் நீ எந்த உலகத்தில் வசிக்கிறாய்?'' என்று கேட்டான் துன்பப்பட்ட மெம்னான்.

''என் உலகம் சூரிய மண்டலத்திலிருந்து நூற்றைம்பது கோடி மைல் தூரத்தில் ஸீரியஸ் நட்சத்திரத்துக்குப் பக்கத்தில் உள்ள நட்சத்திர மண்டலத்தில் இருக்கிறது. நீ இங்கிருந்தே அதை அதோ பார்க்கலாம்'' என்றது தேவதை.

''ஆ! என்ன அபூர்வமான உலகம்! அங்கே ஓர் அப்பாவியை ஏமாற்ற விலைமகள் இல்லை; ஒரு நண்பனை ஏமாற்றிப் பணம் பறிக்கவும் அவன் கண்ணை அவிக்கவும் அவனுக்கு வேண்டிய நெருங்கிய நண்பர்கள் இல்லை; நியாயந் தவறாத ஒருவனை மோசடி செய்து அவன் பணத்தை அபகரிக்கப் பண மூட்டை லேவாதேவிக்காரர்கள் இல்லை; நீதியும் நியாயமும் கிடைக்காதா என்று தேடிச் செல்லுகையில் அதற்கு எமனாகத் தோன்றும் சத்ரபதிகளும் மன்னர் பிரான் ஆட்களும் இல்லை! என்ன ஆச்சரியம்! அப்படியா?'' என்றான் மெம்னான்.

''இல்லை, இல்லை, இல்லை. எங்களைப் பெண்கள் ஏமாற்றுவதில்லை; எங்கள் உலகில் பெண்களே இல்லை. நாங்கள் அளவுக்கு மீறி எதையும் உண்பதில்லை, குடிப்பதில்லை; எங்கள் நாட்டில் உணவும் இல்லை, குடியும் இல்லை. நாங்கள் யாரையும் மோசடி செய்வதில்லை, வஞ்சிப்பதில்லை; எங்கள் நாட்டில் மோசடி செய்வதற்கும் வஞ்சிப்பதற்கும் தங்கமோ வெள்ளியோ கிடையாது. நாங்கள் யார் கண்ணையும் அவிப்பதில்லை: எங்கள் நாட்டில் உள்ளவருக்குப் பூலோக வாசிகளைப்போல் சரீரமே கிடையாது. எங்களைச் சத்ரபதிகள் நீதியும் நேர்மையும் தவறி நடத்துவதில்லை; எங்கள் நாட்டினர் அனைவரும் சரிநிகர் சமானமானவர்கள்'' என்றது தேவதை.

''ஏ தேவதையே, பெண்ணோ மதுவோ இல்லாமல் நீ எப்படித் தான் காலங் கழிக்கிறாய்? சொல்லேன்'' என்றான் மெம்னான்.

''பரமன் எங்களிடம் ஒப்புவித்த உலகங்களையும் மக்களையும் கண்காணிப்பதில் காலங் கழிக்கிறோம். அதன்படியே நான் இந்த உலகத்தில் உனக்கு ஆறுதல் சொல்ல வந்தேன்'' என்றது தேவதை.

''ஐயோ! நீ ஏன் நேற்று வந்து, நான் முட்டாள்தனமான படுகுழியில் விழாமல் என்னைத் தடுத்தாட்கொண்டிருக்கக் கூடாது?'' என்றான் மெம்னான்.

''நான் உன் மூத்த சகோதரன் அஸனைக் காப்பாற்றச் சென்றிருந்தேன். அவன் உன்னைவிட மிகப் பரிதாப நிலையில் இருந்தான். மாட்சிமை தங்கிய இந்தியப் பாதுஷாவின் மாளிகையில் பணியாளனாக இருந்தவன். அவன் செய்த அற்ப அலட்சியத்துக்காக அவனுடைய இரு கண்களையும் அவித்துக் கையையும் காலையும் கட்டி விலங்கு மாட்டிச் சிறையில் போட்டுவிட்டார்கள்'' என்றது குல தேவதை.

'ஆ! ஒரே குடும்பத்தில் உள்ள இருவரில் ஒருவன், ஒரு கண் பொட்டையானான்; மற்றவன் இரு கண்ணையுமே இழந்தான். ஒருவன் பாழும் சிறையில் படுக்க வகையில்லாது கட்டுண்டு கிடக்கிறான்; மற்றவன் படுக்கப் பாயில்லாது வைக்கோல் தரையில் படுத்துழல்கிறான். இந்த நிலையில் குடும்பத்துக்கென்று ஒரு குல தேவதை ஏன்?'' என்று வெதும்பினான் மெம்னான்.

''உன் நிலைமை மாறும். ஆயினும், உனக்கு ஒரு கண்ணுக்கு மேல் இனி நல்ல கண் ஒன்றும் வராது. நீ எப்போதும் புத்திசாலியாகவே இருப்பது என்று முட்டாள்தனமாக இனி முடிவு செய்துகொள்ளாத வரையில், நீ சந்தோஷமாகவே இருப்பாய்'' என்றது தேவதை.

''ஆ! அதெப்படி அப்படி இருக்க முடியும்!'' என்று பெருமூச்சு விட்டுக்கொண்டே கேட்டான் மெம்னன்.

''முடியாதுதான். எப்போதுமே கெட்டிக்காரனாக இருப்பது, எப்போதுமே பலசாலியாக இருப்பது, எப்போதுமே சர்வ சக்தியுள்ளவனாக இருப்பது, எப்போதுமே சந்தோஷமுள்ளவனாக இருப்பது என்பதெல்லாம் முடியாத காரியமே. அது எங்களுக்கே சாத்தியம் இல்லை. ஆனால், அப்படியும் இருக்கிற ஓர் உலகம் உண்டு. அகண்டாகார வெளியில் பரந்து கிடக்கும் கோடிக்கணக்கான உலகங்களில் ஒவ்வொன்றும் தர வாரியாகப் பிரிந்திருக்கிறது. இரண்டாவது உலகத்தில் முதல் உலகத்தைவிடச் சந்தோஷமும் புத்திசாலித்தனமும் கொஞ்சம் குறைவு; மூன்றாவது உலகத்தில் இரண்டாவது உலகத்தைவிடச் சந்தோஷமும் புத்திசாலித்தனமும் இன்னும் கொஞ்சம் குறைவு - இந்தமாதிரியே பார்த்துக்கொண்டு போனால், கடைசியாக உள்ள உலகம் முழுவதும் பித்தர்கள் வாழும் உலகமாக விளங்கி வருகிறது'' என்றது குலதேவதை.

''நான் வசிக்கிற இந்த உலகமே சகல பிரபஞ்சங்களிலும் மிகப் பைத்தியக்கார உலகம் என்று நீங்கள் சொல்கிறீர்கள்?'' என்றான் மெம்னன்.

''அப்படி அல்ல; ஆனால் கிட்டத்தட்ட அது மாதிரிதான். ஒவ்வோன்றும் அது அது இருக்க வேண்டிய இடத்தில் இருக்க வேண்டியதுதான் நியதி'' என்றது தேவதை.

''அப்படியானால், சில தத்துவ ஞானிகளும் கவிகளும் எல்லாம் நன்மைக்கே என்று சொல்லுகிறார்களே; அது முற்றிலும் தவறு?'' என்றான் மெம்னன்.

''அல்ல; அவர்கள் சொல்வது முற்றும் சரி! அவர்கள் எல்லா உலகங்களையும் பார்த்து, ஒன்றோடொன்றுக்கு உள்ள தராதரத்தையும் பார்த்துச் சொல்லும்போது அது சரியே'' என்றது தேவதை.

''ஓ! அதை நான் ஒப்புக்கொள்ளவே மாட்டேன். நான் இழந்த என் கண்ணை மீண்டும் பெறுதவரையில் எல்லாம் நன்மைக்கே என்று ஒரு காலும் ஒப்ப மாட்டேன்'' என்றான் அப்பாவியான மெம்னன்.

## பாஷையும் பண்பாடும்

''பண்பட்ட மனிதர்களாய் வாழ நாம் ஹிந்தி கற்றாக வேண்டும்'' என்று ஒரு சமயம் ராஜாஜி சொன்னார். இதே போல் பிரெஞ்சு பாஷை கற்றால்தான் பண்பாடு வரும் என்ற அபிப்பிராயம் ஐரோப்பாக் கண்டம் எங்குமே ஒரு காலத்தில் இருந்து வந்தது. இன்னமுங்கூடச் சில பணக்காரருக்கு இந்த அபிப்பிராயம் ஓரளவு இருந்து வருகிறது. அதுபற்றிய இந்த விகடத் துணுக்கு, 'திங்க்' (யோசி) என்ற அமெரிக்கப் பத்திரிகையில் வெளியாகி யிருக்கிறது:

புதுப் பணக்காரியான ஒரு பெண் பிரான்ஸ் தேசத்தில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டுத் திரும்பினாள்.

அவள் மிக்க உற்சாகத்தோடு இப்படிச் சொன்னாள்: ''பாரிஸ் நகரம் அற்புதமா யிருக்கிறது. அத்தனை பேரும் பண்பட்டவர்கள். இந்த நாட்டிலேயும் இருக்கிறார்களே, இந்த மாதிரி அநாகரிக மக்கள் அங்கே எவருமே இல்லை. என்ன ஆச்சரியம் போங்கள்! அங்கே தோட்டிகள்கூடப் பிரெஞ்சு பாஷை பேசுகிறார்கள் என்றால், பாருங்களேன்!''

புத்தகச் சுருக்கம் :

# பாடசாலை நோய்கள்

## மு. அருணசலம்

ஆசிரியர் சிறந்த அறிஞர். தமிழிலக்கிய சம்பந்தமாகச் சுலபமான தமிழ் நடையில் நூல்கள் எழுதிப் புகழ் பெற்றவர். உலோகக் கலை, தோட்டக் கலை போன்ற பொருள் குறித்துப் பயனுள்ள நூல்கள் எழுதியிருப்பவர்.

இப்போது கிராமத்தில் ஆக்க வேலை புரிந்து வருகிறார். அங்கே கல்வி நிலையம் நிர்வகித்துச் சிறுவர்களைப் பராமரித்துக் கிடைத்த அநுபவத்தைக் கொண்டு, ஆசிரியர்களுக்கு உதவியான 'முதல் வகுப்பு ஆசிரியர்' என்ற ஒரு நூலை முதலாவதாக வெளியிட்டார். அதே வரிசையில் இது இரண்டாவது நூல். இது ஆசிரியர்களுக்குமட்டும் அல்ல; பெற்றோர்களுக்கும் பயன்படும். சிறுவர் பிணிகளுக்கு மட்டும் அல்ல; பெரியவர் பிணிகளுக்கும் பரிகாரங்களை இதில் காணலாம்.

காப்பிரைட்: பாடசாலை நோய்கள் (தமிழ்ப் புத்தகம்)
வெளியிட்டோர்: காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம்,
மாத்துறைத் தபால், குற்றாலம் வழி. விலை: ரூ. 1-8-0.

# பாடசாலை நோய்கள்

★

இது வைத்தியப் புத்தகம் அல்ல. முக்கியமாக, கிராம சேவகர்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும் வழிகாட்டுவதற்கான யோசனைக் குறிப்புக்களே இதில் சொல்லப்பட்டுள்ளன. சிரத்தையும் அறிவும் உடைய பெற்றோருக்கும் இது பயன்படும்.

சென்ற சில வருஷங்களாக நூற்றுக்கு மேற்பட்ட (இரண்டு வயது முதல் உள்ள) சிறு குழந்தைகளை இரவு பகல் இருபத்துநாலு மணி நேரமும் வைத்துப் பாதுகாக்கும் பொறுப்பு எங்களுக்கு ஏற்பட்டிருந்தது. அதில் பெற்ற அனுபவமே இங்குத் தொகுக்கப் பெற்றுள்ளது. அனுபவத்தில் திட்டமாகப் பயனளித்துள்ள சில நாட்டு முறைகளும் பல ஆங்கில முறைகளும் இதனுள் காணலாம்.

நோய் வந்தால் தானுகப் போகாது, பரிகாரம் தேடவேண்டும் என்பது உண்மை. ஆனல் நோய் வராதிருக்கவும், வந்தால் போவதற்கு அனுகூலமாகவும், அனேக காரியங்கள் நாம் செய்ய முடியும்; இதற்கேற்றபடி வாழ்க்கை வழிகளை அமைத்துக் கொள்ள முடியும். இயற்கையோடொத்து வாழ்வதே முதற் படி.

**சூரிய வெளிச்சம்:** சூரிய வெளிச்சம் எளிதில் நோய்க் கிருமிகளை அழித்துவிடும். ஆகவே, வெளிச்சமுள்ள இடத்தில் வாழவேண்டும். கண்ணோய் தவிர மற்றப்படி, நோயாளி வெளிச்சம் படும் இடத்தில்தான் இருக்கவேண்டும்.

**காற்று:** சுத்தமான காற்று இல்லாவிட்டால் ஆரோக்கியம் பாழ். உடல் நோய்க்கு இடமாகும். நோய் உள்ளவனுக்கோ சுத்தமான காற்று மிக்க அவசியம். ஈரமான காற்று, புழுதி படிந்த காற்று, புகை, கெட்ட வாயுக்கள் கலந்த காற்று, சாக்கடை முதலிய பக்கமிருந்து வரும் காற்று - இவை மிக்க கெடுதி தரும்.

**தண்ணீர்:** நம் உடம்பில் பெரும் பகுதி நீர்தான். உடம்பில் சேரும் அழுக்கெல்லாம் வேர்வையாகவும், சிறுநீராகவும் வெளிப்படுவது நீரின் உதவியால்தான். குளித்தால் வெளி அழுக்கும், நீர் அதிகம் குடித்தால் உட்புற அழுக்கும் நீங்குகின்றன. குடிக்க, சுத்தமான நீர் வேண்டும். அதிகம் குளிர்ந்த நீர் கூடாது. எந்த நீராயினும் காய்ச்சிக் குடிப்பது எப்போதும் நல்லது. நோயிலும் சுரத்திலும், அதிக நீர் குடிப்பது நல்லது. குழந்தைகளுக்கு அதிக நீர் அவசியம்; நல்ல நீர் தேவை. உப்பு நீரோ, கந்தக நீரோ, நல்ல நீர் அல்ல.

**உணவு:** நோய்களில் பாதிக்கு மேல் உணவு காரணமாக வருகின்றன. வாய்க்கு இனிப்பானது உடம்புக்கு இனிப்பாகாது. நினைத்தபோது எல்லாம் உண்பது பெருந் தவறு. நேரப்படிதான் உண்ண வேண்டும். உணவை நன்கு மென்று எச்சில் கூட்டி விழுங்குவது முக்கியம். விலாப் புடைக்க உண்ண வேண்டாம். அவசரமாக உண்ணக்கூடாது. உண்ட பின் சற்றே ஓய்வு அவசியம். உணவுப் பொருள்கள், பாத்திரங்கள், கைகள் மிகவும் சுத்தமாய் இருக்கவேண்டும். ஈ, எலி, எறும்பு, கரப்பான் முதலியன உணவுப் பொருளிடம் நெருங்கக்கூடாது.

**உடற் பயிற்சி:** உபயோகிக்காத கருவி துருப் பிடிப்பது போல, பயிற்சி அளிக்காத உடம்பு சக்தி இழக்கும். நோய் அடையும்; தசைகள் சிறுக்கும்; சீரணம் குறையும். நோய்க் கிருமிகளைச் சமாளிக்கும் சக்தியை உடம்பு இழந்துவிடும். உடற் பயிற்சியால்

இதயம் வேகமாய் அடிக்கிறது. இதனால் உடம்பின் எல்லாப் பாகங்களுக்கும் ரத்த ஓட்டம் அதிகமாகிறது. காற்று அதிகம் உள்ளே செல்லுவதால் பிராணவாயு அதிகம் கிடைக்கிறது; அதிகக் கழிவு வெளிப்பட ஏதுவாயிருக்கிறது. தசைகளுக்கு அதிக அப்பியாசம் வரவே, புத்திக் கூர்மை, சுறுசுறுப்பு, ஞாபக சக்தி முதலியன வளர்கின்றன.

தோல்: தோல், உடம்புக்கு ஒரு போர்வை. உடம்பின் அழுக்கை வேர்வை மூலம் எந்நேரமும் வெளிப்படுத்தி வருகிறது. வேர்வை நீங்காவிட்டால், அது ரத்தத்தில் சேர்ந்து ரத்தத்தை அசுத்தமாக்கும். குளிர்ந்த நீரில் காலையில் குளித்தால் வேர்வை எளிதில் போகும். ஒரு துண்டால் தேய்த்துக் குளித்தால் போதும். வெந்நீர் அவசியம் இல்லை. தினமும் சோப்புக் கூடாது. அதிகம் வேர்த்தபோதும், உண்ட உடனேயும், வேலை செய்து களைத்த போதும் குளிக்க வேண்டாம். சற்றுப் பொறுத்துக் குளிக்கலாம். நோய் இருந்தால், அழுக்கு அதிகம் இருக்கும். அதை நீக்க வேண்டியது மிகவும் அவசியம்; ஆதலால், குளிப்பது அப்போது இன்றியமையாதது. தேய்த்துக் குளிப்பது தோலின் ரத்த ஓட்டத்துக்கு நல்லது. நகம் சுத்தமாக இருக்கவேண்டும். அழுக்கு இருக்கக் கூடாது.

உடை: நாம் வெப்ப நாட்டில் வாழ்கிறோம். துணியைத் தினந்தோறும் நனைத்து வைப்பது அவசியம். எனினுங்கூட, வேர்வையை உடை உறிஞ்ச வேண்டும். இதற்குக் கதர் உடை மிகவும் நல்லது. திறந்த உடம்பாயிருப்பது மிகவும் நல்லது. இதனால் குளிர் முதலியவற்றை ஓரளவு தாங்கும் சக்தியைத் தோல் பெறுகிறது.

துப்புரவு: துப்புரவு என்றால் பொருள்களின் துப்புரவு மட்டுமல்ல; பழக்க வழக்கங்கள், மனப்பான்மை-யாவும் துப்புரவாயிருக்கவேண்டும். தோற்றம், முகபாவம் இவை துப்புரவை எடுத்துக் காட்டும் அறிகுறிகள். ஈ, கொசுகு, மூட்டைப் பூச்சி முதலியன எங்குமே காணக்கூடாது.

**பழக்க வழக்கங்கள்:** உடல் சம்பந்தப்பட்ட வரை நல்ல பழக்க வழக்கங்கள் இருப்பது அவசியம். தினம் ஒரு முறை குளித்தல், ஒரு முறையேனும் நன்றாய்ப் பல் துலக்குதல், இரு முறை மலங் கழித்தல் என்பன மிகவும் முக்கியம்.

ஆரோக்கிய வாழ்வுக்கு ஆரோக்கிய உள்ளம் வேண்டும். ஆரோக்கிய உள்ளம் அமையும் பல வழிகளில், முறைப்படி இறைவனை வழிபடுதல் மேலானது.

**ஆ**ரோக்கியமான உடம்பு அமைவதற்கு நல்ல காற்று, நல்ல நீர், நல்ல உணவு வேண்டும். நல்ல உணவு என்பது சமநிலை பொருந்திய உணவு. இது மாவுச் சத்து, புரதம், கொழுப்பு அல்லது நெய்ச்சத்து, முக்கியமான வைட்டமின்கள், சில உலோகச் சத்துக்கள் ஆகியவை குறித்த அளவுப்படி அமைவதாகும். இவற்றுள் வைட்டமின்களும் உலோகச் சத்துக்களும் உடலுக்கு நோய் வராதபடி பாதுகாப்பு அளிக்கின்றன.

ஏ வைட்டமின் என்பது பால், கீரை வகை முதலியவற்றில் அதிகமாய் உள்ளது. கண் பாதுகாப்புக்கு இது மிகவும் முக்கியமானது. சி வைட்டமின் என்பது பழங்களிலும், பச்சைக் காய்கறிகளிலும் அதிகமாய் உள்ளது. இவை இரண்டும் கண்ணுக்கும் தோலுக்கும் பாதுகாவலாய் உள்ளன. சி வைட்டமின் குறைந்தால் பல் ஈறு வலி குன்றி மிக்க மென்மை அடையும். பூட்டுக்களில் சிறு பிள்ளைகளுக்கு மிக்க வலி தரும்.

டி வைட்டமின் என்பது சூரிய வெப்பத்தால் நம் தோலிலேயே தானாக உண்டாகிறது. குழந்தைகளின் எலும்புகள் உரம் பெறுவதற்கும் நிமிர்ந்து நிற்பதற்கும் இது துணை செய்யும். நல்ல பால் வேண்டும். திறந்த வெளிச்ச

முள்ள இடத்தில் குழந்தைகள் ஓடியாட வேண்டும்.

மீன் எண்ணெய் கொடுப்பதனுல் குழந்தைகளுக்குப் போதுமான ஏ வைட்டமின் கிடைக்கும். மிகவும் சிறிய பிள்ளைகளுக்கு மீன் எண்ணெயை உடம்பில் தடவிச் சிறிது நேரம் வெயிலில் நிறுத்தலாம். இதற்கு அரசாங்கக் கோழிக்கோட்டு மீன் எண்ணெய் உற்பத்தித் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் (ஷார்க்) சுருமீன் எண்ணெய் பொருத்தமானது.

அஜீரணம், சுரம், பித்தப்பைக் கோளாறு இருக்கும்போது மீன் எண்ணெய் கொடுக்கக்கூடாது. நாட்டுக் கீரைகளில் போதுமான ஏ வைட்டமின் உள்ளது. மா, பப்பாளி முதலான பழங்களிலும் இது கிடைக்கும்.

நெல்லிக்காய், கொய்யா, சாத்துக்குடி, ஆரஞ்சு, முளைக் கட்டின பயறு இவை போன்ற பொருள்களில் போதுமான சி வைட்டமின் கிடைக்கிறது. அடுப்பில் வைத்துச் சமைக்கும்போது சி வைட்டமின் நீங்கிவிடும். ஊறுகாய் போட்டால் நீங்குவதில்லை. எலும்பு மெலிந்து இருக்கிற பிள்ளைக்குப் பால் மிகவும் அவசியம். சுண்ணும்புச் சத்து வேண்டும். முளைக் கட்டின கேழ்வரகு மாவு சிறந்தது. டாக்டரைக் கலந்து ஆலோசித்து, சுண்ணும்புச் சத்தாகிய கால்சியம் பவுடர் அல்லது மாத்திரைகள் கொடுக்கலாம்.

*பெரிபெரி:* பி வைட்டமின் குறைந்தால் பெரிபெரி என்ற நோய் வரும் என்று தெரிகிறது. இந்த நோயினுல் கால்கள் சுவாதீனம் இழக்கின்றன; நரம்புகள் தளர்ந்து கால் வீங்குகிறது. வாய்ப்புண், தொண்டைப்புண் இருக்கும். குழந்தையிடம் சதா எரிச்சலும் சிணுக்கமும் காணப்படும். போதிய பி வைட்டமின் உணவில் சேர்ப்பது இதற்கு மாற்று. பெரும்பாலும் தீட்டின மில்லரிசி உண்பவர்களுக்கு இந்த நோய் வரும். தீட்டி எடுக்கிற தவிட்டில் பி வைட்டமின் சத்துக்கள் அடங்கியிருக்கின்றன. தவிட்டை நீக்காதபடி கைத்திரிகையால் நெல் அரைத்து உண்டால் இந்த நோய் வராது. நோய் இருந்தாலும் நீங்கிவிடும். கொழியல் தவிட்டில் நெய்யும் சர்க்கரையும் கலந்து பலகாரம்போல் உண்ணலாம். பழைய சோறு, மோர், கீரை நல்லவை.

**சோகை:** ரத்தம் குன்றி உடல் வெளுத்திருப்பதைச் சோகை என்கிறோம். பையன் மிக்க பலவீனமாக இருப்பான். தோலும் முகமும் வெளுத்திருக்கும். கீழ் இமை தொங்கும். இமையின் உட்புறம் ரத்தமின்றி வெளுத்திருக்கும். காரணம், ரத்தக் குறைவு என்பார்கள்; ரத்தத்தின் அளவு குறைந்துவிட்டது என்பது பொருள் அன்று; ரத்தத்தின் தரம் குறைவு என்பதே பொருள். அதிலுள்ள சிவப்பு அணுக்கள் மிகவும் குறைந்துபோயிருக்கும். வெறும் நீர் அளவுக்கு அதிகமாய் இருக்கும்.

காரணங்கள் பல. ஒன்று, சுகாதாரக் குறைபாடு. (காற்றோட்டக் குறைவு, சத்தில்லாத உணவு, மலச்சிக்கல் முதலியன.) மற்றது, மலேரியா, கொக்கிப் புழு போன்ற பிற நோய்களின் விளைவு. மூலம் முதலிய நோய்களால் ரத்தம் வெளிப்பட்டாலும் சோகை வரக்கூடும்.

சோகை பொதுவாக வைத்தியர் கவனிக்கத் தக்கது. எனினும், பின் வருபவை யாரும் அறிவோடு செய்யலாம்: சுகாதாரக் குறைபாடுகளை நீக்கலாம்; சத்துள்ள உணவு தேவை; மீன் எண்ணெய், கீரை வகைகள், பால், பி வைட்டமின் தர வல்ல கைக்குத்தல் அரிசி முதலியவை நல்லவை. கீழாநெல்லிக் கஷாயமும் கையாந்தகரையும் மிக்க நன்மை செய்யும். மலச்சிக்கலைத் தவிர்க்க வேண்டும்; சீரணம் மிகவும் முக்கியம். சிறுநீர் கழிப்பதில் கஷ்டம் இருந்தால், பருப்பு வகைகளை விலக்கவேண்டும். முளைக்கட்டின கேழ்வரகு மாவு நல்லது.

**எலும்பு துவளுதல்:** ஆங்கிலத்தில் இதை 'ரிக்கெட்ஸ்' என்பார்கள். அதிகம் தாய்ப்பால் உண்ணுமலும் உடம்பில் வெயில் அதிகம் படாமலும் வளரும் குழந்தை

களுக்கு இந்த நோய் வரும். முதல் வயது முடிந்த பின்தான் இது தெரியவருகிறது. அதிகச் சிணுக்கம், நல்ல தூக்கம் இல்லை; தலையில் வேர்வை அதிகம்; பல் முளைக்கத் தாமதம்; நடக்கத் தாமதம். எலும்புகளின் முனை, பூட்டினருகில் வீங்கி மென்மை அடைந்திருக்கிறது. இவை இந்த நோய்க்கு அறிகுறிகள். இந்த நோய் நம் நாட்டில் மிகவும் குறைவு. மக்களுடைய ஏழைமை காரணமாகக் குழந்தைகள் சட்டை போடுவது நம்மிடையே குறைவு. பிள்ளைகள் வெயிலில் திரிகிறார்கள். டி வைட்டமின் குறைவினால் இந்தக் கோளாறு வருகிறதாம். நோய் வரும்போல் இருந்தாலும், வந்திருந்தாலும், சூரிய வெப்பத்தில் திறந்த காற்றில் குழந்தையை விளையாடச் செய்வது அவசியம். சூரிய கிரணங்கள் நம் உடம்பில் தாமாக டி வைட்டமின் உற்பத்தியாகச் செய்கின்றன. இயற்கை உதவும்படி நாம் விட்டால் போதும். மீன் எண்ணெய் மிகவும் அவசியம். தாய்ப்பால் ஒன்பது மாதம் வரையிலும் கொடுக்க வேண்டும். அதுவரையில் மாவுப் பொருளான அரிசிச் சாதம் வேண்டாம்.

**த**லை நிரம்ப அடர்த்தியான நீண்ட கூந்தல் இருப்பது மிகவும் அழகானது. ஆனால் தக்க பராமரிப்பு இல்லாவிட்டால் பேனும் பொடுகும் மலியும். எண்ணெய்ப் பசை கூந்தலில் எப்போதும் இருக்கவேண்டும். தலையில் சவுக்காரம் போடக்கூடாது. அரைப்புத் தூள், சீயக்காய்த் தூள் போதும். தலையில் வேர்க்கும் ஆதலால், முழுகுவது அவசியம். உலர்ந்த பின் எண்ணெய் தடவிச் சீவ வேண்டும். ஈரக் கூந்தலையோ கூந்தலில் ஈரம் தடவியோ சீவக்கூடாது.

**பொடுகு:** இது அனேகம் பேர் தலையில் காணப்படும் நோய். தலையின் மேல்தோல் செதில் செதிலாகப் பெயர்ந்து பொடிப் பொடியாக உதிரும். பார்க்க வெண்மை நிறமாய் இருக்கும். சீப்பினால் சீவும்போது உதிருவதைக் காணலாம். சில சமயம் அரிப்பும் எரிச்சலும் இருக்கும். சிலருக்கு வழுக்கை வருவதற்கு இது ஒரு காரணம். தலையில் வரும் பொடுகுதான் வேறு உருவத்தில் உடம்பில் படையாக வருகிறது. பொதுவாக இது உடல் ஆரோக்கியத்தைப் பாதிக்காது.

முதலில் சவுக்காரம் தேய்த்து நன்றாய்த் தலையைக் கழுவ வேண்டும். பிறகு கந்தகம் கரைத்த நீரைத் தேய்க்கலாம். படுக்கப் போகுமுன் தேய்ப்பது உசிதம். படிக்காரமும் கசகசாவும் சேர்த்துக் கரைத்துத் தடவி உடனே அலம்பிவிடலாம்.

எந்த வைத்தியம் செய்தாலும் தலையை மொட்டை அடித்து விடுவது நலம். கம்ப மாவோ குமிழம் பழமோ தேய்த்து முழுகுவதனாலும் பொடுகு நீங்கும். சாதாரணமாக எலுமிச்சம் பழம், மஞ்சள் கரிசிலாங்கண்ணி தேய்த்து முழுகுதல் தலைக்கு ஆரோக்கியம் தரும்.

பொடுகு உள்ளவர் சீப்பை மற்றவர் தொடக்கூடாது.

**பேன்:** அதிகம் சொல்ல வேண்டியதில்லை. பேனினால் எரிச்சலும் அரிப்பும் சொற்ப ரத்த நஷ்டமும் ஏற்படுகின்றன. கடிக்கிற இடம் வீங்குகிறது. சொரிவதனால் விரல் நகத்தில் உள்ள அழுக்கின் மூலம் நோய் பரவ இடமுண்டாகிறது. பேன் கடியினால் 'டைபஸ்' என்ற ஒரு சுரம் பரவுகிறது.

பொதுவாக, தலையில் உள்ள வேர்வையை உலர்த்தி எண்ணெய் தடவிச் சீவிச் சுத்தம் செய்தால் பேன் வராது. அதிகம் பேன் இருக்கும் பட்சத்தில், சிறு பிள்ளைகளுக்குத் தலையை மொட்டை யடிப்பது அவசியம். கூந்தல் அதிகம் இருந்தால் ஒரு பங்கு கர்ப்பூரத் தைலமும், இரண்டு பங்கு மண்ணெண்ணெயும் கலந்து நன்றாய்த் தலை முழுமையும் தடவலாம். இது கண்ணில் படக்கூடாது. இரவில் இப்படித் தடவித் தலையை மூடி வைத்திருந்து, பொழுது விடிந்த பின் நன்றாய்த் தேய்த்து அலம்பிக் குளித்துவிடலாம். பின் நெருக்க-

மான பல் உள்ள சீப்பினல் கூந்தலை தினம் இரு முறைக்குக் குறையாமல் சீவி, பேனே ஈரோ அறவே நீங்குகிற வரையில் சுத்தம் செய்ய வேண்டும். ஈரை ஈருளியால் வாங்க வேண்டும்.

ஒருவர் உபயோகித்த சீப்பை மற்றவர் உபயோகிக்கக்கூடாது.

பேன் சீக்கிரத்தில் ஏராளமாய்ப் பெருகும். ஒரு பேன் இரண்டு வாரத்தில் 120 முட்டை இடும். முட்டை பத்து நாட்களில் பொரித்துக் குஞ்சு ஆகும். முட்டையானது மயிரில் ஒட்டிக்கொண் டிருக்கும். எளிதில் விடாது. ஈருளியால்தான் எடுக்க வேண்டும்.

இலந்தைக் கொட்டைபோல் கடையில் ஒரு காய் விற்கும். பேன் காய் என்றும் அதற்குப் பெயர் சொல்வார்கள். அரைத்துத் தலையில் தடவிச் சிறிது நேரம் வைத்திருந்து முழுகினால் எல்லாப் பேனும் நீங்கும்.

**கண்ணில் தூசு:** கண்ணில் தூசு விழுந்ததும் தானே கண்ணீர் சுரக்கிறது. அதுவே தூசை வெளியே தள்ளிவிடும். கண்களை இறுக மூட வேண்டாம். இடையிலேயே கொஞ்சம் திறந்துவிடுவது நல்லது. திறந்தால் கண்ணீரும் தூசும் வெளிப்படும். மூக்கைப் பலமாகச் சிந்தினாலும் தூசு வெளிவரும். கண்ணில் ஊதுவது நல்லது அல்ல. வாயிலுள்ள அசுத்தம் கண்ணில் படுவது கெடுதி. கண்ணில் மூலிகை எதுவும் பிழிய வேண்டாம்.

தூசு கண்ணில் ஆழப் பதிந்துவிட்டால் டாக்டரிடம் காட்ட வேண்டும்.

**கண்ணில் காயம்:** குச்சி போன்ற பொருள் ஏதேனும் கண்ணில் குத்திவிடும். குழந்தை நகத்தால் பிருண்டி விடும். சிறு காயம் உண்டாகும். ஒரு சொட்டுச் சிற்றாமணக்கெண்ணெய் விட்டுக் கண்ணை மூடி வைக்கலாம். தானே ஆறிவிடும். புண்ணில் அழுக்குப் பட்டிருந்தால் கண்ணை முதலில் அலம்ப வேண்டும். பிறகு புண்ணில் கோழிக்கால் ரத்தம் ஒரு சொட்டு ஒரு தடவை விட்டால் புண் ஆறும் என்று சொல்லுவார்கள். வெந்நீர் ஒற்றடம் கொடுக்கலாம். வீக்கம் பெரும்பாலும் வடியும்.

குழந்தைகள் கையில் கழி, கம்பு, வைத்து விளையாடுவது அபாயம். 'கோலெடுத்த பிள்ளை குருடு' என்பது பழமொழி. குழந்தைகள் சாவித் துவாரத்தில் கண்ணை வைத்துப் பார்ப்பது, பட்டாசு வெடிக்குமா என்று அருகில் குனிந்து பார்ப்பது இவை தீங்கு தரும். கொல்லர் உலையில் நெருப்புப் பொறி தெறிக்கும். கல் தச்சர் வேலை செய்யும் இடத்தில் கல்தூள் உடைந்து தெறிக்கும். அங்கு அணுகக்கூடாது. கவனம் வேண்டும்.

காரமான பொருள் கண்ணில் பட்டால் உடனே கண்ணை அலம்ப வேண்டும். பின் விளக்கெண்ணெய் கொஞ்சம் விடலாம். அதிக எரிச்சல் இருந்தால் வைத்தியரிடம் காட்டவேண்டும்.

**கண் வலி:** இது ஒரு தொத்து நோய். கிருமிகளால் உண்டாகிப் பரவுகிறது. காற்றின் மூலமும் கொசுவின் மூலமும் பரவுகிறது. இரவு முழுமையும் கண்ணில் பீளை சாரும். இது இரண்டு இமைகளையும் ஒட்டிவிடும். விடிந்து எழுந்தால் இமைகளைத் திறக்க முடியாது. ஆடி, ஆவணி மாதங்களில், கொசுகு மொய்க்கும், காற்றடிக்கும். அப்போது இந்த நோய் சிறு பிள்ளைகளிடம் அதிகமாய்ப் பரவி இருக்கும்.

கண்ணைச் சுத்தமாய் வைத்திருக்க வேண்டும். பீளையை அடிக்கடி துடைக்க வேண்டும். படுக்கப் போகும்போது கண் இமை ஓரம் விளக்கெண்ணெய் விட்டால் இமை பெரும்பாலும் ஒட்டாது. கண்ணைத் திறப்பது கஷ்டமாக இருந்தால், கொஞ்சம் இளம் வெந்நீரில் சுத்தமான துணியை நனைத்துப் பல முறை துடைக்கலாம். இமைகளைப் பிய்க்கக்கூடாது. ஒருவர் கண் துடைத்த துணியை மற்றவர் உபயோகிக்கக்கூடாது.

அதிக வெளிச்சத்தைப் பார்க்க வேண்டாம். கண் அதிகம் கூசினல் சில நாள் கறுப்புக் கண்ணாடி போட்டிருக்கலாம். வைத்தியரிடம்

காட்டினால் விரைவில் குணமாகும். ஈரமில்லாத மீனெண்ணெய் ஒரு சொட்டு ஒரு நாளில் இரு முறை கண்ணில் விடலாம்; சற்றுக் கரிக்கும். மற்றப்படி நல்ல பலன் தரும். நந்தியாவர்த்தப் பூவின் சாற்றைப் பிழிதலும் உண்டு. கண் வலியுடைய பிள்ளைகள் முழுமையும் குணமாகும் வரையில் பள்ளிக்கூடம் போகக்கூடாது. இந்த நோய் எளிதில் தொத்தும்; ஆதலால், பிறருக்கு இதனால் கெடுதி. கொசுகு மொய்க்க விடக் கூடாது.

பெண்கள், ஒருவர் கண்ணுக்கு இடும் மை டப்பியை மற்றவர் தொடக்கூடாது.

வெங்கடுப்பு: கண் வலிபோல் சிவந்திருக்கும். பொங்கிப் பீளை சாராது. இரவில் கண் ஒட்டிக் கொள்ளாது. ஆனால் கண்ணில் வலி இருக்கும். வலி மிகவும் கொடுமையானது. விளக்கெண்ணெயையும் தாய்ப் பாலையும் வெண்ணெய்போல் குழைத்துக் கண்ணுக்கிடுவதால் பலன் உண்டு. கருவேலங் கொழுந்தைத் தலையில் வைத்துத் தேய்த்து முழுகுவதனாலும், கஞ்சியைத் தலையில் தேய்த்து முழுகுவதனாலும், கண் குளிர்ச்சி அடையும். வெங்கடுப்பு, கண் பொங்குதல் முதலியன நீங்கும்.

கண் கட்டி: சாதாரணத் தோல் வியாதி; வேனில் கட்டி போன்றது. கண்ணாதலால், மற்ற வைத்தியங்கள் இங்கே செய்ய முடியாது. திருநீற்றுப்பச்சை இலையைக் கட்டியின் மேலே பற்றுப் போட்டால் கட்டி அமுங்கிவிடும்; பழுத்திருந்தால் உடைந்து சீழ் வெளிப்படும்.

காதில் கட்டி: சில சமயம் காதின் பின் புறத்திலும் வெளிப் புறத்திலும் கட்டி கிளம்பும். குழந்தைகளுக்குப் பல் முளைக்கும் போது இப்படிக் கிளம்புவது உண்டு. அதிகம் வலி இருக்காது. காதைத் துப்புரவாக வைத்திருந்தால் போதும். சந்தன அத்தர் தடவலாம். வெந்நீர் ஒற்றடம் கொடுக்கலாம்.

காது வலி: வெளிச் செவிக் குழாயில் கட்டி புறப்பட்டால் வலிக்கும். குழந்தையாய் இருந்தால், காது வலி தாளம்மை (அல்லது தொண்டை அம்மை) வருவதற்கு அறிகுறி. சில சமயம் பல் சொத்தையா யிருந்தாலும், கடைவாய்ப் பல் முளைப்பதானாலும் காது வலி ஏற்படும். நடுச் செவியில் வலி ஏற்பட்டால் அது ஆபத்தானது. வைத்தியரிடம் காட்ட வேண்டும்.

வெளிச் செவிக் குழாயின் வலிக்குச் சூடாக ஒற்றடம் கொடுக்கலாம். தவிடு வறுத்து ஒற்றடம் கொடுப்பது நல்லது. வைத்தியரைக் கேளாமல் பீச்சாங் குழலால் நீர் அடிக்கக்கூடாது. ஒரு கரண்டியில் நல்லெண்ணெயைச் சுட வைத்துப் பொறுக்கக்கூடிய சூட்டில் காதில் விடலாம். இது மிகவும் இதமாக இருக்கும். மருள் கொண்டுவந்து சாற்றைக் காதில் பிழியலாம். கட்டி உடைத்துக் கொண்டால் பிறகு வலி இராது.

காதில் குரும்பி அதிகமாய்த் திரண்டு அது காரணமாய் வீக்கம் உண்டாகும். இதற்குச் சில துளி பெராக்சைடு விடலாம். பொங்கி வரும். குரும்பி முழுமையும் வெளிப்படவும் கூடும். பஞ்சால் துடைத்தால் போதும்.

காதில் சீழ் வடிதல்: இது வெளிச்செவி வீக்கத்தினாலும் இருக்கலாம்; நடுச் செவி வீக்கத்தினாலும் இருக்கலாம். இது அதிகக் கவனம் செலுத்த வேண்டிய நோய். திறமை பெற்ற வைத்தியரிடம் காட்ட வேண்டும். நீண்ட நாள் புத்திக் கூர்மையோடு வைத்தியம் செய்தால் குணமாகலாம்.

வெளிச் செவியில் எழுச்சி: ஏதேனும் எரிச்சல் காரணமாக இது உண்டாகலாம். தூசு, குரும்பி, பட்டாணி முதலிய பொருள்களைத் திணித்தல், காதில் குச்சியினால் குடைதல் இவற்றால் வரலாம். கடல் நீரில் முழுகுவதாலும் வரலாம். வலி காதின் முன் புறமும், காதின் கீழும், கீழ்த் தாடையிலும் இருக்கும். இரண்டு நாளில் காதில் நீர் வடியும்; ஆனால் வலி குறையாது.

தவிட்டை வறுத்து ஒத்துக் கொடுப்பதால் வலி குறையலாம். வடியும் நீரை, போரிக் லோஷன் போட்டுக் கழுவிவிட வேண்டும். போரிக் பவுடர் போட்டுப் பஞ்சி ஞல் துடைத்துக் காதின் வாயிலும் கொஞ்சம் பஞ்சு வைத்து அடைக்க வேண்டும். மூன்று நாளில் சௌகரியம் ஆகலாம். சௌகரியம் ஆகாவிட்டால் வைத்தியரிடம் காண்பிக்க வேண்டும். கிளிசரைன் கார்பாலிக் என்ற காது மருந்து சில துளி விட்டு வரலாம்.

மருளே வெட்டி அதன் சாற்றைப் பிழியலாம். பனே மரத்தில் ஒரு சாண் உயரம் வளர்ந்துள்ள குருத்தின் அடி மட்டையைக் கசக்கி வாட்டிப் பிழிந்தால் சாறு வரும். அந்தச் சாற்றைப் பிழிய வேண்டும்.

**நடுச் செவியில் எழுச்சி:** இது முந்தியதைவிட ஆபத்தான நோய். நடுச் செவியில் வலி 'விண் விண்' என்று தெறிக்கும். அதிகச் சுரம் அடிக்கும். நடுக்கலும் ஏற்படும். காது கேளாமலும் போகும். உள்ளிருக்கும் நீர், மூன்று நாளில் செவிப்பறையை உடைத்துக் கொண்டு வெளியே வரும். காது கெட்டுப் போகும். நீர் வெளிப்படா விட்டால் வீக்கம் தலைக்குள்ளும் மூளைக்குள்ளும் புகுந்துவிடும். இது டாக்டரே பார்க்கத் தக்க நோய். பேதிக்குக் கொடுக்கலாம்; சூடான ஒற்றடம் கொடுக்கலாம். இவ்வளவுதான் நாம் செய்யக் கூடும்.

**காது செவிடாதல்:** ஆரோக்கியமானவருக்குக் காது கேளாமல் போனுல், வெளிச் செவிக் குழாயில் குரும்பி கட்டியாக அடைத்திருக்கலாம். உள் நாக்கு வளர்ச்சியும் ஒரு காரணம். மலேரியாவுக்காக அடிக்கடி கொய்னு மாத்திரை சாப்பிட்டாலும் காதில் 'ஙொய்' என்ற சப்தம் எப்போதும் கேட்டுக் கொண்டு காது செவிடாகிவிடும். வைத்தியரைக் கலந்து ஆலோசிக்க வேண்டும்.

**காதில் பூச்சி புகுந்துகொள்ளுதல்:** படுக்கையில் எறும்பு, சிறு வண்டு புகக்கூடும். சில சொட்டு உப்புநீர் விட்டால், எறும்பு மிதந்து உயிருடனே செத்தோ வெளிப்படும். விரலால் நிமிண்டவேண்டாம். நல்லெண்ணெயும் விடலாம். வேறு சாமான் புகுந்திருந்தால் சிறிது எண்ணெய் விட்டுக் கீழ்க் காதைப் பிடித்து அசைத்தால் தசை நார்கள் அசைவதன் மூலம் பொருள் வெளியே வரலாம். வைத்தியர் பீச்சாங்குழலால் இந்த வேலையைச் செய்ய வேண்டும். குரும்பி வாங்கியாலோ சாமணத்தாலோ நாமே எடுக்க முயல்வது கூடாது. இது மிகவும் ஆபத்து.

**காதில் பொருள் திணித்தல்;** சிறு பிள்ளைகள் காதில் எதையேனும் திணித்துக்கொண்டு விடுவார்கள். இது சாமானியமாய் எங்கும் நடைபெறுகிறது. சிலேட்டுக் குச்சித் துண்டு, குன்றிமணி, பட்டாணி, சில விதைகள், கல் முதலியவற்றை இப்படித் திணிப்பார்கள். சில சமயம், காது வலி என்று கத்துகிற குழந்தைக்குப் பெற்றோர் ஒரு பூண்டு நறுக்கு முழுவதும் உள்ளே தள்ளிவிடுவதும் உண்டு! இவை யாவும் கேடே.

சாமணத்தால் எடுக்க முயலக் கூடாது. ஏனெனில், அடைபட்டிருக்கும் பொருளைச் சாமணம் மேலும் குத்தி உள்ளே தள்ளி விடும்.

தெரிந்த வைத்தியர், ஒரு பீச்சாங் குழலால் தண்ணீர் அடித்தால் போதும்; திணித்த பொருள் எதுவாயினும் தானே வெளிவந்து விடும். பட்டாணிக் கடலை போன்றவை நீர் பட்டவுடனே உப்பும். அப்போது வெளிவருவது கஷ்டம். ஆதலால், அவற்றை வெளிப்படுத்த முதலில் மெல்ல அவற்றைத் தூள் பண்ண வேண்டியிருக்கும். மெதுவாக மெல்லிய கொக்கியை அந்தக் கடலையின் ஓரமாய் உள்ளே செருகி இழுத்தால் வந்துவிடும். ஆனுல் இவை யாவும் பழக்கமுடைய டாக்டர் செய்ய வேண்டிய முறைகள். தெரியாதவர்கள் உதவி செய்ய முற்பட்டால், திணித்த பொருளை இன்னும் உள்ளே தள்ளி அதிகத்

தொந்தரவு விளைவித்துவிடுவார்கள்.

**ஜலதோஷம்:** சாமானியமாய் இது காணப்படுகிறபடியால் இதை நோய் என்று யாரும் கருதுவதில்லை. எல்லோருக்கும் வருகிறது. வருடம் இரண்டு மூன்று தடவை வருகிறது. இதற்குக் காரணம் ஒரு வகையான நச்சுப் பொருள். அது கண்ணுக்குத் தெரியாது. மிக்க எளிதில் தொத்திக்கொள்ளும். மூக்குச் சிந்தும்போதும் வாய் கொப்புளிக்கும்போதும் சிதறுகிற நுண்துளிகள் மூலம் தொத்துகிறது. ஜலதோஷம் கொண்டவர் பக்கத்தில் ஒரு நாள் இருந்தால் போதும்; மற்றவருக்கும் வந்துவிடும்.

ஜலதோஷத்தைத் தவிர்ப்பது எளிது. தூசு நிறைந்த இடத்திலும் காற்றோட்டம் இல்லாத இடத்திலும் படுக்கக் கூடாது. வெப்பத்திலிருந்து குளிருக்கும் குளிரிலிருந்து வெப்பத்துக்கும் திடீர் என்று மாறக்கூடாது. ஈரமான இடத்தில் தங்கலாகாது. மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் ஜலதோஷக் கிருமிகள் காற்றில் பரவி இருக்கும். ஆதலால், அங்கே போவதைக் குறைப்பது நல்லது. சினிமா, பொதுக்கூட்டம் முதலியவற்றில் கலந்துகொள்வதைக் குறைப்பது உசிதம். உண்ணுமுன் கைகளை நன்றாகக் கழுவ வேண்டும். வெந்நீரில் உப்பைக் கரைத்துத் தொண்டையில் இட்டுக் கொப்புளித்தல் நல்லது.

சத்தான உணவு முக்கியம். தாராளமாக வெளிக்குப் போக வேண்டும்.

ஜலதோஷத்தைப் போக்க, கொதிக்கிற வெந்நீரில் சில துளி கர்ப்பூரத் தைலத்தை விட்டு, வரும் ஆவியைப் பிடிக்கலாம். ஜலதோஷம் அதிகமாக இருக்கையில் படுக்கையில் இருப்பது மேல்; அலையக்கூடாது. தும்மல் முதலியவற்றைக் கைக் குட்டையில் தும்மி, கொதிக்கும் நீரில் கழுவி உலர்த்த வேண்டும். சில சமயம் மூக்குச் சிந்திச் சிந்தி, மூக்கின் ஓரம் உட்புறமும் வெளியிலும் ரணமாக இருக்கும். சல்போனமைட் களிம்பு தடவுவது நல்லது.

ஒரு பைசா எடை கடுகு வறுத்துப் பொடி பண்ணி ஒரு கரண்டி நெய்யில் குழைத்து, சாப்பிடுமுன் உட்கொண்டால், மூக்கு ஒழுகுவது நிற்கும்.

**மூக்கில் ஏதேனும் புகுந்து கொள்ளுதல்:** குன்றிமணி, பட்டாணி, சோகி, சிலேட்டுக் குச்சி முதலியவற்றைச் சிறு பிள்ளைகள் மூக்கின் ஒரு துவாரத்தில் திணித்துக்கொண்டு விடுவார்கள். மூக்கின் மறு துவாரத்தில் துரும்பை விட்டுத் தும்மச் செய்யலாம். மூக்குப் பொடி போடலாம். மறு மூக்குத் துவாரத்தை அடைத்தும் தும்மச் செய்யலாம். பலமாய் மூக்குச் சிந்தட்டும். இதனால் பேராபத்து வராது. இவ்வளவினும் பொருள் வெளிப்படாவிட்டால் டாக்டரிடம் காட்ட வேண்டும்.

**மூக்கிலிருந்து ரத்தம் கசிதல்:** சிறு பிள்ளைகளுக்குச் சாதாரணமாய் நிகழும். அடி பட்டது காரணமாக மூக்கு உடைந்து ரத்தம் கசியும். 'இல்லி மூக்கு உடைந்தது' என்பார்கள். பட்டிக் காடுகளில் வறட்டியைப் பொடி பண்ணி அதை உறிஞ்சச் சொல்வார்கள். இது மிகவும் கேடான வைத்தியம். நெற்றி, முகம், முதுகு-இந்த இடங்களில் குளிர்ந்த நீரை ஒரு துண்டினால் ஒற்றினால் கசிவு நிற்கக்கூடும். பனிக்கட்டி வைப்பது இன்னும் மேல். சில சமயம் நிற்காவிட்டால் ஹைட்ரஜன் பெராக்ஸைடு நீரில் தண்ணீர் விட்டுக் கலந்து கொஞ்சம் உறிஞ்சச் செய்தால், நின்றுவிடும். நோயாளி படுக்காமல் நிமிர்ந்து உட்காரவேண்டும். கையை யாரேனும் தலைக்கு மேல் உயர்த்திப் பிடிக்கவேண்டும். மூக்கை அடைத்து வாயால் மூச்சு விடவேண்டும்.

சில சமயம் மலேரியா சுரம், மேக ரோகம் முதலிய நோய் காரணமாக ரத்தம் கசிவதுண்டு. சோகையாலும் இப்படி வரும். இந்த நிலைமைகளில் நோய்க்குப் பரிகாரம் செய்வதே முக்கியம்.

**தொண்டையில் ஏதேனும் அடைத்துக் கொள்ளுதல்:** தொண்டையில் ஏதேனும் அடைத்துக்கொண்டால் மூச்சுத் திணறும். வாயை அகலமாய்த் திறந்து ஆள்காட்டி விரலைத் தொண்டைக்குள் விட்டு, அடைத்திருக்கும் பொருளை எடுக்கவேண்டும். பொருள் பென்சில் போன்ற கெட்டியான பொருளாயும் இருக்கலாம்; பிஸ்கோத்துப் போன்ற மிருதுவான பொருளாயும் இருக்கலாம்.

கெட்டியான பொருளாய் இருந்தால், வாயினுல்தான் வெளிப்படுத்தவேண்டும். விழுங்க வைப்பது ஆபத்து. இந்த நிலையில் சிறு பிள்ளையாக இருந்தால் காலைப் பிடித்துக்கொண்டு தலைகீழாய்த் தூக்கி முதுகில் ஒரு குத்து விட்டால், அடைத்த பொருள் கீழே வந்துவிடும். மிருதுவான பொருளாய் இருந்தால் அதை வயிற்றுக்குக் கொண்டு போவது நல்லது. தண்ணீர் குடிக்கச் செய்யலாம். வாந்தி எடுக்கும்படி செய்வது பொதுவாக நல்லது.

குண்டூசி போன்ற ஆபத்து விளைவிக்கும் பொருளாக இருந்தால் அவசியம் டாக்டரிடம் பார்க்க வேண்டும்.

**மைனு வாய்:** வாய் வெந்து போகும். கடைவாய் இரண்டும் நீண்ட நாள் வெண்ணிறமாக இருக்கும். சரீர வாகு, உஷ்ணம் என்றெல்லாம் சொல்லுவார்கள். உடம்பில் பி வைட்டமின் குறைவு என்பதே இதன் பொருள். மில் அரிசியை அறவே விலக்கிவிட்டு, ஒரு மாதம் கைக்குத்தல் அரிசி உண்டு வந்த மாத்திரத்தில் தானே இந்தக் கோளாறு போய்விடும்.

**பல்:** அனேக வயிற்றுக் கோளாறுகளும் ஆரோக்கியக் குறைவும் பல் நோயால் விளைகின்றன. பல் எப்போதும் காரை இல்லாமல் சுத்தமாய் இருக்க வேண்டும். மிகவும் சொற்ப அளவு பொட்டாசியம் பெர்மாங்கனேட் போட்ட நீரினுல் வாய் கொப்புளிப்பது நல்லது. பல் இடுக்கில் குச்சியால் குத்தக்கூடாது. உப்பு நீரால் கொப்புளிக்கலாம். ஆலம் விழுது, கருவேலங் குச்சி இவற்ருல் பல் தேய்க்கலாம். பல் வலி மிகவும் உபத்திரவம் ஆகையால் தக்க வைத்தியரிடம் காட்ட வேண்டும். வாயின் துர்நாற்றம் மிகவும் பொல்லாதது. பல்லின் உறுதிக்குச் சுண்ணும்புச் சத்து அதிகம் தேவை. குழந்தைப் பருவத்தில் பாலும் முளைக் கட்டின கேழ்வரகு மாவும் சிறந்த உணவுகள்.

வெள்ளறுகினுல் பல் துலக்குவதும், கஷாயம் போட்டு வாய் கொப்புளிப்பதும் பல் கிருமிகளைப் போக்கும்.

கண்டங்கத்திரி விதையை நிழலில் உலர்த்தி வெண்ணெயில் பிசைந்து இரும்புத் தகட்டைச் சூடேற்றி அதில் வறுத்தால் புகை வரும். தட்டை மூடி ஒரு துவாரம் செய்து அதன் வழியாய் வரும் புகையை ஒரு குழாயால் வாயில் இழுத்தால் பற்கிருமிகள் மடியும்.

பல்லில் சிறு சொத்தை காணத் தொடங்கினவுடனேயே பல் வைத்தியரிடம் காட்டி, அவசியமானுல் துவாரத்தில் சிமிண்டு வைத்து அடைத்து விடுவது பின்னுல் தொந்தரவில்லாமல் தடுக்கும்.

வலிக்கிற சொத்தையில் மிகச் சிறு அளவு கிராம்புத் தைலம் வைப்பது உபசாந்தியான பரிகாரம்.

ஈறு சுரந்து வலி எடுத்தால் உப்புநீர் அடிக்கடி கொப்புளிப்பதே நல்ல பலன் தரும்.

**வேர்க்குரு:** மிகவும் தொந்தரவு தருவது. வேர்வையும் தினவும் அதிகம். குளிக்கும் நீரில் சில சொட்டு ஃபினேல் சேர்ப்பது நலம் என்று சொல்லுகிருர்கள். வேர்க்குரு எல்லோருக்கும் வருவதில்லை. சில பேருக்கு மட்டுமே வருகிறது. வருபவர்கள் தாகத்தில் தண்ணீர் குடிக்கும்போது அளவாகக் குடிப்பது உசிதம். காற்ருேட்டமுள்ள ஆடை நல்லது. முறையாக மலம் கழிக்க வேண்டும். சிலருக்குக் குட்டிகூரா பவுடர் போன்ற மாவுகள் வேர்க்குரு உபத்திரவத்தைக் குறைக்கும். சந்தனம் பூசுதல், பனை நுங்கிலுள்ள நீரைப் பூசுதல் முதலியன வேறு பயனுள்ள முறைகள்.

ஒரு வாளி நீரில் ஒரு பெரிய கரண்டியளவு சோடா பைகார்பொனேட் உப்புச் சேர்த்துப் பத்துச் சொட்டுக் கார்பாலிக் ஆசிடும் கூட்டிக் கலந்து அதில் ஒரு துண்டை நனைத்து உடம்பைத் தேய்த்தால் வேர்க்குரு போகும்.

வேர்வை வேர்த்தால் உடனுக்குடன் துடைக்க வேண்டும். காற்ரோட்டம் அதிகமுள்ள இடத்தில் வேலை செய்ய வேண்டும்; உறங்க வேண்டும்.

**சொறி சிரங்கு:** ஒருவருக்குக் கண்டால் சீக்கிரத்தில் குடும்பம் முழுமையும் வருகிறது. பாடசாலையில் ஒரு பிள்ளைக்கு இருந்தால் எல்லோருக்கும் வருகிறது. குழந்தைகளுக்கு வரும்போது மிகவும் ஆபத்தானது.

பொதுவாய் இது விரல் இடுக்கு, முழங்கை, முழங்கால், மணிக்கட்டு, இடுப்பு ஆகிய இடங்களில் வரும்.

இது உண்டாவதற்குக் காரணம் சிலந்திபோல் எட்டுக்கால் உள்ள ஒரு பூச்சி. இது தோலின் அடியில் வளை தோண்டிக்கொண்டு குடி இருக்கிறது. ரத்தத்தை உறிஞ்சி வாழ்கிறது. வளையில் முட்டை இடுகிறது. ஒரு வாரத்தில் குஞ்சுகள் வெளிவருகின்றன. ஒரு வளையில் அனேகக் குஞ்சுகள் இருக்கும்போது இடம் காணுமல் வேறு வளை தோண்டுகின்றன. வளை தோண்டுவதனுல் நமக்கு அரிப்பு உண்டாகிறது. அரிப்புத் தாங்காமல் சொறிகிருேம். சொறியும்போது வெவ்வேறு இடங்களில் எங்கும் பூச்சி ஒட்டிக்கொள்கிறது; எங்கும் சிரங்கு உண்டாகிறது. பூச்சி இரவில் இடம் மாறுகிறது. ஒரு நிமிஷத்தில் ஓர் அங்குல தூரம் நகருகிறது. குழந்தைகளை இது அதிகம் பீடிக்கும்.

மற்றவர்களிடம் எளிதாக ஒட்டிக்கொள்கிறது. கை குலுக்குவது, தூக்குவது, துணியை உடுத்துவது, படுக்கையில் படுப்பது போன்றவை பூச்சிகள் பரவும் வழிகள்.

சுத்தமாய் இருப்பது ஒன்றுதான் சிரங்கு வராமல் பாதுகாக்கும் வழி. மஞ்சள் தேய்த்துக் கழுவலாம். கந்தகத்தைத் தூளாக வாங்கி நாலு பங்கு நெய்யுடன் சேர்த்து அரைத்துக் களிம்பு செய்துகொள்ளலாம். இதை இரவில் சிரங்கு உள்ள இடம், அதன் சுற்றுப்புறம் முழுமையும் நன்ருய்த் தேய்க்க வேண்டும். தேய்க்கு முன் நன்ருய் வெந்நீர் விட்டுத் தேய்த்து அலம்ப வேண்டும். கொஞ்சம் ரத்தம் வரும் வரையில் தேய்த்தாலும் நல்லது. இதன்மேல் கந்தகக் களிம்பைத் தடவ வேண்டும். நான்கு இரவில் இப்படித் தடவ வேண்டும். உடுத்தின துணியை வெந்நீரில் கொதிக்க வைத்துத் துவைத்து உலர்த்த வேண்டும். துணியிலும் பூச்சி ஒட்டியிருக்கும். களிம்பு செய்ய, வாஸிலேன் அல்லது தேங்காய் எண்ணெய் உபயோகிக்கலாம்.

நிலக்கடம்பு என்ற மூலிகையை அப்படியேயோ சாறு பிழிந்தோ, மிளகுடன் சேர்த்து அரைத்து அரைப்படி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சவேண்டும். முறுகக்கூடாது. வாசனை கண்டதும் எடுத்துவிட்டு இந்த எண்ணெயைத் தேய்த்து முழுகினுல் சிரங்கு அறவே நீங்கும்.

கடையில் விற்கும் மணிக்கட்டி சாமித் தைலம் தொடர்ந்து தடவிவர, மிகுந்த பலன் உண்டு. குழந்தைகளுக்குத் தேய்த்து முழுக்காட்டவும் வேண்டியிருக்கும்.

அதிகச் சிரங்கு உபத்திரவத்துக்கு டாக்டரிடம் காட்டினுல் இரண்டொரு பெனிசிலின் ஊசி போடுவார்கள்; இது மிகச் சிறந்த பலன் தரும். அதிகச் செலவில்லை.

இரண்டொரு முறை பேதிக்குச் சாப்பிடுவது அவசியம்.

**வேனில் கட்டி:** மேல் தோல் கெட்டு, அடித்தோலின் திசுக்களும் கெட்டுப் போவதால் கட்டி வருகிறது. இதற்குக் காரணம் கிருமிகளே. கெட்ட திசுக்கள் மயிர்க்கணுவைச் சூழ்ந்தே இருக்கும். வேனிற் காலத்தில் பல கட்டிகள் வரும்.

சிலருக்கு வருஷந் தவருமல் வந்துகொண்டே இருக்கும். கை, துடை, கழுத்து முதலான இடங்களில் வரும். பல நாள் பொறுத்துப் பழுக்கும். பின் முளை கண்டு,

முளை வெளிப்படும். சீழும் ரத்தமும் அதிகம் வெளிப்படும்.

உடம்பின் ஆரோக்கியம் முக்கியம். பலவீனம், அதிக வெப்பம், அளவு கடந்த வேலையும் சோர்வும், அடிக்கடி சுரம் வருதல் இவை காரணங்கள். வெந்நீர் ஒற்றடம், மாவும் மஞ்சளும் வேக வைத்துக் கட்டுதல் முதலிய முறைகள் கட்டியைப் பழுக்க வைத்து உடையச் செய்யும். அந்தி மல்லிகை இலையை வாட்டி விளக்கெண்ணெய் தடவிப் போட்டால் பழுத்த கட்டியைச் சீக்கிரம் உடையச் செய்யும். சீழைக் கவனமாய்த் துடைக்க வேண்டும். சீழ் பட்ட இடத்திலும் கட்டி வரக்கூடும்.

தாராளமாய் வெளிக்குப் போவது முக்கியம். கட்டிகள் அதிகமாகிக் கொண்டு வந்தால், நீர் ரோகம் உண்டா என்று அறிய, டாக்டர் சிறுநீரைப் பரிசோதிப்பது நல்லது. சந்தன அத்தர் தடவினால் பழுத்து உடையும். சந்தன அத்தரைப் பாலில் ஒரு சொட்டு விட்டுச் சாப்பிட்டு வந்தால் கட்டி வருவது நிற்கும்.

**தோல் வியாதிகள்:** பெரிய கட்டியாக இருந்து நன்றாய்ப் பழுத்து வாய்மட்டும் சிறிதாயிருந்து சீழ் வெளிப்படத் தாமதமானால், ஆபரேஷன் செய்வது மிகவும் நல்லது. சீழ் முழுமையும் எடுபடுவது அவசியம். வெளிவராமல் தங்கி வாய் மூடி, கட்டி அமுங்கி விட்டதானால், சீழ் ரத்தத்தில் கலந்து வேறு கெடுதி செய்யும். டாக்டர் ஒன்றிரண்டு பெனிசிலின் ஊசி போடுவது நல்லது.

படர் தேமல்: தேமல் என்றும் படர் தாமரை என்றும் இது பெயர் பெறும். தோலில் ஒரு வகைக் காளான் தொத்திக் கொண்டு வளர்வதால் இது வருகிறது. உடம்பில் எந்தப் பாகத்திலும் வரலாம். தோலின்மேல் திட்டுத் திட்டாகவும் படையாகவும் இருக்கும்.

இது எளிதில் தொத்திக் கொள்ளும். இந்தப் படை உடையவருடைய துண்டு, பிரஷ், பாத்திரம் முதலியவற்றை மற்றவர் தொடக்கூடாது.

தலையில் வரும் படர் தேமல் மிகவும் தொந்தரவானது. வேர்க்குரு போன்ற சிறு கொப்புளங்கள் வட்டமாகத் தோன்றும். இதை உடைத்தவுடன் படைபோல நிற்கும். பொடுகு என்று எண்ணத் தோன்றும். ஆனால் இது பொடுகு அல்ல. கொப்புளம் உடைந்து அந்த நீர் மற்ற இடங்களில் படப்பட, தலை முழுமையும் இது பரவும்.

காளான் ஒவ்வொரு மயிர்க் காலின் அடியிலும் ஆழத்தில் இருக்கிறது. இதை எடுப்பதுதான் கஷ்டம். எக்ஸ் ரே சிகிச்சை நல்லது என்று சொல்லுவார்கள். வேறு விதமும் உண்டு. தேமல் கண்ட இடத்தைச் சுற்றி ஓர் அங்குலம் வரை மயிரைக் களையவேண்டும். தேமல் கண்ட இடத்தில் உள்ள மயிரை மட்டும் கவனமாய் ஒவ்வொன்றாய் ஒரு சாமணத்தினால் பிடுங்க வேண்டும். மயிர் ஒடியக் கூடாது. வேரோடு வெளிப்பட வேண்டும். எடுத்த மயிரை எரித்து விடவேண்டும். தேமல் உள்ள இடத்தை ஸ்பிரிட்டு விட்டுத் துடைக்கவேண்டும். அதன் மேல் தினம் ஒருமுறை டிஞ்சர் அயோடின் தடவ வேண்டும்.

உடலில் வரும் தேமலை 'வண்ணான் தேமல்' என்பார்கள். எரிச்சலோடு கூடிய சிறு படையாகத் தோன்றி விரிந்துகொண்டே போகும். முகத்தில் வருவதுண்டு. மிக்க விகாரமாய் இருக்கும். இதைப் 'பரியாரித் தேமல்' என்பார்கள். இரவில் தூக்கம் இராது. அரிப்பு அதிகம். ஆரோக்கியமே கெடும். தலைத்தேமலுக்குச் சொன்ன விதமாகவே இதற்கும் மருந்து போட வேண்டும். கார்பாலிக் சோப்பு உபயோகிக்கலாம். கார்பாலிக் சோப்புப் போட்டுப் பிரஷால் தேய்த்து வெந்நீர் விட்டுக் கழுவலாம்.

பெரியா நங்கை, சிறியா நங்கை, கொன்றை இவற்றின் கொழுந்தை, எலுமிச்சைச் சாறு விட்டு அரைத்துப் போட்டால் உடனே கேட்கும்.

அழுக்குத் தேமல் அல்லது அழகுத் தேமல் உடம்பெங்கும் திட்டுத் திட்டாய்த் தொடங்கிப் பரவும்.

வரும் இடம் மட்டும் மற்ற இடத்தைவிட நிறம் வெளுத்திருக்கும். தானே வந்து தானே போய்விடும். தொந்தரவு தராது. வைத்தியமும் அவசியமில்லை. புகைப்படக்காரர்கள் உபயோகிக்கிற ஐப்போ என்கிற உப்பை நீரில் குழைத்துத் தேய்த்தால் பரவாமல் நீங்கும்.

சேற்றுப் புண்: இது தேமலில் ஒரு வகை. சேற்றிலும் ஈரத்திலும் எந்நேரமும் கால் வைத்திருப்பவர்களிடையே இது சாதாரணமாய் வருகிறது. விரல் இடுக்கில் அழுக்கு, ஈரம், வேர்வை எப்போதும் இருக்கும். இங்கு மேற்சொன்ன காளான் புகுந்து நன்றாய் வேலை செய்கிறது. அதனால் எந்நேரமும் இங்கே படையும் புண்ணும் இருக்கின்றன. எரிச்சல் அதிகம்.

குளிக்கும்போது விரல் இடுக்கை நன்றாய்த் தேய்த்துக் கழுவவேண்டும். எண்ணெய் தடவி வைக்க வேண்டும். காய்ந்து போன உயிரற்ற தோல் இருக்கக்கூடாது. புளியங்காயைச் சுட்டுப் போடலாம்; நல்லெண்ணெயில் கரைத்துப் போடலாம்.

இந்தப் படை நகத்தைப் பாதிக்கும்போது நகம் தப்பாது. நகம் முழுமையும் காளான் பரவி நகத்தைக் கொன்றுவிடுகிறது. நகம் பொடியாகி நிறம் மாறி உதிர்கிறது. இதற்கு வைத்தியம் செய்ய வேண்டும்.

கொடுகட்டிப்பூண்டின் பால் தடவினால் கேட்கும்.

கரப்பான்: குழந்தைகளுக்குத் தொந்தரவு தரும் நோய் இது. பெரும்பாலும் தலை, காது, கழுத்து, முழங்கை, முழங்கால், கணைக்கால் முதலிய இடங்களில் அதிகம் வரும். வந்தால் எளிதில் போவதில்லை. நுட்பமான கொப்புளங்கள் தோன்றுகின்றன. தோல் நைந்து போகிறது. எரிச்சல் உண்டாகிறது. கொப்புள நீர் வெளுப்பாக மாறுகிறது. குழந்தை அதிகம் சொறியவே தினவு அதிகமாகிக் கொப்புளம் உடைந்து நீர் எங்கும் பரவ, எங்கும் எரிச்சல் உண்டாகிறது. பின் நீர் கட்டியாகி உலர்ந்து போகிறது. உலர்ந்து போய் அடையாக நிற்கிறது. அடை வெடித்து அடையின் உள்ளிருந்து மறுபடியும் நீர் வருகிறது. காயக் காய மீண்டும் புதுக் கொப்புளங்கள் உண்டாகின்றன.

அஜீரணம், பலவீனம் இவை கரப்பானுக்குக் காரணம். அரிப்பைத் தடுப்பது முக்கியமாகும். உடம்பின் பலத்தையும் பெருக்க வேண்டும். சோப்பு உபயோகிக்கக் கூடாது. கஞ்சி போட்டுத் தேய்க்கலாம். இரவில் எண்ணெய் தடவி ஊறவைத்தால் காலையில் அசடு உதிர்ந்துவிடும். நீர் சுரந்தால் கிளிசரைன் கார்பாலிக் மருந்து விட்டுக் கழுவவேண்டும். நீர் வரும் வரையில் பல முறை கழுவ வேண்டும்.

மலச்சிக்கல் இருக்கக்கூடாது. மாவுப் பொருளை ஆகாரத்திலிருந்து குறைக்கவேண்டும். பால், கீரை வகைகள், மீனெண்ணெய் போன்றவை நன்மை செய்யும்.

பரு: பெரும்பாலும் முகத்திலும் சிறுபான்மை தோள், முதுகு போன்ற இடங்களிலும் பருக்களும் கருஞ் சினைப்புக்களும் தோன்றுகின்றன. குழந்தைகளுக்குப் பத்து வயதுக்குமேல் இது அதிகமாய்த் தோன்றக்கூடும். சத்து அதிகம் சேருவதால் இவை விருத்தியாகும் என்று சொல்லுவார்கள். இவற்றால் கெடுதி இல்லை யென்றாலும், பார்க்க அருவருப்பாய் இருக்கும். நாள்தோறும் ஸ்நானம் செய்யும்போது முரட்டுத் துண்டினால் அழுத்தித் துடைப்பது நல்லது. முறையாக மலம் கழித்தல் அவசியம். தண்ணீர் அதிகம் குடிக்க வேண்டும். காலையில் எழுந்தவுடன் ஒரு குவளை தண்ணீர் குடிப்பது நல்லது. குடிக்கும் நீரில் எலுமிச்சம் பழச் சாற்றைச் சேர்ப்பதும் நல்லது.

வெண்குஷ்டம்: உடம்பில் திட்டுத் திட்டாகத் தோல் வெள்ளை நிறம் அடைகிறது. இது குஷ்டத்துக்குச் சம்பந்தப்பட்டதல்ல; தொத்தாது. தோலில் நிறம் உண்டாகிற நிறமி என்ற பொருள் இல்லாமல் போவதால் இது வருகிறது. அயொடின் களிம்பு தேய்ப்பதால் சில சமயம் இது நீங்கிவிடும்.

**பித்த வெடிப்பு:** பனிக் காலங்களில் சில பிள்ளைகளுக்குக் காலில் வெடிப்பு ஏற்படும். விரல்கள் அடியிலும் குதிகாலிலும் வெடிப்புக்கள் இருக்கும். வலி இருக்கும். ரத்தம் கசிவது உண்டு. வீக்கம் உண்டாவதும் உண்டு. வெடிப்பு ஆழமாய்ப் போனால் கிருமிகள் தொத்த இடமாகிறது. நாட்டுப் புறங்களில் ஓணான்கொடிப் பாலை வெடித்த இடத்தில் அடிப்பார்கள். பெரும்பாலும் வெடிப்பு ஆறிவிடும். மற்றப்படி வலி அதிகமாய் இருந்தால் பாதத்தைக் கால்மணி நேரம் வெந்நீரில் வைத்து வெடிப்புக்களை நன்றாய் அலம்பிவிட்டு அயோடினும் கிளிசரினும் சேர்த்துக் குழைத்த களிம்பைத் தடவுவது பலன் கொடுக்கும். படுக்கப் போகுமுன் இப்படிச் செய்வது உசிதம்.

**அக்கி:** தோலின் நரம்புகளை ஒட்டி வருகிற தொந்தரவான நோய். சுரம், ஜலதோஷம் இவற்றோடு தொடங்கும். சிறு வீக்கம்; அதன் மேல் ஐந்தாறு சிறு கொப்புளங்கள்; இவை ஒன்றாகச் சேர்ந்து பெரிய சிரங்கு மாதிரி தோன்றும். இப்படிப் பத்துப் பன்னிரண்டு ஒன்றாகச் சேர்ந்து அடையாக இருக்கும். பெரும்பாலும், இவை முதுகின் மையத்திலிருந்து விலாப்புறமும் இடுப்பைச் சுற்றியும் இருக்கும். ஒரு பாரிசத்தில் இருப்பதும் வழக்கம். தக்கபடி வைத்தியம் செய்யாவிட்டால் ஆயுள் முழுமையும் வடு இருக்கும். நான்காம் நாள் கொப்புளம் உடையும். சிரங்கு மாதிரி இருக்கும். பதினான்காம் நாள் ஆறும். துடை, அடிவயிற்றிலும் வரும்.

மலம் தங்காமல் தாராளமாய் வெளிக்குப் போகவேண்டும். போரிக் பவுடர் மருந்து தெளிக்கலாம். இதில் சிறிதளவு கர்ப்பூரத் தூளும் கலந்துகொள்ளலாம். ஆனால் சாமானிய நாட்டுப் பழக்கம் குழந்தையைக் குயவனிடத்தில் அனுப்பி அவன் சூளைச் செம்மண்ணால் மெழுகச் செய்வது. இதில் பலன் இல்லை என்று சொல்ல முடியாது.

தரைப் பசலையை அரைத்துப் பூசுவது பயனுடையது.

சல்போனமைடு மாவு தெளிப்பதும், பெனிசிலின் ஊசி போடுவதும் நிச்சயமாய் நல்ல பலன் தரும்.

**விரல் சுற்று:** சாதாரணமாக எல்லோருக்கும் வருகிற மிகவும் தொந்தரவான நோய். பொறுக்க முடியாத வலி தரும். 'உகிர்ச் சுற்றின்மேல் உலக்கை விழுந்தாற் போல' என்கிற பழமொழி இதைக் குறிப்பிடும். விரல் நுனியிலோ நகத்தைச் சுற்றியோ கிருமி சம்பந்தம் ஏற்பட்டுச் சீழ் கொண்டு இருக்கும். எலும்பு வரையில் எட்டுவதும் உண்டு. அதிக வலி இருந்தால் வெந்நீர் ஒற்றடம் கொடுத்தல் நல்லது. சுரம் இருக்கும். நோயாளி படுக்கையிலே இருக்கவேண்டும்.

ஆரம்பத்தில் விரல் சுற்று வருகிறது என்று தெரிந்தவுடனே சுடு சாம்பலில் விரலைச் சுற்றி வெந்நீரில் நனைக்கலாம். கொஞ்சம் முதிர்ந்த பிறகு எலுமிச்சம் பழத்தைக் குடைந்து அதில் விரலை விடுவது நல்லது. ஆனால் இவை ஆப்பரேஷனில்தான் போய் முடியும். இது டாக்டர் செய்ய வேண்டிய வேலை. விரலின் பக்கத்தில் கிழித்துச் சீழ் முழுவதையும் டாக்டர் அகற்றுவார்.

அறுகும் பச்சை மஞ்சளும் அரைத்து வைத்துக் கட்ட வேண்டும். பழுத்தால், விஷ மூங்கில் இலையை விளக்கெண்ணெய் விட்டு வாட்டிச் சுற்ற வேண்டும்.

வரும்போல் இருந்தால் செங்கல்லை அடுப்பில் போட்டுப் பழுக்க வைத்து, கல் முழுகாத தண்ணீர் ஒரு பாத்திரத்தில் இறுத்து அதில் கல்லைப் போட்டு, வரும் ஆவியை விரலில் தாங்கவேண்டும். வேர்த்து விடும். பின் வராது.

**கக்குவான்:** பெரிதும் தொத்திக் கொள்ளக்கூடிய கொடிய நோய். கொள்ளை நோய் போல் எங்கும் பரவிவிடும். பெரும்பாலும் சிறு குழந்தைகளுக்கு 12 வயதுக்குமேல் வருவது அருமை. ஒரு முறை வந்தால் பிறகு வராது.

நோய் திட்டமான மூன்று பருவம் உடையது. முதல் பருவம் சளி கொண்ட காலம்; சாமானிய ஜலதோஷம் போல மூக்கு ஒழுகும். கொஞ்சம் இருமல், சிறு சுரம் இருக்கும். இது ஒரு வாரம் இருக்கும்.

இதன் பின் இரண்டாவது இழுப்புப் பருவம். ஒரு மாதகாலங்கூட இருக்கும். கக்குவானுக்கு அடையாளமான இருமலின் பின் தொடர்ந்த நீண்ட இழுப்பு உண்டாகும். இழுப்பு இருக்கும்போது மூச்சுத் திணறி அப்படியே நின்று போய் விடுவதுபோலவும் தோன்றும்.

மூன்றாவது பருவம் நோய் இறங்கும் பருவம். சொற்பத் தொண்டைப் புகைச்சல் இருக்கும். இது பற்றிக் கவலை வேண்டாம். தானே சீக்கிரத்தில் குணமாகிவிடும். அதிகம் ஆபத்து விளைவதில்லை.

இரண்டாம் பருவத்தில் இருக்கும்போது சில சமயம், மூக்கால் ரத்தம் வரும்; வெள்ளை விழியில் ரத்தக்குழாய் உடைந்து விழி முழுமையும் சிவப்பு ரத்தமாகி விடும். இது அபாய அறிகுறியல்ல. இதுபற்றிப் பயப்பட வேண்டியதில்லை.

கக்குவானுக்கு இதுவரை எந்தப் பரிகாரமும் பயன்பட்டதில்லை. குழந்தை கஷ்டப்படும்போது பார்க்க மிக்க துன்பமாய் இருக்கும் என்பது தவிர, எல்லோருக்கும் குணமாகிவிடும். சுரமாயிருந்தால் அன்றிப் படுத்திருக்கச் சொல்ல வேண்டாம். ஆரோக்கியமான திறந்த காற்றுத்தான் மிகவும் முக்கியமானது.

இழுப்பு அதிகம் வரும் பருவத்தில் உபசாந்தியாகக் கவனிக்கத் தக்கவை: அதிகக் கிளர்ச்சி வேண்டாம். அதிகக் களைப்புத் தரும் வேலையோ விளையாட்டோ வேண்டாம். அதிகச் சாப்பாடு வேண்டாம். கர்ப்பூரத் தைலம் அல்லது கடுகெண்ணெய் மார்பில் தேய்க்கலாம். மற்றப்படி சத்துள்ள உணவு தருவது முக்கியமானது.

இந்த நோய்க்கு எந்த இருமல் மருந்தினாலும் பயனில்லை; கொடுக்காமல் இருப்பதுதான் நல்லது. குளோரோமைசிடின் என்ற மருந்து சம்பந்தப்பட்ட திரவரூபமான ஒரு புது மருந்து (பாமிடேட்) நல்ல பலன் தருகிறது.

**இளம்பிள்ளை வாதம்:** இந்த நவநாகரிக காலத்தில் இந்த நோய் பெருகி வருகிறது. நோய்க்குக் காரணம் ஒரு வைரஸ். இது மிகவும் நுட்பமானது. வாய் வழியோ மூக்கின் வழியோ உடலுக்குள் புகுந்து புகுந்து தசை நார்களையும், இயக்குகிற நரம்பு மையங்களையும் தாக்குகிறது. ஆங்கிலத்தில் இதைப் போலியோ என்று சொல்லுகிறார்கள். அனேகம் பேருக்கு அதிக உபத்திரவம் செய்யாமலே போய் விடுகிறது. சிலருக்கு மாத்திரம் பேராபத்து விளைவிக்கிறது. நரம்பு மையத்தை இந்த வைரஸ் அதிகம் கெடுக்காத வரையில், பூரண சொஸ்தம் ஏற்பட இடமுண்டு. நரம்பு மையத்தை முழுமையும் தாக்கிவிட்டால், அது இயக்கி வந்த தசைநார்கள் அடியோடு செயலற்றுப் போகின்றன. சம்பந்தப்பட்ட கை அல்லது கால் முழுமையும் சூம்பிப் போகிறது.

இதற்குப் பூர்ண குணம் தர வல்ல மருந்து இன்னும் தெரியவில்லை. அமெரிக்காவில் டாக்டர் சால்க் என்பவர் இதற்குப் புது அம்மை மருந்து முறை கண்டுபிடித்திருக்கிறார். அது இன்னும் சோதனையில்தான் இருக்கிறது. மற்றப்படி சூடான ஒற்றடம் கொடுத்தல், எண்ணெய் தேய்த்து வழித்து விடுதல் முதலியன செய்யத்தக்க உபசாந்தியான வைத்தியங்கள்.

இது எப்படிப் பரவுகிறது என்பது தெரியவில்லை. நோய் உள்ளவர் மூக்கிலும் தொண்டையிலும் இந்த வைரஸ் காணப்படுகிறது. மலத்திலும் காணப்படுகிறது. நோய் கண்டு குணமடைந்தவர் உடம்பிலும் கொஞ்ச நாள் வரையில் வைரஸ் தொத்தக்கூடிய நிலையில் இருக்கிறது. ஈ மூலமும் இது பரவக்கூடும்.

தேர்ச்சி பெற்ற டாக்டரிடம் காட்டுவதுதான் பரிகாரம். பூர்ண ஆரோக்கியமும் தேவை. முறையான ஓய்வும் வேண்டும். அளவு கடந்த உஷ்ணமோ, அளவு கடந்த

குளிர்ச்சியோ இல்லாதிருத்தல் மிகவும் முக்கியம். கூட்டங்களுக்குப் பிள்ளைகள் போகாதிருத்தல் நலம். மலம், மூத்திரம் பட்ட எந்தப் பொருளையும் உபயோகிக்கக் கூடாது. நீரையும் பாலையும் காய்ச்சி உபயோகிக்க வேண்டும். ஈக்களை ஒழிக்க வேண்டும். உண்ணு முன் கைகளை நன்ருகச் சுத்தம் செய்யவேண்டும்.

**காக்கை வலிப்பு:** சிறுவருக்கும் பெரியோருக்கும், பெரும்பான்மையும் முன் எச்சரிக்கை இல்லாமலே, வரும் ஒரு நோய். எல்லோருக்கும் வராது. சிலருக்கு மட்டுமே வந்து கொண்டிருக்கும். நோயாளி திடீரென்று மயக்கமடைந்து பிரக்ஞையின்றிக் கீழே விழுவார். ஒரு கூச்சல் போடவும் கூடும். கால், கை, உடம்பு எல்லாம் வலித்து இழுக்கும். வாயில் நுரை தள்ளும். நாக்குக் கடிபடவும் கூடும். சிறுநீர் பிரிவதும் உண்டு. உடம்பு சில்லிட்டிருக்கும். உரத்த மூச்சு வாங்கும். இந்த வலிப்பு ஒன்றிரண்டு நிமிஷங்களே இருக்கும். பிறகு நோயாளி சோர்ந்து தூங்கிவிடுகிருர். இப்படிப் பல மாதங்களுக்கு ஒரு முறை அல்லது பல வருஷங்களுக்கு ஒரு முறை வரக்கூடும். 20 வயதுக்கு முன்னதாகவே ஆரம்பிக்கிறது. 7 வயதுக்கு முன் ஆரம்பித்துவிட்டால் அதிகம் தொந்தரவு. வலிப்பு வந்தபோது, தலையைச் சற்று உயரமாகத் தூக்கிப் படுக்க வைக்கவேண்டும். நல்ல காற்று வேண்டும். முகத்தில் குளிர்ந்த நீர் அடிக்க வேண்டும். துணிகளை மார்பில், கழுத்தில் திறந்துவிடவேண்டும். வலிப்பினுல் காயம் உண்டாகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். நாக்கைக் கடிக்காமல் இடுக்கில் துணியோ, தக்கையோ திணிக்கலாம். காப்பி கூடாது.

மனுேபலத்தினுல் இந்த வலிப்பு வராமல் தடுத்துக்கொள்ள முடியும். பல்லைக் கடித்தல், கையால் எதையேனும் இறுகப் பற்றுதல் முதலியவை குறிப்பிடத் தக்கவை. வலிப்புள்ளவர் கையில் இரும்பைக் கொடுப்பது பழக்கமாய் இருந்து வருகிறது. அவர் பிரக்ஞையோடு இருக்கும்போது தாமாக ஒன்றைப் பற்றி வலிப்பைச் சமாளிப்பது சரியேயன்றி நாம் தருவது தவறு. நோயுள்ளவர் குளிர்ச்சியில்லாத ஆரோக்கியமான உழைப்பு நிறைந்த வாழ்க்கை வாழ்வது நல்லது.

**மஞ்சட் காமாலை:** உடம்பின் தோல், வெள்ளை விழி, வாய், உதடு, பிற சிலேட்டுமப் படலங்கள் ஆகிய யாவும் தம் இயற்கை நிறம் மாறி, மஞ்சள் நிறம் அடைகின்றன. சிறுநீரும் மஞ்சள் நிறம் அடையும். இதுவே மஞ்சட் காமாலை. இதற்குப் பல காரணங்கள் இருந்தாலும், முக்கியமானது கல்லீரலில் சுரக்கும் பித்தநீர் சீரணம் ஆகாதபடி ரத்தத்தில் கலந்து விடுவதுதான். கடுமையான மலேரியா சுரம், சோகை முதலியவை ஏற்பட்ட பிறகு இந்த நிலைமை ஏற்படலாம். மலம் பிரிவது கஷ்டம்; பிரிந்தாலும் வெள்ளை நிறமாக இருக்கும் தோலில் எரிச்சல்; வாய்க் கசப்பு; நாக்கில் வெள்ளைத் தடிப்பு; துர்நாற்றம்; பொது வாய்ச் சோர்வும் கோபமும் இருக்கும். இவற்ருேடுகூடப் பலவீனப்படுத்துகிற பிற கோளாறுகளும் சேர்ந்துகொள்ளும். உதாரணம் - வாந்தி, வாய் வேக்காளம், வயிற்றுப் போக்கு; கல்லீரல் வீங்கியிருக்கும்.

காலோமெல் என்ற பேதி மருந்து அவசியமானது. எளிதாக ஜீரணமாகக்கூடிய உணவு தேவை. ஏடெடுத்த பால், சாத்துக்குடி ஆரஞ்சுப் பழச்சாறு, புட்டிப்பால் முதலியன பொருத்தமானவை. காய்ச்சல் இருந்தால் படுத்த படுக்கையில் இருக்கவேண்டும். பித்தப் பையின் மேற்புறத்தில் ஒற்றடம் கொடுக்கலாம்; பற்றுப் போடலாம். மலப் பிரவிருத்தி மிகவும் முக்கியம். சிறுநீர் நிறம் மாறி மலமும் வெண்ணிறம் மாறிப் பழுப்பு நிறம் அடையும்வரையில் ஆகாரத்தில் கவனம் செலுத்த வேண்டும். நோய் அதிக உபத்திரவம் தராவிட்டாலுங்கூட, நோய்க்குப் பின் நோயாளியின் உடலும் மனமும் சோர்ந்து

போகின்றன. ஒரு மாதம் வேலையின்றி ஓய்வு பெறுதல் நல்லது.

கற்றாழைச் சாறு, ரேவல் சின்னி, கீழாநெல்லிக் கஷாயம், கையாந்தகரை முதலியன நல்ல பலன் தரும்.

**சிறுநீர் பிரியாமை:** பெரும்பாலும் சிறு பிள்ளைகளுக்கு வரும் நோய் இது. குழந்தையை ஒரு வெந்நீர்த் தொட்டியில் உட்கார வைக்கலாம். வைத்துக் குளிர்ந்த பானம் ஏதேனும் குடிக்கக் கொடுக்கலாம்.

வீக்கம் இருந்தால், நீரில் கொஞ்சம் உப்பைப் போடலாம். மிகவும் சிறிய குழந்தையா யிருந்தால், மனத்தத்துவ ரீதியாகவும் வைத்தியம் செய்யலாம். பக்கத்தில், கண்ணுக்குத் தெரியாமல் காதில் மட்டும் கேட்கும்படி நீர் சொட்டுச் சொட்டென்று விழும்படி செய்யலாம். அப்போது சிறுநீர் இறங்கிவிடும். 'கவலைப்படாதே' என்று தைரியம் ஊட்டுவதும் பலன் அளிக்கும்.

குணம் தெரியாவிட்டால், வைத்தியரிடம் போகவேண்டும்; குழாய் வைத்துச் சிறுநீர் எடுக்கும்படியோ, ஆப்பரேஷன் செய்யும்படியோ நேரலாம்.

**வீக்கம்:** சிறு பிள்ளைகளுக்குச் சில சமயம் உடம்பு முழுமையும் வீங்கிவிடும். கை, கால், உடம்பு, தலை எல்லாம் அதிகம் உப்பிவிடும். இதற்குக் காரணம் ஆல்புமின் என்ற சத்து ரத்தத்தில் சேராதபடி சிறுநீரில் பிரிந்து போவதாகும். இதுவே நோய் அல்ல; வேறு நோய் காரணமாக இந்த வீக்கம் அல்லது நிலைமை ஏற்படக்கூடும். உப்பில்லாத கஞ்சி ஆகாரம் கொடுத்து உடனே டாக்டரிடம் காட்டவேண்டும். உப்பு நீக்குவது மிகவும் அவசியம்.

**பூரான் கடி:** இதைப் பூரான் குத்து என்பார்கள். தலைப்புறம் கூர்மையாயுள்ள முள் போன்ற பாகத்தால் பூரான் குத்தும். இப்படிக் குத்துவது பெரிய சங்கிலிப் பூரான். பல மணி நேரம் கொஞ்சம் கடுக்கும். சுண்ணாம்பைத் தடவுவது உண்டு. குத்தின இடத்தில் கொஞ்சம் வீங்கும். மறு நாள் சரியாகிவிடும். ஒற்றடம் கொடுக்கலாம்.

செவிப்பூரான் என்பது கருநிறமுள்ள மற்றொரு பூரான். மிகவும் சிறியது. காதில் புகுந்துவிடும். உப்புநீர் விட்டால் வெளியே ஓடி வந்துவிடும்.

**தேள்:** தேள் கொட்டுதல் சர்வ சாதாரணம். சிலருக்குக் கடுப்பு அதிகம் இருக்கும். சிலருக்கு அவ்வளவு கடுக்காது. சில தேள் கொட்டினால் அதிகம் கடுக்கும். சில தேள் கொட்டினால் கடுக்காது. நரம்புத் தேள், கருந்தேள், பனைமரத் தேள் என்பன மிகவும் உபத்திரவம் தரக்கூடியன. இந்த உபத்திரவம் எங்கும் அதிகமான படியால் பலவகையான சிகிச்சை வகைகள் இருந்து வருகின்றன. பின் வரும் வைத்தியங்கள் எல்லாம் இது சம்பந்தமாய்க் குறிப்பிடத் தக்கவை:

கொட்டின இடம் நன்றாக வேர்க்கும். கொடுக்கின் முனையாகிய முள் முறிந்துபோய்க் கொட்டு வாயில் இருக்கும். தடவிப் பார்த்தால் தெரியும். முடிந்தால் இதை அகற்றிவிட வேண்டும். அந்த இடத்தில் பொட்டாசியம் பெர்மாங்கனேட் தூள் சிறிது வைத்து, கூடவே சிட்ரிக் ஆசிட் தூளும் சிறிது வைத்து, ஒரு சொட்டுத் தண்ணீர் விடலாம். உடனே பொங்கும். அப்போது உண்டாகிற பிராணவாயு, கொட்டின இடத்தில் உள்ள விஷத்தை எரித்துவிடும். பிறகு வலி இருக்காது. கொட்டின இடம் தெரிந்தால்தான் இப்படிச் செய்யமுடியும். மற்ற இடத்தில் செய்தால் கொப்புளித்துவிடும்.

கடையில் விற்கிற ஸ்டாண்டர்ட் ஸால்ட் என்கிற சாதாரண உப்பை எடுத்து நீரில் கரைத்து, ஒரு சொட்டுக் கண்ணில் விட்டால், நெறி ஏறுவது உடனே நிற்கும். ஏறி இருந்தாலும் இறங்கிவிடும். கொட்டு வாயில் மட்டும் கடுப்பு இருக்கும். களிமண் குழைத்து அரை மணி நேரம் பற்றுப் போட்டால் வலி நீங்கும்; அல்லது பொறுக்கக் கூடிய சூடுள்ள உப்புக் கரைத்த வெந்நீரில் அரை மணி நேரம், கொட்டிய

கையையோ காலையோ அமிழ்த்தி வைத்திருந்தால் வலி நீங்கும். கொட்டிய இடத்தில் கொஞ்சம் அம்மோனியா தடவலாம். சூடான உப்பு நீரால் ஒற்றடம் கொடுக்கலாம்.

உப்பை நுணுக்கி வெங்காயத்தைப் பாதியாக அரிந்து அதனுல் வைத்துத் தேய்ப்பதுண்டு. கொடுக்கு வெளிப்படும்.

பாட்டரி செல்லின் கரிக் கம்பியை மண்ணெண்ணெயில் உரைத்துப் பூசுவதுண்டு.

சிலருக்கு வலி குறைவு; சிலருக்கு வலி மிக அதிகம். சில தேள் விஷம் மிகவும் அதிகம்.

உடனே குளிர்ந்த நீரில் மூழ்கலாம். கொஞ்ச நேரம் ஓடுவது நல்லது.

பேதிக்குக் கொடுப்பது நன்மை தரும். கடைசியில் விற்கிற தேள் கடி மருந்துகளில் இரண்டொன்று நன்மை செய்யும்.

நண்டுத் தெறுக்கால் கடிக்கும் தேளுக்குக் குறிப்பிட்ட வைத்தியமே செய்யலாம். உடனே டாக்டரிடம் காட்டுவது நல்லது.

வனமல்லிகை இலைகளைக் கொய்து மென்று விழுங்கினுல் விஷம் முறியும்.

**பாம்புக் கடி:** பலர் நினைப்பது போல, பாம்பின் நாக்கில் விஷம் இல்லை. விஷப்பல் இரண்டு உண்டு. குழாய்போலுள்ள வளைவான பற்களில்தான் விஷம். கடித்த இடத்தில் எப்போதும் இரண்டு புள்ளி போன்ற அடையாளம் இருக்கும். இரண்டு புள்ளிக்கு மேற்பட்ட அடையாளம் இருந்தால் அந்தப் பாம்புக்கு விஷமில்லை அல்லது விஷப் பல் படவில்லை என்று முடிவு செய்யலாம். விஷப் பாம்புகளில் இரண்டு வகை உண்டு. ஒன்று நல்ல பாம்பு வகை. நரம்பு அமைப்பை இதன் விஷம் தாக்குகிறது. அதன் மூலம் சுவாசத்தைத் தடைப்படுத்துகிறது; சொற்ப அளவு ரத்தத்தையும் பாதிக்கிறது. மற்ற வகை விரியன் பாம்பு. இது நேரே ரத்தத்தைப் பாதிக்கிறது; கொஞ்ச அளவு நரம்பு அமைப்பையும் பாதிக்கிறது. நல்ல பாம்பு கடித்தால் மயக்கம், வாந்தி, மூச்சுத் தடைப்படுதல் இவை நிகழ்கின்றன. பின்னர்ப் பேச்சு இராது; விழுங்க முடியாது; நாக்குத் தொங்குகிறது; வாய் நுரைக்கிறது; வலிப்பு உண்டாகிறது. நிலைமை சில மணி நேரத்தில் மிகவும் மோசமாகிறது. சில சமயம் வயிற்றுப் போக்கு; சிறு நீரிலும் மூக்கிலும் ரத்தம். விரியன் பாம்புக் கடியினுல் கட்டுக் கட்டாக வலி; அதிக விஷம் ஏறி இருந்தால் மரணம். சில சமயம் கடித்த இடத்தில் ரத்தம் கசிந்து கொண்டே இருக்கும்; நிறுத்த முடிவதில்லை.

காயத்துக்கு மேல் புறத்தில் ரத்த ஓட்டம் தடைப்படும்படி கட்டுக் கட்டவேண்டும். முழங்கை, முழங்காலுக்கு மேலே கட்டு இருக்கவேண்டும்; கீழே இருந்து பயனில்லை. பிறகு கடிவாயை நன்ருய்க் காயப்படுத்தி, காயத்தில் பொட்டாசியம் பர்மாங்கனேட் தூளை வைக்க வேண்டும்; அல்லது வாயில் புண் இல்லாதவர்கள் ரத்தத்தை உறிஞ்சித் துப்ப வேண்டும். இதனுல் விஷம் வெளிப்பட்டுவிடும். இந்த வைத்தியங்களின் ஒரே நோக்கம் விஷம் பரவாமல் தடுப்பதே. முடியுமானுல் உடனே டாக்டரிடம் காட்டிப் பாம்பு விஷத்துக்கு மாற்று மருந்துகளை ஊசி போடச் செய்யவேண்டும்.

**வெறிநாய்க் கடி:** மிகவும் கொடுமையான விஷங்களில் ஒன்று. வெறி நாயின் கடிதான் விஷமே தவிர, மற்ற நாயின் கடி விஷமில்லை. நாயின் வாயில் அசுத்தம் இருக்கும். கடித்ததும் இது ரத்தத்தில் பட்டு, கிருமி சம்பந்தமுள்ளதாகிச் சீழ் பிடிக்கலாம். இதை எளிதில் ஆற்ற முடியும். ஆனுல் நாயின் வெறி விஷம் என்பது வேறு. வெறிநாய் எக்காரணமும் இல்லாமல் யாரையும் கடிக்கும். கடி விஷமா அல்லவா என்று முடிவு செய்ய, நாயைக் கொல்லாமல் கட்டி வைத்திருக்க வேண்டும். பத்து நாள் நாய் உயிரோடு இருந்தால் வெறி இல்லை என்று முடிவு செய்யலாம்.

நீரைக் கண்டால் வெறி நாய் பயந்து ஓடும். சீக்கிரத்தில் அதன் பின்னங்கால் சுவாதீனம் இழந்து தொங்கிவிடும். நாய் நடக்க முடியாது; வாயில் நுரை தள்ளும். இது ஒரு முக்கிய அடையாளம்.

வெறி நாயின் பல்லோ எச்சிலோ ரத்தத்தில் பட்டிருந்தால் கடிபட்டவரிடம் இதன் பயனுய் விபரீத அறிகுறிகள் தோன்றும். கழுத்து விறைக்கும். மூச்சு விடுவது கஷ்டம். நீர் குடிக்க முடிவதில்லை. விழி பிதுங்கும். வாய் நுரைக்கும். நாலு நாள் இந்த நிலை இருந்து மரணத்தில் முடியும். இப்படிப் பட்ட அறிகுறிகள் வந்துவிட்டால், பிறகு பிழைக்கப்போவது இல்லை. ஆகவே, நாய் கடித்தால் ஆபத்து நேராதபடி உடனே தடுப்பதே வைத்தியமாகும்.

இதற்கான வைத்தியம் முன்பு கூனூர் பாஸ்டர் இன்ஸ்டிடியூட்டில் நடைபெற்றது. இப்போது இதற்கான மருந்து (ஸீரம்) எல்லா அரசாங்க ஜில்லா ஆஸ்பத்திரிகளிலும் உள்ளது. அங்கே போய்ப் பூர்த்தியான வைத்தியம் செய்து கொள்ளுவதுதான் பரிகாரம். 14 ஊசி வரையில் போடுவார்கள்.

வெறி நாயாக இருந்தால், கடித்த உடனே எந்தக் கோளாறும் காணப்படவில்லையே என்று சிறிதும் அசட்டை செய்யக் கூடாது. இது பேராபத்தில்தான் முடியும்.

**ஊமைக் காயம்:** கீழே விழுந்து அடிபட்டாலும், மேலே ஏதாவது பலமாய் மோதினுலும் விழுந்தாலும், அடிபட்ட இடத்தில் தோல் சிதைந்து போகாமல் இருக்கும். ஆனல் கீழுள்ள சதைக்கு அடி ஏற்பட்டு அதிலுள்ள சிறு ரத்தக் குழாய்கள் உடைந்து அவ்விடத்தில் ரத்தம் குழம்பிப் போயிருக்கும். ரத்தம் கட்டும்; வலி ஏற்பட்டிருக்கும். காயம் பட்டவுடனே, அந்த இடத்தில் மிகவும் குளிர்ந்த நீரை விடலாம். சற்று நேரமானுல் துணியைச் சூடான வெந்நீரில் நனைத்து அடிக்கடி ஒற்றடம் கொடுக்கலாம். அடிபட்ட இடத்தை, முடியுமானுல், மார்பை விட உயரம் இருக்கும்படி உயர்த்தி வைக்கலாம்.

தோல் சிதைந்துபோய் அழுக்குப் பட்டிருந்தால் டிஞ்சர் அயொடின் தடவலாம். அழுக்குப் படாத காயமாயிருந்தால் சுத்தம் செய்துவிட்டு, சல்போனமைடு தூள் தெளித்துக் கட்டினுல் போதும்.

**வெட்டுக் காயம்:** லேசான வெட்டுக் காயமானுல், அழுக்கு அல்லது நீர் படாமலிருந்தால், மணத்தக்காளிச் சாற்றை விட்டால் சீழ் பிடிக்காமல் காய்ந்து போகும். அழுக்குப் பட்டிருந்தால் டெட்டால் நீர் அல்லது கார்பாலிக் ஆசிட் நீர் முதலியவற்ருல் காயத்தை முதலில் கழுவ வேண்டும். பின் சல்போனமைடு தூளைத் தெளித்துப் பஞ்சு வைத்துக் கட்டலாம்.

ஆழமான காயத்துக்கும் இவ்விதமே மருந்து நீரால் அலம்பித் தூள் வைத்துக் கட்டலாம். தூள் சீழ் பிடிக்காமல் ஆற்றிவிடும். சில சமயம் காயம் பட்ட இடம் அதிக அகலமாய், விரிந்து விலகி நிற்கும். இதற்கு டாக்டரிடம் காட்டித் தையல் போடுவது அவசியமாயிருக்கும். தையல் போட்டால் வடுவில்லாமல் ஆறக் கூடும்.

**ரத்தம் கசிதல்:** காயத்திலிருந்து சில சமயம் ரத்தம் அதிகமாய்ச் சொரிந்துகொண்டே இருக்கும்; நிற்காது. ரத்தம் வெளிப்படுவது காரணமாய் நோயாளிக்குப் பேராபத்து விளையக் கூடும். இதை உடனே நிறுத்தியாக வேண்டும். நோயாளியைப் படுக்க வைத்து, காயத்துக்கு மேலாகவுள்ள இடத்தில் ரத்தக் குழாயை இரண்டு பெருவிரல்களாலும் அழுத்தவேண்டும். கையிலோ காலிலோ ரத்தம் வடிந்தால், காயத்துக்கு மேல் பாகத்தில் மடித்த துணியைச் சுற்றி முறுக்க வேண்டும். ஒரு குச்சியை மாட்டியும் முறுக்கலாம். இந்தப் பாகத்துக்கு அதிக ரத்தம் ஓடாதபடி, தலையணை அல்லது புத்தகம் போன்ற ஓர் ஆதரவை அடியில் கொடுத்து உயர்த்தி வைக்கலாம். ரத்தம்

சொரிதல் நின்றதும் கட்டின கட்டை மெல்லக் கொஞ்சங் கொஞ்சமாய் அவிழ்த்துவிடலாம். காயத்தை மருந்து நீரால் துடைத்துவிட்டுக் கட்டுக் கட்ட வேண்டும்.

**சீழ் பிடித்த காயம்:** சீழ் முழுமையும் அகற்ற வேண்டும். சில சமயம் உள்ளே சீழ் நிரம்பி வாய் மூடிக்கொள்ளும். அப்போது ஆப்பரேஷன் பண்ணித்தான் சீழை நீக்கவேண்டும். சீழ் முழுமையும் எடுத்துவிட்டு, மருந்து நீரால் நன்ருய்க் கழுவி அல்லது துடைத்து விட்டு, சல்போனமைடு தூள் தெளித்துக் கட்ட வேண்டும். டாக்டர் பெனிசிலின் மருந்து ஊசி போடுவது சீழைப் போக்குவதற்கு உதவியாயிருக்கும்.

**நெருப்பு அல்லது இரும்பு சுட்ட புண்:** கொஞ்சமாயிருந்தால், உடனே அந்த இடத்தில் கொஞ்சம் தேன் சளிக்கத் தடவினுல், கொப்புளம் உண்டாகாது; ஆறிவிடும். அப்படியே நீர் அல்லது ஆவி பட்டு வெந்து போனுல் அந்த இடத்தில் உடனே கோவையிலைச் சாற்றைச் சிறு இடங்கூட விடாமல் தடவினுல், புண் ஆகாதபடி ஆறும். ஆனுல் சாறு படாத வெந்த இடம் இருந்தால் அது கொப்புளித்து விடும்.

தலை, மார்பு, வயிறு ஆகிய இடங்களில் சுட்டிருந்தால் அபாயம் அதிகம். மூன்று காரியம் முக்கியம். ஒன்று வலியைக் குறைக்கவேண்டும்; இரண்டு அதிர்ச்சியின் விளைவுகளைப் போக்க வேண்டும்; மூன்று சுட்ட இடம் காற்றில் படக்கூடாது. மயக்கம் வரும்போலிருந்தால் கிளர்ச்சி தரக் கூடிய பொருள்-காப்பி முதலியன- உள்ளுக்குக் கொடுக்கலாம். அதிகமான சோடா பைகார்பொனேட் உப்பை நீரில் கரைத்து அந்த நீரை, சுட்ட இடத்தில் விட்டால் வலி குறையும். கொப்புளம் உண்டாகாது. ஆனுல் இது உடனே செய்ய வேண்டியது. தேங்காய் எண்ணெயும் சுண்ணும்பு நீரும் கலந்து குழம்பாக்கிச் சற்று நீலகிரித் தைலமும் கூட்டித் தடவலாம் - துணி ஒட்டிக்கொண்டிருந்தால், பிய்த்தெடுக்காமல், துண்டு துண்டாய்க் கத்தரித்து எடுக்க வேண்டும்; அதிக பாகம் காற்றில் படாமல் கவனிக்கவும்.

கொப்புளம் கண்டால், ஊசியால் குத்தி விடவேண்டும். கொப்புளித்த தோலை அகற்றக்கூடாது. இடம் வழன்று போகக்கூடாது. சாதாரண உப்புநீர் விட்டுக் கழுவலாம்- துடைக்கக் கூடாது; கிருமி நீக்க மருந்துகளோ திராவகமோ உபயோகிக்கக் கூடாது. கடையில் வாங்கக்கூடிய பெனிசிலின் ஆயின்ட்மென்ட் உபயோகமானது. இது கிடைக்காவிட்டால் போரிக் ஆயின்ட்மென்டே போதும்.

திரவ ரூபமான உணவு நிரம்ப வேண்டும். புளித்த ஏப்பம் இருக்கக் கூடும். சோடா பைகார்பொனேட் கொஞ்சம் நீரில் விட்டுக் குடிப்பது நல்லது.

அதிகம் வெந்த பாகம் சுருங்கி இழுத்துக்கொள்ளும் சுபாவம் உடையது. ஆதலால் கட்டுக் கட்டும்போது மடக்காமல் நீட்டி வைத்துக் கட்டவேண்டும். விரல்களாய் இருந்தால் ஒவ்வொரு விரலையும் தனித்தனியே கட்ட வேண்டும்.

**எலும்பு ஒடிதல்:** டாக்டர் பார்த்துச் சிகிச்சை செய்ய வேண்டிய நிலைமை. எக்ஸ்ரே படம் எடுத்துப் பார்க்கவேண்டியிருக்கும். எலும்பு ஒடிதலில் பல வகை. குழந்தைகள் எலும்பு ஒடிந்தால் பச்சைக் குச்சியை ஒடித்தது போல் இரண்டு துண்டாய் முறியாமலே இருக்கும். பெரியவர்களுக்குத் தனியாக இரு துண்டாகி விடும். சில சமயம் எலும்பு சதையைப் பொத்துக்கொண்டு வெளியே வந்துவிடுதலும் உண்டு.

எலும்பு முறிந்தால், குறிப்பிட்ட உறுப்பை உபயோகிக்க முடியாது. முறிவுள்ள இடத்தில் எரிச்சல், வலி, வீக்கம் ஏற்படும். ஈரத் துணியால் சுற்றி வைக்கலாம்.

முறிந்த உறுப்புச் சிறிதும் அசையாதபடி சிறு கம்பு அல்லது சட்டத்தைப் பிளாச்சியாக வைத்துக் கட்டுவதே முதல் வேலை. இரண்டு அல்லது மூன்றை இடை விட்டுக் கட்டலாம். முறிவுள்ள இடத்தில்

மேலும் கீழும் சிறிது தூரம் சேர்த்துப் பிடிக்கும்படி கட்ட வேண்டும். டாக்டர் பார்த்துச் சிகிச்சை செய்வது அவசியம்.

**சுளுக்கு:** பூட்டுப் புரண்டு போனால் அல்லது முறுக்கிக்கொண்டால் சுளுக்கு என்கிறோம். அங்கு எலும்புகளை இழுத்துப் பிடிக்கும் நார்கள் கிழிந்து போகின்றன. வலி உண்டாகிறது. அந்த உறுப்பு எந்த வேலையும் செய்ய முடியவில்லை. காலானால் ஊன்ற முடியாது. கையானால் எதையும் எடுக்கவோ தூக்கவோ முடிவதில்லை. வீக்கம் உண்டாகிறது. கவனிக்காமல் விட்டால், பூட்டு அப்படியே விறைத்துப் போகும்; நீட்டவோ மடக்கவோ முடியாது.

ஓய்வு பிரதானம். சூடான ஒற்றடம் கொடுப்பது ரத்த வீக்கததைக் குறைக்கும். பூட்டு நழுவியிருந்தால், தெரிந்தவர்கள் அதைச் சரியானபடி பொருத்தி வைக்கவேண்டும். வைத்து, ஈரத்துணியால் குறித்த பாகம் அசையாமல் கட்டி ஈரம் காயாமல் நீர் விட்டுக்கொண்டே வர வேண்டும்.

மூட்டு **நழுவுதல்:** எலும்பின் ஓரம் தன் இடத்தை விட்டுப் பிசகினால் மூட்டை அசைக்க முடியாது. இதுவே இதற்கு அடையாளம். பிசகின மூட்டைச் சரி செய்ய வேண்டும்; எலும்பின் ஓரத்தை அதன் இயற்கையிடத்தில் திரும்பவும் பொருந்தச் செய்யவேண்டும். இது திறமையும் பழக்கமும் வாய்ந்த வைத்தியன் செய்ய வேண்டிய வேலை.

**நீரில் மூழ்கிப் போதல்:** மூச்சுத் தடைப்படுவதால் உயிர் போய் விடுகிறது. பயத்தாலும் அதிர்ச்சியாலுங்கூட இந்த நிலையில் ஆபத்து விளைகிறது. முதலாவது செய்ய வேண்டியது, தேர்ந்த டாக்டரை அழைத்துவர ஏற்பாடு செய்வது தான்; மூச்சு உண்டாக்கவும் முயற்சி செய்ய வேண்டும். பதினைந்து நிமிஷம் வரை நீருக்குள்ளேயே அமிழ்ந்து போயிருந்துங்கூடச் செயற்கையாக மூச்சுண்டாக்கி உயிர் வந்திருக்கிறது. ஆகவே, கைவிட வேண்டியதில்லை.

மூழ்கிப் போனவரைக் குப்புறப் படுக்க வைத்து, தலையை ஒரு பக்கமாய்த் திருப்பி வைக்க வேண்டும். மார்பு எலும்புகளின் கீழ்ப் புறத்தில் மெல்லிய தலையணை அல்லது துணியைச் சுருட்டித் தலையணைபோல் உயர்த்திக் கொடுக்க வேண்டும். பக்கத்தில் போய்க் குனிந்து, இரண்டு கையையும் விரித்து, கட்டை விரல் இரண்டும் முதுகெலும்பைத் தொடக் கூடியபடி கையை நோயாளியின் விலாப்புறத்தின் அடியில் வைத்துக் கீழ் நோக்கி அமுக்கவேண்டும். வயிற்றைக் கீழ்நோக்கி அமுக்கி, மார்பிலிருந்து காற்று வெளிப்படும்படி செய்ய வேண்டும். ஹிம்சை இராதபடி சற்றுப் பலமாக அமுக்க வேண்டும். வேகத்தைக் குறைக்க வேண்டும். மார்பினுள் காற்றுப் புகும். சில வினாடி பொறுத்து மீண்டும் இவ்விதம் செய்ய வேண்டும். நிதானமாக நிமிஷத்துக்குப் பதினைந்து தடவை செய்யவேண்டும். அதிக வேகம் வேண்டாம். விடாமல் செய்து வந்தால், மூச்சு வரும். இரண்டு மணி நேரம் இப்படிச் செய்த பிறகு சிலர் பிழைத்து இருக்கிறார்கள். மூச்சு வந்ததாகத் தெரிந்ததும், மூச்சின் வேகத்துக்கு ஏற்றபடி இதே விதமே சற்று நேரம் உதவி செய்யவேண்டும். குளிர்நீரில் பட்டு உடம்பு சில்லிட்டிருக்குமாதலால், வெப்பமான கம்பளி முதலியவற்றால் உடம்பைப் போர்த்தவேண்டும்.

இந்த முறையில் நாக்கு வெளியே தொங்கி, வயிற்றிலுள்ள நீர் தானே வெளிப்படும். வயிற்றைத் தலையில் வைத்துச் சுழற்றி, நீரை வெளிப்படுத்துவதும் உண்டு.

செயற்கையாக மூச்சு உண்டு பண்ணும் முயற்சியைக் குறைக்காமலே மூக்கில் பொடி முதலியன காட்டி மூச்சைக் கிளறி விடலாம். முகத்தையும் மார்பையும் சூடுண்டாகும்படி தேய்க்கலாம். கை கால்களில் ரத்த ஓட்டம் உண்டாகும்படியும் வெப்பம் உண்டாகும்படியும் கம்பளியால் தேய்க்கலாம். கீழிருந்து மேல் நோக்கி வேகமாய்த் தேய்க்கவேண்டும். வயிற்றுக்

குழி, அக்குள், உள்ளங்கால் முதலான இடங்களில் சூடான ஒற்றடம் கொடுக்கவேண்டும். விழுங்க முடிந்தவுடன் வெந்நீர் அல்லது கிளர்ச்சி தரக்கூடிய காப்பி முதலியன கொடுக்கலாம். நோயாளியைப் படுக்கையில் வைத்து உறங்கச் செய்யலாம். மார்பின் மேலும் தோளின் கீழ்ப் புறமும் சூடான ஒற்றடம், பற்று முதலியன உதவி செய்யும்.

முழு மூச்சு வந்த பின்னும் கொஞ்ச நேரம் கவனித்து வர வேண்டும்.

**மின்சார அதிர்ச்சி:** கிராமங்களிலும் மின்சாரம் அதிகம் இப்போது பரவி வருகிறது. இங்கு மக்களுடைய அறியாமையாலும் கவனக் குறைவாலும் இந்த வகை விபத்துக்கள் ஏற்படுகின்றன. மின்சார அதிர்ச்சி ஏற்பட்டதென்று தெரிந்தால், உடனே அங்குள்ள பிரதான சுவிட்சை அணைத்து விடவேண்டும். இது செய்கிற வரையில் அதிர்ச்சியுற்றவரை நெருங்குவது ஆபத்து. இது செய்ய முடியாவிட்டால், எவ்வகையாலேனும் மின்சாரம் பாயாத பொருளால் அதிர்ச்சியுற்றவரைத் தூர இழுத்துப் போடவேண்டும். எல்லா உலோகங்களும் ஈரப்பொருள்களும் மின்சாரம் செல்லத் தக்கவை. ஆகவே, மின்சாரம் பாயாத ரப்பர், துணி முதலியவற்றால் சுற்றி, நோயாளியை இழுக்கவேண்டும்; அல்லது காய்ந்த கழியால் அவரை அப்புறம் தள்ளவேண்டும். காய்ந்த ஈரமில்லாத கயிற்றால் மாட்டி இழுக்கலாம். வெறுங் கையால் தொடவே கூடாது. மின் அதிர்ச்சியால் மூச்சு நின்று போகிறது. ஆகவே, அதிர்ச்சியுற்றவரை அப்புறப்படுத்தியதும் செயற்கை மூச்சு உண்டாக்கும் முறைகளை மேற்கொண்டு கிரமமான மூச்சு வருகிற வரையில் செய்து வர வேண்டும். டாக்டர் பார்க்க வேண்டியது அவசியம்.

**விஷம் உண்ணுதல்:** விஷத் தன்மையுள்ள பொருள்களை உண்பதனால் சிறு பிள்ளைகளுக்கு ஆபத்து விளையக்கூடும். விவரம் தெரியாமல் இப்படிப்பட்ட பொருள்களைப் பிள்ளைகள் தாமே தின்றுவிடலாம். தின்றது என்ன பொருள் என்று கேட்டுத் தெரிந்து கொள்வது நலம். இப்படித் தின்னக் கூடிய பொருள்கள்: ஊமத்தை, குன்றி மணி, மஞ்சள் அலரி விதை.

தெரிந்தவுடனே செய்யத் தக்க பரிகாரம் வாந்தி எடுக்கச் செய்வது தான். ஒரு சிறகையாவது கை விரலையாவது அடித்தொண்டை வரையில் செலுத்தித் தொண்டையில் தடவினால் வாந்தி உண்டாகும். ஒரு குவளை நிறைய வெதுவெதுப்பான நீர் எடுத்து அதில் ஒரு பெரிய கரண்டியளவு கடுகைப் பொடி பண்ணிப் போட்டுக் குழப்பி உட்கொள்ளச் செய்யலாம். அல்லது அதிகமான அளவு உப்பை வெதுவெதுப்பான நீரில் கரைத்துக் குடிக்கச் செய்யலாம். மேலும் மேலும் குடிக்க வேண்டும். வாந்தி வந்தால், விஷம் வெளிப்பட்டுவிடும்.

ரசாயனப் பொருள்களால் நம்மிடையே விஷம் ஏற்படுவது அபூர்வம். இதனால் தொண்டை, குரல்வளை, இரைப்பை முதலியன வெந்துபோயிருக்கும், வாந்தி எடுக்கக்கூடாது. வாந்தியால் புண்ணான இடங்கள் கிழிந்து பேராபத்து விளையவும் கூடும் விஷம் இன்னதென்று தெரிந்து டாக்டர் உடனே மாற்று மருந்து கொடுக்க ஏற்பாடு செய்தல் அவசியம்.

எலிப்பாஷாணம் தின்றதால் ஆபத்து நேர்ந்தாலும் உப்பு, எலுமிச்சம் பழம், புளி போன்றன தக்க மாற்று மருந்து.

விஷத்தால் இருதயத் துடிப்பு நிற்காதபடியும், மூச்சு நின்று விடாதபடியும் பார்த்துக் கொள்வதுதான் மாற்று மருந்துக்கு அடுத்தபடி முக்கியமானது. மிகவும் கெட்டியான காப்பி. தேயிலைப் பானம் மிகவும் நல்லது.

EDITED PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

# பாட்டு வைத்தியம்

இன்னிசை, நோய்களை நீக்க உதவுகிறது என்று இந்தக் காலத்து மருத்துவர்களும் மனத்தத்துவ நிபுணர்களும் கூறுகிறார்கள். மருந்துகளைவிட உடல் நலத்துக்கு இன்னிசை நல்லது என்பது அவர்கள் கருத்து. அமெரிக்காவில் சுமார் ஐந்நூறு டாக்டர்கள் சங்கீதத்தைக் கொண்டே நோயாளிகளைக் குணப்படுத்தி வருகிறார்கள். வயலின் வாசித்தால் எவ்வளவு கடுமையான தலைவலியும் பறந்து விடுகிறதாம். ஹார்ப் என்னும் ஒருவகை யாழை மீட்டினால் ஹிஸ்டீரியா நோய் குணமாகிறதாம்.

பலவீனமான இருதயமும் இருதய நோய்களும் உள்ளவர்களுக்கு இன்னிசை மிகப் பயன் தருகிறது. இத்தாலியில் ஒருவனுடைய மூளை வலுக் குன்றியிருந்தது. அவன் ஏறக்குறைய அரைப் பைத்தியமாக இருந்தான். இனிமையான பாட்டுக்களைக் கேட்டதும் அவனுடைய பைத்தியம் நீங்கி, அறிவு மிகவும் கூர்மை பெற்றது.

அமெரிக்க ஆஸ்பத்திரியொன்றில் ஒரு படைவீரன், பேசும் சக்தி குறைந்தவனாக வந்து சேர்ந்தான். மக்களுக்கு மிகப் பிரியமான அமெரிக்கப் பாட்டு ஒன்றை அடிக்கடி பாடும்படி அவனிடம் சொன்னார்கள். சில மாத காலத்துக்குள் அவன் முன்பு போலவே நன்றாகப் பேசும் சக்தியைப் பெற்றான்.

ருஷிய விஞ்ஞானி ஒருவர், இசையும் வாத்தியமும் கலந்த இனிமையினால், பெரும்பாலும் குருடனாகியிருந்த ஒருவனுக்குப் பார்க்கும் வன்மையை அளித்தார். இன்னிசையைப் பருகுவதனால் கண்ணொளி வளருவதாக அவர் தெரிவிக்கிறார்.

கண்ணனுடைய குழலோசையைக் கேட்டு, கோபியர் மட்டுமின்றிப் பசுக்களும் அவனிடம் சென்று மயங்கியதாகப் பாகவதத்திலிருந்து தெரிகிறது. மான்களும் பாம்புகளும் இசைக்கு மயங்குகின்றன. பாட்டுக்கள் பாடுவதனால், குதிரைகளிடமும் கழுதைகளிடமும் அதிக வேலை வாங்க முடிகிறது என்று விலங்கு நூலறிஞர்கள் சொல்கிறார்கள்.

பிரான்சில் ஒரு மருத்துவர் பாட்டையும் இசைக் கருவிகளையும் கொண்டே விலங்குகளின் நோய்களைத் தீர்க்கிறார். அமெரிக்கப் பெண் ஒருத்தி வயலின் வாசிக்கும்போதெல்லாம் ஒரு சிலந்திப்பூச்சி வலையிலிருந்து இறங்கி வந்து, இன்னிசையை ரசிக்கிறதாம். அவள் பாடுவதை நிறுத்தியதும் அதுவும் வலைக்குத் திரும்பிப் போய்விடுகிறதாம்.

ஆனால் பாட்டுக்களைத் தவறாகப் பாடினால் நோய் வளரவும் கூடும். ஆதலால், சங்கீதத்தை மருந்தாகக் கொள்ளும்போது அதைப்பற்றிய விஷயங்கள் யாவற்றையும் நன்கு அறிந்து கொள்ளவேண்டும்.

—ஸரலா ஜைன் (யோஜனா: ஹிந்தி, 16-2-1958)

**Manjari - March '58** **Regd. No. M. 4975**

Regd. as a Newspaper in Ceylon)

# மஞ்சரி

## பொருளடக்கம்

**ஹேவிளம்பி - பங்குனி** **மார்ச் 1958**


| | | |
|---|---|---|
| ஊரும் உலகமும் | | 1 |
| மௌலானு ஆஜாத் | | 3 |
| வாசனைப் பொருள்கள் | ஜனப்ரகதி | 7 |
| திரையிலே வானக் காட்சி | ஜி. டி. ஆர். புல்லட்டின் | 9 |
| ரத்தத்தில் எழுதிய சித்திரம் | | 13 |
| மரணத்தைச் சந்தித்தேன் | மாத்ருபூமி | 15 |
| அற்புதப் பெண் | | 17 |
| ஆறு வகையான பக்தி | பவன்ஸ் ஜர்னல் | 22 |
| எப்படி நடப்பது? | தி லைஃப் நாச்சுரல் | 24 |
| என்னைக் கேளுங்கள் | காப்டன் என். சேஷாத்திரிநாதன் | 27 |
| ரெயில்வேயின் களஞ்சியம் | தி சவுத்ரெயில் ந்யூஸ் | 31 |
| துரியோதனனின் பொறுமை | | 34 |
| வர்ணக் கைப்பை | ஸ்போர்ட் அண்டு பாஸ்டைம் | 38 |
| நவீன யுடோப்பியா | ரா. ஸ்ரீ. தேசிகன் | 41 |
| பௌத்தமும் கிறிஸ்தவமும் | தி இந்தியன் ரெவ்யூ | 47 |
| வாழ உதவும் நோன்பு | ஆந்திர மகிளா | 50 |
| ஜாதியால் நன்மையே | தாட் | 53 |
| ராம லீலா | ப்ரபாஸி | 55 |
| எட்டுக் கை ராட்சசன் | அமிர்தபஜார் பத்திரிகை | 57 |
| புத்திசாலி (பிரெஞ்சுக் கதை) | வால்டேர் - ராமச்சந்திரன் | 61 |
| பாடசாலை நோய்கள் (தமிழ்ப் புத்தகம்) | மு. அருணசலம் | 67 |
| பாட்டு வைத்தியம் | யோஜனு (3-ஆம் அட்டை) | |